தடி வீர சுவாமி கதை
&
வன்னியராயன் கதை

பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம் தரமணி
சென்னை - 600 113.

தடி வீர சுவாமி கதை

&

வன்னியராயன் கதை

பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Tati Vīra Cuvāmi Katai & Vanniya rāyan Katai**
Author	:	**Dr.S. Nirmala Devi,** M.A.,Ph.D., Dip. in Epigraphy & Archaeology Dip. in Manuscriptoloy I.I.T.S.
Publisher	:	International Institute of Tamil Studies, Madras-113.
Fublication Number:	:	253
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	1996
Paper used	:	16 kg Creamwove
Size of the book	:	1/8 Demmy
Printing types used	:	11 Point
Number of copies printed	:	1,200
Number of pages	:	xii + 264
Price	:	Rs.55/-
Binding	:	Paper Pack
Printers	:	**Shri Vignesh Printers** 158/5, Lake View Road, West Mambalam, Chennai - 600 033. Ph: 484 8486
Artist	:	**Shri Vignesh Printers**
Subject	:	Folk ballad

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ்ச் சுவடிகளைத் திரட்டுதல், பாதுகாத்தல், வெளியிடுதல் என்ற மூந்நிலைகளில் தன் பணியினைச் செவ்வனே செய்து வருகின்றது. தமிழகத்தில் சுவடிகளைப் படிக்கப் பயிற்சியளிக்கும் ஒரே அமைப்பாகவும் இந்நிறுவனம் 1979 முதல் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் இதுவரை 43 சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ளது. எட்டு நாட்டுப்புறக் கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ள இந்நிறுவனத்தின் ஒன்பதாவது வெளியீடாக 'தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை' என்ற இந்நூல் வெளிவருகின்றது.

முதற்கண் தமிழ்க் கதைப்பாடல்கள் எவ்வாறு சுவடிகளில் அமைந்துள்ளன என விளக்கப் பெற்றுள்ளது. அடுத்ததாக, இந்நூலில், முதலாவதாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ள 'தடிவீர சுவாமி கதை சாதி மீறிய காதலால் விளையும் சிக்கலைக் கதைக் கருவாகக் கொண்டுள்ளது. கதைத் தலைவி தாழ்குலம் எனக் கருதப்பட்ட பள்ளர் குலத்தைச் சேர்ந்தவள். கதைத் தலைவன் அப்பள்ளருக்குத் துணி வெளுத்துத் தரும் புரத வண்ணார் என்ற பிரிவைச் சேர்ந்தவன். உயர் குலம், தாழ்குலம் என்ற வேறுபாடுகள் காரணமாகச் சாதி மீறிய காதல்கள் உள்ளீடுகளாக அமையப்பெற்ற சமூகக் கதைப்பாடல்களாகக் காத்தவராயன் கதை, மதுரைவீரன் கதை, முத்துப்பட்டன் கதை, குருக்களாஞ்சி கதை போன்ற பல கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்தத் 'தடிவீர சுவாமி கதை' தாழ்குலம் எனக் கருதப்பட்ட இரு குலத்துக்குள்ளும் உயர்வு, தாழ்வு மேற்கொள்ளப்பட்டதால் கருக்கப்பட்ட சாதி மீறிய காதலைக் காட்டும் வேறுபட்ட கருப்பொருள் கொண்டதாக உள்ளது. தாழ்குலங்களுக் குள்ளும் செய்யும் தொழிலால் உயர்வு, தாழ்வு, கற்பிக்கப்பட்டுத் தங்களின் அழுக்குத் துணிகளை வெளுத்துத் தரும் புரத வண்ணார் குலத்தவன், தம் தங்கை மீது காதல் கொள்வதா என்று சினம் கொண்டு கதைத் தலைவியின் அண்ணன்மார்கள் கதைத் தலைவனைக் கொல்வதாகக் கதை அமைந்துள்ளது. கதைத் தலைவன்

மந்திரமூர்த்தி மீது கொண்ட தன் சொந்தப் பகையைத் தீர்த்துக் கொள்ள, இக்காதலைக் காட்டிக் கொடுப்பவனாகப் புதியவன் நாடான் என்ற பாத்திரம் அமைந்துள்ளது. கீழ்க்குலத்தான் ஒருவன் மந்திரப் பயிற்சி மூலம் அனைத்துக் காரியங்களையும் சாதிக்க வல்லவனாய் உயர்ந்து திகழ் வதைப் பொறுக்காத ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த வடமலையப்ப பிள்ளையும் மந்திரமூர்த்தியின் மரணத்துக்கு முக்கிய காரணகர்த்தா எனக் கதைப்பாடல் காட்டுகிறது.

இரண்டாவதாக இடம் பெற்றுள்ள 'வன்னியராயன் கதை' களவு செய்தலைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட இனத்தாருக்கும், களவு செய்வது குற்றம் எனக் கருதப்பட்டு, அவர்களுக்குத் தண்டனை அளிப்பதற்கென்றே 'காவல் துறை' என்ற தனி அமைப்பை நிறுவியுள்ள ஆட்சித் துறையிலுள்ளவர்களுக்குக்கும் ஏற்பட்ட நேரடி மோதலை மையமாகக் கொண்ட புதுமையான கதைக் கருவைக் கொண்டது. களவுத் தொழில் செய்வதைக் குலத் தொழிலாகக் கொண்ட இனத்துள் பிறந்த ஒருவன், களவு செய்ய வேண்டிய தேவையில்லை என்று இருக்கும்போது, மாமன் மகளை மணப்பதற்குக் குலத் தொழிலாகிய களவு செய்தலை மேற்கொண்டே ஆக வேண்டும் என்ற தாய் மாமனின் கட்டாயத்துக்கு உட்பட்டுக் களவு செய்து, அதனால் மரண தண்டனைக்கு ஆட்படும் அவல நிலையைக் கதைப்பாடல் சித்தரிக்கிறது. களவுத் தொழிலைக் குலத் தொழிலாக உடையவர்கள், அத்தொழில் தவறானது என்று இளந் தலைமுறையினர் விலக்க முனையும்பொழுதும், முன் தலைமுறையினர் வலுக்கட்டாயமாக அத்தொழிலில் 'வறட்டுக் குலக் கௌரவம்' என்ற காரணம் காட்டி ஈடுபட வைப்பதால் விளைந்த தலைமுறை மாற்றச் சிக்கலை அடிப்படையாகக் கொண்டுள்ள கதைப்பாடலாகத் திகழ்கின்றது.

இவ்விரு சமூகக் கதைப்பாடற் சுவடிகளும் திருவனந்த புரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளவையாகும். இவை கி.பி.16ஆம் நூற்றாண்டில் நாயக்க அரசர்களின் பிரதிநிதியாக, நெல்லைப் பகுதியை ஆண்டுவந்த வடமலையப்ப பிள்ளை என்பவரது ஆட்சிக் காலத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சியை

அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டவை என்பதற்கான அகச் சான்றுகள் கதைப்பாடல்களிலேயே காணப்படு கின்றன. கதைப்பாடல் தலைவர்களும் இன்றும் தென் மாவட்டங்களில் தெய்வமாக வணங்கப்பட்டும் வருகின்றனர்.

இவ்விரு கதைப் பாடல்களையும் சீரிய முறையில் ஆராய்ந்து செவ்வனே பதிப்பித்துள்ள, இந்நிறுவனச் சுவடிப் பிரிவில் பணியாற்றும் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்கள் பாராட்டுக்குரியவர். பணவிடு தூது, கருவூரார் பலதிரட்டு, தமிழ்ச் சுவடிகள் அட்டவணை, The wandering voice, The dateless Muse, The unsung melodies, முத்தாரம்மன் கதை, கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை என்ற எட்டு நூல்களை சுவடியியலுக்கு அளித்துள்ள இவரின் ஒன்பதாவது நூலாக இந்நூல் வெளிவருகிறது.

இவர் இதற்குமுன், சின்னத்தம்பி கதை, உச்சினி மாகாளி அம்மன் கதை, குருக்களாஞ்சி கதை, வெங்கலராசன் கதை, பலவேச சேர்வைக்காரன் கதை, முத்தாரம்மன் கதை என்ற ஆறு கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளை மேற்கொண்டு நாட்டுப்புறக் கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளில் தனிப்பட்ட முத்திரை பதித்தவர்.

நாட்டுப்புறவியல் சிந்தனையாளர்களுள் குறிப்பிடத் தகுந்த இடம் பெற்றுள்ள இவர் நிறுவன வாயிலாக நல்ல பல ஆய்வு நூல்களைத் தந்து கொண்டிருக்கிறார். இவரின் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைத் செயலர் திருமிகு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப. அவர்களுக்கும், நிறுவனப் பணிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற தமிழ் ஆட்சிமொழிப் பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை, குறித்த காலத்துக்குள் வனப்புற அச்சிட்டுத் தந்த விக்னேஷ் பிரிண்ட்ஸுக்கு நன்றி.

இயக்குநர்

நன்றியுரை

சமூகக் கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளில் பேரார்வம் காட்டி, இவ்விரு சமூகக் கதைப்பாடல் களும் பதிப்பித்து வெளிவர, மூல முதற்காரணமாக அமைந்தவர் எமது நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்கள். டாக்டர் நா. வான மாமலைக்குப்பின், சமூகக் கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளில் நேர்ந்துள்ள தேக்கநிலையைச் சுட்டிக் காட்டி, இத்தேக்க நிலை நீங்க இவர் எடுத்துக் கொண்டுள்ள பெருமுயற்சிகளில் ஒரு முன்முயற்சி யாகவே இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. நிறுவனச் சுவடிப் பிரிவின் சமூகக் கதைப்பாடல் பதிப்புச் சங்கிலியில் மற்றுமொரு கண்ணியாக இந்நூலை இடம் பெறச் செய்த, அன்னாரின் சுவடிப் பதிப்பார்வத்துக்குத் தலை வணங்கி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்விரு சமூகக் கதைப்பாடற் சுவடிகளை விரைவில் நிழற்படப் பிரதியெடுத்து அனுப்பி உதவிய கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலக இயக்குநர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தடிவீர சுவாமி கதையிலுள்ள நெல்லை மாவட்ட நாடார் சமுதாய வழக்குச் சொற்கள் சிலவற்றுக்கு விளக்கம் பெற்றுத் தந்த நிறுவன ஆய்வு மாணவி தி. உமாதேவிக்கு உளமார்ந்த நன்றி.

இந்நூலை வனப்புற அச்சிட்டுத் தந்த விக்னேஷ் பிரிண்ட்ஸூக்கும் நன்றி!

சு. நிர்மலாதேவி

பதிப்பாசிரியர் முன்னுரை

வெளிவராத தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடுதல் என்ற நோக்கில், கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள இரு சமூகக் கதைப்பாடற் சுவடிகளின் நிழற்படப் பிரதிகள் பெறப்பட்டு, ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் இந்நூலில் பதிப்பிக்கப் பெறுகின்றன.

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகத்திலுள்ள இரு சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்புக்கு எடுத்துக் கொண்டதால், சிறப்பாக, இங்குள்ள கதைப்பாடற் சுவடிகள் பற்றியும், இச்சுவடிகளிலுள்ள ஒப்புமைக் கூறுகள் குறித்தும் உள்ள செய்திகள் முன்நிலையாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கும் முன்நிலையாக, பொதுவாகத் தமிழ்ச் சுவடிகள் பற்றிய கருத்துகளும், திருவனந்தபுரத்தில் சுவடிகள் குறித்த விளக்கங்களும் கூறப்பெற்றுள்ளன.

தடிவீர சுவாமி கதை அமைந்துள்ள சுவடியின் தொடக்கத்தில் அம்மனின் புறப்பாடு போன்றுள்ள பகுதிகள் காணப்படுகின்றன. இந்த 31 வரிகள் 'அம்மன் கதை' என்ற தலைப்புடன் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

தடிவீர சுவாமி எனப்படும் மந்திரமூர்த்தியும், இவனின் முன்னோடித் தெய்வமான புதியவனும், வன்னியராயன் கதை குறிப்பிடும் வன்னியராயனும் இன்றும் தென் மாவட்டங்களில் தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் கொல்லப்பட்டமை 'மிகவும் அநீதியான செயல்' என்று கருதிய மக்களின் மனங்களில் பிறந்த உந்துசக்தியே இவர்களின் வரலாறுகள் கதைப்பாடலாக முகிழ்ப்பதற்குக் காரணமாகும்,

எளிய, இனிய சொற்களால், இசைநயம் கலந்து படிப்போர் மனங்கவரும் விதத்தில், இக்கதைப்பாடல்களை இயற்றியுள்ள நாட்டுப்புறப் புலவர்களின் திறன் போற்றற்குரியதாகும். இற்றைக்கு முன்னுள்ள ஐந்து நூற்றாண்டுக் கால வரலாற்று நிலையைத் தெளிவு படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் இத்தகு சமூகக் கதைப்பாடல்கள் அனைத்தும் விரைவில் அச்சில் வெளிக் கொணரப்பட வேண்டியவை. இத்தகு கதைப்பாடல் பதிப்புகள் தமிழுக்கும் தமிழுலகுக்கும் மேலும் வளம் சேர்ப்பவை என்பதால், விரைவில் இப்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியவையாகும்.

சூ. நிர்மலாதேவி

சுருக்கக் குறியீட்டு விளக்கம்
(Abbreviations)

பக்	-	பக்கம்
சூத்	-	சூத்திரம்
சு.எண்	-	சுவடி எண்
இ	-	இதழ் (leaves)
இ.ம.	-	இதழ் மறுபுறம்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
மொ.ஆ.	-	மொழிபெயர்ப்பாசிரியர்
தொ.ஆ.	-	தொகுப்பாசிரியர்
பரி	-	பரிபாடல்
கலி	-	கலித்தொகை
சிலப்	-	சிலப்பதிகாரம்
குறுந்	-	குறுந்தொகை
திருத்.மாக்கதை	-	திருத்தொண்டர் மாக்கதை
தொல்.புறத்	-	தொல்காப்பியம் புறத்திணையியல்
பெருங்.உஞ்சைக்	-	பெருங்கதை உஞ்சைக் காண்டம்
கே.ப.சு.	-	கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த் திசை நூலகச்சுவடி (Oriental Manuscripts Library, Kerala University)
உ.த.நி.சு.	-	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி (International Institute of Tamil Studies)

செ.கீ.சு.	- சென்னைக் கீழ்த்திசை நூலகச் சுவடி (Oriental Manuscripts Library, Madras)
த.ச.சு.	- தஞ்சை சரசுவதி மகால் நூலகச் சுவடி
ஆ.ஆ.நி.	- ஆசியவியல் ஆய்வு நிறுவனம் (Institute of Asian Studies)
மதுரை	- மதுரைத் தமிழ்ச் சங்கம்
ஈரோடு	- ஈரோடு கலைமகள் கல்வி நிலையம்
எழுமாத்தூர்	- எழுமாத்தூர் வேலப்பாளையம் உயர்திரு தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுத்த சுவடிகள்
பாண்டிச்சேரி	- பாண்டிச்சேரி பிரெஞ்சிந்தியக் கலைக்கழகம்
தொ.பொ.ஆ	- தொல்பொருள் ஆய்வுத்துறை (Department of Archaeology) (1981ல் கொடுக்கப்பட்ட சுவடிகள்)
கல்கத்தா	- கல்கத்தா தேசீய நூலகம்
பாரீஸ்	- பாரீஸ் தேசிய நூலகம் Catalogue Somaire Des Manuscripts Indians Indo-Chinois & Malayo Polynesiens Paris, Ernest Leroux F Diteur 1912.

பொருளடக்கம்

தமிழ்ச் சுவடிகள்

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தமிழிலக்கியங்களைச் சுவடிகளினின்று பதிப்பித்து வெளியிடும் பணியினை மேற்கொண்டார். அவருக்கு முன்னரும் இது நடந்து வந்தது. அவர் காலத்தும், அவரைத் தொடர்ந்தும் இப்பணி பலராலும் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்ச் சுவடிகளின் பதிப்புப்பணி பெருகியுள்ளதுபோல் தமிழ்ச் சுவடிகளை ஆய்வு செய்யம் பணி வளர்ந்துள்ளதா என்பது சிந்தித்தற்குரியது.

காகித நூற்கள் பெருகிவிட்ட இன்றைய நிலையில் இன்னும் ஒருசில நூற்றாண்டுகளில் தமிழ்ச் சுவடிகளை வாசிக்கவும் இயலாத நிலையைத் தமிழகம் அடையக் கூடும். அந்நிலையில் அவற்றினை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் நோக்குதல் என்பது குறித்து எண்ணவும் இடமில்லாது போகும்.

தமிழ்க் கதைப்பாடற் சுவடிகளின் அமைப்பு முறை களை ஆராய்தலுக்கு முன்னுரையாகவும், இரு தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பிப்பதற்கு முன் நிலையாகவும் தமிழ்ச் சுவடிகள் பற்றிய சில பொது விபரங்கள் இத்தலைப்பின் கீழ்ப் பார்க்கப்படுகின்றன.

தமிழர் எழுதுபொருட்கள், எழுது கருவிகள், மை வகைகள், எழுதப்படு பொருள், சுவடிப் பெயர்கள், சுவடி எழுத்தர்கள், சுவடி திரட்டு முறை, சுவடி நூலகங்கள், சுவடி அழிவுகள், பண்டைய, இன்றைய பாதுகாப்பு முறைகள், பாதுகாப்பின் அவசியம், சுவடிப் பதிப்பாளர்கள், சுவடி ஆய்வாளர்கள் என்பன பற்றிய பொதுவான கருத்துகள் இத்தலைப்பின் கீழ்ச் சுருக்கி நோக்கப்படுகின்றன.

தமிழர் எழுதுபொருட்கள்

ஓலை, கல், செமபு என்ற மூன்றும் தமிழர் எழுது பொருட்களில் முக்கிய இடம் வகிப்பன. இவற்றுள்ளும் கல், செம்பு போன்றவை அரச ஆணைகள், மானியங்கள், அரசக்கொடைகள், நில உரிமைப் பட்டாக்கள், பத்திரங்கள், நினைவுச்சின்னக் குறிப்புகள் (நடுகற் செய்திகள்) என்ற குறிப்பிட்ட செய்திகளையே எழுதப் பயன்படுத்தப் பட்டிருக்க, இவையும், இவை தவிர உள்ள அனைத்துச் செய்திகளும், மனித மன எண்ணங்கள் முழுமையும் அமையும் எழுதுபொருளாக ஓலைச்சுவடி பயன்படுத்தப் பட்டுள்ளதைப் பார்க்கிறோம். எண்ணிக்கையிலும், இன்றைய நிலையில் கல், செம்பைவிட, சுவடி எழுது பொருட்களே மிகுதியாகக் கிடைத்துள்ளன. கல் வெட்டிலோ, செப்பேட்டிலோ செய்தியைப் பொறிக்கு முன்பும் ஓலைச் சுவடிகளில் எழுதிவிட்டுப் பின் அதனைப் பார்த்தே கல்லிலோ, செம்பிலோ எழுதினர். இத்தகு ஓலையைப் 'பிடிபாடு' என்பர். அரசன் தன் ஆணைகளைத் திருவாய் மலர்வதைக் கேட்டு உடனுக்குடன் எழுத அரசவையில் திருவோலை நாயகங்கள் இருந்தனர். இதனின்றும் கல், செம்பில் பொறிப்பதற்கும் முன் பயன் படுத்தப்பட்ட எழுதுபொருள் ஓலை என்பது தெளிவாகிறது. செம்பிலும் பனை ஓலை வடிவுடையதாகச் செய்து எழுதியதுடன் செப்பேடு (செப்பு+ஏடு) என்றே பனை ஓலையைக் குறிக்கும் ஏடு என்ற பெயரையே இட்டமையும் நினைவுகூரத் தக்கது.

"தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் முக்கிய எழுதுபொருளாகப் பனை ஓலையே பயன்படுத்தப்பட்டு வந்தது"[1]. இப்பகுதிகளில் இவை மிகுதியாகக் கிடைப்பதால் இன்ன காலம் என்று வரையறுத்துக் கூற முடியாத கால கட்டத்தி லிருந்தே பனை ஓலை எழுதப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

தொல்காப்பியம், சங்க இலக்கியத்தில் பனை ஓலையில் எழுதினர் என்பதற்கான சான்றுகள் கிட்டவில்லை.

1.கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, சாசனமும் தமிழும் மு.ப., ஏப்ரல் 1971, ப. 48.

பனை ஓலையிலும் தாளிப்பனை, கூந்தற்பனை, நுங்குப்பனை என்ற மூவகையில் கூந்தற்பனை தவிர மற்ற இரண்டுமே எழுதப் பயன்படுத்தப்படுள்ளன.

இதிலும் தாளிப்பனை ஓலையைவிட நுங்குப் பனை ஓலையிலேயே தமிழ்ச் சுவடிகள் அதிகமாக அமைந்துள்ள தையும் பார்க்கிறோம்.

இப்பனை தமிழகமெங்கும் பரவலாகக் காணப்படும் ஒன்றாகும். தென்பாண்டி நாடு, நாஞ்சில் நாட்டுப் பகுதி களில் இவை மிகுதியாகக் காணப்படுகின்றன. பனையை வைத்தே வாழ்க்கையை நடத்தும் பனையேறி நாடார் என்ற தனி இனமே அப்பகுதிகளில் உண்டு. சேர மன்னனுக் குரிய்தாகப் பனம்பூ மாலை சங்க காலத்திலேயே கூறப் பட்டமையும் இங்கு நினைவுகூரத் தக்கது.

தமிழர் பயன்படுத்திய பிற எழுதுபொருட்கள் மணல், துணி, தாழை மடல், பூவிதழ், மலர் மாலை, களிமண் ஓடு, பளிங்குக்கல், பித்தளை, தகரம், வெண்கலம், தங்கம், இரும்பு, வெள்ளி போன்ற உலோக வகைகளிலும் எழுதியுள்ளனர்.

தமிழ் எழுத்துகளை (அட்சரங்கள்) எழுதிப் படிக்கும் மாணாக்கர்கள் விரலால் மணலில் எழுதிப் பார்த்துக் கற்றுள்ளனர்.

தூது, மணச் செய்திகளை அரசர்கள் பருத்தி, பட்டுச் சீலைகளில் வரைந்தனுப்பியுள்ளனர்.

மாதவி தாழை மடலை எழுதுபொருளாக்கிக் கடிதம் அனுப்பியதைச் சிலம்பு கூறுகிறது.

பூவிதழை எழுதுபொருளாகக் கொண்டதைச் சீவகசிந்தாமணி தெரிவிக்கின்றது.

''மையெழுத் தூசியின் மாண்டதோர் தோட்டிடைக்
கைவளர் கோதை கரந்தெழு திட்டாள்''

-கனகமாலையாரிலம்பகம்,

பா.எண். 1767

என்கிறது.

இதே காவியத்தின் இலக்கணையாரிலம்பகம் மூலம் மல்லிகை மலர் மாலையை எழுத்து வடிவுபடக் கட்டித் தம் கருத்தைப் புலப்படுத்தியதாகவும் அறிகின்றோம்.

"மருடகு மல்லிகை மாலை வல்லள்
பொருடகத் தொடுத்தன புனைந்த பூஞ்சிகை"
பா. எண். 2450

புதைபொருள் ஆய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட மண்பானை ஓடுகளில் எழுத்துகள் உள்ளன. இதனால் களிமண் ஓடுகளும் எழுதுபொருளாகப் பயன்பட்டுள்ளமை தெரிகிறது.

செம்புபோல அதிக அளவிலில்லை யெனினும் பிற உலோகங்களும் அவ்வப்போது எழுதுபொருளாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

"காதலால் பெயர்சுமந்த கதிர்மணி யாழிசேர்த்து"
-நாமகளிலம்பகம், பா. எண். 318

எனவரும் சீவகசிந்தாமணி வரிகள் மூலம் பொன் அணிகலனிலும் எழுதியமை தெளிவாகின்றது.

தமிழரின் எழுது கருவிகள்

முக்கிய எழுது கருவியாக எழுத்தாணியே பயன் பட்டுள்ளது. எழுத மட்டுமே பயன்பட்ட எழுத்தாணி, எழுதவும், ஓலையைச் சீவவும் பயன்பட்ட எழுத்தாணி, பல்வேறு விதமான அலங்காரக் கைப்பிடிகளுடன் கூடிய கூர் எழுத்தாணி எனப் பலவேறு வகையான எழுத்தாணிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

துணியில் எழுத சிறு தூரிகையைப் பயன் படுத்தியுள்ளனர்.

தாழை மடலில் பித்திகை அரும்பை எழுது கருவியாக்கி எழுதியதைச் சிலம்பு (வேனிற்காதை, வரி-55) தெரிவிக் கின்றது.

களிமண் ஓடுகளில் உள்ள எழுத்துகள், மண் குழைவான நிலையில் உள்ளபோதே மரக்குச்சி, கூரிய ஆணி போன்றவற்றால் எழுதப்பட்டுப் பின் சுடப்பட்டுள்ளன.

பொன்னேட்டில் செம்பொன்னூசியை எழுது கருவியாகக் கொண்டு எழுதியதைச் சீவகசிந்தாமணி தெரிவிக்கின்றது.

> "இருந்துபொன் னோலைசெம்பொனூசியா லெழுதி யேற்ப"
> -நாமகளிலம்பகம், பா. எண். 369

தமிழர் பயன்படுத்திய மை வகைகள்

மை —
- எழுத
- எழுத்து விளங்க
- பாதுகாக்க
- அழகுக்கு

என்ற நான்கு முறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுள் எழுத்து விளக்கத்திற்கும், சுவடி பாதுகாப்பிற்கும் பயன்படுத்தப்பட்ட மை வகைகளே பெரும்பான்மை. அதனுள்ளும் குறிப்பிட்ட ஒரு மையே இவ்விரு வகைக்கும் உதவும் முறையில் அமைதலையும் பார்க்கின்றோம்.

இலைச் சாறுகள், செம்பஞ்சுக் குழம்பு, பூந்தாது, சந்தனம் குழைத்த மை போன்றன எழுதப் பயன்பட்டதைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன.

> "அலத்தகக் கொழுஞ்சே ரளைஇ யயலது"[2]

> "பூந்தா தோடு சாந்துறக் கூட்டி
> ஒடியா விழுச்சீ ருதயண னோலை"[3]

எனத் தமிழ்க் காவியங்கள் குறிப்பிடுகின்றன.

மஞ்சள், மணத்தக்காளியிலைச் சாறு, மாவிலை, தர்ப்பைபுல் கரியால் செய்த மை, பஞ்சுத் திரியை ஆமணக் கெண்ணையில் எரித்துக் கிடைக்கும் கரி போன்ற மை வகைகள் எழுத்துகள் விளக்கம் பெறவும், ஓலை கெடாமல் நெடுநாள் பாதுகாப்பாக இருக்கவும் பயன்படுத்தப்பட்டன.

"கன்னியாகுமரிப் பகுதிகளில் 'நவரை' என்று கூறப்படும் ஒருவகை மூலிகையின் வேரினைத் தட்டிச் சாறு எடுத்து, அதனைப் பக்குவ முறைப்படி ஓலையில் தடவிப் பதப்படுத்திய பின் எழுதுவர்"[4] எனத் தெரிகிறது.

---

2. *சிலப்பதிகாரம், 1:8:54.*
3. *பெருங்கதை, 4:13:62-63.*
4. *திருவனந்தபுரம் ஆவணக் காப்பகப் பொறுப்பாளராக இருந்த டாக்டர். இராஜேந்திரன் அவர்களுடன் உரையாடிப் பெற்ற கருத்து.*

சில மஞ்சள், பச்சை வர்ண மைகள் அழகுணர்ச்சியோடு பயன்படுத்தப்பட்டுள்ளன.

எழுதப்படு பொருள்

'மனித மன எண்ணங்களை முழுமை பெறப் பொறித்தல்' என்பதற்கு ஓலைச் சுவடிகளே உதவியுள்ளன. குறிப்பாக இலக்கியம் எழுதப்படு பொருளாகும் போது பனை ஓலைகளே பயன் தந்திருக்கின்றன.

அரச கட்டளைகள், அரசுக் கொடை, ஒப்பந்தங்கள், அரசு அறிக்கைகள் போன்றன கல்லிலும், செம்பிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

தனியாரும், குழுக்களும் கோவிலுக்கோ, தனிப்பட்டவர்க்கோ தந்த கொடை, ஒப்பந்தம் போன்றனவும் செப்பேட்டில் இடம்பெற்றுள்ளன.

தாழை மடல், பூவிதழ், மலர்மாலை போன்றவற்றில் எழுதப்படு பொருளாகக் காதற் செய்திகள் அமைந்துள்ளன.

சுவடிப் பெயர்கள்

தமிழகத்தில் முக்கிய எழுது பொருளாகப் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்ட ஓலைச் சுவடிகள் பிற எழுது பொருட்களைப் போலல்லாது, எழுதப்படு பொருளுக் கேற்பவும், எழுதப் பயன்பட்டதாலும் அடைந்த பல்வேறு பெயரமைதிச் சிறப்புடையன.

ஓலை, சுவடி, ஏடு, ஏட்டுச் சுவடி, ஓலைச்சுவடி, ஏட்டுப் புத்தகம், நூல் என்ற பெயரமைப்புகள் காணப் படுகின்றன.

"ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்"[5]
"ஓலை யென்றெழு திப்பணி நீயென"[6]
"மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும்"[7]

---

5. *நாலடியார், பா. 397.*
6. *சீவகசிந்தாமணி, 4:1032.*
7. *நன்னூல், பொதுப்பாயிரம், சூத். 53.*

என்பன 'ஓலை' என்ற பெயர் வழக்கிருந்தமையையும்.

"கட்டமைச் சுவடி பற்றிய கையினர்"[8]

என்பன 'சுவடி' என்ற பெயர் வழக்குண்மையையும்,

"ஏட்டுப் பொறிநீக்கி மெல்லென விரித்து"[9]

"இறைவரும் கைவிடார் ஏடவர்பால் சென்ற
பிறகும் அறிந்து இன்பம் பெறலால்"[10]

என்பன 'ஏடு' என்ற பெயர் வழக்கினையும்,

"நூல்புடைத்தாற் போற்கிடந்த வித்தகஞ்சேர் துண்வரிகள்"[11]

என்பது 'நூல்' என்ற வழக்குண்மையையும் தெளிவுறுத்தும் இலக்கிய, இலக்கணச் சான்றுகளாகும்.

இவையுள் ஓலை, ஏடு என்ற பெயர் வழக்குகளே மிகுதியும் ஆளப்பட்டு வந்தன என்பதை இலக்கியச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஓலைச்சுவடி, ஏட்டுச்சுவடி, ஏட்டுப் புத்தகம் என்பன உலகியல் வழக்கில் மிகுதியாய் வழங்கி வந்த பெயராட்சிகளாகும்.

(1) ஓலையில் எழுத்துகளின் சுவடுகளைப் பதித்ததால் வந்த சுவடி என்ற பெயர், எழுதுதலால் வந்த காரணப் பெயராகும்.

(2) பனை ஓலையில் எழுதியதால் 'ஓலை' என்றும், அதனை இரண்டாகப் பிளந்த ஏட்டில் எழுதியதால் 'ஏடு' என்றும், பனை மடலில் எழுதியதால் 'மடல்' என்றும், இலை என்ற பொருளில் வழங்கும் பத்திரத்தில் எழுதியதால் 'பத்திரம்' என்றும் (இன்றும் நில, வீட்டு உரிமை பற்றிய விபரக் குறிப்புப் பட்டாக்களைப் பத்திரம் என்றே அழைக்கின்றனர். கேரளத்திலும் இன்றும் செய்தித்தாளைப் பத்திரம் என்றே கூறுகின்றனர்) வழங்கும் பெயர்கள் எழுது பொருளால் வந்தனவாகும்.

---

8. பெருங்கதை, 3:1:121.
9. மேற்படி, 4:10:109.
10. முதுமொழி மேல் வைப்பு, பா.169.
11. சீவகசிந்தாமணி, 4:1044.

(3) "பாடும் புலவன் தன்னைப் பற்றியும், பாடப்படு வோனைப் பற்றியும், தான்பெற விரும்பும் பொருளைப் பற்றியும் ஓர் ஓலையில் பாட்டாக எழுதி, மன்னர் அவையில் படிப்பதை ஓலைத்தூக்கு"[12] என்றும்,

எழுத்துக் குறிப்பை, செய்யுள் கட்டுவதை ஓலைச்சீட்டு, சீட்டு, நறுக்கு முறி, ஓலைச் சிறகு, ஓலை முறி என்றும் கூறல் எழுதப்படு பொருளால் வந்த பெயர்களாகும்.

(4) ஓலையில் செய்தி எழுதிச் சுருட்டி அனுப்புவதை முடங்கல் என்பது அமைப்பால் வந்த பெயராகும்.

(5) அரசன் அனுப்பும் ஓலையைத் திருவோலை, திருமுகம், நீட்டு, ஆவணம், மந்திரவோலை என்றழைப்பது அனுப்பு வோரால், அமைந்த பெயர்களாகும்.

எழுத்து எதுவும் எழுதாத ஓலையை வெள்ளேடு[13] எனக் குறிப்பது எழுதாமையால் வந்த பெயராகும்.

சுவடி எழுத்தர்கள்

(1) தாம் பயில்வதற்கென்று எழுதுவோர்

(2) பிறருக்குப் பயிற்றுவிப்பதற்கென்று எழுதுவோர்

(3) தம் சொந்தத் தேவைக்கென்று எழுதுவோர்

(4) பிறர் தேவைக்கென்று எழுதித் தருவோர்

(5) சிதைவு, தேவை காரணமாய் மூலத்தைப் படி செய்வோர்

(6) அழகாக எழுதுவதற்கென்று நியமிக்கப்பட்டு எழுதுவோர்

(7) அதிகமாகப் பல பிரதிகள் எடுக்க வேண்டும் என்ற பணிக்கமர்த்தப்பட்டு எழுதுவோர்

(8) செவி வழிக் கேட்டதை எழுதி வைக்க வேண்டும் என்று எழுதுவோர்

எனச் சுவடி எழுதுநர்களை எண்வகைப் படுத்தலாம்.

---

12. Tamil Lexicon, Vol.1, Part-1, p.630.
13. 'வெள்ளேட் டங்கண் வித்தக மெழுதிய' (பெருங்கதை. *1:32:69*).

எண்ணுபவர் எல்லோரும் எழுதிவிடுவதில்லை. எழுதவேண்டும் என்ற உந்துதல் சக்தி ஏற்பட்டபோது, தானே அதனைச் செய்து வந்த மனிதன், அக்கருத்து நீண்ட காலத்துக்கு அழகாக அமையவேண்டும் என்று அவாவுற்ற போது, அழகாக எழுதுவதற்கென்றே பயிற்சி பெற்றவர்களை (Calligraphist) நியமிக்கத் தொடங்கினான்.

குறுந்தொகை பாடியவர்களில் ஒருவராகக் குறிப்பிடப் பெறும் "மதுரை எழுத்தாளன் சேந்தன்", எழுத்து வல்லவராக இருந்திருக்கக் கூடும்.

பல நாட்டுப்புறப் பாடல்களும், கதைப்பாடல்களும் செவிவழி வந்து எழுத்துருப் பெற்றுள்ளன.

பெரும்பான்மையான சுவடிகளின் இறுதிக் குறிப்புகள் மூலம் எவ்வகை எழுதுவோர், என்ன காரணத்துக்காக அதனை எழுதினர் என்பதனை அறிய இயலுகின்றது.

சுவடி திரட்டு முறை

சுவடிகளைத் திரட்டும் பணி இதுவரையும் தமிழகத்தில் முறைப்படி, முழு அளவில் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அரசு முயற்சியாலன்றி தனியார்களால் இப்பணி முழுமை பெறாது.

சுவடிகள் கால நீட்சியில் சிதைவுறுவன ஆதலானும், காலத்துக்கேற்ற வகையிலான எழுத்தமைதிகளோடு படி செய்யப்பட்டு மாற்றங்களுக்கு உள்ளாகின்றவை ஆதலானும், படி செய்யப்படு முன்னமேயும் மூலங்களை ஆடிப் பெருக்கில் விடல் போன்ற மூடப் பழக்கங்களால் அழிவிற் காளா கின்றவை என்பதானும், சுவடி திரட்டும் பணி உரிய விரைவில் நிறைவேற்றப் படத் தக்கதாகும்.

சுவடி நூலகங்கள்

செவிவழிச் செய்திகளாக இலக்கியங்கள் இயம்பப்பட்டு வந்த கால கட்டத்தில், அறிஞர் ஒவ்வொருவருமே நடமாடும் நூலகமாக இருந்து வந்தனர்.

எண்ணங்கள் எழுத்துருப் பெற்ற பொழுது, ஊரின் பொதுச் சொத்தாகிய கோயில்கள் நூலகங்களாயின.

முனிவர்கள், மதத் தலைவர்கள், இலக்கிய கர்த்தாக்களாகியபோது குகைகள், மடங்கள், நூலக அமைப்பை அடைந்தன.

தற்போது தமிழகத்தில் காகித நூற்கள் உள்ள நூலகங்கள் போலச் சுவடி நூலகங்களும் உருவாகியுள்ளன என்றாலும், நாட்டில் பல தனியாரிடமும் அமைந்துள்ள குட்டி நூலகங்களையும் உள்ளடக்கிய தாய் நூலகங்களாக இவை இன்னமும் மலரவில்லை என்பது கருதத் தக்கது.

தமிழ்நாட்டில் இதுவரை அறியவந்துள்ள தமிழ்ச் சுவடிகள் இருக்குமிடமும், எண்ணிக்கையும்:-

(1)	சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம்	..	*13,000*
(2)	தொல்பொருள் ஆய்வுத்துறை	..	*1,160*
(3)	உ.வே.சா. நூலகம்	..	*500*
(4)	சித்த வைத்திய அறிவியல் மேம்பாட்டுக் குழு	..	*800*
(5)	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	..	*500*
(6)	பிரெஞ்சிந்திய கலைக் கழகம்	..	*760*
(7)	மதுரைத் தமிழ்ச் சங்கம்	..	*375*
(8)	திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகம்	..	*3,280*
(9)	கல்கத்தா தேசீய நூலகம்	..	*400*
(10)	பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடம், கோவை	..	*360*
(11)	துறையூர் குமாரதேவர் மடம்	..	*450*
(12)	ஆந்திரப் பல்கலைக் கழகம் (தெலுங்கு வடிவில்), விசாகப்பட்டினம்	..	*100*

(13) உஸ்மானியா பல்கலைக் கழகம்
(தெலுங்கு வடிவில்), ஐதராபாத் .. 140

(14) தருமபுர ஆதீன மடம் .. 140

(15) தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் .. 2,696

ஆக, இதுவரை அறிய வந்துள்ளவை 20,000 மட்டுமே.[14]

இதிலுள்ள பல தமிழ்ச் சுவடிகள் அட்டவணைகள் முழுமை பெறாதவை.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் .. 2,500

ஆசியவியல் ஆய்வு நிறுவனம் .. 1,300

உள்ளதாகத் தெரிகின்றது.

பண்டைப் புலவர் வாரிசுகள், வைத்திய பரம்பரையினர், தனியார்கள் வசமும் ஏராளமான சுவடிகள் இருக்கக் கூடும்.

"அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் அட்டவணை" என்ற பெயரில் 5 தொகுதிகளில் 21,973-சுவடிகளைப் பற்றிய குறிப்புகளை தமிழ்ப் பல்கலைக் கழகம் (மு.ப.1991) வெளியிட்டுள்ளது.

மேலைநாடுகளிலும் உள்ள தமிழ்ச் சுவடிகளின் எண்ணிக்கைகள் முழுமையாக அறியப்பட வேண்டிய ஒன்று.

சென்னை மாநிலக் கல்லூரி நூலகத்தில் மேஜர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் 1960-இல் மேலைநாடு சென்றபோது கொணர்ந்த தமிழ்ச் சுவடிகள் அட்டவணை முதல் 4 தொகுதிகள் உள்ளன. 5-ஆம் தொகுதி இதுவரை கிடைக்கவில்லை. இதன் மூலம் பிரான்ஸ் தவிர 28 நூலகங்களில் உள்ள சுவடிகள் பற்றி அறிய இயலுகின்றது.

மேலைநாடுகள் தவிர கீழை நாடுகளான இலங்கை, மலேசியா, இந்தோனேஷியா, வியட்நாம், ஜப்பான், சீனா போன்ற இடங்களிலுமுள்ள தமிழ்ச் சுவடிகள் பற்றிய விபரங்களும் அறியப்படத் தக்கவை.

---

14. மு.கோ. இராமன், சுவடிகள் தரும் சுவை, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கக் கட்டுரை, உ.த.நி., 29.4.1983.

உலக முழுமையும் சுமார் 60,000 தமிழ்ச் சுவடிகள் இருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

அரசும், கல்வி மேல்மட்டத்திலுள்ள அறிஞர்களும் முயன்றால் விபரங்கள் கிட்டும்.

தமிழ்ச் சுவடி நூலக அமைப்புகளும் முழுமை பெறும்.

சுவடி அழிவுகள்

கல், செப்பேடுகள் போலன்றிச் சுவடிகள் கால நெடுமையாலும் சிதைவுறுவன. பொதுவாகக் கீழ்க்காணும் காரணங்களால் சுவடி அழிவுகள் நிகழ்கின்றன.

1. கால நெடுமை
2. நீர், நெருப்பு, காற்று, தூசு, அழுக்கு, புகை எனும் இயற்கைச் சக்திகள்
3. தலைச்சங்க, இடைச்சங்க கடற்கோள்கள்
4. அறியாமை
5. மூடப் பழக்க வழக்கங்கள் (தைப்பொங்கல், ஆடிபெருக்கில் சுவடிகளை ஆற்றில் விடல்)
6. வன்மீகம் என்னும் கரையான் அரிப்பு
7. அனல்வாதம், புனல்வாதம் எனும் போட்டிகள்
9. 17,18-ஆம் நூற்றாண்டைய அரசியல் குழப்பம்
10. அந்நியர் படையெடுப்புகள்
11. ஒரு துறைபற்றிய சுவடிகள் ஒருவரிடமே தங்கி வேரோடு அழிந்துபடல்
12. கடத்தல்கள்
13. பாதுகாப்பு முறைகளை முறைப்படி கையாளாமை
14. கைப் பழக்கமின்மை
15. படி செய்யும் பணியை மேற்கொள்ளாமை (அலட்சியப் போக்கு)
16. சமயப் பூசல் (கால வரலாற்றில் மாறிவந்த சமய மாற்றங்கள்)

போன்றவற்றால் சுவடி அழிவுகள் நிகழ்ந்துள்ளன.

பண்டைய, இன்றைய பாதுகாப்பு முறைகள்

சாதாரணமாகப் பனையோலைச் சுவடிகள் 300 வருடம் வரை பாதுகாப்பாக இருக்கும். தக்க முறையில் பாதுகாக்கப்பட்டால் 800 ஆண்டுகள் வரையும் கெடாமல் இருக்கும் எனக் கருதுகின்றனர்.

பழைய முறைகள்

காலநீட்சி, வன்மீகம், புழு, பூச்சி அரிப்பு போன்ற இயற்கை அழிவுகளைத் தடுக்கக் கற்பூரம், துளசி, வேப்பிலை, வசம்பு, தாழம்பூ போன்றவைகளைச் சுவடிகளிடையே பரப்பி வைத்தனர்.

அத்துடன் எழுதத் தொடங்குமுன் ஓலையைப் பதப் படுத்தும் முறையிலும் பாதுகாப்பு நிலைகள் கடைப்பிடிக்கப் பட்டன.

பெரும்பான்மையான ஏடுகளின் இறுதியிலமையும் எச்சரிக்கை, சாபங்கள், ஏடு காப்பவர்க்கு வரும் நற்பலன்கள் போன்ற அமைப்புகள், மனிதர்களால் வரும் கேடுகளினின்றும் பாதுகாப்பு நல்கின.

இவற்றுடன் ஏடுகளே, ''என்னை எண்ணையிலிருந்து காப்பாற்றி வரவும்'', ''தண்ணீரிலிருந்து காப்பாற்றி வரவும்'' எனக் கூறுவதாக அமைத்தல்.

ஏடுகளைக் கட்டும் முறையும் சிதைவுக்கு வழிகோலு மாதலின் கருப்பு, பிற வண்ண இழைகள் கொண்டு அறுபடா வகையில் கட்டல் போன்றனவும் நூலாசிரியர் கைக்கொண்ட பாதுகாப்பு முறைகளாகும்.

இன்று பல நவீன முறைகளில் சுவடிகள் பாதுகாக்கப் படுகின்றன.

இவற்றுள் முக்கியமானது குளிர்சாதனம் செய்தல். இது தவிர,

(1) தூசு துடைக்கும் எந்திரத்தால் தூசு நீக்கி வைத்தல்

(2) Dusting Mosclu எண்ணையிடல்

(3) மித அளவு டீசல் எண்ணையைப் பூச்சி கொல்லியாகப் பயன்படுத்தல்

(4) தர்ப்பைப்புல் எண்ணை, இரசகற்பூரம் (Napthaline) போன்றவைகளைப் பயன்படுத்தல்

(5) D.D.T.Oil தெளித்தல்

(6) மழைக்காலங்களில் பூஞ்சக் காளான் வராது தடுக்கத் தட்பவெப்பநிலை விளக்கப்படம் (Weather Chart) அமைத்து, வெப்பநிலை மிகக் குறைந்திருந்தால் ஒரு அகல் விளக்கில் மருந்திட்டு வெப்பத்தை உண்டாக்கல்

(7) குளோரைடு உள்ள பெட்டியில் காற்றுப் புகாது மூன்று மாதங்கள் வரை அடைத்து வைத்தல்

என்ற இம்முறைகளிலும் சுவடி நூலகங்களில் ஏடுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நவீன முறைகள் காகிதச்சுவடிகள், (Paper Manuscripts)காகித நூற்கள் என்பனவற்றின் பாதுகாப்புக்கே பெரிதும் துணைசெய்வன.

ஏட்டுச் சுவடிகளுக்கு முன்னோர் பயன்படுத்திய மூலிகை, தயில வகைகளே முழுப் பாதுகாப்பு தரவல்லன.

பாதுகாப்பின் அவசியம்

காகித நூற்கள் பெருகிவிட்ட இக்கால கட்டத்தில் சுவடிகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் என்ன என்ற வினா எழுகிறது.

இதுவரை தமிழகத்தில் உள்ளதாக அறியவந்துள்ள 20,000க்கு மேற்பட்ட சுவடிகளில் நூலாக வெளி வந்துள்ளவை 21 சதவீதம் மட்டுமே என அறியப்படுகிறது. எனவே இன்னும் முக்கால் பங்குச் சுவடிகளில் என்னென்ன செய்திகள் உள்ளன என்பதும் இதுவரை உலகுக்குத் தெரியாதாகையால் அவை வெளிவரும் வரை சுவடிகளைப் பாதுகாத்தல் அவசியமாகிறது.

அடுத்து, அச்சில் வெளிவந்த பின் அச்சுவடிகளைப் பாதுகாத்தல் தேவையா என்ற வினா தோன்றுகிறது.

(1) இதுவரை வெளிவந்த பதிப்புகள் அனைத்தும் குறிப்பிட்ட பொருள் குறித்த அனைத்துச் சுவடி களையும் ஒப்பிட்டு வெளிவந்தவை எனக் கூறுவதற் கில்லை. ஏனெனில் அனைத்துச் சுவடிகளும் குறிப்பிட்ட இடங்களில் சேகரித்து வைக்கப்படவில்லை. பல இடங்களில், பல நிலைகளில், பலரிடம் அவை சிதறிக் கிடக்கின்றன.

(2) குறிப்பிட்ட ஒரு பொருண்மை உடைய சுவடி தொடர்பான படிகளை, அனைத்து மாவட்டங்களிலும் சென்று திரட்டித் தொகுப்பதுடன் அண்டை மாநிலங்களிலும் மொழிக்கலப்பு, மொழிபெயர்ப்பு நிலைகளில் அச்சுவடி உள்ளதா என ஆய்ந்து, அவற்றோடு ஒப்பிட்ட பின்னர் வெளியிடுவதே சிறந்த பதிப்பாகும். இம்முறை அனைத்துப் பதிப்புகளிலும் பின்பற்றப்பட வேண்டும். ஆதலின் இப்பணி நிறை வேறும் வரை அச்சான சுவடிகளைப் பாதுகாப்பது அவசியமே.

(3) குறிப்பிட்ட ஒரு சுவடியைப் பதிப்பிக்கும்போது அதன் சமகாலத்திய சுவடிகள், சுவடி ஆசிரியர் காலத்திலிருந்த பிற ஆசிரியர் சுவடிகள், குறிப்பிட்ட சுவடியோடு கருத்து, வடிவம், உள்ளடக்கம், சொற்றொடர், உவமை, உருவகங்கள், வரலாற்று, சமயச் செய்தி களோடு ஒப்புமை உடைய பிற சுவடிகள் என்று உள்ள அனைத்தையும் ஒப்பிட்டுப் பதிப்பித்தல் என்ற முறையில் பதிப்புப் பணி அமையவேண்டும். இத்தகு முறையில் இப்பணி நிறைவேறும் வரையும் அச்சான சுவடிகளும் பாதுகாக்கப்பட வேண்டியவையே.

(4) குறிப்பிட்ட சுவடியில் ஒருமுறை நாம் வாசித்ததையே பின்னர் வேறு ஒன்றாக வாசிக்க இயலும். இதனையே பலர், பல இடத்தில், பல முறைகளில் வாசிக்க இயலும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது அச்சான சுவடிகளின் அவசியம் புரிகின்றது.

(5) குறிப்பிட்ட ஒரு சுவடி, பாதுகாக்கும் இடம், எழுதிய ஆசிரியர், எழுது முறை, எழுதப்பட்ட பொருள், எழுத்தாணி என்பனவற்றுக்கு ஏற்ப எழுத்து வேறுபாடுகளுடன் அமைவதால் பதிப்புப்பணி முழுமையுற நிறைவேறுவதில்லை. இந்நிலைக்கொரு முற்றுப்புள்ளி கிட்டும் வரை அச்சான சுவடிகளும் பாதுகாப்பிற் குரியனவே.

சுவடிப் பதிப்பாளர்கள்

அச்சு எந்திரம் கண்டறியப்பட்ட பின் பல புதிய நூற்கள் அச்சேறின. பழைய எழுது பொருட்களில் எழுதப்பட்ட இலக்கிய, இலக்கணங்களும் புதிய எழுது பொருளாய்க் காகிதத்தில் அச்சாகின.

தமிழ்ப் பதிப்பாளர்கள் வரிசையில் டாக்டர் உ.வே. சாமிநாதையர், சி,வை. தாமோதரம்பிள்ளையவர்கள், ஸ்ரீ ஆறுமுக நாவலர், வித்துவான் தாண்டவராய முதலியார், மழவை மகாலிங்க ஐயர், களத்தூர் வேதகிரி முலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையார், வையாபுரிப் பிள்ளை, திருவேங்கட முதலியார், ராசகோபாலப் பிள்ளை போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இன்று தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் போன்றன நூலக அமைப்பில் நின்று, சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடும் பணியினை மேற்கொண்டுள்ளன.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற அரசு நிறுவன அமைப்புகளும் இப்பணியில் தனி ஊக்கம் காட்டி, ஆக்கபூர்வமான பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

ஆயினும் உ.வே.சா.வுக்குப் பின் இப்பணியில் உள்ள தேக்க நிலை நீக்கப்படவில்லை எனலாம்.

சுவடி ஆய்வாளர்கள்

சுவடிகளை ஆய்வுத் தலைப்பாகக் கொண்டு ஆய்வு செய்பவர் தொகை மிகக் குறைவு.

அரசும், பல்கலைக் கழக அமைப்புகளும் தற்போது இதற்குத் தனி ஊக்கம் தரும்வகையில் 'சுவடிப்புலம்' போன்ற தனி அமைப்புகளையே உருவாக்கியுள்ளன.

சுவடிகளின் ஒவ்வொரு கூறும் தனித்தனி ஆய்வாக அமையும் கருப்பருமை உடையன.

சுவடிகள் மாவட்ட வாரியாக, ஆசிரியர் வாரியாக, கால வாரியாக, பொருள் வாரியாகத் தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

சுவடிகளின் பதிப்புப் பணிக்கேற்ப இவற்றின் ஆய்வுப் பணியும் இணைந்து வளர்வதே முழுமை சேர்க்கும். ஒரு பக்க வளர்ச்சி எத்துறைக்கும் நன்மை தருவதில்லை.

உலகு தழுவிய முறையில் பயன்படுத்தப்பட்ட எழுது பொருட்கள், எழுது கருவிகள், போன்றவற்றின் விபரங்கள் அடுத்து அமையும் அட்டவணையில் இடம்பெற்றுள்ளன.

காலம் 1.	எழுது பொருட்கள 2.	எழுது கருவிகள் 3.	மை வகைகள் 4.	எழுதப்படு பொருள் 5.	உலகில் 6.	இந்தியாவில் 7.	தமிழகத்தில் 8.
கி.மு.தொடக்கம்	கல்-பளிங்குக்கல், செங்கல்	இரும்புக்கருவி (உளி)	-	அரசுக்கொடை, அரசு ஒப்பந்தங்கள், அரசு அறிக்கைகள், சில முக்கிய செய்திகள்	-	-	-
	உலோகம்-செம்பு, பித்தளை, தகரம், வெண்கலம், இரும்பு, வெள்ளி, தங்கம்	உலோக ஊசி (பொன்னூசி)		,,	-	-	-
பண்டுதொட்டு	பூர்ஜ மரப்பட்டை	-	இலைச்சாறு கொண்டு எழுதுதல். வெள்ளி, பொன் முலாம் பூசி வர்ணம் கொண்டு எழுதல்	-	-	இமயமலைச் சாரல் பகுதிகளிலுள்ளோர்	-
	ஓலை நுங்குப்பனை ஓலை சீதளப்பனை ஓலை	எழுத்தாணி	மஞ்சள், மணத்தக்காளி, ஊமத்தையிலைச் சாறு மாவிலை, தர்ப்பைப் புல், கரியால் செய்த மை தடவுவர்	அனைத்தும்	-	✓	✓

1.	2.	3.	4.	5.	6.	7.	8.
கி.பி.2 (சிலம்பு)	தாழை மடல்	பித்திகை அரும்பு	செம்பஞ்சுக் குழம்பு	காதற் செய்திகள்	-	-	✓
கி.பி.5 (சாகுந்தலம்)	தாமரை இலை	நகம்	-	''	-	✓	-
கி.பி.5 (பெருங்கதை)	நெற்றி	முல்லை அரும்பு	பூந்தாது சந்தனம் குழைத்த மை	'' ''	- -	- -	✓ -
கி.பி.7	சசி எனும் அகர் மரப்பட்டை	-	பழுத்த, சிவந்த வெள்ளரிச்சாறு	-	-	திபெத் நேபாளம் காஷ்மீர் பகுதிகளிலுள்ளோர்	-
கி.மு.2-கி.பி.7	பாப்பிரைஸ் (Papyrus) (கோரை போன்ற ஒரு வகைப் புல்)	தடித்த, கூர்மையான நாணற் குச்சிகள்	செடி, கொடி-களின் சாறு, மிருக இரத்தம்	மன எண்ணங்கள் அனைத்தும்	எகிப்தியர், கிரேக்கர், பினிஷியர், உரோமர், எபிரேயர், அர்மீனியர், அராபியர், பாலஸ்தீனர்	-	-
கி.மு.1-கி.பி.4	மெருகிட்ட ஆட்டுத்-தோல் (மெம்பரேனா Membrana) கன்றுக்குட்டித்தோல் (Vellum-paper)	-	-	"	மத்தியதரைக்-கடல் நாடுக-ளிலுள்ளோர்	-	-

1.	2.	3.	4.	5.	6.	7.	8.
கி.மு.தொடக்கம்	மூங்கிற் பத்தை	கூரான கருவி	-	''	சீனர்	-	-
கி.மு.4	மரப்பலகை	-	சுண்ணாம்பு, மசி	அரச கட்டளை சமய சம்பந்த-மான நூற்கள்		அஸ்லாம், வடமேற்கு எல்லைப்-புறங்கள்	-
கி.பி.நூற்றாண்டு-களில்	மெழுகு தடவிய மரப்-பலகை (Codex)	கூரான கருவி	-	''	உரோமானியர்		-
''	களிமண் பலகை	''	-	''	பாபிலோனியர், சால்டியர், சிரியா நாட்டு மக்கள்		-
	பருத்தி, பட்டுத்துணி, பசைக்கூழ் தடவிய சீலை	மெல்லிய தூரிகை	வர்ண மை, புளியம்விதைப் பசை தடவி அதன் மேல் கரி பூசி எழுதல்.	முக்கிய சில செய் திகள்	சீனர்	ஆந்திரர், கன்னடியர்	✓

1.	2.	3.	4.	5.	6.	7.	8.
-	நுனா, வேம்பு மரப்பட்டைகள்	-	-	மந்திர தந்திரங்கள்	-	அஸ்ஸாம் வங்கப் பகுதிகளில் வசிப்பவர்	-
-	ஆல், எருக்கிலை	-	-	மாபாடியம் எனும் நூல் (ஆல் இலையில்)	-	✓	-
	அரசிலை (சான்று: யோகினி தந்திரம்)	-	-	சில செய்திகள்	-	✓	-
இன்றும்	பதப்படுத்திய வாழை இலை	-	-	பள்ளிப் பாடங்கள்	-	வங்க கிராமப் பகுதிகளினர்	- -
-	களிமன் ஒடு, களிமணி கட்டிகள்	-	-	சில சிறிய செய்திகள்	மேனாட்டினர்	✓	-
-							
-	ஆமை ஒடு, சங்கு	-	-	,,	-	வங்காளியர்	
-	மணல்	விரல்	-	பள்ளிப் பாடங்கள்	-		
		பிற - பறவை இறகு, முள்ளம் பன்றி முள், விலங் கெலும்பு, கொறுக் கந்தட்டை, மரக் குச்சி, கூரிய கல், உலோக ஆணி	பிற -பஞ்சுத்திரியை ஆமணக்கெண்ணயில் எரித்துக் கிடைக்கும் கரி, பூர்ஜ மரப் பட்டையைக் கருக்கிக் கோமியம் கலந்து செய்த மை பகலில் தெரியாத, இரவில் இருட்டறையில் தெரியும் இரகசிய மை	-	-	வட இந்தியர்	-
இன்று	காகிதம்	பேனா, பென்சில் போன்றன	நவீன பல்வேறு மை வகைகள்		நீண்டகாலம் தொட்டுச் சீனாவில்	✓	✓

திருவனந்தபுரத்தில் சுவடிகள்

திருவனந்தபுரத்திலுள்ள கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள இரு சமூகக் கதைப்பாடற் சுவடிகள் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதால், திருவனந்தபுரத்தில் தமிழ்ச்சுவடிகள் வந்த வரலாற்றையும் அவற்றின் இருப்புநிலைகளையும் விளக்குமுகமாக இத்தலைப்பின் கீழ்ச் செய்திகள் விளக்கப்படுகின்றன.

சேர, சோழ, பாண்டிய நாடுகள்; மன்னர்கள் என்ற வரிசையில் முதலில் இடம் பெறும் சிறப்புப் பெற்று, தமிழகம் என்ற பேரமைப்புக்கு உட்பட்டிருந்த சேரநாடு, 14-ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் (கொல்லம் ஆண்டு 484, கி.பி.1309) நாடு, மொழி, இன முறைகளோடு தனி நாடாகப் பிரிந்து வளரத் தொடங்கியது.

இக்கேரளத்தின் தலைநகராக வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவனந்தபுரம் அமைந்துள்ளது. இந்நகர் தமிழகத்தின் தென்மேற்கு எல்லைப்புறத்தை ஒட்டி அமைந்துள்ளதால், இங்குள்ள சுவடிகளைப் பொதுநிலையில் காணுதலும், இங்குள்ள தமிழ்ச் சுவடிகளைச் சிறப்பு நிலையில் அறிதலும் தமிழுலகுக்கு இலக்கிய, மொழி, வரலாற்று, சமூக, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பல செய்திகளைத் தரக்கூடும் என்ற நோக்கில் இவை பற்றிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

ஆவணக் காப்பகத்துச் சுவடிகள்

இந்நகரில் ஆவணக் காப்பகம், கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகம் என்ற இடங்களில் பெருவாரியான சுவடிகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

'கிழக்குக் கோட்டை' (East Fort) எனும் இடத்தில் உள்ள முன்பு சிறைச்சாலையாகப் பயன்படுத்தப்பட்ட, கற்சுவரால் பாதுகாக்கப்பட்ட கட்டிடம் தற்போது ஆவணக் காப்பகமாக அமைந்துள்ளது.

இங்கு அரண்மனைக் கஜானா வரவு, செலவுக் கணக்குகள், நாள்தோறும் வந்த வரவு செலவுகள், ஆண்டு வருவாய்க் கணக்குகள் (Revenue accounts) நிலவரி போன்ற வரி விபரங்கள், பத்மநாப ஸ்வாமி கோயிலுக்குரிய நில விளைச்சல் விபரங்கள், சொத்து விபரங்கள், கோயிலின் பிற கணக்கு வகைகள், பூஜைக்காகும் செலவு முறைகள், 'ராயல் நீட்டு' எனப்படும் அரசுக் குறிப்புச் சீட்டுகள், நீதிமன்ற வழக்கு விபரங்கள், தீர்ப்புகள், அரசுப் பதிவேடுகள் (Government Records), ஆங்கிலேயர் செய்துகொண்ட வணிக உடன்படிக்கைகள் என்பன எழுதப்பட்ட சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

நாடோறும் அன்றாட அரசு, கோயிற் கணக்குகளை எழுத, அரச, கோயிற் கணக்கர்கள் நூற்றுக்கணக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். நடுவில் ஒரு துளையிட்ட, அகலக் குறைவான, பெரும்பான்மை நரம்பெடுக்காத ஓர் ஓலையில் கணக்கெழுதி, துளையில் கோர்த்த நூற்கயிற்றில், ஓரோர் நாளும் எழுதும் கணக்கைக் கோர்த்துக் கொண்டேவந்து, அவற்றைப் பின் பெரும் சுருணையாகப் பாய் சுருட்டுவது போல் சுருட்டிக் கட்டி வைத்து விடுவர். இவ்வாறு உள்ள 1500க்கும் மேற்பட்ட, ஒவ்வொன்றிலும் 100க்கும் மேற்பட்ட ஓலைகளுள்ள சுருணைகள் மர அடுக்குகளிலும், கம்பி வலையிட்ட மரப்பெட்டிகளிலும் வைக்கப்பட்டுள்ளன.

நாடோறும் இத்தகு கணக்கு, வழக்குகளை எழுதத் தேவைப்படும் ஓலைகளைத் தயாரித்தளிப்பதற்கென்று அரசுக்கே உரிய வணிகத்துறை நிறுவனங்களும் (Agency) தனியார் ஏஜென்சிகளும் இருந்திருக்கக் கூடும். இவை ஓலை நறுக்க, பதப்படுத்த, அளிக்க (Supply செய்தல்) என்று பல பிரிவுகளுடனும் அமைந்திருக்க வேண்டும்.

இங்குள்ளவை அனைத்தும் சுமார் 500 ஆண்டுக்கால வரலாறு உடைய சுவடிச் சுருணைகளாகும். தமிழ்+ மலையாளக் கலப்பு மொழி நடையில், தமிழ்+மலையாள எழுத்துக் கலப்பில் (மலையாண்ம) இவை எழுதப் பட்டுள்ளன. பெரும்பாலானவை தமிழ் எழுத்தில், மலையாள மொழியில் அமைந்தவை. 19-ஆம் நூற்றாண்டில் காகிதத்தில் எழுதும் முறை நடைமுறைக்கு வந்தபின்னும்

கூடப் பாரம்பரியமாக ஓலைகளிலேயே எழுதப்பட்டு வந்திருக்கின்றன.

இவற்றையெல்லாம் எடுத்து முழுக்கப் படித்துப் பார்த்தவர்கள் எவருமில்லை. இவை கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள்போல் வரலாற்றுக்கு உதவும் கருவூலங்களாதலின் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கைதிகளை அடைத்து வைக்கும் சிறைச்சாலையாக இருந்த இவ்விடத்தில், தற்போது சுவடிகள் அடைபட்டிருக் கின்றன. இன்னும் 200 வருடத்தில் தூசு படிந்து இவை அழியத் தொடங்கிவிடும். அதற்கு முன் இவற்றில் தக்கனவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த, வரலாறு, மொழிவளர்ச்சி, சமூக, பண்பாட்டு நிலைகளை, மாற்றங்களை உணரும் புதிய கருத்துகள் உலகுக்குக் கிட்டும்.

இவை சிறப்பாக ஆங்கிலேயர், டச்சு, போர்ச்சுகீசியரது வாணிப உடன்படிக்கைகளின் விபரங்களைக் கூறுவதான், ஆய்வு செய்யும் வரலாற்று மாணவர்களுக்கும், தமிழ், மலையாள மொழி வளர்ச்சி அறிவதற்கு மொழியாராய்ச் சியாளர்களுக்கும் உதவும் கருத்துக் களஞ்சியங்களாகும்.

மேற்குக் கடற்கரைப் பகுதியே ஐரோப்பியர் வந்தடைந்த முதற் பகுதி என்பதாலும், இப்பகுதியிலுள்ள கொச்சி, தலை சிறந்த துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்ததாலும் இவர்களது வாணிபம் குறித்த உடன்படிக்கைகள் வரலாற்றுக்கு உதவு வனவாகவும், மலையாளம் 14-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழிலிருந்து பிரிந்து தனித்து வளரத் தொடங்கிய மொழி என்பதான், மொழிவளர்ச்சி பற்றி அறிய உதவும் கருத்துக் கருவூலமாகவும் அமையும் இச்சுவடிகள் பயன் படுத்தப் படாது கிடக்கின்றன.

120 தொகுதிகளாக (Volumes) இவற்றை வெளியிட முயற்சி நடந்ததாகவும், அது முற்றுப்பெறாது போனதாகவும் தெரிய வருகின்றது.

இங்குள்ளவற்றில் மிகப் பழையதாகக் கருதப்படுவது கி.பி. 1336-இல் எழுதப்பட்ட அரண்மனைப் பதிவேடு (Palace Records) (சமஸ்கிருதச் சுவடி) ஆகும். இது 648 ஆண்டு

வயதுடையது. சுவடிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டால் 6 நூற்றாண்டுக் காலம் வரையும் கெடாமல் இருக்கும் என்பதற்கு இச்சுவடி கண்கண்ட சான்றாகத் திகழ்கின்றது.

இங்குள்ளவற்றில் மிக நீளம் உடைய ஏடு கி.பி.1853-இல் (கொல்லம் ஆண்டு 4/1/1028) எழுதப்பட்ட அரசு வரி தொடர்பான ஒற்றை ஒலை உடைய ஏடாகும். 109 செ.மீ. நீளம் கொண்டதாகும் இது.

கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம்

18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கேரளத்தின் தலைநகரான திருனந்தைப் பதியினின்று ஆட்சி செய்துவந்த அரசரொருவர் வடமொழியில் மிகு விருப்புடையராய் தமிழை, தமிழ் வித்துவான்களைப் புறக்கணித்தமையை அறியவந்த திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த தம்பிரான் ஒருவர், அம்மன்னரை உரிய முறையில் சந்தித்து, தக்கன வற்றை எடுத்து விளக்கித் தமிழையும் போற்றச் செய்த வரலாற்றை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் ''நான் கண்டதும் கேட்டதும்'' என்ற நூலிலுள்ள ''தமிழ் தந்த வளம்'' கட்டுரையில் காண முடிகிறது.

முத்தமிழ்க் காப்பியமும், சேரமான் பெருமாள் ஞான உலாவும் பிறந்த சேரநாட்டில், மலையாள மன்னர்களுக்கு அவ்வப் போது தமிழின் பெருமையை உணர்த்தி சமஸ் கிருதம், மலையாளத்தோடு தமிழையும் தழுவி ஆதரிக்கச் செய்த இத்தகு தமிழறிஞர்களை வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

இத்தகைய நிகழ்ச்சிகளின் பின்னணியில் தமிழ்ச் சுவடிகள் அரசு ஆதரவோடு திரட்டிச் சேர்க்கப்பட்டு, அரண்மனையில் கொலு வைக்கப்பட்டன. குடியாட்சி மலர்ந்தபோது இவை கேரளப் பல்கலைக் கழகத்திற்கு நன் கொடையாக அளிக்கப்பட்டன.

இந்தியாவிலுள்ள சுவடி நூலகங்களில் குறிப்பிடத்தக்க இடம் பெறும் இக்கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சுமார் 60,000க்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன. எண்ணிக்கையில் சமஸ்கிருத,

மலையாளச் சுவடிகள் முதலிடம் வகிக்கின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, உருது, இந்தோனேஷியன், பர்மியன் ஆகிய மொழிகளில், எழுத்துகளில் தேவநாகரி, கோலெழுத்து, வட்டெழுத்து, கிரந்தம், ஆங்கிலம் முதலிய எழுத்துகளோடும் ஏடுகள் எழுதப்பட்டுள்ளன.

தோல், துணி, பூர்ஜ மரப்பட்டை, செப்பேடுகள், நாணயங்கள் என்பனவற்றில் எழுதப்பட்டவைகளையும் தொகுத்து வைத்துள்ளனர்.

உருத்திராட்ச மாலை வடிவத்திலுள்ள (15 மணிகள் கொண்டது) ஏட்டையும், சுருணை வடிவத்தில் (பண்டு எகிப்தில் பாப்பிரஸ் தாள்களில் எழுதிச் சுருட்டி வைத்தது போலப் பனை ஓலைகளில் எழுதிப் பெரும் கட்டாகச் சுருட்டி வைத்துள்ளனர்) அமைந்துள்ள - சு.எண். 8270 - பஞ்சாங்கம் (தமிழ்) சுவடியையும் பார்க்க முடிகின்றது.

நுண்ணிய எழுத்துகள் உள்ள ஏடுகள் (சாமுத்திரிகா லக்ஷணம் பற்றிய தமிழ்ச் சுவடிகள் எண். 11258, 11256, 11240) நுணுக்கமான படங்கள் உள்ள 622 - சிவலிங்க அங்க சாசனம்[15], 5576 - கீதை[16] (தெலுங்கு) போன்ற சுவடிகளும் இங்குள்ளன. கேரளத்துக்கே உரிய தந்தத்தால் ஆன வேலைப் பாடுகளுடன் கூடிய, எழில்மிகு புற அமைதிகளுடைய சுவடிகளும் பாதுகாக்கப் படுகின்றன.[17]

---

15. இச்சுவடியில் பாம்பு, மாடு, குதிரை, பெண் தேவதை உருவங்கள் மிகச் சிறப்பாக வரையப்பட்டுள்ளன.

16. விதவிதமான பூக்களின் வடிவங்கள் எழுத்தாணியால் நுண்ணிய கோடுகளில் வரையப்பட்டு, சுவடியில் ஓவியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றது.

17. 19218 - பாகவதம் - இதில் பத்மநாபஸ்வாமி கிடந்த கோலத்துடன் திகழ, அரசர்கள், பரிவாரங்கள் இருபுறமும் வணங்கிய நிலையிலுள்ளனர். 2250 - ஸ்ரீகிருஷ்ண துதி - கருடாழ்வார் ஸ்ரீகிருஷ்ணரைச் சுமந்து பறப்பது போன்றிருக்க, மறுபுறம் ருக்மணி, சத்தியபாமாவுடன் உள்ள கோலமுள்ளது.

ஓலையில் மையால் எழுதப்பட்ட ஏடுகளும் உள்ளன. (2388 - ஆரிய மஞ்சு ஸ்ரீமூல கல்பம் - தேவநாகரி எழுத்தில் அமைந்தது). இந்தோனேஷியன் மொழி, ஆங்கில எழுத்திலுள்ள இராமாயணம், மகாபாரதமும் உள்ளது.

இங்குள்ளவற்றில் அளவில் மிகச் சிறிய ஏடுகளாக 16702 (மலையாள எழுத்து + சமஸ்கிருத மொழியிலமைந்தது) 22976 - கர்னசிரயாதி (சோதிடம்) (சமஸ்கிருதச்சுவடி) என்பனவற்றைக் கூறலாம். அளவுகள் 5.5 x 2.5; 5.2 x 2.8 செ.மீட்டர்களாகும்.

மிகநீண்ட வயதுடைய ஏடு 15880 - ஸ்தோத்திரங்கள் என்பதாகும். இது கி.பி.1376-இல் (608 ஆண்டு வயதுடையது) மலையாள மொழி வளர்ந்துகொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்டதாகும்.

பொதுவாக ஏட்டில் துளைகள் வட்ட வடிவமாக அமைந்திருக்க, அழகுணர்வு கருதி அமைந்த சதுரத்துளை உடைய ஏடும் (எண்.19217) உள்ளது. இதன் காலம் 19-ஆம் நூற்றாண்டு.

இந்நூலகத்துத் தமிழ்ச் சுவடிகள்

இங்கு, பல்வேறு மொழி, எழுத்துகளில் அமைந்த சுவடிகள் உள்ளன. எனினும் தமிழ்ச் சுவடிகளும் சில இருக்கலாம் எனக் கருதப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் முயற்சியின் பேரில், இந்நிறுவனச் சுவடிப் பொறுப்பாளராயிருந்தவரும், டாக்டர் உ.வே. சாமிநாதையருக்குப் பின், தமிழ்ச் சுவடிகள் உலகில் குறிப்பிடத் தக்கவர்களுள் ஒருவருமாகிய மு.கோ. இராமன் அவர்கள், இந்நூலகத்துக்கு அனுப்பப்பட்டு, 1979-இல் தமிழ்ச் சுவடிகளுக்கு எண்ணிக்கை விபரம் எடுத்தபோது 3,281 சுவடிகள் உள்ளமை அறியப்பட்டது.

இவற்றுள் 1091 சுவடிகளுக்கான சுவடி எண், சுவடித் தலைப்பு, இதழ்களின் எண்ணிக்கை, அளவு (size), நிலை (condition), உரைநடையா? செய்யுளா? செய்யுளாயின் எண்ணிக்கை, பொருள் (content), படி எடுத்த ஆசிரியர்,

எழுதப்பட்ட ஆண்டு, மாதம், நாள் பற்றியும், பிற முக்கிய குறிப்புகளும் அடங்கும் முறையில் அமையும் அட்டவணை விபரங்கள் "தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை)" (பதிப்பு இரா. நிர்மலாதேவி) என நூல் வடிவில் வெளிவந்தன. இவற்றுக்கும், எஞ்சியுள்ள அனைத்துச் சுவடிகளுக்கும் விவர அட்டவணையும் இந்நிறுவன முயற்சியால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. இந்நூலகத் தமிழ்ச் சுவடிகள் 480க்கு விளக்க அட்டவணை இந்நிறுவனத்தால் வெளியிடப் பெற்றுள்ளது. (பதிப்பு சூ. நிர்மலாதேவி டிச.29. 1995)

'தமிழ்ச் சுவடிப் பெயர்கள்' என்ற தலைப்பில் ஒரு சுருக்க அட்டவணையைக் கேரளப்பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகமும் வெளியிட்டுள்ளது

இங்குள்ள சுவடிகளில் அகச் சான்றுகளாகக் காணப்படும் குறிப்புகள் கொண்டு தமிழக ஊர்களைச் சேர்ந்த (கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள். இதில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள் மிகுதி) சுவடிகள் இவை என்பது தெரிய வருகின்றது.

தமிழ் எழுத்து - தமிழ் மொழி
மலையாள எழுத்து - தமிழ் மொழி
தமிழ் எழுத்து - மலையாள மொழி
கிரந்த எழுத்து - தமிழ் மொழி
தெலுங்கு எழுத்து - தமிழ் மொழி
சமஸ்கிருத எழுத்து - தமிழ் மொழி

என்ற முறையில் சுவடிகள் எழுதப் பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இங்குள்ள தமிழ்ச் சுவடிகள் மருத்துவம், மந்திரம், சோதிடம், இலக்கியம், இலக்கணம், வரலாறு, கணிதம், வானசாஸ்திரம், புவியியல், நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், துதிகள் என்று அனைத்துப் பொருளமைதிகளோடும் அமைந்துள்ளன.

இவற்றுள் இலக்கியம் பற்றிய சுவடிகள் எண்ணிக் கையில் அதிகமாகவும், மருத்துவம் பற்றியன அடுத்த நிலையிலும், நாட்டுப்புறப் பாடல்கள், கதைப் பாடல்கள் அதற்கடுத்த நிலையிலும், வேதாந்த ஏடுகள் அதனை அடுத்தும் அமைகின்றன.

சுமார் 2,000 சுவடிகளைப் பார்வையிட்டதில் காலத்தால் முந்தைய ஏடாகத் தமிழ் எழுத்திலமைந்த 22814 - பிரமாணம் என்ற சுவடியைக் குறிப்பிடலாம். இது கொல்லம் ஆண்டு 785-இல் (கி.பி.1610) எழுதப்பட்டிருக்கிறது. 374 ஆண்டு வயதுடையது.

காலத்தால் மிகப் பிந்தைய ஏடு 10366 - நளன் அம்மானை என்பதாகும். கி.பி. 1944-ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக இதிலேயே குறிப்பு உள்ளது. 41 ஆண்டு வயது கொண்டது.

6322 - மகாபாரதம் கதை என்ற 247 இதழ்கள் கொண்ட சுவடி (சுமார் 15,000 அடிகள் கொண்டது). 5651 - அசுவமேத யாகம் (387 இதழ்கள் கொண்டது) போன்றன பெரிய சுவடிகளாக இருக்கலாம். நீளமான சுவடியாக 3769 - ஆதாரப் பத்திரங்கள் கடன் முறி முதலானவை என்பதைக் கூறலாம். அளவு 58 x 3.7. அளவில் சிறிய சுவடியாக 11559 - அழுகண்ணி நாயன் சூத்திரம், 11163 - இராசிபலன் என்பன அமைகின்றன. அளவுகள் 11 x 2.9; 11.5 x 2.6. 8227 - அமிர்த மதன நாடகம் என்ற சுவடி நீலாயதாக்ஷி என்ற ஒரு பெண்ணால் எழுதப்பட்ட சிறப்புடையது.

தமிழ்க் கதைப்பாடற் சுவடிகள்

இப்பகுதியில் தமிழ்ச் சுவடிகளில், சிறப்பாகக் கதைப்பாடற் சுவடிகளின் அமைப்புகள் ஆராயப் படுகின்றன. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகக் கதைப்பாடற் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு கருத்துகள் உரைக்கப்படுகின்றன. இந்நூலகத் திலுள்ள இரு சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்புக்கு எடுத்துக் கொண்டுள்ளதால் அதற்குமுன் நிலையாக இங்குள்ள கதைப்பாடற் சுவடிகளின் பொது, சிறப்புத் தன்மைகள் ஆராயப்படுகின்றன.

இப்பகுதியில் தொடங்கி, கதைப்பாடற் சுவடிகளில் பிற இலக்கிய ஒப்புமைக் கூறுகள் என்ற தலைப்புப் பகுதி முடிய, பெரும்பான்மையும் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சுவடிகள் சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையின், அவற்றில் கே.ப.சு என்று குறிப்பிடவில்லை. பிற நூலகச் சுவடிகளுக்கு மட்டும் அவை எந்நூலகத்திலுள்ளவை என அடைப்புக்குள் குறிப்பிடும் முறை பின்பற்றப் பட்டுள்ளது.

கதைப்பாடற் சுவடிகள்

பெருவாரியான கதைப்பாடற் சுவடிகள் தனியாரிடம் தங்கிக் கிடக்கின்றன. சிறுபான்மையன சுவடி நூலகங்களில் கொலுவிருக்கின்றன.

			சுமார்
1.	சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடிகள்	-	222
2.	கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகச் சுவடிகள்	-	197
3.	தஞ்சை சரஸ்வதி மகால் நூலகச் சுவடிகள்	-	62
4.	தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகச் சுவடிகள்	-	26

5.	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள்	-	40
6.	பாரீஸ் தேசிய நூலகம்	-	12
7.	பாண்டிச்சேரி பிரெஞ்சிந்தியக் கலைக்கழகச் சுவடிகள்	-	9
8.	டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகச் சுவடிகள்	-	6
9.	ஈரோடு கலைமகள் கல்வி நிலையச் சுவடிகள்	-	5
10.	மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடிகள்	-	4
11.	ஆசிய ஆய்வியல் நிறுவனம் (திருவான்மியூர், சென்னை)	-	70
12.	எழுமாத்தூர் வேலம்பாளையம் உயர்திரு. தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுத்த சுவடிகள்	-	3
13.	கல்கத்தா தேசிய நூலகம்	-	2
	மொத்தச் சுவடிகள்	-	602

என்ற எண்ணிக்கையில் ஒரோர் சுவடி நூலகத்திலும் கதைப்பாடற் சுவடிகள் இடம் பெற்றுள்ளன.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு[64]தமிழ்ச் சுவடிகளில் 222 கதைப்பாடற் சுவடிகளே இருக்க, 3281 தமிழ்ச் சுவடிகளுள்ள[65]கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 197 கதைப்பாடற் சுவடிகளுள்ளமை குறிப்பிடத் தக்கதாயுள்ளது.

---

64. ம. இராசேந்திரன், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் (கட்டுரை), தமிழ்ச் சுவடிகள் கருத்தரங்கு, உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், 7.2.1985.

65. 1979-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் பொறுப்பாளராயிருந்த திரு.மு.கோ. இராமன் அவர்கள் இந்நூலகம் சென்று தயாரித்த சுவடி எண்ணிக்கை விபரத்தின்படி கூறப்பட்டது.

இந்நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளின் இறுதியில் காணப்படும் குறிப்புகளை அகச் சான்றுகளாகக் கொண்டு கணிக்க, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சுவடிகள் இவையெனத் தெரிகிறது. நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகள் வில்லுப்பாட்டு, கணியான் பாட்டு, வடிவில் பல கதைப்பாடல்களைக் கோயில் கொடை (விழா)யின்போது பாடி வளர்த்த பகுதிகளாகும். மேலும், நாடகம், கும்மி, அம்மானை வடிவிலும் பல கதைப் பாடல்கள் நடிக்கப்பெற்றும், பாடப்பெற்றும் வளர்க்கப் பட்டிருக்கின்றன. இவை அவ்வப்பொழுது சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகு சுவடிகள் இந்நூலகத்தில் பிற நூலகங்களில் இல்லாத அளவு அதிக எண்ணிக்கையில் இடம்பெற ஏதுவாயிருக்கின்றன எனக் கொள்ளலாம்.

கதைப்பாடற் சுவடிகள் - எழுதுபொருள்

அவ்வவ்விடங்களில் கிடைக்கும் பொருட்களையே எழுதப் பயன்படுத்த இயலும். நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகளில் நுங்குப்பனை மிகுதியாதலின் இதனையே எழுதுபொருளாகக் கொண்டு, இப்பகுதியினின்று கிடைத்து, இந்நூலகத்தில் இடம் பெறும் கதைப் பாடற் சுவடிகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ள மலையாள, சமஸ்கிருதக் கதைப்பாடற் சுவடிகளில் பெரும் பான்மையன தாளிப் பனையோலையில் அமைந்திருக்க, தமிழ்க் கதைப்பாடற் சுவடிகள் நுங்குப்பனை யோலையில் அமைந்தமைக்கு நெல்லை, கன்னியாகுமரிப் பகுதியில் இந்த நுங்குப் பனையோலையே செழித்து வளர்ந்து சிறப் புற்றுள்ளமை காரணமாதல் வேண்டும்.

புற அமைதி


கதைப்பாடல்கள் நீண்ட, நெடும் கதைகளை உள்ளடக் கியன ஆதலின் நீளக் குறைவும், அகல நெடுமையும் உடைய தாளிப்பனை ஓலைகளைவிட, அகலக் குறைவும், நீளமுமுள்ள நுங்குப் பனையோலைகள் கதைப் பொருண்மையின் தன்மைக்கு இயைபுடையன வாகலின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன எனலாம். பொதுவாகக்

கதைப்பாடற் சுவடிகள் பொருள் மிகுமை உள்ளமையின், பிற பொருண்மைச் சுவடிகளைவிடப் பருமை உடையன வாகவும் உள்ளன.

அக அமைதியில் எழுது முறை

பொதுவாகப் பெரும்பான்மையான கதைப் பாடல்களும், சுவடிகளின் ஒவ்வோர் இதழிலும் மூன்று, நான்கு பகுதி களாகப் பிரிக்கப்பட்டே எழுதப்பட்டுள்ளன.


சான்றாக 28408 - வைகுண்டம்மானையில்,



என 3 பகுதியாகப் பிரித்துக்கொண்டு எழுதப்பட்டுள் ளதைக் கூறலாம். பெரும்பான்மையான கதைப்பாடற் சுவடிகளும் இவ்வாறு 3, 4, 5 பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

11613 - சின்னத்தம்பி கதை போன்றுள்ள சில சுவடிகளில் பத்தி பிரிக்காது தொடர்ந்து அமையும் அமைப்பிலும் எழுதப்பட்டுள்ளன. இந்தச் சுவடி நீளமில்லாததாகவும் உள்ளது. இவ்வாறு நீளமில்லாத, பத்தி பிரிக்காது எழுதும் அமைப்பை அரிதாகவே காண முடியும்.

சான்று: 11613 - சின்னத்தம்பிக் கதை



இரண்டு மூன்று பகுதியாகப் பத்தி பிரித்தெழுதும் போது, பத்தி பிரிப்புக்கென ஒரோர் வரியின் இறுதி எழுத்தும் தனித்தெழுதப்படுதலைப் பெரும்பான்மையான கதைப்பாடல் சுவடிகளின் எழுதுமுறையாகக் காண முடிகின்றது.

சில சுவடிகளில் பத்தி பிரிப்புக்கென ஒரு வரி முடிந்தமை உணர்த்தச் சில குறிகளும் (symbols) பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறிகளாக 0 உ + ஞ என்பன பயன்படுத்தப் பட்டுள்ளன.

●●●●●●●● ● ●●●●●● ●
●●●●●●●● ● +●●●●● உ
●●●●●●●● ● ●●●●●●● ●

இதுபோல் 0 என்ற குறிகளும் இடப்படும்.

இவை ஒரு பத்தியின் வரியை அடுத்த பத்தியின் வரியோடு இணைத்துப் படிப்பதைத் தவிர்க்கவும், அழகுணர்வு கருதியும் இடப்பட்டுள்ளன.

நூலமைப்பு

கதைப்பாடற் சுவடிகள் பிற பொருண்மைச் சுவடி களைப் போலவே தொடக்கத்தில், முதல் இதழின் இடது ஓரப் பகுதியில் நூற் தலைப்பைப் பெற்றுள்ளன. அதுபோல் நூலிறுதியில் இன்ன நூல் முற்றுப் பெற்றது என்ற அமைப்பையும், அதனை அடுத்து எழுதிய ஆசிரியர் பெயர், எழுதப்பட்ட காலம், இன்னார் இன்னாருக்காக எழுதியது என்பதும், எழுதிய ஆசிரியர் இன்ன ஊரைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பொது நிலையில் அனைத்துச் சுவடிகளையும் நோக்க, கதைப்பாடல் சுவடிகளிலேயே ஆசிரியர், எழுதப்பட்ட காலம் போன்ற இத்தகு குறிப்புகள் மிகுதியான அளவில் எழுதப்பட்டிருத்தலைச் சிறப்பாகக் காண முடிகின்றது.

அத்துடன் இவற்றுள் பெரும்பாலன 17, 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூலச் சுவடிகளாகவும் உள்ளன.

வாய்மொழியாகக் காலங் காலமாக மக்கள் நாவில் வழங்கி வந்து 17, 18-ஆம் நூற்றாண்டு வாக்கில் மிகுதியாக ஏடுகளில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

கடவுள் வாழ்த்தினை அடுத்து அவையடக்கமும், கதைச் சுருக்கமும் கூறப்பட்டு, நாட்டு, நகர் வர்ணனையோடு கதை துவங்குதலைப் பழமையான கதைப்பாடல்களில் காண இயலும். பிற்காலக் கதைப்பாடல்களில் அவையடக்கம், நாட்டு, நகர் வர்ணனை இன்றியும் அமையக் காணலாம்.

---

66. 9067 - பாண்டவர் வனவாசம் என்பதில் 0 என்ற குறியும், பாரத அம்மானை - (உ.த.நி.) சுவடியில் உ என்பதும், 8425 - குருக்களாஞ்சி கதையில் + என்பதும், செ.கி.சு. நூலகக் கதைப்பாடற் சுவடிகளில்ஞ என்ற குறியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.) என்பதில் தனியாக நாட்டு, நகர் வருணனை அமையாது, கதை வரலாற்றினைச் சுருக்கிக் கூறும் பகுதியிலேயே நாட்டு, நகர் வருணனையும் சுருங்கி அமைந்திருத்தலைக் காண இயலுகின்றது.

இதே கதையில் பொதுவாக இறுதியலமையும் 'வாழி' என்ற பகுதி முன்னாலேயே அமைவதையும் பார்க்க முடிகிறது.[67]

இத்தகு முறை மாறிய அமைப்புகளைப் பிற்காலக் கதைப் பாடல்களிலேயே அரிதாகக் காண முடிகின்றது.

சமூக, வரலாற்றுக் கதைப் பாடல்களில் பெரும்பாலா னவற்றுக்கு அவை எழுதப்பட்ட காலமும், ஆசிரியர் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதிகாச, புராணக் கதைப்பாடல்களில் அரிதாகவே இக்குறிப்புகளைக் காண இயலும்.

சுவடி இறுதி இதழிலமையும் குறிப்புகளால் தென் களந்தைத் தாலுகா ஆழ்வார் திருநகரி,[68] ராமயன்பட்டி,[69] மீனாட்சிபுரம்,[70] வீரப்ப நல்லூர்,[71] திருநெல்வேலி ஜில்லா சீனியப் பனத்திருத்தி,[72] தேனீர்குளம்,[73] பாஹூர்,[74] வெள்ளங்கொள்ளி,[75] திருநெல்வேலி தாலுகா புதுக்குளம் சரகம் செட்டிகுளம்,[76] ஊத்துக்குழி,[77] அழகனேரி,[78] திருப்பரங் குன்றம்,[79]

---

67. இ.ம. *3* - "நிறையுடனே கன்னங்குளம் ஊரதுவும் வாழ்க" என இக் கதையைப் பாடிய கன்னங்குளம் ராம நாடார் தம் ஊரையும் கதை முன்பிலேயே வாழ்த்தி அமைத்துள்ள போக்கு புலனாகின்றது.
68. *8232* - ஆழ்வார் திருநகரி யானைக் கும்மி.
69. *8413* - சுந்தரி கல்யாணம். *8423* - ஆமையன் கதை.
70. *7951* - புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை.
71. *3223* - நாலு மந்திரி கும்மிப்பாட்டு.
72. *8420* - மதுரை வீரன் அம்மானை
73. *8019* - இசக்கியம்மன் கதை அல்லது நீலி கதை. *8014* - குசலவ மகராசர் கதை. *8022* - சாஸ்தாவின் கதை. *5451* - a சித்திர புத்திர நயினார் கதை. *5451* - b செட்டிச்சி அமராவதி கதை. *8018* - முத்துப்பட்டன் கதை
4. *6305* - கோவலன் கதை.
5. *4087* - செட்டிச்சி கதை.
76. *8015* - சொரி முத்தையன் பாட்டு.
77. *5953* - ஞானவாசிஷ்டம் கதை.
78. *8440* - தடிவீரசுவாமி கதை.
79. *6157* - நாலு மந்திரி கதை.

சொக்கனாயதிபுர குடியிருப்பு,[80] ஆழ்வார் குறிச்சி,[81] வள்ளியூர்,[82] லட்சுமியாள்புரம்,[83] மணலூர்,[84] கீழப்பாவூர்,[85] போன்ற ஊர்களைச் சேர்ந்த ஆசிரியர்களால் கதைப்பாடற் சுவடிகள் எழுதப்பட்டுள்ளமை தெரிகின்றது. இவற்றுள் தேனீர்குளம் என்ற ஊரிலிருந்தே மிகுதியான கதைப்பாடற் சுவடிகள் (6 சுவடிகள்) கிடைத்துள்ளன. மா. பெருமாள் கோன் என்பவர் இவற்றை எழுதியுள்ளார்.

பொருள்

பெரும்பான்மையாக இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும், அவற்றின் கிளைக் கதைகளும் கோயில் விழாக்களில் பாடி, நடிக்கப்பட, கதைப்பாடலாக உருவம் பெற்றுச் சிறந்திருக்கின்றன. காவியங்களுள் சீவக சிந்தாமணியும் அம்மானை வடிவில்[86] கதைப்பாடலாகப் பாடப் பெற்றிருக்கின்றது.

மக்கள் நாவில் வழிவழியாக வழங்கிவந்த நாட்டுப்புறக் கதைப்பாக்களே தக்கவர் மனத்தில், தக்க காலத்தில் இதிகாச, காவியமாக உருப்பெற்றது என்றும், இதிகாசங்களும் காவியங்களும் பிறந்தபின் அவற்றின் சிறப்பும், தகுதியும் கருதி, நாட்டுப்புற மக்கள் தமக்கே உரிய மொழி நடையில் அவற்றினின்றும் பல கதைப் பாடல்களை உருவாக்கிக் கொண்டனர் என்றும் உள்ள இருவேறு கருத்துகள் கொண்டு இதிகாச, காவியங்கள் நாட்டுப் புறப் பாடல்களினின்றும் முகிழ்த்ததா? நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் இதிகாச காவியங்களினின்றும் முகிழ்த் தனவா? என்றெழும் ஐயத்துக்கு விடை தேட முயல்வது விதையினின்று மரம் வந்ததா? மரத்தினின்றும் விதை வந்ததா? என்ற ஆராய்ச்சியிற் புகுவதொக்கும்.

---

80. 10356 - நாலு மந்திரி கதை.
81. 11606 - நாலு மந்திரி கதை.
82. 8437 - முத்தாரம்மன் கதை.
83. 8634 - விக்கிரமாதித்தன் பதுமை கதை.
84. 6681 - வீரபோக வசந்தராயர் பத்திரிகை.
85. 7957 - வீரமாறன் கதை.
86. 8848 - சீவக அம்மானை. 8825, 10366 - சீவக சிந்தாமணி அம்மானை

ஆயினும் ஒரு பெரிய இதிகாசமோ காவியமோ அதன் பெரிய, சிறப்புத் தன்மையோடு உருவாகாமல் பல காலமாகப் பலரால், பல இடங்களில் பாடப் பெற்று, பயின்று, பல்கிப் பெருகி இன்றுள்ள பன்னூறு பாடல்களைக் கொண்ட பெரு வடிவாய் அமைந்தது என்ற அறிஞர் கருத்துகளை நோக்கும் போது இதிகாச காவியங்கள் உருப்பெற நாட்டுப் புறப் பாக்கள் தந்திருக்கின்ற சீரிய பங்கும், அவற்றின் மூதன்மைத் தன்மையும் புலனாகின்றன.

அத்துடன் இதிகாச, காவியக் கதைகள் பல நாட்டுப்புறக் கதைப் பாடலாக வடிவெடுத்திருப்பினும், அவற்றுள் பலவும் காவியக் கதையின்படியே அமையாமல் கதைக்கரு அமைப்பு, போக்கு, பாத்திரப்படைப்பு, கதை முடிவு என்று பல தன்மை களிலும் மாறுபட்டமையும் போக்கையும் காண்கிறோம்.

சான்றாக 6305 - கோவலன் கதை[87]யைக் கூறலாம்.

மேலும் மகாபாரதப் பாத்திரமாகிய அர்ச்சுனனைச் சுற்றிப் பின்னப்பட்ட அல்லியரசாணி கதை, பவளக்கொடி மாலை, அவன் மகன் புரந்தரனைச் சுற்றி அமைக்கப்பட்ட புரந்தரன் கல்யாணம், புலந்திரன் களவுமாலை போன்ற நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் காவியக் கதைப் போக்கினின்றும் முற்றிலும் மாறுபட்டு, மக்களின் ரசனைக் கேற்ற விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. அல்லி, பவளக்கொடி கதைகள் பழைய பெண்ணாதிக்கம் காட்டு வனவாக உள்ளன.

இந்நூலகத்தில் பிற சுவடி நூலகங்களில் இல்லாத அளவு சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்கள் (31 கதைப்பாடல்கள்) இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். பல சமூக வரலாற்றுக் கதைப்பாடல்கள் நெல்லை, கன்னியாகுமரிப் பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை.

---

87. இதில் சிலப்பதிகாரக் காவியத்தினின்றும் மாறுபட்ட போக்கில் சோழன் மனைவி சுந்தரி, மாநாய்கன் பெயர் வண்ணமாலைச் செட்டி, மாதவி = மாதேவி, கண்ணகி = கன்னகை எனப் பாத்திரப் பெயர்கள் கூறலும், சொக்கரும், மீனாட்சியும் இரு பாத்திரங்களாகப் படைக்கப் பட்டிருத்தலும், கோவலன் தாகம் தீர்க்க மீனாட்சி வைகை நதியைத் திருப்பிவிடலும், இதற்குக் கிட்கிந்தா நதியெனப் பெயர் கூறலும் காணப்படுகின்றன.

இராமாயணம், மகாபாரதம், இவற்றின் கிளைக் கதைகளாய அரிச்சந்திரன், நளன் கதைகள், வைகுண்டக் கதை, அசுவமேத யாகக் கதை மற்றும் நாலு மந்திரி கதை, சோழன் பசுக்கதை, சித்திரபுத்திரன் கதை, அமராவதி கதை போன்றன ஒரே பொருண்மையில் பல பிரதிகளைக் கொண்டனவாக இருப்பினும் கதைப்போக்கு, அமைப்பு முறை, பாத்திரப் படைப்பு, முடிவு போன்றனவற்றில் தம்முள் வேறுபாடுடையன. ஆதலின் ஒரோர் கதைப் பிரதியும் ஒரு தனிக்கதைப் பாடலாகும் தகுதியுடையனவாக உள்ளன. ஒரோர் இடத்திலும் பாடும் முறைக்கேற்ப எழுதுவோரின் தனித்து வப்படி, இவை வேறுபாடான அமைப்புக் கொண்ட னவாய் உருவாகியிருந்திருக்கின்றன எனலாம். மேலும், காலத்துக் கேற்பவும் சில கருத்துகள் இணைக்கப் பட்டிருக்கின்றன.

இங்குள்ள இராமாயண நாட்டுப்புறக் கதைப்பாடலில் குசலவர்கள் கொன்றைவேந்தன், ஆங்கிலம், கிரந்தம், சிங்களம், சீன மொழிகள் படித்ததாகக் கூறல்[88] காலத்துக் கேற்ப இணைத்துக் கொண்ட கருத்துகளாகும்.

பாடுமுறை

நாட்டுப்புறக் கதைப், பாடலின் பாடுமுறையாக மூன்று முக்கிய கூறுகளைக் குறிப்பிடலாம். அவற்றுள் முதன்மை யானது,

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் இதிகாசத்தின் ஒரு பகுதியை அடியொற்றினவாயினும், சமூக, வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டனவாயினும், முதலும், முடிவுமான முறையில் முழுமையாகக் கதையைக் கூறல் என்பதாகும்.

---

88. கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகத்திலுள்ள, எண் இடப்படாத சுவடி.
இ.40. ''ஆதி முனி ஓதிடவே
அரிவிரி கொன்றை வேந்தன்
....
இங்கிலீஸ் பாசைகளும்
இதமான கெரந்தமுடன்
சிங்களம் சீன பாசை
சிறந்த பதினெட்டு வித்தை
கூடுவிட்டுக் கூடுபாயும்
குறளிவித்தை தான் படித்தார்''.

சான்றாக, பாரதத்தின் ஒரு பகுதியான, தருமர், அசுவமேத யாகம் செய்ததை மட்டும் கூறும் அசுவமேதயாகக் கதைப் பாடல்கள், யாகம் செய்த பகுதியைச் சற்று விரிவாகவும், மற்றும் பாரதக் கதை முழுவதையும் சுருக்கிக் கூறும் விதத்திலேயே அமைந்துள்ளன.

இதுபோல் 3784 - சந்தனு மகராசன் கதை என்பதும், சந்தனு கெங்கா தேவியை மணந்து பீஷ்மரையும், பின் மச்சகெந்தியை மணந்து மூன்று புதல்வர்களைப் பெற்றதையும், அவர் மூலம் திருதராட்டிரன், பாண்டு பிறப்பையும் விவரித்திருப்பினும், பாரதக் கதை முழுவதையும் சுருக்கிக் கூறும் முறையிலேயே அமைந்துள்ளது.

இவ்வாறு இதிகாசத்தின் ஒரு பகுதியைப் பாட எடுத்துக் கொண்டாலும், குறிப்பிட்ட அவ்விதிகாசக் கதை முழுவதை யும் சுருக்கி முழுமை பெறப் பாடியதற்குக் கீழ்க்காணுபவை காரணங்களாதல் கூடும்.

1. இத்தகு கதைப்பாடல்கள் 3 முதல் 21 நாட்கள் வரை நடக்கும் விழாக் காலங்களில், மக்கள் மத்தியில் பாடப் படுவன ஆதலின், நாடோறும் கதையைச் சிறிது சிறிதாகப் பாடுதலின், இதிகாசக் கதையின் ஒரு பகுதியைப் பாட எடுத்துக் கொண்டாலும், முழுக்கதையையும் அதனோடு சுருக்கிப் பாடிட, வேண்டிய அளவுக்கு நேரம் இருந்தது.

2. தெய்வ சன்னிதானத்தில் பாடப்படுவதாதலின் குறைக்கதையாக ஒரு பகுதியை மட்டும் பாடுதலை அமங் கலமாகக் கருதி முழுக்கதையையுமே அதனோடு சுருக்கிப் பாடியிருத்தல் வேண்டும்.

3. பாரத, இராமாயணக் கதைகள் பலரும் அறிந்தவை ஆதலின், காவியத்தின் முழுப் பகுதியையும் சுவைக்க விரும்புவர். சாதாரணப் பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் இதிகாசத்தின் ஒரோர் பகுதி சுவையுடையதாகத், தோன்றும். அனைவரது விருப்பமும் ஈடேறிப் பலரும், பலவித சுவைகளை அனுபவிக்கும் வண்ணம் காவியம் முழுமையை யும் சுருக்கிப் பாடினர் எனலாம்.

பாடும் முறையின் இரண்டாவது கூறாகக் கதை முடிவை முன்பே கூறிவிடுதலைக் குறிப்பிடலாம்.

பொதுவாக நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பெரும் பான்மையானவற்றில் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என்ற பகுதிகளை அடுத்து, கதை தொடங்கும் முன்பாக அமையும் கதைச்சுருக்கம் என்ற பகுதியில் கதையின்

முக்கியத் திருப்பங்களையும், முடிவையும் தெளிவு படுத்திடக் காணலாம். இதனால் முடிவு என்னாகுமோ என்ற எதிர்பார்ப்புடனும், அடுத்து என்ன நிகழும் என்றறிய விழையும் ஆர்வ நோக்கும் தடைப்படுத்தப்படும். நிகழ இருப்பதை மறைத்து (suspense) வைத்துக் கேட்கும், ஆவலைத் தூண்டும் முறைகளும் தவிர்க்கப்படுகின்றன.

இவ்வாறு கதைத் திருப்பம், கதை முடிவு போன்றன வற்றை மறைத்து வைக்காது கதையைச் சுருக்கி முன்பே கூறிவிடுதலுக்குச் சில கூறுகள் காரணமாதல் வேண்டும்.

1. பொதுவாக நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பலரும் அறிந்த இதிகாச, காவியக் கதைகளாகவே இருக்கும். புராண, சமூக, வரலாற்று, தெய்வக் கதைப் பாடல்களும் பல ஆண்டுகளாகப் பல இடங்களில், பல முறைகளில், பலர் பாடப் பல மக்கள் கேட்ட கதையாகவே இருப்பதால் அதிலுள்ள கருத்துகளில் மறைப்போ, கதை முடிவை மறைத்து வைத்து ஆர்வத்தைத் தூண்டும் முறைகளோ தேவையில்லாது போகின்றன. சுவைபடச் சொல்லும் முறையாலேயே மக்களால் அவை மனங் கவரப்படுகின்றன.

எனவே பலருக்கும் தெரிந்த கதையாதலின் கதை முடிவையும் கூடக் கதைத் துவக்கத்திலயே குறிப்பிட்டு விடுகின்றனர் எனலாம்.

சான்றாக *316* - தோட்டுக்காரி கதையைக் (உ.த.நி.சு.) குறிப்பிடலாம். இதில் 'தோட்டுக்காரி இறந்து படுவாள்'[89] என்ற கதை முடிவு முன்பே கூறப்பட்டு விடுகின்றது.

2. புதிதாகக் கேட்பவர்களுக்கு எப்படி இறந்தாள் என்று அறிந்து சொல்லும் ஆர்வத்தைத் தூண்டிக் கதை கேட்கும் விருப்பை விளைவிக்கவும், இவ்வாறு கதை முதலிலேயே கதை முடிவைக் கூறும் முறையை மேற்கொண்டனர் எனலாம்.

3. கதை கேட்பவர்கள் சாதாரணப் பாமர மக்களாதலின், தொடர்ந்து நீண்டு கொண்டு செல்லும் கதையை எளிதில் பின்பற்றிப் புரிந்து கொள்ளும் முகமாகவும் கதையைச் சுருக்கி முடிவு உட்படப் பாடும் முறை அமைக்கப்பட்டது என்றும் கருதலாம்.

---

89. இ.ம.3.

''தெட்சணா பூமியான தென்கன்னிக் குமரிநாட்டில்
மிக்கதோர் விதியினாலே வெள்ளியர் பாறைதன்னில்
மைக்குழல் தோட்டுக்காரி மடிந்தபின் வந்தவாறு
செப்பமாய்ப் புவியோர்கேட்கச் செப்பியே யுரைக்கின்றேனே''.

பாடு முறையின் மூன்றாவது கூறாக, ஒரு கதைப் பாடலில் மற்றொரு கதைப்பாடலைப் பற்றிய குறிப்பு அமையுமாறு பாடுதலைக் கூறலாம்.

இது குறிப்பிட்ட கதைப்பாடல் மக்கள் மத்தியில் சிறந்த செல்வாக்குப் பெற்றதாக இருப்பின், கூறப்படும் கதைப் பாடலின் நிகழ்ச்சி யோட்டத்துக்குத் தேவையானதாக இருப்பின், குறிப்பிடப்படுகின்றன எனலாம்.

இராமாயண, மகாபாரதக் கதைக் குறிப்புகள் பிற கதைப்பாடல்களில் மிகுதியும் சுட்டப்பட்டுள்ளன. இவை மக்கள் மத்தியில் பெற்றிருந்த செல்வாக்கு பற்றி இடம் பெற்றவை எனக் கருதலாம்.

8016 - இசக்கியம்மன் அல்லது நீலி கதை[90]யில் சித்திரபுத்திர நாயனார் கதைக் குறிப்பு இடம் பெற்றுள்ளது. கதை நிகழ்ச்சியோட்டத்துக்குத் தேவை என்பதால் இடம் பெற்றதாதல் வேண்டும். மேலும் 8019 - இசக்கி கதையில் கோவலன் கதை நிகழ்ச்சிகளும் (இ.ம.21, இ.26, இ.ம. 27), 8423 - ஆமையன் கதையில் விக்கிரமாதித்தன் கதைக் குறிப்பு, (இ.11, இ.27) சீவகனைப் பற்றிய குறிப்பு, (இ.19),

---

90. இதில் வேசி, அவள் அண்ணன் வேதியன் மரணத்தின் பின்னர் எமலோகம் செல்ல, சித்திரபுத்திரர் கணக்கோலை கண்டு கணித்து, செம்பியெனும் சோழன் புதல்வ, புதல்வியராக வேசியின் அண்ணன் வேசியையும் அக்காவிரிப் பூம்பட்டினச் செட்டி வயிற்றில் வேதியனையும் பிறக்க வைத்ததாகக் கதை அமைகின்றது.

இ.ம.5. ''இஷ்டமுடன் மூபேரும் இமலோக வாசல்சென்றார்
சென்றவுட னேயறிந்து சித்திரபுத்திரக் கணக்கர்
கன்றியிவர் மூவருக்கும் கணக்கெடுத்து வாசித்தார்
நன்றியுள்ள கணக்கரவர் நல்லோலை வாசித்ததில்
புகழான வேதியனைப் பழிக்குவிட்ட குடியாக்கி''

என்று தொடர்கிறது. சித்திரபுத்திரன் கணக்கோலை எடுத்து வாசித்து அவரவர் பாவ, புண்ணியத்துக் கேற்ப மறு பிறவியைத் தீர்மானிப்பார் என்ற சித்திரபுத்திரனின் கதை மக்கள் மனத்தில் பெற்றிருந்த இடத்தை இவை தெளிவுபடுத்துகின்றன.

வீரகுமாரன் கதையில் இடம்பெறும் வீரகுமாரனைப் பற்றிய செய்தி, (இ.ம.23) சிவன் செம்படவனாகிச் சுறாவைக் கொன்று பார்வதியை மணந்த கதை, (இ.40), சாஸ்தா கதையிலும் (இ.53), 3928 - தமிழறி மடந்தை கதையில் விக்கிரமாதித்தன் கதைக் குறிப்புகளும், 316 - தோட்டுக்காரி கதையில் (உ.த.நி.சு.) கன்னடியன் கதைக் குறிப்பும் (இ.48) காணப்படுகின்றன.

சமகாலத்தில் வழங்கிய பிற கதைக் குறிப்புகளையும் பாடும் தம் கதையில், பல்வேறு கதைகளை நுகர விரும்பும் மக்களின் சுவையுணர்விற்கேற்பத் தக்க இடத்தில் நுழைத்துப் பாடும் திறம் பெற்றவர்களாகக் கதைப்பாடல் புலவர்கள் திகழ்ந்திருக்கின்றனர் எனலாம்.

யாப்பு

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் அமைந்துள்ள யாப்பினை, மரபு வழிப்பட்ட யாப்பு, நாட்டுப்புறப் பாடல்களின் யாப்பு என இருவகையாகப் பகுப்பர் அறிஞர்.[91]

பெரும்பாலான கதைப்பாடல்கள் நாட்டுப்புறப் பாடல் யாப்புடையன. இவற்றின் இடையிடை மரபுவழிப்பட்ட யாப்புடைய பாடல்கள் அமையும்.

சான்றாக 8018 - முத்துப்பட்டன் கதையைக் குறிப்பிடலாம். விருத்தத்தாலமைந்த பாடல்கள் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

இக்கதையில் நாட்டுப்புற மெட்டில் ராக, தாள அமைதியுடன் கூடிய பா அமைப்புகள் உள்ளன.

இ.1

"தெந்தின்னனா தினனான தினனான தினனான"

என்ற மெட்டில் இதன் கீழமையும் பாடல் இயற்றப் பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு ராக அமைதிகளுடைய பாடல் வகைகளையும் காண முடிகின்றது. இடம், பாத்திரத் தன்மைக்கேற்ப இவை மாறி அமைந்து சுவையூட்டுகின்றன.

---

91. டாக்டர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இலக்கியம், தமிழ் இலக்கியக் கொள்கை, (ப.ஆ.) டாக்டர் ச.வே.சுப்பிரமணியம், அ.அ. மணவாளன், மு.ப., மார்ச் 1978, ப.209.

வில்பாட்டு மற்றும் கும்மி, அம்மானை வடிவில் பாடியதை, அதே ஒலியமைதிகளோடு எழுதி வைத்திருக்கின்றனர். மரபு வழிப்பட்ட யாப்பமைந்த பாடல்கள், எழுதும் புலவன் தந்த அமைப்பாக இருத்தல் வேண்டும். இவை குறைந்த அளவிலேயே நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் காணப்படற்கு இதுவே காரணமாதல் வேண்டும்.

வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்ததைச் சுவடிகளில் எழுதி வைத்தனர் என்பதற்கு நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலேயே அகச்சான்றுகளைக் காண முடிகிறது.[92]

9067 - பாண்டவர் வனவாசம் என்பதில்,

''தேசத்தை யாளுங் துரியோதனன் பாவி''

என ம்' ங்' என மாறியது இழுத்துப் பாடிய ஒலியை அப்படியே எழுதியதன் விளைவேயாகும்.

இதுபோன்று ரகரம் றகரமாக நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் எழுதப்பட்டதற்கு அழுத்தமுள்ள உச்சரிப் போடு, பாடக் கேட்டது போல் எழுதியது காரணமாகலாம்.

6718-eகோவலன் கதையில் மாதவி என்ற பெயர் மாதேவி என நீண்டதற்கும், நாட்டுப்புற இசையின் இழுத்த போக்கே காரணமாகலாம். கதையாக மக்கள் மத்தியில் பாடும்பொழுது, அடிக்கடி இப்பெயர் உச்சரிக்கப்படும் பொழுது, நாட்டுப்புற இசையின் நீட்டிய இசை அமைப்பு (உச்சஸ்தாயி) மாதவியை மாதேவியாக்கியுள்ளது எனலாம்.

வாய்மொழியாகவே வழங்கி வந்து, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் சுவடிகளில் எழுதப்பட்ட நாட்டுப்புறக் கதைப்பாடல் மெட்டுகள் நாட்டுப்புற இலக்கியங்களுக்கு மட்டுமல்லாது, பிற இலக்கிய வகைகளுக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளமை, இலக்கிய உலகில் நாட்டுப்புறப்பாடல் யாப்பு பெற்றிருந்த செல்வாக்கை உறுதிப்படுத்துகின்றன.

---

92. 8427 - முத்தாரம்மன் கதையில் இருளணைஞ்ச பெருமாள் வில்லில் பாடியதைக் கேட்டு, அருணாசலப் புலவன் சுவடியில் எழுதி வைத்ததாகக் குறிப்புள்ளது.

6692-a - மருந்து யோகங்கள்[93]

11309 - சித்தராரூட நொண்டிச்சிந்து

என்பன மருத்துவம் குறித்த சுவடிகளாக இருப்பினும், நூல் முழுமையுமாக நாட்டுப்புறப் பாடல் யாப்பில் எளிய, இனிய சந்தத்தில் எழுதப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

நடையமைதி

'பல காலமாக மக்கள் மத்தியில் வாய்மொழியாகப் பாடப்பெற்று வந்தவையே செவிவழியாகக் கடந்து வந்து ஏட்டில் இடம் பெற்றன', எனப் பொதுவாக இலக்கியங்கள் எழுது கிளவியாக மாறிய வரலாற்றைக் கூறுவர். நாட்டுப் புறக் கதைப்பாடல்களும் வாய்மொழியாகவே வழங்கிவந்து, 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினின்றும் ஏட்டில் இடம்பெறத் துவங்கியிருக்கின்றன.

வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்தது போன்றே எழுதப்பட்டுள்ள தன்மை, எளிய சந்தம், பேச்சு வழக்குச் சொற்களாலேயே இயன்ற நடை போன்றனவும் இது இலக்கிய கர்த்தாக்களது இலக்கியம் அல்ல; பொதுமக்கள் இலக்கியம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

நாட்டுப்புறக் கதைப்பாடல்களிலும் முன்னேறிய சற்றுக் கடின நடையிலமைந்த பாவமைதி கொண்டவை உள்ளன. இவை கதைப்பாடல்கள் வரிசையில் காலத்தில் முந்தை யனவாதல் வேண்டும். சான்றாக 8085 - பாண்டவர் வனவாசக் கதை என்ற சுவடியின் நடையமைதியைக் குறிப்பிடலாம்.[94]

---

93. இ.ம.3

''தந்தனான தானானா தந்தனானா தந்தனானா
அன்னம(ா)ரே கேளீரோ அந்த
அஞ்சிதிங்கள் படும் பாடுதனில்''

என இம்முறையில் நூல் முழுமையும் இதுபோன்ற பல்வேறு சந்தங்களில் பாடப்பெற்றுள்ளது.

94. தலை இதழில்,

''நிருபருக்குள் ளிலக்கணம் யாவையும் நிரம்பி
தெருவிடைத் திரிபுதல்வ னவ்வனத்திடை திரியும்
கரியரிக்குலம் புலிக்கணம் யாவையுங் காத்தால்
வெருவரப் பிடித்தடுத்தொழில் கண்டுளம் வியந்தான்''

என அமையும் நடையமைப்பைச் சான்று காட்டலாம்.

மரபு வழிப்பட்ட யாப்பு பயின்று வரும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் காலத்தால் முந்தையன. பிந்தையனவற்றில் இவை அருகிய அமைப்பே.

17,18-ஆம் நூற்றாண்டுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடை இலக்கியம் சிறப்புற வளர்ச்சி பெற்ற கால கட்டங்களாகும். பாடல் வடிவும் உரைநடையும் கலந்தமைந்துள்ள நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் உரைநடை வளர்ச்சி பற்றிய ஆய்வுக்கு உதவுவனவாக அமைகின்றன.

3928 - தமிழறி மடந்தை கதையில் கதைப் பொருண்மைக்கு ஏற்ப, ஆங்காங்கு கலித்துறை, வெண்பா போன்ற பாக்கள் உள்ளன. எஞ்சிய அனைத்துக் கதைப் பகுதிகளும் செய்யுள் போன்ற ஒருவகை உரைநடை வடிவில் இயற்றப்பட்டுள்ளன.[95] *6717* - வீரகுமாரன் கதை என்பதன் நடையைத் தக்க சான்றாகக் குறிப்பிடலாம். உரைநடைத் துவக்க காலத்தில், கவிதை நடைத் தேய்வுக் காலத்தில் வழங்கிய நடையமைதிக்குத் தக்க சான்றாக இது திகழ்கின்றது.

8179 - அசுவமேயாகக் கதை,[96] *10292* - ஸ்ரீராம கதை என்பனவும் வளர்ந்து வந்த உரைநடைத் தன்மை அறியத் தக்க சான்றுகளாக விளங்குகின்றன.

இந்நூலகத்திலுள்ள கதைப்பாடல்கள் கன்னியாகுமரி, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தனவாதலின் இம்மாவட்ட வழக்குச் சொற்கள் இயன்ற நடையில் இவை எழுதப் பட்டுள்ளன. இம்மாவட்டங்களிலிருந்தும் இன்று மறைந்து, கேரளத்தில் குடியேறியுள்ள சொற்கள் பலவற்றையும் இக்கதைப் பாடல்களில் காணமுடிகின்றது.

---

95. இறுதி இதழில், ''...பாரியாணா ளென்று வசை வாராமல் தேவரீர் வாக்கினாலே அரியென்கிற அட்சரம் வருத்திவிக்க வேணுமென்றா ளந்தப்படிக்கு வினாயக பூசையுஞ் சாசுவத...'' என அமைந்துள்ளதைச் சான்று காட்டலாம். சொற்புணர்ச்சியுடைய நடையுள்ளது.

96. இ.*78* - ''வாருமய்யா சுவாமி நான் கேட்ட காரியத்துக்கு நன்றாய்ச் சொல்ல வந்தீரய்யா'' என மோனை நயத்துடன், ஒருவித இசையமைதியுடன் கவிதை போன்ற நடையில் உரைநடை அமைந்துள்ளது.

6718 கோவலன் கதையில்,
இ.8 "சனுக்குலையப் பறைந்திடுவாள்" (சொல்லிவிடுவாள்) எனவும்,
இ.ம.10 "கொதுபடா" (கொசுபடா) எனவும், 10409 - ராம காதை என்ற சுவடியில்,
இ.67 அப்பறத்தே (வெளிப்புறம்) இவிடத்து (இங்கு)

எனவும், இன்றும் கேரளத்தில் வழங்கிவரும் சொற்கள் இடம் பெற்றுள்ளமையைச் சான்றுகளாகக் குறிப்பிடலாம். 8423 - ஆமையன் கதையில் இ.ம.50ல் 'பொதிந்து' (மூடி அல்லது போர்த்தி), இ.ம.46 - இரி (இரு) 316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.), இ.ம.41ல் பகரம் (பதில்) என்பனவும் இடம்பெற்றுள்ளன.

கதைப்பாக்களும் பிற நாட்டுப்புற வகைகளும்

கதையை உள்ளடக்கிய கதைப் பாடல்கள் நாடகம், கும்மி, அம்மானை, பந்துப்பாட்டு, தாலாட்டு, சிந்து வடிவில் நடிக்க, பாட எழுதப்பட்டிருக்கின்றன.

தாலாட்டு, கதை நாயகன் அல்லது நாயகியைத் தாலாட்டு முகமாகவும், நாயகி பந்தடிக்கு முகமாகப் பந்துப்பாட்டும் அமைதலுண்டு.

கதை வடிவில் உள்ளனவற்றுக்கு அவ்வப்போது நாடக வடிவு தந்தனர் என்பதற்குப் பல நாடகச் சுவடிகளிலேயே சான்றுகளுள்ளன.

8832 - உறிரண்ய நாடகத்திலுள்ள,

"பிரகலாதன் கதையை நாடகமாய்ப் பாடுதற்கு"
"பிரகலாதன் கதையை நாடகமாய் வழுத்துதற்கு"
"பிரகலாதன் கதையை நாடகமாய்ச் சொல்லுவதற்கு"

என அமையும் குறிப்புகள் கவனிக்கத் தக்கன.

நாடகத் தன்மையோடு பாத்திரங்களையும் உரையாடல் களையும் கொண்டுள்ளதால் கதைப்பாடலை நாடகமென்றே கூறும் வழக்கும் இருந்திருக்க வேண்டும். பல கதைப்பாடல் சுவடிகள் ".....நாடகம் முகிந்தது முற்றும்" என முடிவதைக் காணலாம். சான்றாக,

8121- ராமர் வனவாசக் கதை என்ற சுவடியினிறுதியில் ''ராமர் நாடகம் எழுதி முகிந்தது'' என உள்ள குறிப்பைக் காட்டலாம். 'நாடகம்' என்று குறிப்பிடப் பெற்றுள்ள போதும், இது நாடக வடிவிலன்றிக் கதைப்பாடல் வடிவிலேயே அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். இதனால் கதைப் பாடலையே நாடகம் எனக் கூறும் வழக்கமிருந்ததை உணர முடிகிறது. **8018** - முத்துப்பட்டன் கதையில் இ.17, இ.7ல் உள்ள முத்துப்பட்டன் - பொம்மக்கா, திம்மக்கா உரையாடல்கள், நந்தனார் சரித்திரக் கீர்த்தினை, சுலோசனா சதி நாடக நிலைகளோடு ஒப்புடையனவாக உள்ளன. இது போன்று **8019** - இசக்கி கதையில் இ.ம. 14 முதல் இ.17 வரை உள்ளவையும், நாட்டுப்புற வகைகளில் அமையும் தர்க்க முறையை ஒத்துள்ளன. **316** - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.)யிலுள்ள இ.ம. 47ல் உள்ள குமரப்பராசா - தோட்டுக்காரி வாத முறையும் நாடக அமைப்பின.

கதைப்பாடல்களின் இலக்கணம் கதை பொதிந்தனவாக அமைந்திருத்தலாகும். பல நாட்டுப்புறப் பாடல்களும் கதை பொதிந்தனவாய்க் காணப்படுதலுண்டு. ஆயினும் அவை கதைப்பாடல்கள் என அழைக்கப்படுவதில்லை. காரணம் வாழ்வில் நடைபெறும் குறிப்பிட்ட ஒன்று அல்லது சில நிகழ்ச்சிகளை மட்டும் விவரிப்பதாக அமைந்து, கதைப் பாடல்கள் போன்று தலைமை மாந்தரின் பிறப்பு தொட்டு இறப்பு முடிய நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பல்வேறு பாத்திரப் படைப்புகளோடும் விளக்கிச் செல்வதில்லை ஆதலின், கதைப்பாடல்களின் கதைத் தன்மையைப் பெற்றிருப்பினும், கதைப்பாடல் வரிசையில் அடக்கப்படுவதில்லை.

நாட்டுப்புறப்பாடல்கள் கதைப்பாடல்களுக்குரிய கதையை உள்ளடக்கிய தன்மையைப் பெற்றிருப்பது போல, கதைப்பாடல்களுக்குரிய மரபுகளைக் கொண்ட நாட்டுப்புறப் பாடற் சுவடிகளும் உள்ளன.

ஊர்ப்பெயர், ஆட்பெயர் போன்ற பெயரடுக்கி அமைதல் கதைப்பாடல்களுக்கு உரிய மரபாகும்.

8432 - குத்தால லிங்கர் கொடிப்பாட்டு என்ற சுவடியில், கதைப்பாடல்களுக்குரிய மரபு போன்று, ஊர்ப்பெயர், மரப்பெயர் அடுக்கி வருகின்றன.

குத்தால லிங்கர் கோயிலுக்குக் கொடிமரம் நாட்ட நல்ல மரம் தேடிக் கொத்தரும், ஆசாரிமாரும் பல காடு, மலை கடந்து சென்றதாக அமையும் இடப்பெயர் அடுக்கல், காட்டில் மரம் தேர்தலில் அமையும் மரப்பெயர் அடுக்கல்கள், கதைப்பாடல் மரபைக் குறிப்பாக, மரப்பெயர் அடுக்கலில் வெள்ளைக்காரன் கதைப்பாடல்,[97] வாணதீர்த்தக் கரைப் புலையன் சுடலையாண்டி கதைப்பாடல்[98] களின் அமைப்பை அப்படியே பின்பற்றியதாக அமைந்துள்ளது. இதற்கு,

(1) இவ்விரு கதைப்பாடல்களும் மக்கள் மத்தியில் பரவிச் சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தமை,

(2) இக்கதைகளைப் பாடிய ஆசிரியரே இக்கொடிப் பாட்டையும் பாடியிருத்தல் அல்லது, இக்கதைகளைப் பல இடங்களில் பலர், வாயிலாகக் கேட்டு அதில் கொடிப்பாடல் ஆசிரியர் மனம் பறிகொடுத்திருந்தமை,

(3) கொடிப்பாடலின் பொருண்மைக்கு இத்தகு பாடு முறையின் தேவை[99] போன்றன காரணமாதல் கூடும்.

---

97. டாக்டர் ஏ.என். பெருமாள் பதிப்பித்துள்ள வெள்ளைக்காரன் கதையில், (உ.த.நி.வெளியீடு) கப்பல் கட்டத் தகுந்த மரங்களை வெள்ளைக்காரத் துரை தேர்ந்தெடுக்கு முகமாக மரப்பெயர் அடுக்கல் அமைகிறது. வரி.64-69.

98. சு.எண்.8029 - கே.ப.சு. இதில் காக்காச்சி மலையில் செழித்து வளர்ந்துள்ள மர வகைகளை விவரிக்கு முகமாக மரப் பெயர் அடுக்கல் அமைந்துள்ளது.

99. வெள்ளைக்காரன் கதையில் கப்பலுக்குரிய கொடி மரத்துக்காகத் தகுதியான மரம் தேர்வுசெய்யும் முகமாக மரப்பெயர் அடுக்கல்போல், குத்தால லிங்கர் கொடிப்பாட்டிலும், லிங்கர் கோயிலுக்குரிய கொடி மரத்துக்கான மரம் தேரும் முகமாக மரப்பெயர் அடுக்கல் அமையும் தேவை உள்ளது.

கதைப்பாடற் சுவடிகள்

கதைப்பாடற் சுவடிகள் இதுவரையும் முழுமையாகத் திரட்டித் தொகுக்கப்படவில்லை. பல கதைப்பாடல் சுவடிகள் தனியார் வசம் தங்கியிருக்கின்றன. எஞ்சிய சிறு பான்மையினவே சுவடி நூலகங்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள்ளும் மிகச் சிறு அளவினவே பதிப்பிக்கப் பட்டுள்ளன. இவையும் குறிப்பிட்ட ஒரு பொருண்மை யுள்ள பல்வேறு சுவடிகளைத் தொகுத்துச் சரியான பாடத்தோடு பதிப்பிக்கப் பெற்றன அல்ல.

மதுரைப் பல்கலைக் கழகம் மூலமாக டாக்டர் நா. வானமாமலை, டாக்டர் தி. நடராசன் போன்றோர் பல நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளனர். நாட்டுப்புறப்பாடல் ஆய்வினை டாக்டர் பட்டத்துக்கெனச் செய்த டாக்டர் சண்முகசுந்தரம் அவர்களும் கதைப்பாடல் சுவடிப் பதிப்பு செய்துள்ளார். ஆயினும் இவ்வாறு பதிப்பிக்கப்பெற்ற கதைப்பாடல்கள் சங்க இலக்கியம், காப்பியங்களைப் பதிப்பித்த டாக்டர் உ.வே. சாமிநாதையரின் பதிப்புகள் போன்று ஒரே பொருண்மை யுள்ள பல்வேறு சுவடிகளைப் பல்லிடங்களிலும் தொகுத்துத் திரட்டிப் பாடவேறுபாடுகள் தேர்ந்து பதிப்பிக்கப்பெற்றன அல்ல. டாக்டர் உ.வே.சா.வின் பதிப்பு முறை கதைப்பாடற் சுவடிப்பதிப்பிலும் பின்பற்றப்படல் வேண்டும்.

கதைப்பாடற் சுவடிகளில் ஒப்புமைக் கூறுகள்

நாட்டுப்புற இலக்கிய வகையுள் ஒன்றாகிய கதைப் பாடல்கள் பல காலம் வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்து, 16-ஆம் நூற்றாண்டு வாக்கில் சுவடிகளில் எழுதப் பட்டுள்ளன. வாய்மொழியாக நாட்டுப்புற மக்களால் பல காலமாகப் பாடப்பட்டு வந்தவை என்பதற்கு இவற்றின் கதைக்கரு, வடிவமைதி, உலக வழக்கமைந்த நடையமைதி, கூறப்பட்டுள்ள இதர செய்திகளின் தன்மை போன்றனவும், 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தனி ஒரு இலக்கிய வகையாகி எழுத்துருப் பெற்றன என்பதற்குச் சுவடிகளின் இறுதியிலமையும் காலக் குறிப்புகளும் அகச் சான்றுகளாகப் பயன்படுகின்றன.

கதைப்பாடல்கள், பிற எவ்வகை இலக்கிய வகையிலும் இல்லாத அளவுக்குப் பலவாறான தன்மையிலும் தம்முள் மிகுதியான ஒப்புமைத் தன்மை கொண்டனவாக உள்ளதை உணர முடிகிறது. அவற்றை,

கதைப்பாடல்களில் |
- அமைப்பொப்புமைக் கூறுகள்
- கருவொப்புமைக் கூறுகள்
- நிகழ்ச்சி யொப்புமைக் கூறுகள்
- வரியொப்புமைக் கூறுகள்
- பாத்திரவொப்புமைக் கூறுகள்

எனப் பகுத்துக் காணலாம்.

I. கதைப் பாடல்களின் அமைப்பு முறையை நோக்கும் பொழுது, அவற்றுக்கெனச் சில தனிப்பட்ட இலக்கியக் கொள்கைகள், அல்லது மரபுகள் பின்பற்றப் பட்டு வந்துள்ளமை தெரிகின்றது. சமூகம், சமயம், வரலாறு, இதிகாசம், புராணம், தெய்வக் கதைப் பாடல்கள் போன்ற பல்வேறுபட்ட பொருண்மையுடைய கதைப்பாடல்களாயினும், இவை தம்முள் எவ்வித மாற்றத்தையும் ஏற்காது, ஒரேவிதமான அமைப்பு

முறையையே பின்பற்றியுள்ளமை இதனைத் தெளிவுபடுத்துகின்றது. இவற்றைக் கதைப்பாடலின் அமைப்பொப்புமைக் கூறுகள் அல்லது இலக்கியக் கொள்கைகள் அல்லது மரபு நிலைகள் அல்லது கதைப்பாடல்களின் வடிவம் அல்லது போக்கமைதி எனக் குறிப்பிடலாம்.

II ஒரே விதமான கதைக்கரு உடையவற்றைக் கருவொப்புமைக் கூறுகளுள் அடக்கலாம்.

III ஒரு கதைப்பாடலில் காணப்படும் சில நிகழ்ச்சிகள் அப்படியே வேறொரு கதைப்பாடலிலோ, வேறு சில கதைப்பாடல்களிலோ இடம் பெறலுண்டு. இவற்றைக் கதைப்பாடலில் நிகழ்ச்சி யொப்புமைக் கூறுகள் எனக் குறிப்பிடலாம்.

IV ஒரு கதைப்பாடலில் ஆண்ட பாடல் வரிகளே வேறுசில கதைப்பாடல்களில் அதே பொருளில், அதே இடத்தில் அப்படியே எடுத்தாளப்படுவதுண்டு. இது முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றும் மரபு பின்பற்றியதாதல் வேண்டும். இது கதைப்பாடற் சுவடிகளில் வரி ஒப்புமைக் கூறுகள் என்பதனுள் அடங்கும்.

V கதைப்பாடற் சுவடிகளில் இவற்றின் அண்மைக்கால, பிற்கால இலக்கியத் தாக்கம் அமைதலுண்டு. இது பிற இலக்கிய ஒப்புமைக் கூறுகளுள் இடம்பெறும்.

கதைப்பாடற் சுவடிகளில் அமைப்பொப்புமைக் கூறுகள்

ஒவ்வோர் கதைப்பாடலிலும் தவறாது காணப்படும் பொதுவான அமைப்பு முறையாகக் கீழ்க் காணுபவற்றைக் குறிப்பிடலாம்.

(1) குழவியின்மை.

(2) குழவிக்காகப் பெற்றோர் அன்னதானம், ஆடை தானம், சொர்ணதானம், கோதானம், பூதானம் போன்ற பல்வேறு தானங்கள் செய்தல்.

(3) பலனின்றிப் போகவே, பல ஊர்களையும் கடந்து குறிப்பிட்ட ஒரு முக்கியத் தலம் அடைதல்.

(4) அத்தலத் தெய்வத்தை மனத்தில் நிறுத்திக் கடுந்தவமியற்றல்.

(5) அரனார் தோன்றிக் குறிப்பிட்ட வயது வரையே குழந்தையின் உயிர் வாழ்க்கை இருக்கும் எனக் கூறி வரமருளல்.

(6) தாய் கர்ப்பமடைதல்.

(7) பிள்ளைப்பேறு.

(8) பிள்ளையின் பெயர் வைப்புக்கான காரணம் கூறல்.

(9) ஆடை, அணிகல வகையணிந்து வளர்க்கும் சிறப்பு.

(10) கல்வி, மந்திரம், போர்ப்பயிற்சி.

எனப் பத்து நிலைகளில் அமையும் கதை நாயகன் அல்லது நாயகியின் இளமைப் பருவம் வரையுமுள்ள கதை முன்பகுதி முழுவதும், குறிப்பிட்ட இவ்வமைப்பு முறை யோடு அனைத்துக் கதைப்பாடலிலும் அமைந்திருக்கக் காணலாம். இதன்பின் பிற வாழ்க்கை நிகழ்ச்சிகள் 'முடிவு' என்ற அமைப்போடு கதை முடியும்.

நாயகன் அல்லது நாயகியின் இளமைப் பருவம் கற்பனை செய்தே பாடப்படுவதான் இவ்வாறாகவே இருந்திருக்க வேண்டும் என ஒருவர் கற்பித்ததைப் பலரும் பல பொருண்மையுடைய கதைப்பாடலுக்கும் பின்பற்ற, இறுதியில் ஒரு மரபாகவே ஆகியிருக்க வேண்டும்.

இத்தகு பொதுவான அமைப்பு முறையுடன் சில இடை அமைப்புகளும் இடம்பெற்றுக் கதை விரிவிற்குத் துணை புரிவதுண்டு. ஆயின் இத்தகு 'இடையமைப்புகள்' 'பொதுவான அமைப்பு முறை' போன்று எல்லாக் கதைப் பாடல்களிலும் உறுதியாக இடம்பெற்றே தீரும் எனக் கொள்ள இயலாது. ஆயினும் பெரும்பாலாக இடம் பெறலுண்டு. அவை:-

(1) கதை மாந்தர் வட பகுதியினின்றும் தென் பகுதிக்கு வந்தவர்கள் (தென்மேற்கு மலையாளம் வரை) எனக் கூறல்.

(2) கதைப்பாடல் மரபாக உள்ள, பிள்ளை வரத்துக்கெனத் தலம் தேர்ந்து செல்லும்போது, ஊர்ப்பெயர் அடுக்கலின்றிப் பிற கதை நிகழ்ச்சியோடு இணைத்து ஊர்ப் பெயர், மரப்பெயர், ஆடை, அணிகலன், பிற பொருட் பெயர் அடுக்கல்களை அமைத்தல்.

(3) பிள்ளையில்லாமையின் குறையும், பிள்ளை யுடைமையின் சிறப்பும் கூறல்.

(4) பிள்ளைக்காகத் தவம் செய்கின்றபோது, குறிப்பிட்ட அத்தலத் தெய்வம் சென்று அரனிடம் கூறலாக அமைதல்.

(5) சிவன் சித்திரபுத்திரரை அழைத்துத் தவம் செய்யும் குறிப்பிட்ட நபருக்குக் குழந்தை பாக்கியம் உண்டா எனக் கேட்டல்.

(6) சித்திரபுத்திரர் ஓலை வாசித்துப் பார்த்து, எவ்வயதுவரை அக்குழந்தை இருக்கும் எனக் கூறலும், சிவபிரான் அதன்படி வரம் நல்கலும் அமைதல்.

(7) பிள்ளை வரம் கேட்கச் செல்லும் பொழுது நற்சகுனங்கள் உண்டாகியதாகக் கூறல்.

(8) கடவுளிடம் குழவி வரம் வாங்கி மீண்டு வரும் வேளையில் குறத்தியைக்காண்டலும், அவள் குழந்தை பிறக்கும் என நற்குறி கூறலும் அமைதல்.

(9) சில கதைகளில் திருத்தலம் சென்று தெய்வத்திடம் வரம் வாங்கல் இல்லாமல் குறத்தி மூலமாகவே குறி கேட்டுக் குழவி பிறக்கும் என உறுதியறிதல் அமைதலும் உண்டு.

(10) இறைவனிடம் குழவி வரம் வாங்கி வந்த பின்னோ, அல்லது குறத்தி கூறும் பரிந்துரைப்படியோ தாம் குடியிருக்கும் ஊரில் இடிந்து கிடக்கும் கோயிலைச் சீர்படுத்திக் கட்டல்.

(11) கர்ப்பமடைந்த தாயின் ஓரோர் மாத உடல் மாற்றத்தையும் விளக்கல்.

(12) கர்ப்பகால இறுதியாய பத்தாம் மாதத்தில் தோன்றும் பிரசவ வேதனையையும், பிரசவத்துக்காக மருத்துவச்சியை அழைத்தலையும் விவரித்தல்.

(13) மருத்துகம் வீட்டுக் கடமைகள் பல உள்ளன; அவற்றைச் செய்து முடிக்க வேண்டுமே என, ஒரு பொன் தருவோம், இரு பொன் தருவோம் என ஒன்றொன்றாக உயர்த்திக் கொண்டே சென்றும், அவளும் ஒரொன்று சொல்லி மறுத்துக்கொண்டே வர, இறுதியில் 'பத்துப் பொன் தருவோம், என, அவள் வரச் சம்மதிக்கும் அமைப்பு.

(14) தன்னால் இந்த அர்த்த ராத்திரியில் நடந்து வர இயலாதாதலின் வண்டி வேண்டும் என மருத்துகம் கூற, அழைக்க வந்தோர் சம்மதிக்க, மருத்துகம் வந்து பிரசவம் பார்த்துப் பலவிதப் பரிசுப் பொருட்களுடன் செல்லல்.

என்ற இடையமைப்புகள் இடம் பெறலுண்டு.

இவ்வாறாகக் கதைப்பாடல்களுக்கே உரிய 'பொது அமைப்பு' முறைகளும் சிறப்பாகப் பல சுவடிகளில் சீராக வழங்கப் பெற்றுள்ள 'இடையமைப்பு' முறைகளும் மரபாகக் கதைப்பாடல்களுக்கே உரிய கொள்கைகளாகப் பின்பற்றப்பட்டு, அனைத்துக் கதைப்பாடல்களிலும் பின்பற்றி வருவதற்குப் பல காரணங்கள் இருத்தல் வேண்டும்.

I குழவியின்மை

பிள்ளையில்லாதார் அடையும் துயரும், சிறுமையும் பல கதைப் பாடல்களில் பொது அமைப்பாக, மரபாக இடம் பெற்றுள்ளது.[100]

---

100. ''பிள்ளையில்லா வாசலிலே பெரியோர்கள்பொசிப்பார்களோ
மைந்தனில்லா வாசலிலே மறையோர்கள்பொசிப்பார்களோ''
(8017 - வன்னியபராயன் கதை, இ.3)
''புத்திரனை யில்லாமல் பொசிக்கு மன்னம் புழுவல்லோ
புத்திரனில்லா வாழ்வு பொய்வாழ்வு கண்டீரே
எத்தனைதா னிருந்தாலு மிராசபதம் பெற்றாலும்
புத்திரனை யில்லாதார் புலையரிலுங் கேடுகண்டீர்''
(4087 - சித்திரபுத்திரனார் கதை, இ.15)
''மலடியென்றும் இருஷியென்றும் வையத்தார் ஏசுவரே''
(316 - தோட்டுக்காரி கதை - உ.த.நி.சு)(இ.7 - இ.11).

இதனைக் கதைப்பாடலின் ஒரு அமைப்பாகவே, மரபாக ஆளுதற்குப் பல கூறுகள் காரணமாக இருத்தல் வேண்டும்.

(1) பிள்ளையல்லாதார்க்குச் சொர்க்க வாசலும் திறவாது என்ற எண்ணம் இதிகாச, புராண காலத்திலேயே இருந்திருக்கிறது. 'அகத்தியர் பற்றிய இதிகாசக்கதை இதனைத் தெளிவுபடுத்துகின்றது'.[101]

(2) வேட்டைச் சமுதாயத்தினை அடுத்து அமைந்த இனக் குழுச் சமுதாய அமைப்பில், தத்தமக்கு உரியதெனக் குறிப்பிட்ட நிலப்பரப்பை எல்லை கட்டி வரையறுக்க முனைந்தனர். இதனால் இருவேறுபட்ட குழுவினரிடம் போராட்டம் நடந்து பலர் உயிரிழக்க நேர்ந்தது. எனவே தத்தம் குழுவினரை வலுப்படுத்த ஆட்களின் எண்ணிக் கைப் பெருக்கம் தேவையானதாக இருந்தது. எண் ணிக்கை அடிப்படையில் குழுவின் வலிமை நிர்ணயிக்கப் பட்டபோது, குழவிகளின் பிறப்பு குழுத் தலைமை அமைப்பாலும் வரவேற்கப்பட்டு ஊக்குவிக்கப் பட்டது. எனவே மக்கட் பேற்றின் பெருமை பற்றிப் பாடுதலைக் கதைப்பாடலின் ஒரு முக்கிய அமைப்பாக, மரபு நிலையாகப் பின்பற்றிய போக்கு, இனக்குழுத் தோற்றம் பெற்ற காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணங்களோடு தொடர்புடைய பழமை வாய்ந்ததாகும்.

(3) இரு மானுட உருவின் இணைப்பால் புதிய ஓர் உயிர் தோன்றுவது மானிடர்க்கு வியப்பும், மகிழ்ச்சியும் தரக்

101. அகத்தியருக்குக் குழவிப் பேறின்மையின், அவரது முன்னோர் பொதிகை மலையுச்சியிலுள்ள மரங்களில் தலைகீழாகத் தொங்கி கொண்டிருக்க, அகத்தியர் காரணம் கேட்க, "தம் சந்ததியில் வந்த அகத்தியர் என்பவர் இல்லறம் ஏற்றுப் புத்திரப் பேறடைந்து வம்ச விருத்தி செய்யாதிருக்கின்றமையின் தம்மால் சொர்க்கம் செல்ல இயலவில்லை" எனத் தெரிவிக்க, "அகத்தியர் என்பவர் தாமே" என்று தம் மூத்தோரிடம் அகத்தியர் தெரிவித்து, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, விதர்ப்ப நாட்டு மன்னன் மகளாய உலோபாமுத்திரையை மணந்து முன்னோர் சொர்க்கம் செல்ல உதவியதாகப் பாரதம் தெரிவிக்கிறது.

கூடியது ஆகும். இத்தகு இயற்கை நியதிக்கு மானிட உயிர்கள் அனைத்தும் ஆட்பட்டுப் புதிய உயிருக்கு வரவேற்பும், சிறப்பும் அளித்திருக்கின்றன. இதனாலும் குழந்தைப் பேறு கதைப்பாடல்களில் சிறப்பிடம் பெற்றது எனலாம்.

(4) மானுடன் அடையும் பதினாறு வகைப் பேறுகளுள் மகத்தான பேறாக மக்கட் பேறு கருதப்பட்டது. பிற பேறுகளைப் போலன்றி மனித முயற்சியால் அறிய இயலாத, அறிவுக்கு அப்பாற்பட்ட சக்தியின் இயக்கத்தால் கிடைக்கப்பெறும் இதன் அருமைத் தன்மை கருதியும், இதனைக் கதைப்பாடலில் முக்கிய ஓர் அமைப்பாக ஆக்கி, மரபாகவும் வளர்த்து விட்டிருக்க வேண்டும் எனக் கருதவும் இடமுள்ளது.

(5) கதை நாயகனான அக்குழந்தையே வளர்ந்து, அரிய பெரிய பல செயல்களைச் செய்யப் போகின்றது என்பதாலும், அதன் பிறப்பு ஓர் அங்கமாகவே கதைப் பாடல்களில் அமைக்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பட்டது எனலாம்.

(6) மக்கட்பேறு ஒரோர் வீட்டிலும் நிகழும் ஒரு முக்கிய, மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி என்பதாலும், இது குறித்துப் பாடுதல் கேட்கும் மக்களுக்கு மகிழ்வூட்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் இதனை ஒரு முக்கிய அமைப்பாக அமைத்தனர் எனக் கூறலாம்.

(7) பல தலம் சென்று நெடுநாள் தவம் செய்து, இறைவனிடம் வரம் வாங்கிப் பெற்ற குழந்தை என்று கூறுவதும், அக்குறிப்பிட்ட குழந்தையின் அருமைப் பாட்டை அதிகப்படுத்திக் காட்டற்கே ஆகும்.

II குழவி பெறத் தானம் செய்தல்

பிள்ளைப்பேறு கிட்டாததால் பல்வேறு தானம் செய்ததாக அமைவதும் முக்கிய பகுதியாகக் கதைப்பாடற் சுவடிகளில் இடம்பெறும்.

8425 - a- நம்பிராயன் கதை

8440 - தடிவீர சுவாமி கதை

8017 - வன்னியராயன் கதை

316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.)

போன்ற பல சுவடிகளிலும் குழந்தைப் பேறுக்காக அன்னதானம், ஆடைதானம், கோதானம், பூதானம், சொர்ணதானம் எனப் பல தானங்கள் செய்த முறை விவரிக்கப்பட்டுக் கதைப்பாடல்களின் ஓர் முக்கிய அங்கமாகவே திகழ்கின்றன.

இவ்வாறு குழந்தைப் பேறுக்காகத் தானம் அளித்தலைக் கதைப்பாடல்களில் ஆளுதலை ஒரு மரபாகவே கைக் கொண்டிருப்பதற்குக் கீழ் வருவன காரணமாதல் கூடும்.

(1) தமக்குள்ள குறை தீர்க்க, இறைவனை வேண்டிக் கொள்வதற்கு முன்பு 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனக் கருதிப் பொதுமக்களுக்குப் பல்வேறு தானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் மானிடர்க்கு அவசியத் தேவையான 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்ற ஔவை வாக்குப்படி அன்னதானமும், ஆடை தானமும் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன. கொடை அரச தருமத்தில் சிறப்பிடம் பெறுவது. மன்னர்களின் கொடைச் சிறப்பு பற்றியும், கொடுத்துக் கொடுத்தே பெயர்பெற்ற கர்ணன், கடையெழு வள்ளல்கள் பற்றியும், இதிகாச, சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சங்க இலக்கியப் பாடல்களில் கொடை பற்றிய அமைப்பு சிறப்பிடம் பெறுகிறது. பழைய கல்வெட்டுகளும், மன்னரும், பொதுமக்களும் அளித்த தானங்கள் பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றன. எனவே கதைப்பாடல்களில் தானம் அளித்தல் ஓர் முக்கிய உறுப்பாக, மரபாகத் திகழ்தல் பழம் இலக்கியம், கல்வெட்டுகளோடும் தொடர்புடைய பழைய அமைப்பு முறையாகும்.

இவ்வாறு 'தானம் தந்தார்கள்' எனச் சிறப்பித்துப் பாடுவது மூலம் பலருக்கும் உண்டி, உடை போன்றவற்றைக் கொடுத்துதவ வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கும் ஓர் இலக்கிய உத்தியாகவும் இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது எனலாம்.

(2) குழந்தைப் பேறுக்காகத் தானம் செய்யும் வழக்கம் சமுதாயத்தில் இருந்திருக்கின்றது. மக்கள் தானமாக உண்டி, உடை பெற்று மனமகிழ்வோடு செல்லும் போது தானம் அளித்தவர்களின் மன மகிழ்வுக்காகக் குழந்தைப் பேறு கிட்ட வேண்டும் என வாழ்த்திச் சென்றால், அவர்களது அனைத்து மனத்து வேண்டுகோளும் இணைந்து, ஒரு உன்னத சக்தியோடு இறையை அடையும்; தம் விருப்பம் நிறைவு பெறும் என நம்பியிருக்கின்றனர். கூட்டுப் பிரார்த்தனைக்கு ஒரு தனிச் சக்தி உண்டு என்பதை இன்றைய விஞ்ஞானமும் ஒத்துக் கொள்கின்றது.

(3) கதைத் தலைவனாய குழந்தை மிகச் சாதாரணமாகத் தோன்றி விடவில்லை. பல அரிய முயற்சிகளோடு, பலவிதச் செல்வங்களையும் மக்களுக்கு வாரி வழங்கிய தன் பிரதிபலனாகப் பிறந்தவன் எனக் கூறுவதால், கதைத் தலைவனுக்குப் பெருமை சேர்க்கவும் இவ்வமைப்பு விவரிக்கப்பட்டுள்ளது எனலாம்.

III பல ஊர்களைக் கடந்து குறிப்பிட்ட தலம் அடைதல்

இதுவும் கதைப்பாடலில் ஒரு மரபாகவே ஆளப்பட்டு வந்திருக்கிறது.

லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.சு.) என்ற சுவடியில் குழந்தை வரம் கேட்க அவள் கடந்து சென்ற ஊர்கள்,

"வள்ளைக் குழல்நுதலாள் வந்தாள் தொட்டிச்சி குளமதிலே
தீட்டுக்கல் வடசாலை தெக்குமண் பொத்தைக் காடுமிட்டு
தெக்குமணி பொத்தைக் காடுமிட்டு தென்பழசை யூரும் விட்டாள்
காரணிக் கருங்குளமும் காரிவாரி ஊருமிட்டு
வாரியூரும் பாற்குளமும் வக்கிராணி மலைகடந்தாள்"
(வரி. 1696 - 1700)

என அமைகிறது.

(1) இன்று போன்று விரைவுந்துகள் கதைப்பாடல்கள் காலத்தில் இல்லை யாதலின் அரசர், பெருஞ் செல்வந்தர்கள் தவிரப் பிற சாதாரண மக்கள் விரைவுப் பயணத்துக்கெனப் பயன்படுத்திய குதிரை போன்றவற்றைப்

பயன்படுத்த இயலாத நிலையிலிருந்தனர். எங்கு, எவ்வளவு தூரத்தில் செல்ல வேண்டிய கடமை இருப்பினும் கால்நடையாகவே நடந்தே சென்றனர். இதனால் குறிப்பிட்ட இடம் சேர நாட்கணக்கில் ஆகுமாதலின், அன்றாட உணவுத் தேவைக்கென நாட்கணக்கில் கெடாத உணவு வகைகள், தின் பண்டங்கள், (பொரிவிளங்காய் போன்றன), கைத்தடி, நாய், மோகினி மற்றும் பேய், பிசாசுகளிடமிருந்து காக்கும் மந்திரச் சக்கரங்களோடு, மோகினி உருவங்கள் வரைந்த உடைகளை அணிந்தும் சென்றிருக்கின்றனர். இவையே சமுதாயத்தில் இருந்த உண்மை நிலையாதலின், நடப்பியல் உண்மையுடன், பல ஊர் கடந்து குறிப்பிட்ட இடம் நோக்கிச் சென்ற அமைப்பு, கதைப்பாடல்களில் முக்கிய அங்கமாகத் திகழ்ந்திருக்கிறது எனலாம்.

(2) பல ஊர்களைக் கடந்து சென்றனர் எனக் குறிப்பிடும் பொழுது ஊர்ப் பெயர்களை அடுக்கிக் கூறுதல் ஆசிரியரின் பூகோள அறிவைப் புலப்படுத்துவதாக அமைவதாலும், ஊர்ப்பெயர் அடுக்கும் இத்தகு அமைப்பை மேற்கொண்டனர் எனக் கருதலாம்.

(3) கதைப்பாடல்கள் பெரும்பான்மையும் மக்கள் மத்தியில் பாடப்படுவன. ஒரு குறிப்பிட்ட முக்கியத் தலத்தில் குறிப்பிட்ட ஒரு கதைப்பாடல் பாடப்படும் பொழுது, பாடல் கேட்கும் விருப்பத்தாலும், உறவினர் ஊரின் விழா ஆதலின், அழைப்பின் பேரில் பங்கு பெற வருபவர்கள் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் பெருவாரியாக வந்து குழுமி அவ்விழாவில் பங்குகொள்வர். அவர்கள் ஊரையும் கதை மாந்தர் கடந்தார்கள் எனக் கூறிக் கதை பாடினால் அவ்வூர் மக்களின் பாராட்டையும், ஆதரவையும் குறிப்பிட்ட அக்கதை பெற்றுச் சிறப்புடையும் என்பதாலும், இத்தகு ஊர்ப்பெயர் அடுக்கல் முறை கதைப்பாடல்களில் மரபாகவே பின்பற்றப்பட்டிருததல் வேண்டும்.

(4) இவ்வாறு பலப்பல ஊர்களையும் கடந்து, மிகுந்த வழிநடைத் துயரங்களையும் அனுபவித்துப் பிள்ளைப் பேறுக்காகக் குறிப்பிட்ட தலம் சென்றனர் என்று

கூறலால், கதைத் தலைவனின் பிறப்பு மகிமையை உயர்த்திக் காட்டவும் இத்தகு 'ஊர்ப்பெயர் அடுக்கல் முறை' மரபாகவே கதைப் பாடல்களில் பயன்படுத்தப் பட்டது என்றும் கொள்ளலாம்.

IV கடுந்தவமியற்றல்

உடலை வருத்திக் கடுமையான முறைகளை மேற்கொண்டு, குழவிக்காக இறைவனை நோக்கித் தவம் செய்தனர் எனக் கூறும் அமைப்பும் கதைப் பாடல்களில் முக்கிய உறுப்பாகத் திகழ்வதுண்டு.

(1) இது கதைத் தலைவனாக வளர உள்ள பாத்திரத்தின் பிறப்புக்கு முக்கியத்துவம் தருவதற்காக அமைக்கப் பட்டதாதல் வேண்டும்.

(2) உலகப் பேறுகளை அடைதற் பொருட்டுக் கடுந்தவம் இயற்றுவது, இதிகாச, புராண காலத்திலேயே உள்ள ஒரு மரபாகும். அர்ச்சுனன் பாசுபதத்துக்காகத் தவமியற்றுவது மகாபாரதத்தில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. புராணக் கதைகளில் முனிவர்கள் முக்திக்காகவும், அசுரர்களும், அரக்கர்களும் மூவுலகை வெல்லவும், தம்மை யாரும் கொல்ல இயலக் கூடாது என்றும் வரம் வாங்கலைக் காண முடிகின்றது. எனவே, பல நூற்றாண்டுகளாக வாய்மொழியாகவே வழங்கப் பட்டு வந்த கதைப்பாடல்களில் இடம்பெறும் 'கடுந் தவமியற்றுதலாகப் பாடும் முறை' இதிகாச, புராண காலத்திலிருந்தே இடம்பெற்று வந்த ஒரு பழம் மரபு முறையே என்றும் தெரிகின்றது.

(3) தவமியற்றலில் பல செயற்கரும் செயல்களைச் செய்தலாகக் கூறுதல், மக்களுக்கு வியப்பையும், பயத்தையும், தெய்வ பக்தியையும் தரக்கூடியது. ஆதலால் கேட்கும் மக்களுக்கு மென்மேலும் பல்சுவை நல்கக்கூடிய இப்பகுதியைக் கேட்டல் வேண்டும் என்ற ஆர்வம் தூண்டப்படுதற்கும் பாடினர் எனக் கொள்ளலாம். தவம் செய்த முறைக்குச் சான்றாக, 8425-a-நம்பிராயன் கதை என்பதில் குழந்தை வரம்வேண்டி நம்பி தவம் செய்த முறை கீழ்க் கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

"அழகுநம்பி வாசலிலே அக்கினிக் குண்டம் வெட்டி
அக்கினிக் குண்டமதில் ஆயிரமுழக் கம்பம் நாட்டி
ஆயிரமுழக் கம்பமேலே ஆமைநல்ல பலகைபோட்டு
ஆமைநல்ல பலகைமேலே அழகுசெப்புக் குடம்கவிழ்த்திச்
செப்புநல்ல குடமதிலே தேங்காய் இலுமிச்சம் பழத்தை வைத்தான்

கொட்டைப்பாக்கு நாவிலையும் கூருமையுள்ள ஊசிநாட்டி
ஊசிமுனை மேலே பெருவிரலும் உச்சாந்தலை கீழும்
தலைகீழும் கால்மேலும் தவம்புரிந்தானே பட்டனுமே"

என விவரிக்கப்பட்டுள்ளது.

V கர்ப்பமடைதலும், பிள்ளைப்பேறும்

கர்ப்பநிலையும், மகப்பேறும் மானுட வாழ்வில் நடைபெறும் மகத்துவம் வாய்ந்த செய்திகளாகும். இருவர் இணைந்த குடும்ப வாழ்வில் புதிதாகத் தோன்ற இருக்கும் ஓர் உயிர், குடும்பத்தில் புதிய ஒரு சூழலை உருவாக்குகின்றது. கதை கேட்கும் மகளிர் ஒவ்வொரு வரும் அனுபவித்த அல்லது அனுபவிக்க இருக்கின்ற உணர்வாதலாலும், கதை கேட்பவர்களில் முக்கியமான வர்களாகக் குடும்ப வேலையில் நாளும் உழன்று அலுத்துக் களைத்துள்ள மகளிர் ஆதலான், மகளிர் வாழ்வில் சிறப்பிடம் பெறும் ஒரு பேறாகிய மக்கட்பேறு பற்றியும், கர்ப்பமுறல் பற்றியும் கூறுதல் மகளிர்க்குச் சுவை நல்கும் என்பதாலும், விரிவாகக் கதைதோறும் கூறும் ஒரு அமைப்பாக, மரபாக இவ்வமைப்பைப் பின்பற்றினர் எனக் கருதலாம்.

(2) கதைத் தலைவர்களின் பிறப்பு மகிமையை' விவரிக்கு முகமாகவும், இத்தகு அவத்தை நிகழ்ச்சிகளின் பின்னரே கதைமாந்தர் தோன்றினர் எனக் கூறி அன்னாருக்குச் சிறப்புத் தரவேண்டும் என்பதற்காகவும் இப்பகுதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

VI பிள்ளையின் பெயர் வைப்புக்கான காரணம் கூறல்

குழவி பிறந்ததும் அதற்குப் பெயரிடும்போது என்ன காரணத்துக்காக அப்பெயர் இடப்படுகின்றது என விளக்குதல் கதைப்பாடல்களில் ஒரு மரபாகவே ஆளப்படுதற்கும் அடிப்படையில் பல காரணங்கள் இருக்கக் கூடும்.

"இவர்கள் பெற்றுப் பேரிட்டார்களோ?"
"பெயர் சொல்ல ஒரு மகன் வேண்டுமே"
"தங்களின் திருப்பெயர் என்னவோ?"

என இவ்வாறு வழக்கில் பயன்படுத்தப்பெறும் தொடர்கள், வாழ்வில் 'பெயர்' பெறும் முக்கியத் துவத்தை விளம்புகின்றன. ஒரு மனிதனுக்கு முதல் முக்கிய அடையாளமாகத் திகழ்வது அவன் பெயரேயாகும். பெயரைக் கொண்டே ஒரு மனிதனை இனம் காண முடிகின்றது. இத்தகு வகைகளிலெல்லாம் முக்கியத்துவம் வாய்ந்ததாதலின், கதைப்பாடல்களில் பெயரிடும் அமைப்பு தனி மரபாகவே பின்பற்றப் பட்டிருத்தல் வேண்டும்.

(2) பல பெயர் இருக்கக் குறிப்பிட்ட பெயரை ஏன் கதை நாயகர்களுக்குச் சூட்டினர் எனக் கதை கேட்கும் மக்கள் மனங்களில் வினா எழும்பி, ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான பெயரை மனத்துள் எண்ணி, 'இப்பெயர் சூட்டியிருப்பின் எவ்வளவு நன்றாக இருந்திருக்குமே' என்று எண்ணிக் கருத்து மாறுபடுவரே எனக் கருதியும், பாடுபவர் குறிப்பிட்ட பெயரிட்டதற்கான காரணமும் கூறி, இதனால் இப்பெயர் பொருத்தமே என இயம்பி, மக்களின் மாறான எண்ணங்களைச் சமன் செய்தற் பொருட்டும் இவ்வாறு பெயர்க் காரணங்களை அமைத்தனரோ என்றும் தோன்றுகின்றது.

(3) கதைப்பாடல்கள் நாட்டுப்புறத்திலுள்ள எளிய பாமர மக்கள் மத்தியில் பாடப்படுவனவாதலின், அவர்களுக்கு எளிமையாக விளங்கும் வண்ணம், காரணகாரியத் தோடு எதனையும் விளக்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாகவும், இன்ன பெயர் சூட்டியதற்கு இன்ன காரணம் என விளக்கினரோ என்றும் எண்ண இடமுள்ளது.

(4) வாழ்ந்து மறைந்த பல வரலாற்று மாந்தரே, வாழ்ந்த வாழ்க்கையினால், கதைப் பாத்திரங்களாக்கிப் பாடப் படுகின்றனராதலின், முன்பே பெயர் சூட்டப்பட்டிருந்த ஒருவருக்குக் கதைப்பாடற் புலவன் வலிந்து பெயருக்கான காரணத்தைக் கற்பிக்கிறான். இதிகாச,

புராண மாந்தருக்கும் இவ்வாறே பெயருக்கான காரணம் கற்பித்துக் கூறப்படுகின்றது.

கன்னத்தோடு கன்னம் வைத்தபோது நகைத்ததால் 'கன்னகை' என்றும் (6305 - கோவலன் கதை), முத்துப் போல் நகைத்ததால் 'முத்தாரம்மன்' என்றும் (8427-முத்தாரம்மன் கதை, வரி.246-247), முத்துப் போன்ற வேர்வையில் ஆதாரமாகிப் பிறந்தவளாதலின் (முத்து + ஆதார + அம்மன்) முத்தாரம்மன் என்றும், முத்தாரம்மன் விற்கவிதை (வரி.204-207), வெட்டும்போது குருக்கு வழியாய் வெடித்து வந்ததால் குருக்களாஞ்சி என்றும் (8425 - குருக்களாஞ்சி கதை), கையிலேந்திய விந்திற் பிறந்ததால் 'கையனார்' (கையனார் > ஐயனார்) என்றும், (8022 - சாஸ்தா கதை இ.ம.41-42), வேர்வையில் பிறந்த புத்திரனாதலின் வீரபத்திரன் (வேர்வைபுத்திரன் >வீரபத்திரன்) என்றும், சித்திரை மாதம் பிறந்தவராதலின் சித்திரபுத்திரர் என்றும், (4087 - சித்திரபுத்திர நயினார் கதை, இ.ம.13, இ.ம.45) கதைப்பாடல்களில் பெயர்க் காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. வீரபத்திரன் என்பது வேர்வை பத்திரன் என்பதனின்றும் பொருளளவில் பெரும் மாறுபாடுடையது எனினும் பெயருக்குக் காரணம் கூறவேண்டும் என்ற மரபு நோக்கிப் பொருள் பொருத்த மில்லா விடினும் இவ்வாறு இயம்பப் பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

VII பிள்ளை வளர்ப்பும் கல்விப் பயிற்சியும்

பிள்ளை வளர்ப்பும், கல்விப்பயிற்சியும் அமைந்து, கதைப்பாடல் மரபானமைக்குப் பின்வருவன காரணங் களாகலாம்.

(1) குழந்தைப் பருவம் ஒவ்வொரு மனித வாழ்விலும் ஒரு முக்கியக் காலகட்டம்.

> ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்''
> ''விளையும் பயிர் முளையிலே தெரியும்''
> ''இளமையில் கல்''

போன்ற குழந்தைப் பருவம் பற்றிய முதுமொழிகள், குழவிப் பருவப் பழக்கமே இறப்பு வரை தொடரும் என்பதையும்,

குழந்தைப் பருவத்திலேயே ஒருவன் எத்தகையவனாக வளர்ச்சி பெற்றுத் திகழுவான் என அறிய இயலும் என்பதையும், இளமைப் பருவமே கல்வி கற்பதற்குரிய தக்க பருவம் என்பதையும் புலப்படுத்துகின்றன. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் நல்லவர்களாக, வல்லவர்களாகத் திகழவேண்டும் என்ற மன விருப்பம் உள்ளவர்களாகவே திகழுவர். மக்களின் இம்மன வியல்பை அடிப்படையாகக் கொண்டு, கதைப்பாடல் களில் குழந்தை வளர்ப்பையும், பிள்ளைப் பருவக் கல்வி பற்றிக் கூறுதலையும் ஓர் அங்கமாகவே அமைத்திருக்கின்றனர் எனலாம். குழந்தைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என அறிவுறுத்துவதாகவும் இவை அமைந்திருக்கின்றன.

(2) இலக்கிய, மந்திர, வீரப்பயிற்சி என்று ஆயகலைகள் அறுபத்து நான்கும் கற்றுத் தேர்பவன் தலைசிறந்த மாந்தனாக மதிக்கப்பட்டான். கதைத் தலைவன் தன் குழவிப் பருவத்தில் இத்தகு பயிற்சிகளையெல்லாம் பெற்றான் எனக் கூறிக் கதை நாயகன் அல்லது நாயகிக்குச் சிறப்பிடம் தருவதற்காவும் இதனை ஒரு அங்கமாகவே கதைப்பாடல்களில் அமைத்தனர் எனவும் கொள்ளலாம்.

(3) தத்தம் காலத்து வழங்கிவந்த, தமக்கு விருப்பமான இலக்கிய வகைகளைக் கதை நாயகன் பயின்றான் எனக்கூறும் அமைப்பைக் கதைப் பாடல்களில் ஒரு மரபாகவே அமைத்தல், குறிப்பிட்ட அவ்விலக்கியங் களுக்குப் பெருமை சேர்ப்பதற்காவும், அத்தகு சிறப்புமிகு அறிஞர்கள் மத்தியில் போற்றப்பட்ட இலக்கியங்களைப் பயின்றான் என்பதான், கதை நாயகனுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் இவ் வமைப்பை ஆண்டனர் என்றும் கூறலாம்.

இவ்வமைப்பு பெரும்பான்மையான கதைப்பாடல் களிலும் மரபாகவே ஆள்ப்பட்டிருப்பினும், சான்றுக்காக,

8017 - வன்னியராயன் கதை[102]

8018 - முத்துப்பட்டன் கதை[103]

போன்றவற்றில் உள்ள அமைப்புகளைக் கூறலாம்.

இவ்வாறு கதைப்பாடல் மரபாகவே ஆளப்படும் அமைப்பு முறைகளோடு மேலும் சில உள் அமைப்புகள் போன்றுள்ள கதைப்பாடல் மரபுகளையும் காண முடிகின்றது.

இத்தகு உள் அமைப்பு முறைகளை மரபு வழியாகக் கையாண்டு கதைப்பாடல் மரபாகவே பின்பற்றியதற்கும் பல காரணங்கள் இருத்தல் வேண்டும்.

உள் அமைப்பு அல்லது இடையமைப்பு முறைகள் அமைந்ததற்கான காரணங்கள்

அ. பல கதைப்பாடல்களில் கதைமாந்தர் வடபகுதியினின்றும் வந்ததாக அமைத்தலைக் கதைப்பாடல் மரபு போன்றே பின்பற்றியுள்ளனர்.

இத்தகு அமைப்பை ஆள்வதற்குக் கீழ்க்காணுபவை காரணங்களாதல் கூடும்.

1. வடபகுதியில் கைலாயமிருப்பதும், சிவன் அங்கு குடிகொண்டிருக்கிறார் என்ற எண்ணமும், அங்கிருந்து கதை மாந்தர் வந்தனர் எனக் கூறுவதால் கதைத் தலைவருக்கு இறைத்தன்மை சாற்றி உயர்த்த வேண்டும் என்ற மதத் தொடர்பான எண்ணம் காரணமாதல் வேண்டும்.

---

102. ''பன்னிரெண்டு வயததிலே படித்தானே வித்தைகளை
மல்வேட்டை சிலம்பத்தொழில் மடிபிடிகள் அடிபிடிகள்
ஆனையேற்றம் குதிரையேற்றம் அளவிறந்த தொழில் படித்தான்
பதினேழு வயததிலே படித்தானே வித்தைகளை
வேட்டைநாயுங் கைப்பிடித்து வேகமுடன் வேட்டையாட''

இ.ம. 12

103. ''ஆறுநல்ல வயததிலே அரிவிரி கொன்றைவேந்தன்
பத்துநல்ல வயததிலே பலகணக்குங் கற்றறிந்தான்
பன்னிரண்டு வயததிலே யானையேற்றங் குதிரையேற்றம்
மல்வித்தை சிலம்பத்தொழில் மன்னனுந் தான்படித்தான்
கூடுவிட்டுக் கூடுபாய்வான் குலத்தொழிலுங் கற்றறிந்தான்''.

இ.ம. 1

2. வடநாடு, வடமொழியாய சமஸ்கிருதம் போன்றவற்றை உயர்வெனக் கருதுபவர்களால், வடநாட்டிலிருந்து கதைமாந்தர் வந்ததாகக் காட்டும் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுக் கதைப்பாடல் மரபாகவே நிலைத்துப் போயிருக்கலாம்.

3. பூகோள அமைப்புப்படி இந்தியாவின் வடபகுதி உயர்வாகவும் தென்பகுதி தாழ்வாகவும் அமைந்துள்ளது. பொதுவாகவே மானுடர்களின் வாழ்க்கைத் தொடங்கு வது குறிஞ்சி எனும் உயர்ந்த மலைப் பகுதிகளிலாகும். கடலால் நிறைந்திருந்த உலகில் தோன்றிய முதல் நிலப் பகுதிகள் உயர்ந்த மலைப்பகுதிகளாயிருந்தன. மக்கள் வாழத்தகுதியுடை யவையாய் முதன் முதலில் ஆனவையும் இவையே. இந்த அடிப்படையை மனத்துட்கொண்டே தமிழர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்நிலப் பாகுபாட்டில் குறிஞ்சியை முதலில் வைத்தனர். இதனையும் எண்ணிப் பூகோள அமைதிப்படி உயர் பகுதியாய வட பகுதியினின்று கதை மாந்தர் வந்ததாக அமைக்கும் கதைப்பாடல் மரபு நிலைகளையும் இணைத்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே இவ்வமைப்பு சங்க நிலப் பாகுபாட்டுடன் இணைத்துப் பார்க்கும் பழமையுடையதாகும்.

4. தம் கதைப்பாடல்கள் தென்னகக் கதை மாந்தர் பற்றியனவே ஆயினும், அவரது புகழ் தென்னாட்டோடு நின்றுவிடக் கூடாது; அது வடநாட்டிலும் பரவி, இந்தியப் புகழ் பெறவேண்டும் என்ற எண்ணத்தால் வடபகுதியையும் தம் கதைப்பாடலில் இணைத்து, 'தம் கதை மாந்தரே வடபகுதியினின்றும் வந்தவரே' எனக் கூறி இணைத்திருக்கலாம்.

8427 - முத்தாரம்மன் கதை
8029 - வாணதீர்த்தக் கரைப் புலையன் சுடலையாண்டி கதை

போன்றவற்றில் கதைமாந்தர் வடபகுதியினின்றும் வந்ததாகக் கூறலை, இவ்வமைப்பு முறைக்குச் சான்றாகக் காட்டலாம்.

5. வரலாற்றறிஞர்கள் கருத்துப்படி, வட பகுதியில் ஆரியர் படையெடுப்பைத் தொடர்ந்து, திராவிடர் தென்பகுதி நோக்கி நகர்ந்து வந்தனர் என்பது வரலாற்றறிஞர்கள் கருத்தாகும். இதன்படி நோக்கத் திராவிடர் தெய்வங்களாய சிறுமரபு அல்லது சிறுநெறி அல்லது சிறு தெய்வங்கள் வடக்கிலிருந்து தென்பகுதி நோக்கி வந்ததாகவே தெய்வக் கதைப்பாடல்களில் அமைக்கப் படுவது வரலாற்றறிஞர்கள் கருத்தை மேலும் உறுதி செய்வதாக அமைகின்றது. வடபகுதியினின்று தென் பகுதி நோக்கி வந்த திராவிடர் தம் தெய்வங்களையும் உடன் கொண்டு வந்தனர் எனலாம். இதனைக் குறிப்பிடு முகமாகவே தம் சிறு தெய்வங்கள் வடபகுதியினின்று தென்பகுதி நோக்கி வந்தவை என மரபுவழிப்படி அமைத்துப் பாடி வந்திருக்கலாம்.

சான்று: உச்சினிமாகாளி கதை
8427 - முத்தாரம்மன் கதை

ஆ. ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறுதல், பிள்ளை வரம் வாங்கக் குறிப்பிட்ட தலத்துக்குச் செல்லும்போது இடையிலுள்ள ஊர்களை அடுக்கலாக அமைத்தல், பொதுவாகப் பெரும்பான்மையான கதைப்பாடல் களிலமைந்து, மரபாகக் காணப்படினும், இடையிலுள்ள வேறு கதை நிகழ்ச்சிகளிடையேயும் ஊர்ப்பெயர், மரப்பெயர், பொருட்பெயர் அடுக்கல்கள் வருதலுண்டு. இவ்வாறு கதை நிகழ்ச்சிகளிடையில் பெயரடுக்குகளை அமைக்கும் முறையும் மரபாகவே பின்பற்றப்பட்டுள்ளது.

கதை நிகழ்ச்சிகளிடையில் ஊர்ப்பெயர் அமையும் முறைகள்:

1. ஒரு செய்தி சொல்ல, ஒட்டன் (விரைவாக ஓடிச்சென்று செய்தி கூறும் தூதன்) ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்வதாகவும், இடையில் அவன் பல ஊர்களைக் கடந்து குறிப்பிட்ட அவ்வூருக்குச் செல்வதாகவும், மறு செய்தி பெற்றுக்கொண்டு, திரும்ப அதே பல ஊர்களைக் கடந்து திரும்புதலாகவும் அமையும் பகுதியில் ஊர்ப்பெயர்கள் அடுக்கிக் கூறப் பெற்றுள்ளன.

சான்று: 11613 - சின்னத்தம்பி கதை
லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.சு.)

2. கதை நாயகரின் மரணச் செய்தி கேட்டு அவரது தாய், தந்தை, மனைவியர் இறந்தார் இடம் தேடி வரலாகக் கூறும் பகுதியில், அவர்கள் இடையில் பல ஊர்களைக் கடந்து வந்தார்கள் எனக் கூறுதலாக ஊர்ப்பெயர்களை அடுக்கலும் உண்டு.

சான்று: 11613 - சின்னத்தம்பி கதை

3. ஊர்விட்டு ஊர் காதலாயின் காதலனை அல்லது காதலியைத் தேடிச் செல்பவர், இடைப்பட்ட பல ஊர்களைக் கடந்து வருதலாக ஊர்ப்பெயர் அடுக்கல் உண்டு. இவர்களே இரண்டுமூன்று முறை வந்தும், போயும் இருந்தால், அத்தனை முறையும் அதே ஊர்ப்யெர்கள் திரும்பத் திரும்ப அடுக்கி கூறப்படலு முண்டு.

சான்று: 8440 - தடிவீர சுவாமி கதை

4. ஒரு ஊருக்குப் பயணம் செல்லும்போது, அங்கு எதையாவது மறந்து விட்டு வந்தால், திரும்ப அவ்வூர் சென்று அதனைக் கொண்டு வருதலாக அமையும் அமைப்பில், இடையில் பல இடங்களைக் கடந்து சென்றதாக ஊர்ப் பெயர்களை அடுக்கல்.

சான்று: 8425 - நம்பிராயன் கதை

5. உற்றார் உதவியை நாடியோ, உற்றாரைத் தேடியோ பல ஊர்களைக் கடந்து செல்லுதலாக அமையும் அமைப்பிலும், ஊர்ப் பெயர் அடுக்குதல் உண்டு.

சான்று: நல்லதங்காள் கதை
8425-b-குருக்களாஞ்சி கதை

இத்தகு முறைகளில் ஊர்ப்பெயர் அடுக்கல் போன்று, 8029 - வாணதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை, வெள்ளைக்காரன் கதை போன்றவற்றில் காட்டில் அடர்ந்துள்ள மரவகைகளை விளக்கும் கதை நிகழ்ச்சிகளாக மரப்பெயர் அடுக்குதல்கள் அமைந்துள்ளன.

''எலுமிச்சை கொழுமிச்சை இனியபலா மரமும்
மாமரமுந் தேன்மரமும் வருக்கைப் பிலாமரமும்
வாழைக் கமுகுகளும் வான்கரும்பு தேன்கரும்பும்
கருவாழை செவ்வாழை கதலிவாழை பலாச்சுண்டாம்''

-8029 - வாணதீர்த்தக்கரைப்
புலையன் சுடலையாண்டி கதை,
இ.ம.31.

என மரப்பெயர் அடுக்கலும், கப்பலில் ஏற்றப்பட்ட சரக்குகளைக் கூறுமுகமாக,

''கொத்தமல்லியும் கோழிபன்றியும் கூண்ட கப்பலி லேற்றுவார் - ஏலஏல
அவரையோடு சிறுபயறு சீனிசர்க்கரை ஏற்றுவார் - ஏலஏல
சின்னதுரையும் கண்டு மகிழ சிறந்தோர் தாழ்சபத்திரி - ஏலஏல
குங்குமமோடு செந்தூரமும் கோதுமையும் ஏற்றுவார் - ஏலஏல

வெள்ளைக்காரன் கதை,
வரி. 296-299.

எனப் பொருட்பெயர் அடுக்கலும் அமைகின்றன.

இத்தகு அமைப்புகள்,

1. கதை விரிவுக்கு உதவுதல்,
2. கதை யோட்டத்தைத் தருதல்.
3. இத்தகு மிகு தூரங்களைக் கடந்து சென்றனர் என்பதால், கதை நாயகன் அல்லது நாயகி மேல் பக்தியும், பரிவும் தோன்றச் செய்தல்.
4. கதைப்பாடல்களுள் பெரும்பாலானவையும் மக்கள் மத்தியில் பாடப்படுவன ஆதலின், ஊர்ப்பெயர், மரப்பெயர், பிற பொருட் பெயர்களை அடுக்கி விரைவாகக் கூறும்பொழுது, கேட்போருக்கு வியப்பும் மகிழ்வும், கேட்கும் ஆர்வமும் மிகுமாதலாலும் இத்தகு பெயர் அடுக்கு முறைகளை இணைத்தனர் எனக் கொள்ளலாம்.

5. பாடும் புலவர்கள் ஊர், மரம், பிற பொருட்கள் பற்றிய தம் அறிவுத் திறத்தையும், புலமைத் திறத்தையும் வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியாகவும் இத்தகு அடுக்குதல் முறைகளைக் கதை நிகழ்ச்சிகளிடையேயும் அமைத்தனர் எனக் கருதலாம்.

8425-a-நம்பிராயன் கதை

8425-b-குருக்களாஞ்சி கதை

8440 - தடிவீரசுவாமி கதை

11613 - சின்னத்தம்பி கதை

8016 - இடைச்சி செல்லி கதை

6715 - அழகன் பெருமாள் கதை

316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.)

போன்ற பல கதைப்பாடல்களைக் கதை நிகழ்ச்சி களிடைப் பெயர் அடுக்குதல் முறை அமைந்திருப்பதற்குச் சான்றுகளாகக் கூறலாம்.

ஊர்ப்பெயர் அடுக்கி வருதல் மட்டுமல்லாது, குறிப் பிட்ட ஒரு இடத்துக்குச் சென்று மீண்டு வரும்போதும் அதே வழியாகவே வருதலால், இருமுறை கூறிய ஊர்களே இடம்பெற்று வருகின்றன. இத்தகு அமைப்புகள் கதை விரிவுக்குத் துணை புரிகின்றன. கேட்பவர்கள் நாட்டுப்புறப் பாமரமக்கள் ஆதலின், எளிதில் கதை நிகழ்ச்சி மனத்துட் பதிவதற்கும், கதை, மக்கள் மத்தியில் பாடப்பட்டுக் கொண்டிருக்கும்போது (பெரும்பாலும் இரவில்) உழைத்துக் களைத்து, வீடு வந்து உண்டு முடித்ததும், பெண்டிர் வீட்டு வேலைகளைச் செய்து அனைத்தையும் ஒழுங்குபடுத்தி வைத்து விட்டும், கதை துவங்கும்போதே அன்றி இடையிலேயும் வந்து சேர்வர் ஆதலின், அவர்களுக்கு எளிதில் கதை நிகழ்ச்சி விளங்கும் வண்ணமும், சென்றபோது விளக்கிய அதே ஊர்ப்பெயர்களே மறுமுறையாகத் திரும்ப வந்த போதும் உள்ளவைகளாக அடுக்கப்படுகின்றன எனலாம்.

இ. குறிப்பிட்ட தலத்தில் சென்று தவம் செய்ய, அத்தலத் தெய்வம் அரனிடம் சென்று கூற, அரனார் சித்திர புத்திரரை அழைக்க, அவர் அத்தவம் செய்வோனின் ஓலை எடுத்துப் பார்த்து, பிள்ளைப் பேறே இல்லை என்பதும்,

பிறந்தால் அது எத்தனை வயது வரையே இருக்கும் எனக் கூறுதலும், சிவன் அதன்படி குழந்தை வரமருளுதல் என்ற அமைப்பும் பல கதைப்பாடல்களில் மரபாக இடம் பெற்றுள்ளது.

8440 - தடிவீரசுவாமி கதை[104]
8425-a-நம்பிராயன் கதை[105]
8017 - வன்னியராயன் கதை[106]

போன்றவற்றைச் சான்று காட்டலாம்.

இவ்வாறு அமைத்தலைக் கதைப்பாடல் மரபாகவே பின்பற்றுவதற்குக் கீழ்க் காணுபவை காரணங்களாதல் கூடும்.

1. அனைத்துத் தெய்வங்களுக்கும் சிவன் முதன்மை யானவர் என்பதுணர்த்தும் சைவக் கோட்பாட்டின் ஆழத்தாலும், சைவ மதத்தாரின் அடிப்படை நம்பிக்கையுள் ஒன்றாகிய ஒரொருத்தரது வாழ்க்கைக் கணக்கையும் ஒரு தேவ கணக்கர் நாளும் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் எழுந்ததாதல் வேண்டும்.
2. குழந்தை வரம் தரும்போது குறிப்பிட்ட வயது வரையே அது உயிரோடிருக்கும் என அதன் வாணாளை வரை யறுத்துக் கூறுவது பழம் காவிய, புராண மரபை அடியொற்றி அமைந்ததாதலும் வேண்டும். இராவணனுக்கு முக்கோடி வாழ்நாள் என்றும், மார்க்கண்டனுக்குப் பதினாறு வயது வரையே வாழ்வு என்றும் அமைந்த கருத்துகள் எண்ணத் தக்கன. எனவே இத்தகு அமைப்பு முறை காலப் பழமை வாய்ந்ததென்பது புலானகின்றது.

---

104. தவம் செய்தலும், அரன் சித்திரபுத்திரரை அழைத்து விசாரிக்க, அவர் எழுபிறப்பிலும் குழந்தையில்லை என, சிவன் 'நானே குழவியாய்ப் பிறந்தால் எவ்வயது வரை வாழ்வு? என, '18 வயது வரையே' எனச் சித்திரபுத்திரன் வரையறுப்பதும் விளக்கப்பட்டுள்ளது.

105. நம்பியே குழந்தையாகப் பிறப்பதும், 5 வயது வரையே வாழ்க்கை எனக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

106. சித்திரபுத்திரர் பட்டயம் பார்த்து, 18 வயதில் வன்னியராயன் மரணமடைவான் என இயம்பியதாக அமைந்துள்ளது.

3. மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற சில கதைப் பாடல்களும், கதைப்பாடல் மரபை நிர்ணயித்திருக்கின்றன எனலாம். வயது வரையறை 'மார்க்கண்டன் கதைக்கரு[107] அடிப்படையிலும், தேவ கணக்கனாய சித்திரபுத்திரன் ஓலை பார்த்து, வரத்தை நிர்ணயித்தான் என்பது 'சித்திர புத்திரன் கதைக்[108] கரு அடிப்படையிலும் எழுந்த அமைப்புகளாகி, இவை ஒரு மரபாகவே கதைப்பாடல் அமைப்பில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஈ. குழவி பிறக்கும் எனக் குறத்தி வந்து குறி சொல்லலாக அமைத்தலையும், பல கதைப்பாடல்களில் மரபாக ஆண்டுள்ளதைக் காண முடிகின்றது.

1. இது சமகாலத்திய குறவஞ்சி இலக்கியங்களின் தாக்கத்தால் வந்த அமைப்பாதல் வேண்டும்.

2. கதை கேட்கும் மாந்தர்க்குக் குறத்தி கூறுவது போல் குழவி பிறக்குமா? பிறக்காதா? என்ற எண்ணம் தோன்றிக் கதை கேட்கும் ஆர்வத்தைத் தூண்டுவ தற்கும், ஒரு குழந்தைக்காகப் பெற்றோர் படுகின்ற துயரைக் கண்டு மனம் நொந்திருக்கும் கதை கேட்கும் மாந்தருக்குக் குறத்தி குழவிப் பேறு கிட்டும் எனக் கூறுவது மன நிறைவையும், மகிழ்வையும் தருவதாக அமைந்து, சுவை மாற்றத்தைத் தருவதற்கும், இவ் வமைப்பைப் பாடுவதை ஒரு மரபாகவே கொண்டனர் எனலாம்.

---

107. 5655, 8433 } மார்க்கண்டன் கதை
2617 - மார்க்கண்டன் சரித்திரம்
போன்ற புராணக் கதைப்பாடல்களும்,
10301 8253
9108 10383
8254 10428
7319 } போன்ற நாடக வடிவிலமைந்த மார்க்கண்டன் கதைப்பாடல்களும்
மக்கள் மத்தியில் சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தன.

108. சித்திரபுத்திரன் கதை பற்றி மட்டும் 21 கதைப்பாடல்கள் கே.ப.சு.வில் உள்ளன. மக்களிடம் இக்கதைப்பாடல் பெற்றிருந்த இடத்தை இது உறுதி செய்கின்றது.

3. சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு காரியம் நடைபெறக் குறத்தியிடம் குறி கேட்கும் வழக்கம் ஆழமாக வேரூன்றி இருந்ததாலும், இதனைக் கதைப்பாடல் மரபாகவே அமைத்தனர் எனக் கொள்ளலாம்.

4. குறி கேட்டல் சங்க இலக்கியப் பாடல்களுடன்[109] தொடர்புடைய மிகப் பழைய ஓர் அமைப்புமாகும். வெறியாடலும், வெறியாட்டயர்ந்து குறி கூறலுமான செய்திகள் சங்க இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளன. எனவே சங்கப் பாடல்களிலேயே இடம் பெற்றுள்ள இவ்வமைப்பை மரபாகப் பெற்றுள்ள கதைப்பாடல் அமைப்பு நிலைகள் பழமையுடையன என்வும் தெரிகின்றது.

உ. குழந்தை வரம் கிடைத்ததும், அல்லது குறத்தி குழவி பிறக்கும் எனக் கூறியதும், குறத்தியின் கூற்றுப்படி, கோயில் கட்டலாக, இடிந்த கோயிலைப் புதுப்பிப்பதாக அமைக்கும் ஓர் அமைப்பும் பல கதைப்பாடல்களில்[110] காணப்படுகின்றன. இவ்வமைப்பையும் மரபாகவே பல கதைப்பாடல்களிலும் பின்பற்றுவதற்கும் கீழ்க் காணுபவை காரணங்களாதல் கூடும்.

1. இறைவனுக்குக் கோயிலெடுத்தல், மத அடிப்படையில் புண்ணிய காரியமாகக் கருதப்பட்டமையின், இணைக் கப்பட்ட அமைப்பாதல் வேண்டும்.

2. கோயில்கள் அவ்வக்கால, அவ்வந் நாட்டுப் பகுதியின் பண்பாட்டைத் தெளிவுபடுத்துவன ஆதலின், இடிந்த

---

109. ''அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்''
-குறுந்.105:2-3.

ஆடுமகள் - வெறியாடுபவள். இவள் கணிக்காரிகை எனவும் படுவாள்.

110. சு. தங்கதுரை (ப.ஆ.) சிதம்பர நாடார் கதை.
''மாந்தயரை வரவழைத்து மாகாளி யம்மனுக்கு
இடிந்த மதிலுஞ் சுற்றும் இமைக்கு முன்னே
முடித்துவாரும்
கடுக மன்னனுரை கேட்டுக் கன்னாளர் கூடியொன்றாய்
இடிந்த மதிலுஞ்சுத்தும் இமைக்கு முன்னே முடித்து வந்தார்''
-வரி.540-543.

கோயில்களைப் புதுப்பித்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் தூண்டுவதற்காகவும் இவ் வமைப்பைக் கதைப்பாடல் மரபாகவே பின்பற்றினர் எனக் கருதலாம்.

3. ஏதேனும் ஒரு வேண்டுதல் நிறைவேற இறையோடு தொடர்புடைய ஏதேனும் ஒரு செயலைச் செய்யும் பழக்கம் சமுதாயத்தில் இருந்து வந்திருக்கிற தென்பதும் தெரிகின்றது.

ஊ. கர்ப்பமடைந்தவுடன் ஒரோர் மாதமும் படும் அவத்தையை விவரித்தலும் கதைப்பாடல்களில்[111] மரபாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது.

மாதர் வாழ்வில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சி யாதலாலும், குடும்ப நிலையில் மகிழ்ச்சியுறு மாற்றத்தை உண்டாக்கும் நிலையுடையது என்பதாலும், கதைப்பாடல் மக்கள் மத்தியில் பாடப்படுவதாதலான் அவர்களது வாழ்வில் முக்கிய இடம்பெற்ற கர்ப்ப நிலைகள், விவரமாகப் பாடப்பட்டிருத்தல் வேண்டும்.

8017 - வன்னியராயன் கதை என்ற சுவடியில்,

இ.10

"மூன்றான மாத்தையிலே முகவெளுப்பு கண்டிடுமாம்
மாங்காய் விளாங்காய் மாயமான புளியங்காய்
நாலான மாத்தையிலே நாவும் பல்லும் உணர்ந்திடுமாம்"

என ஒரோர் மாத அவத்தையும் விவரிக்கப் பட்டிருப்பதையும்,

"மூணான மாசத்திலே முத்துநிறம் மேனியானாள்
நாலான மாசத்திலே நாகப்பழம் மேனியானாள்
அஞ்சான மாசத்திலே அரைவயிறு பாலனானாள்"

---

111. 8017 - வன்னியராயன் கதை
296 - லக்ஷ்மியம்மன் தவநிலை - உ.த.நி.சு.
பொன்னிறத்தாள் கதை (தமிழ்மொழி மலையாள எழுத்திலமைந்தது)
போன்றவற்றில் ஒரோர் மாத கர்ப்ப அவத்தையும் விரிவாக இடம் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

எனப் பொன்னிறத்தாள் கதையில் அமைந்திருப் பதையும் சான்றாகக் காட்டலாம்.

ஏ. பத்து மாதம் நிறைந்து, பிரசவ வேதனை தோன்றி, மருத்துவச்சியை அழைத்ததும், அவள் வர இயலாததற்குப் பல காரணங்கள் கூறுதலும், ஒன்று முதல் பத்து பொன் வரை தருவோம் என அழைக்க வந்தவர் கூற, இறுதியில் நடந்து வர இயலாதே என, வண்டி வைத்து அவளை அழைத்துச் செல்லலுமாக அமையும் அமைப்பு நிலைகளை யும் பல கதைப்பாடல்களில்[112] மரபாகவே ஆண்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது.

ஏ. பிரசவம் முடிந்தபின் மருத்துகத்துக்குச் செய்த சிறப்பும், பிரசவம் பார்த்ததன் பின்னர் குழந்தை பெற்ற தாய்க்குத் தந்த மருந்து விவரங்கள் இடம் பெறலும் பல கதைப்பாடல்களில்[113] முக்கிய ஓர் அமைப்பாகவே இடம் பெறுகின்றது.

தாய்க்குத் தந்த மருந்து விபரங்களை இராமாயணக் கதை (இ.30), பொன்னிறத்தாள் கதை[114] போன்றவை சிறப்பாகத் தெரிவிக்கின்றன.

இவ்வாறு குழந்தைப்பேறு தொடர்பாய நிகழ்ச்சிகளைப் பல்வேறு அமைப்புகளோடு விரிவாகக் கூறுதற்கு மானுட வாழ்வில் குழந்தைப்பேறு பெற்றிருந்த சிறப்பிடமே காரணமாதல் வேண்டும். இதன் சிறப்புத் தன்மை

---

112. பொன்னிறத்தாள் கதை, லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.சு.) சிதம்பர நாடார் கதை போன்றவற்றை இவ்வமைப்புள்ளவற்றுக்குச் சான்றுகளாகக் காட்டலாம். லக்ஷ்மியம்மன் தவநிலையில் 1478 தொடங்கி 2575 வரை உள்ள வரிகளில் மருத்துக அழைப்பு விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சிதம்பர நாடார் கதையில் 655-725 வரிகளில் இவ்வமைப்பு விளக்கப் பெற்றுள்ளது.

113. 316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.), லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.சு.), பொன்னிறத்தாள் கதை.

114. ''காயம் முளகொடு கோட்டம் சுக்கு
திப்பிலி கடச்சரக் கெல்லாம்
கொடுத்தாரே தாயரர்க்கும்''

(வரி. 180-182)

கருதியே இதனைக் கதைப்பாடல்களில் மரபாகவே பின்பற்றி வந்தனர் எனக் கருதலாம்.

ஐ. ஒரு காரியத்துக்காகப் புறப்படும் பொழுது, சிலவகைச் சகுனங்கள் தோன்றினால் அக்காரியம் வெற்றியாக முடியும் என்றும், வேறு சிலவகைச் சகுனங்கள் தோன்றினால் தீங்கு விளையும் என்றும் நம்பிக்கை இருந்திருக்கின்றது. இதனால் கதைப்பாடலைப் பாடிக் கொண்டே வரும்பொழுது, நற்சகுனங்களைப் பாடினால் கதையில், செல்பவர் நினைத்துச் செல்கின்ற காரியம் தடையின்றி நல்லபடியாக முடியும் என்பதும், தீய சகுனங்களைப் பாட, செல்பவரின் உயிருக்குத் தீமை நிகழும் என்பதும் கதை கேட்பவர்க்குப் பின்னால் நடக்கப் போகும் கதை நிகழ்ச்சி முன்பே தெரிவிக்கப்பட்டு, அது அவ்விதமே நிகழப் போகிறதா? இல்லையா? என்ற ஆவலுணர்வைத் தூண்டவும் இவ்வமைப்பு ஒரு மரபாகவே பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

ஒ. நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் பெரும் பாலானவையும் சோக முடிவைக் கொண்டவை. மண்ணில் வாழ்ந்த மானுடர்கள் தம் வாழ்க்கையில் பிறர் சந்தித்திராத துயரத்தை அனுபவித்து,பிறர் வாழ்வினின்றும் மாறுபட்ட வகையில் மரணமுற்றமையாலும் கதைப்பாடல்களாகப் பாடப்படுவனவாகும். மரணமுறுதலில்,

1. வெட்டுதலால் மரணமடைதல்[115]

2. நாவைப் பிடித்திழுத்து மரணம் தழுவல்

என்ற இரு முறைகள் சிறப்பாகப் பல கதைப்பாடல் களில் கூறப்பட்டுள்ளன.

---

115. 8440 - தடிவீரசுவாமி கதை
8425-b-குருக்களாஞ்சி கதை
11613 - சின்னத்தம்பி கதை
8017 - வன்னியராயன் கதை
8018 - முத்துப்பட்டன் கதை

கதை நாயகர்கள் இறந்தது கேட்டதும், அவரைச் சார்ந்துள்ளவர்கள் நாவைப் பிடித்திழுத்து மரணமடைந்தனர் என அமைப்பதைப் பல கதைப்பாடல்களிலும் காண முடிவதால், இவ்வாறு மரணமுற்றனர் எனப் பாடுவதையும் ஒரு மரபாகவே ஆண்டனரோ என்ற ஐயம் எழுகின்றது.

8018 - முத்துப்பட்டன் கதை என்ற சுவடியில் முத்துப்பட்டன், கள்ளனொருவனால் கபடமாகக் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டு, அவன் பிணம் தேடிச் சென்று மேல் விழுந்து அழுத, பொம்மக்கா, திம்மக்கா என்ற இருவரும் நாவில் சீலை சுத்தி இறந்ததாகவும், வந்து கண்ட அவர்கள் தகப்பனாரும் இவ்விதமாகவே மரணத்தைத் தழுவியதாகவும் அமைகிறது. இதே அமைப்பு பல கதைப்பாடல்களிலும்[116] ஒரு மரபாகவே பின்பற்றப்பட்டுள்ளது.

1. கதைப்பாடல்கள் சமூகத்தில் நடந்த வரலாறுகளைக் குறிப்பிட்ட காலத்தின் பின்னர், பலர் வாய்மொழியாகக் கேட்டதை வைத்தும் பாடப்படுவதாதலின், எவ்வாறு மரணமுற்றனர் என்பதை நேரில் கண்டு பாடுவதில்லை ஆதலின், ஏதேனும் ஒரு புகழ்பெற்ற கதைப்பாடலில் கதைநாயகர் இறந்தது கேட்ட துணைமாந்தர், நாவில் சீலை சுத்தி மரணமுற்றனர் என்று பாடப்பட, அதுபோலவே தொடர்ந்து பல கதைப்பாடல்களிலும் பாடப்பட்டு மரபாகவே ஆகியிருத்தல் கூடும்.
2. உற்றவர் மரணமுற்றார் என்று கேள்விப்பட்டதும், அத்துயர் தாளாது தாமும் உயிர்விட்டு விடவேண்டும் என்ற எண்ணம் கொள்பவர், தற்கொலை செய்வதற்கு நாவைப் பிடித்திழுத்து, அல்லது நாவில் சீலை சுத்தி

---

116. 8440 - தடிவீரசுவாமி கதை என்ற சுவடியில் கதை நாயகனாகிய மந்திரமூர்த்தி வெட்டுண்டதும், சாதிப்பிள்ளை என்ற அவனது மனைவியும், சோணைமுத்து என்ற அவன் காதலியும் நாவில் சீலை சுத்தி மரணமுற்றதாகவும், 8017 - வன்னியராயன் கதை என்ற சுவடியில் வன்னியராயன் மடிய, செய்தியறிந்த அவன் தாய் பொறுக்காது, நாவிலே சீலை சுத்தி நல்லுயிரை மாய்த்துக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

மரணம் தழுவல் சமுதாயத்தில் பெருவழக்காக இருந்திருக்கலாம். எனவே இவ்விதமாகத் தற்கொலை செய்து கொண்டதாய் அமைத்துப் பாடும் மரபு வளர்ந்திருக்கலாம்.

ஓ. மரணமடைந்தவரை உற்றார் கண்டறிந்து புலம்பித் தவித்து ஒப்பாரி வைத்து அழுதலும், கதைப்பாடலில் ஒரு மரபாகவே பின்பற்றப்பட்டுள்ளது.

1. உற்றவர் அகால மரணமுறும்போது புலம்பிப் பலவும் கூறி அழுதல் மனித இன இயல்பு என்ற நடப்பியல் உண்மையின் அடிப்படையிலும்,

2. இலக்கியத்துள் இடம்பெறும் ஒன்பான் சுவையுள் மனித மனத்தை விரைவில் கவர்ந்து ஈர்ப்பது அவலச் சுவையே ஆதலின், கதைப்பாடல்களில் அவல முடிவு தோன்றும் இறுதிப் பாகங்களில் இவற்றின் அழுத்தம் ஆழமாகவே விழுந்துள்ளது என்றும் கொள்ள வேண்டியுள்ளது.

3. நாட்டுப்புற மக்கள் வாழ்வின் அவல நிகழ்ச்சிகளுக்கு அடிப்படை அங்கமாகத் திகழும் ஒப்பாரி, நாட்டுப்புற இலக்கியத்தின் தனி ஒரு அமைப்பாகவும் இடம் பெற்று, நாட்டுப்புறக் கதைப்பாடல்களிலும் தவறாது அமையும் ஓர் அமைப்பாகி, மரபாகவே நிலைத்தும் போயிருத்தல் வேண்டும்.

ஔ. அகால மரணடைந்தோர் ஆவியாக வந்து, மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கியதாக அமையும் ஓர் அமைப்பும் பல கதைப் பாடல்களிலும் மரபாகவே பின்பற்றப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

1. நியாயமற்ற முறையில் கொல்லப்பட்டால் கொலை செய்தவர்களைக் கொல்லப்பட்வர்கள் உறுதியாகப் பழிவாங்குவர் என்ற எண்ணம் சமுதாயத்தில் வேரூன்றி இருந்திருக்கிறது. இது மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த மரபாதல் வேண்டும்.

இறந்தவர்கள் ஆவியாக வந்து பழி வாங்குவர் என்பதில் ஆழமான நம்பிக்கை இருந்திருக்கின்றது.[117]

சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்களிலேயே பெரும் பான்மையாக, இடம்பெறும் இவ்வமைப்பு மரண முற்றோரைத் தெய்வமாக வணங்கி, அவர்கள் சினத்தைத் தவிர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு முன் அடையாளமாகத் திகழ்கிறது எனலாம். பழிவாங்கல் கொண்டே மரணமுற்றோரின் கோபத்தை அடையாளம் காண்கின்றனர் மக்கள். அச்சினம் தீர்க்குமாறே தெய்வமாக்கி வழிபாடு செய்கின்றனர்.

> "ஆதாளி போடலுற்றான் அடாதுடி பண்ணலுற்றான்
> கருசக்குளம் ஊரையெல்லாம் கட்டழகன் வன்னியராயன்
> மாட்டெலும்பு தேங்காமட்டை வாரி கல்லாலே யெறியுதய்யா
> தீயை வந்து கொளுத்துதய்யா திருதூளி பண்ணுதய்யா
> போற பேரை வாரபேரை புடதியடி யடிக்குதய்யா
> நேரமறியாமல் வாரபேரை நெஞ்சடியா யடிக்குதய்யா
> பாலிகளை சூலிகளை பச்சைப்பிள்ளைத் தாச்சிகளைக்
> கொன்று குலை யிருக்குதய்யா குடிகெடுத்த வன்னியராயன்"[118]

என அமையும் பழி வாங்கும் முறைகளைக் காண்கிறோம்.

க. மரணமுற்றவர்கள் இறைவனருளால் உயிர் பெற்றெழுவதும், தெய்வமாவதற்கு வரம் பெறலாகக் காட்டப்பெறலும் கதைப்பாடல் மரபாகப் பின்பற்றப் பட்டுள்ளது.

---

117. வெள்ளைக்காரன் கதை (உ.த.நி.சு.)
8425-b - குருக்களாஞ்சி கதை
8440 - தடிவீரசுவாமி கதை
11613 - சின்னத்தம்பி கதை
8017 - வன்னியராயன் கதை
8018 - முத்துப்பட்டன் கதை
316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.)

போன்ற கதைப்பாடல்களில், மரணத்தின் பின்னர் வந்து பழிவாங்கிய அமைப்புகள் இடம் பெற்றுள்ளன.

118. 8017 - வன்னியராயன் கதை, இ.ம.31.

1. இது மரித்தலும், உயிர்த்தெழுதலும், தெய்வப்பிறவி என ஏற்றுக்கொள்ளப்பட்டு வணங்கப்பெறலுமாக உள்ள, இயேசு தொடர்பான செயல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது. நாட்டுக்கு நாடு மக்களுடைய எண்ணங்கள் ஒரே மாதிரியாகவே இருந்துள்ளமை நினைவுகூரத் தக்கது. எனவே இவ்வாறான முடிவு தருதல் காலப் பழமை வாய்ந்தது என்பதும் புலப்படுகின்றது.

2. சிறந்த கதை நாயகர்களாகத் திகழ்பவர்கள் இன்ன விதமாகக் கொடூர மரணமுற்று மடிந்தார்கள் எனக் கூறுவதோடு கதையை முடித்துவிட்டால், கதை கேட்பவர்களுக்கு அவலச் சுவையே எஞ்சித் துயரே மிஞ்சும் என்பதானும்,

3. "எவ்வாறு வாழ்ந்தாலும் அவர்களைப் போல் அவல மரணம் மட்டும்தானே" என்ற எண்ணம் தோன்றி வாழ்க்கையில் பிடிப்பில்லாது போய்விடும் என்பதானும்,

4. "எந்த ஒன்றையும் அமங்கலமாக முடித்தல் கூடாது, மங்கலமாகவே முடித்தல் வேண்டும்" என்ற தமிழரின் "முடித்தல் கொள்கை" அடிப்படையிலும் இறந்த கதை மாந்தர் வரம்பெற்றுத் தெய்வங்களாயினர் எனக்கூறி முடித்தனர் எனலாம்.

   மேலும் இத்தகு கதைப்பாக்களில் பலவும் கோயில் விழாக்களில் பாடப்படுவன ஆதலால், அமங்கலமாக முடிப்பதை விட்டு மங்கலமாக முடிவு தந்து பாட இவ்வமைப்பை மேற்கொண்டனர் என்றும் கொள்ளலாம்.

5. கதைமாந்தர் தம் வாழ்வில் செய்த சிறப்புறு செயலாலும், தியாகத்தாலும் உயர்த்தப்பட்டு, அத்தகையார் கொடிய முறையில் மரணமுற்றார் எனும்போது, மக்களின் நன்மதிப்பைப் பெற்று, அன்னார் தெய்வமாகவே வணங்கப் பெறலுமுண்டு. இத்தகு நடப்பியல் உண்மை கொண்டும் கதைப்பாடல்களில் 'தெய்வமானார்' என மங்கல முடிவு நல்கினர் எனலாம்.

8017 - வன்னியராயன் கதை என்ற சுவடியில் வன்னியராயன் வெட்டுப்பட, அவன் அடாதுடி செய்து பழிவாங்க, மக்கள் கோடங்கியிடம் குறி கேட்க, நடக்கும் அடாதுடிச் செயல்களுக்கு வன்னியராயனே காரணம் என விளக்கி, அவனுக்கு,

> ''நிலையம்போட்டுப் பூடமிட்டு நீதியுடன் குடைகொடுத்தால்
> அல்லறை சில்லறை விலகுமய்யா அடாதுடி நீங்கு மய்யா''

எனக் கோடாங்கி கூற, உடனே மக்கள் அவனைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டு,

> ''நிலையம் போட்டுக் குடைகொடுத்தார் நீதியுள்ள
> வன்னியராயனுக்கு''
> (இ.33)

என இவ்வாறு அமைகின்றது. மரணமுற்றார் பழிவாங்கற் பொருட்டு மக்களைப் பலிகொள்ள, மக்கள் உயிருக்கு அஞ்சி, அன்னாரையே தெய்வமாக ஏற்றுக் கொண்டு வணங்கலாக அமைகின்றது. இத்தகு முறையில் தெய்வமாவோர் தம்மை வணங்குவோரைக் காத்தும், வணங்காதோரை அழித்தும் விடுவதாக மக்கள் பெரு நம்பிக்கை கொண்டு அச்சுறுத்தும் தெய்வமாக்கியும், காவல் தெய்வமாக்கியும் வணங்குகின்றனர்.

அகால மரணமுற்ற சமூக, வரலாற்றுக் கதை மாந்தர் அனைவரையுமே இவ்விதமாக, அச்சுறுத்தும் காவல் தெய்வ அமைப்புகளாகக் கொண்டு வணங்கி வருதலாகக் கதைப்பாடல்களை முடிக்கக் காணலாம்.

முடிபுகள்

1. இன்ன புற அமைப்பிலேயே (Out sketch) கதைப் பாடல் களைப் பாட வேண்டும் என்ற ஒரு நிலை உருவாகி யிருக்க, அதனை ஒட்டிப் பாடி வந்திருக்கின்றனர். பின் அதனைக் கதைப்பாடல் மரபாகப் பேணியிருக்கின்றனர்.
2. மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஒரு கதைப் பாடலின் அமைப்பை, அதன் செல்வாக்கு, தரம், சீரான அமைப்பு நிலை போன்றவற்றாலும், அதனைப் பாடிய ஆசிரியரின் புகழ் அல்லது அவர் குருவாக இருந்தால்

அவருக்குப் புகழும், மதிப்பும் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் போன்றவற்றாலும், குறிப்பிட்ட அக்கதைப் பாடலின் அமைப்பைப் பின்னால் பெருவாரியான கதைப்பாடல்களிலும் பின்பற்ற, அதுவே பின் கதைப்பாடல் மரபாக நிலைத்துப் போயிருத்தல் வேண்டும்.

3. கதைப்பாடல்களுக்கென்று அமைந்து விட்ட மரபுகள், மரபுகளாக மேற்கொள்ளப்படற்கு அடிப்படையாகப் பல காரணங்கள் இருத்தல் வேண்டும்.

4. கதை நாயகர்கள் வாழ்ந்து மரணமுற்ற பின்னரே அவர்கள் செய்த செயலாலும், நியாயமற்ற முறையில் அவர்கள் கொல்லப்பட்டதாலும் தாக்கமுற்று அவர்களைப் பற்றிய கதைகள் பாடலாகப் புனையப் படுகின்றன. இதனால் கதை நாயகர்களின் பிறப்பு, வளர்ப்பு போன்ற குழவிப் பருவ நிகழ்ச்சிகள் முழுவதையும் கற்பனை செய்தே பாடவேண்டி யுள்ளது. இப்பகுதிகளில் கதைப்பாடல் மரபின் வீச்சு மிகுமைக்குப் முழுக்க முழுக்கக் கற்பித்துப் பாட வேண்டிய இத்தேவையே காரணம் எனலாம்.

அனைத்துக் கதைப்பாடலிலும் அவ்வக் கதை நாயகர்களின் பிறப்பு வளர்ப்புகளும் கற்பித்தே பாடப்படலால், ஏதாவது ஒரு கதைப்பாடலில் பாடிய அமைப்பை, பிற கதைப்பாடல்களும் பின்பற்ற, 'குழவிப் பருவ நிகழ்ச்சிகளை இவ்விதமே பாடுதல்' என்ற மரபு நிலை உருவாகியிருக்க வேண்டும்.

5. பிறப்பு வளர்ப்புப் பகுதியில் மட்டுமின்றி, கதைப்பாடல் களின் பிற பகுதிகளிலும் பரந்துபட்ட அளவில், கதைப் பாடல் மரபுகள் ஆளப்பட்டு ஒரேவிதமான அமைப்பு முறைளை மேற்கொண்டுள்ளதால், ஒரோர் கதைப்பாடல்தோறும் புதிய புதிய அமைப்பை எதிர்பார்க்கும் படிப்பாளர் நோக்கு சிதைக்கப்பட்டு, சலிப்பையும், வெறுமையையும் தோற்றுவிக்கின்றது.

6. நாட்டுப்புற இலக்கிய வகையுள் சிறப்பிடம் பெறும் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு

தனி இலக்கியமாக மலராது, அனைத்தும் ஒருபுற அமைப்புக்குள் அடங்கியனவாகக் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே இவ்வாறு கட்டுப்பட்டு நிற்பது கதைப்பாடல் ஆசிரியர்களின் கற்பனை வறட்சி யையும், புதிய அமைப்புகளைத் தோற்றுவிக்கும் ஆர்வமின்மையையும் புலப்படுத்துகின்றன.

7. இதற்குப் பெரும்பான்மையான கதைப்பாடல்களும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் எழுத்துருப் பெற்றமை காரணமாகலாம். அக்கால கட்டத்து மக்களின் மனவளக் குறைவை இவை தெளிவுறுத்துகின்றன. அடிமை மனங்களாதலின் வளமான கற்பனையும் புதியன படைக்கும் ஆர்வமும் குறைந்திருந்ததோ என்ற சிந்தனை எழுகின்றது.

8. அமைப்பொப்புமைக் கூறுகள், அல்லது மரபுகள் அல்லது கொள்கைகளின் ஆட்சி மிகுதியால் ஒரேவித அமைப்புடையனவாய்க் கதைப்பாடல்கள் திகழ்வதனால் சங்க இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள் என்றமையும் தமிழ் இலக்கிய வகைகளோடு ஒத்த வரிசையில் ஏற்றி வைக்க இயலா நிலையில் தனிப் பட்டே நிற்கின்றன எனலாம்.

9. கதைப்பாடல் மரபுகளாக உள்ள பல அமைப்புகள், பழைய இதிகாசங்கள், காவியங்களில் உள்ள கருத்து களை அடியொற்றியனவாக உள்ளதால், 16ஆம் நூற்றாண் டின் பின்னர் எழுத்துருப் பெற்றிருப்பினும், வாய்மொழி யாகவே பல காலமும் பாடப்பட்டு வந்தவை என்பதும், பழைய இலக்கிய அமைப்புகளைத் தம்முள் கொண்டவை என்பதும் புலனாகின்றது. கதைப்பாடல் களிலுள்ள,

குழவிப் பேற்றின் பெருமை பேசல்
குழந்தை குறிப்பிட வயது வரையே வாழுமென வரமருளல்
தானமளித்தலின் சிறப்பு இடம்பெறல்
கதைமாந்தர் வடபகுதியினின்றும் வந்ததாகக் கூறல்
குறி கேட்கும் அமைப்பு
மரணத்தின் பின் உயிர்பெற்றெழுதல்

போன்றவற்றைப் பழைய இதிகாச, காவியங்கள், புராணங்களிலுள்ள கருத்துகளை அடியொற்றிய அமைப்பு முறைகளுக்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

10. சமூகத்தில் குறிப்பிடத்தக்க முறையில் வாழ்ந்து அநீதமான முறையில் கொல்லப்பட்டோரின் வரலாறு, அரசியல் துறையில் தனிச்சிறப்பெய்தியவர்களின் வரலாறு, பிற இதிகாச, புராண, காவியக் கதை மாந்தர் களின் வரலாறு போன்றன, குறிப்பிட்ட அமைப்பு முறைக்குட்பட்டுக் கதைப்பாடல்களாகப் பாடப்பட்டு, அமைப்பொப்புமை காட்டுகின்றன. இவ்வாறு பெரும்பான்மையான கதைப்பாக்களும் ஒரேவித அமைப்புடையனவாக உள்ளமையின், ஒரோர் கதைப்பாடலிலும் புதுப்புது அமைப்பு முறைகளை எதிர்பார்ப்பவரின் நோக்குக்கொரு அமைதி கிட்டு வதில்லை என்றே கூறலாம்.

கதைப்பாடற் சுவடிகளில் கரு, நிகழ்ச்சி, பாத்திரப் படைப்பு, வரியொப்புமைக் கூறுகள்

கதைப்பாடல்கள் கதைப்பாடல் மரபுகள் அல்லது கொள்கைகள் என்ற பெயரில் ஒரேவித அமைப்புடன் பாடப்பட்டுள்ள தன்மையையும், புதுப்புது முறைகளை மேற்கொள்ளாததற்கான காரணங்கள் எவை என்பதும், இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பதும் முன் தலைப்பில் விளக்கப்பட்டன.

அமைப்பு முறையில் மட்டுமின்றி கரு, நிகழ்ச்சி, பாத்திரப்படைப்பு, பாடல்வரி போன்றவற்றிலும் எவ்விதம் ஒப்புமைக் கூறுகள் மிகுந்துள்ளன என்பது இத்தலைப் பின்கீழ் விவரிக்கப்படுகின்றது.

கதைப்பாடல்களில் கருவொப்புமைக் கூறுகள்

ஒரு கதைப்பாடலின் கரு வேறொரு கதைப்பாடல் அல்லது, வேறுசில கதைப்பாடல்களின் கருவுடன் ஒப்புமை கொண்டதாகத் திகழ்ந்து, கதைப்பாடல்களில் ஒப்புமைக் கூறுகள் மிகுமாறு செய்துள்ளன.

1. 8423 - ஆமையம்மானைக் கதை, நாட்டுப்புறக் கதை வடிவில் பாடப்பட்டு, வழக்கில் மிகுதியும் வழங்கி வந்திருக்கின்ற பஞ்சதந்திரக் கதை[119] களின் கருவுடன் ஒப்புமை உடையதாக அமைந்துள்ளது. விலங்கு, பறவை, பாம்பு போன்ற பிராணிகளின் செயல்களை அடிப்படை யாகக் கொண்டு பஞ்சதந்திரக் கதை திகழ்வது போல், ஆமையம்மானைக் கதையும் ஆமையின் செயல்களை

---

119. *4103*-b, *8818*, *7961*, *8809*, *8069* } பஞ்சதந்திரக் கதை

அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கைலாசத்தில் நாகமுனி புதல்வன் சிவ சாபத்தால் ஆமையாய்ப் பிறவி யெடுத்து இறுதியில் விமோசனம் அடைந்ததாகக் கதை முடிகிறது.

2. இராம, இலக்குவரின் உடன்பிறப்புப் பாசப் பிணைப்பைக் கருவாகக் கொண்டு, நாட்டுப்புறக் கதைப் பாடல் வடிவில் பாடப்பெற்ற இராமாயணக் கதைகள்[120] போன்றே, அண்ணன் தம்பியரிருவர் குசலவன் கதை[121]யில் படைக்கப்பட்டுப் பல செயல்களும் இராம-இலக்குவர் செய்தன போன்றே விவரிக்கப்பட்டுள்ளன.

சான்றாக இராம, இலக்குவர் கூனியின் முதுகில் உண்டை யடித்தது போல், பத்ரகாளி குடமெடுத்து எதிரில் வர, அவள் கூனில் உண்டை யடித்த அசலவன், குசலவன் செயல்களைக்[122] குறிப்பிடலாம்.

3. நாட்டுப்புறக் கதை வடிவில் வழங்கப்பட்டு வரும் விக்கிரமாதித்தன் கதையில் இடம்பெறும் பேசாமடந்தை கதைக் கருவைப்போல் 3928- தமிழறி மடந்தை கதைக் கருவும் அமைந்துள்ளது. பேசாமடந்தையின் செயல்கள் போல், தமிழறி மடந்தையின் செயல்களும் சித்தரிக்கப் பட்டுள்ளன.

சான்றாக, பேசாமடந்தை தானே நேரில் செல்லாது, முதலில் தன் தோழிப் பெண்ணை மணப்பெண் போல் அணி செய்து, விக்கிரமாதித்தனிடம் அனுப்பியதுபோல், தமிழறி மடந்தையும் தன் தோழியை ராசகுமாரத்திபோல் அணிசெய்து விறகுத் தலையனிடம் அனுப்பியதையும், வாயில் நிலைகள் ஒவ்வொன்றிலும் விக்கிரமாதித்தன் கதையில்போல் தந்திரப் புதுமைகள் அமைந்திருந்ததையும் குறிப்பிடலாம்.

---

120. 8434 - இராமாயணம் வில்லுப்பாட்டு
10289 - இராமாவதாரக் கதை
6320 - இராமாயண வாசகம்
121. 8419 - குசலவன் சரிதம்
8014 - குசலவன் கதை
122. இராமாயணக்கதை (நான்காம் பகுதி), சுவடிக்கு இன்னமும் எண் இடப்படவில்லை.

4. 7951 - புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை என்ற கதைப்பாடல், நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவில் பாடப்பெற்று வரும் நளன் கதைக்[123] கரு போன்று அமைந்துள்ளது.

கலியின் தொடர்ச்சியினால் மன்னவன் தன் நாடிழந்து, மனைவியோடு கானகம் ஏகி, அங்கு அவளைப் பிரிந்து, வெகுநாள் கழித்து கலி நீங்க, அவளோடும் பிள்ளை களோடும் இணைவதாக அமைந்துள்ள இக்கதை, நளன் கதைக் கருவை நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு கதைக் கருவே மற்றொரு கதைப்பாடலுடன் ஒப்புடையதாக உள்ளமையின், கதை அமைப்பு, அக்கதையில் உள்ள பிற பாத்திரங்கள், கதை நிகழ்ச்சிகள், தொடக்கம், முடிவு என்று அனைத்திலும் குறிப்பிட்ட தொடர்புடைய கதையின் நிழல் படிந்து விடுகின்றது. இவ்வாறு முழுக்கவுமே ஒரு கதைப்பாடலில் தன்மை போன்று மற்றொரு கதைப்பாடல் அமைந்து ஒப்புமை காட்டுவதையும் காண முடிகின்றது.

கதைப்பாடற் சுவடிகளில் நிகழ்ச்சி யொப்புமைக் கூறுகள்

ஒரு கதைப்பாடலில் கூறப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சி அப்படியே வேறு ஒரு கதைப்பாடலிலோ, அல்லது வேறு சில கதைப்பாடல்களிலோ அமைந்து, ஒன்றும், பலவுமாக உள்ள கதைப்பாடல்கள் தம்முள் நிகழ்ச்சியளவிலும் ஒப்புமை கொண்டனவாக உள்ளதைக் காண முடிகின்றது.

பொதுவாகப் பல கதைப்பாடல்களில் ஒரு தாய், தந்தைக்கு ஏழு குழந்தைகளில் இளைய பிள்ளையாகக் கதை நாயகியோ, அல்லது நாயகனோ பிறந்த நிகழ்ச்சி இடம் பெறலுண்டு.

---

123. *10434*, *10305*, *10294*, *9122*, *7956* } நளன் கதை

8425 - குருக்காளஞ்சி கதையில ராமசாஸ்திரியின் மனைவிக்கு ஏழு ஆண்மக்களும், எட்டாவதாகக் கதைத் தலைவியாய பூரணவல்லி என்ற ஒரு பெண் மகவும் பிறந்த நிகழ்ச்சி குறிக்கப்பட்டுள்ளது.

8440 - தடிவீரசுவாமி கதை என்பதிலும் செம்பாரக் குடும்பன் என்பவருக்கு ஏழு ஆண்பிள்ளைகளை அடுத்து, இளையவளாய்க் கதை நாயகியாக சோணைமுத்து என்ற ஒரு பெண் பிறந்த செய்தி கூறப்பட்டுள்ளது.[124]

8018 - முத்துப்பட்டன் கதை என்பதிலும் கதை நாயகனான ஆரிய முத்துப்பட்டன் ஏழு அண்ணன் தம்பி மாரில் இளையவனாகப் பிறந்த நிகழ்ச்சி குறிக்கப் பட்டுள்ளது.[125] பொன்னிறத்தாள் கதையிலும் 5 அண்ணன்மார்களை அடுத்து, பொன்னிறத்தாள் பிறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[126]

1. இவ்வாறு 7 அல்லது 5 பிள்ளைகளை அடுத்து ஒற்றைக்கொரு பெண்ணாய் அல்லது ஆணாய்க் கதை நாயகி அல்லது நாயகன் பிறந்தனர் எனக் கூறுவது அவர்களின் அருமையை விளக்குவதற்காக அமைக்கப் பட்ட நிகழ்ச்சியாதல் வேண்டும்.

2. ஏழு அல்லது ஐந்து, மங்கல எண்ணாகக் கருதப் பட்டதால் எழுவரை அல்லது ஏழாவதாக அல்லது ஐவரை அடுத்து நாயகன் அல்லது நாயகி பிறந்தனர் எனவும் கூறியிருக்கலாம்.

---

124. இ.ம.க. - ''செம்பாரக் குடும்பனுக்குத் திரமக்கள் ஏழு பேரும் ஏழுபேர்க்கும் இளையதங்கை இன்பமுள்ள சோணைமுத்து''.

125. இ.ம.1. - ''ஆறுபேருக் கிளையதம்பி ஆரியமுத்துப் பட்டனவன்''.

126. ''அஞ்சு ஆண்பாலரை ஈன்றெடுத்தாள்
மறந்த துணி எடுத்திடவே ஒரு பெண்பாலர்
இல்லாமல்'' வரி.13-14.
தவமேற்கொண்டு பொன்னிறத்தாளை ஈன்றெடுத்ததாய்க் கதை அமைகின்றது.

II தெய்வம் அந்தண வடிவில் வந்த நிகழ்ச்சி பல கதைப்பாடல்களில் காணப்படுகின்றது.

1. அந்தணர்களே கோயிற் பூசாரிகளாக இருந்தனர். தெய்வத்துக்குப் பூசை செய்யும் அவர்களைத் தெய்வத் தொடர்புடையவர்களாகவே மக்கள் மதித்திருக் கின்றனர். தெய்வம் அந்தண வடிவில் வந்ததெனக் கூறுவது இதனால் விளைந்த நிகழ்ச்சியாகலாம்.

2. இது நால்வருணப் பாகுபாட்டில் கல்வித்திறத்துக் குரியவர்களாக, கல்விமூலம் கிட்டும் தூய்மை, அறவொழுக்கம், நுண்ணறிவு போன்ற திறன் சான்றவர் களான அந்தணர்களைக் கடவுளாகவே கருதியதால் அமைந்த நிகழ்ச்சியுமாகும்.

3. ஆரியத் தொடர்பின் இடையீட்டாலும் இவ்வாறு தெய்வம் அந்தண வடிவெடுத்து வந்தது என்ற கருத்து புகுந்துமிருக்கலாம்.

8029 - வாணதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதையில் சுடலையாண்டி 5 வயது அந்தணச் சிறுவனாக பகவதி கோயிலில் வந்து நின்ற நிகழ்ச்சி விவரிக்கப் பட்டுள்ளது.

8425-a-நம்பிராயன் கதையில் பிள்ளை வேண்டி, நம்பி செய்த தவ மகிமை கண்ட வைகுண்டநாதர் அந்தண வடிவு கொண்டு வந்து,

''கம்பம்விட்டுக் கீழிறங்கிக் கனகமுடன் வாரும் பிள்ளாய்''

என அழைத்த நிகழ்ச்சி அமைந்துள்ளது.

இராமாயணக் கதையிலும் [127] அசலவனும் குசலவனும் வன வேட்டையாட, வேட்டையின் உக்ரம் கண்ட சிவன், 'இராமபிரானது பிள்ளைகள் இவர்' என உணர்ந்து, அயோத்திக்கு அந்தண வடிவு கொண்டு, சென்ற நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

---

127. கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்திலுள்ள இச் சுவடிக்கு இன்னும் எண் இடப்படவில்லை.

முத்தாரம்மன் விற்கவிதையிலும், திருமால் அந்தண வடிவுகொண்டு முப்புராதியர் நகர் வந்ததாய்க் குறிப்பிடப் பட்டுள்ளது.

III (அ) கதைத் தலைவியைப் பந்தடிக்கும்போது கதைத் தலைவன் கண்டு, மணம் செய்ய விழைந்த நிகழ்ச்சி பல கதைப்பாடல்களில் உள்ளது.

இது குற்றாலக் குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களில் அமைந்துள்ள வசந்தவல்லி பந்தடித்தல் போன்ற அமைப்புகளிலிருந்து உருவான நிகழ்ச்சியாதல் வேண்டும். அண்மைக்கால, சமகால இலக்கியத் தாக்கத்தால் வந்த விளைவு இது.

319 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.) என்ற சுவடியில் தோட்டுக்காரியைக் குமரப்பராசா பந்தடிக்கும்போது பார்த்து,

> ''பெண்ணழகி வடிவுகண்டு பேதலித்து மூச்செறிந்து
> தையலுட வடிவதையும் தானவரும் கண்டபோதே
> மையல்கொண்டு தடுமாறி மதிமயங்கி ஏதுசொல்வார்''[128]

என அமைவதைக் காண்கிறோம்.

இதேபோல் பொன்னிறத்தாள் கதையிலும் பொன்னிறத் தாள் தோழிமாருடன் பந்தடிக்கும்போது இணசூரன் கண்டு மையல் கொண்டதாய்க் கூறப்பட்டுள்ளது.[129]

ஆ. நாயகியைப் பாம்பு கடிக்க, சந்திப்பு நிகழ்ந்ததாக அமையும் நிகழ்ச்சிகளையும் காணமுடிகின்றது.

8423 - ஆமையம்மானைக் கதையில் நாயகியைப் பாம்பு கடித்திட அவளைக் கண்டு நாயகன்,

---

128. இ.ம.32

129. ''பொன்னிறத்தாள் தட்டும் பந்து
பலகாலும் மேல் பறக்கக்
கண்டாரே இணசூரன்
காரிழையாள் தன்வடிவை''

-வரி. 299 - 302

"ஏங்கிப்பெரு மூச்செறிந்து யிருகண்ணா லாரோடே
தாங்கிமடி மீதில்வைத்து தன்மார்போ டேசேத்து"[130]

விசந் தீர்த்தபின் மன்னன் மகளாய நாயகி, மயக்கந் தெளிந்து எங்கு, யாரருகில் இருக்கிறோம் எனப் பார்க்க,

"பொன்வடிவு போலிலங்கும் பூவையவள் தந்தனையும்
தன்மடியில் போட்டவனுந் தானிருக்கக் கண்டு"

அவன் அழகு கண்டு வியப்பெய்தியிருக்க, இருவரும் காதல் கொண்டதாக அமையும் நிலை விவரிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறே பாம்பு கடி விசந் தீர்த்ததன் மூலம், கதை நாயகன், நாயகிக்குக் காதல் பிறந்த நிகழ்ச்சி சிதம்பரநாடார் கதையிலும் [131] இடம்பெற்றுள்ளது.

IV கண்டு காதல் கொண்டபின், நாயகனானவன் நாயகி நினைவாக அன்னம், தண்ணீர் அருந்தாமல் கிடக்க, தாய், தந்தையர் விவரம் கேட்கக் கூறுவதாக உள்ள நிகழ்ச்சிகள் 319 - தோட்டுக்காரி கதை[132]. (உ.த.நி.சு.) பொன்னிறத் தாள் கதை[133] என்ற இரு கதைப்பாடல்களிலும் ஒன்றுபோல் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

---

130. இ.ம.32.

131. "அரவுவந்து தீண்டிவுயிர் அந்தரத்தே போனதுண்டு
அந்தரத்தே போனவுயிர் ஆர்மீட்டா ரென்றுசொல்லி
இட்டதலை தானுசத்தி ஏறிட்டுத் தான்பார்த்தாள்
பார்க்குமந்த வேளையிலே பகவானின் ஒளிபோலே
சந்திரனோ சூரியனோ தானவனோ வானவனோ
சுந்தரனோ இந்திரனோ காணஒண்ணா நாயகமோ
நம்மைவிசந் தீர்த்தவர்தான் நாடார்தா னென்றுசொல்லி
காதலினால் மதிமயங்கி கடுந்துயர மாயிருந்தாள்"
வரி. 1085 - 1092.

132. இ.33.

133. "பொன்கடயத் தூர்தனிலே பொன்மாரி பெற்றமகள்
பொன்னிறவும் அவள்நிறந்தான் தையலரைக் கண்டுவந்தேன்
கண்டுவந்த பொன்னிறத்தைக் கருதிமாலை இடவேணும்
ஆயிரம்பவன் செலவும் இட்டு அவளை மாலை இடவேணும்
மாலையிட்டுத் தராவிட்டால் மாதாவே சொல்லக் கேளு"
-வரி. 384 - 393.

V தண்ணீர் குடிக்கையில் கர்ப்பம் தரித்தலாக உள்ள நிகழ்ச்சியொப்புமையை முத்தாரம்மன் விற்கவிதை, சித்திரபுத்திரனார் கதைகளில் காண முடிகின்றது.

"முதி தாமரை இலைதனிலே முத்துப்போற் றண்ணீர் உருளக் கண்டார்
கண்டு தண்ணீர்மேல் ஆசைகொண்டு கையால் வாரியே தான் குடித்தார்
வண்டு குழலார்கள் திருவயிற்றில் மாயமாய்க் கெர்ப்பம் தரித்திடுமாம்"
-வரி. 1864 - 1866.

என முத்தாரம்மன் விற்கவிதையிலும்,

"தண்ணீர் குடிக்கையிலே தாமரைப் பூவிழுங்கி
உண்ணீ ருடன்வந்து உற்பவித்தா ருத்தமனார்
பூவாக வந்து தரித்தாரே புண்ணியரும்"[134]

என 4087 - சித்திரபுத்திர நயினார் கதையிலும் குறிப்பிடப் பட்டுள்ளன.

VI கதைநாயகனோ, நாயகியோ வேற்றூர் சென்றுவிட, உடன்பிறந்தோர் எழுவரும் அவரைத் தேடி வருவதும் அதற்குள் நாயக, நாயகி உறவுநிலை முற்றி, பிரித்தழைத்துச் செல்ல இயலா நிலை வளர்ந்திருக்கக் கதையில் சிக்கலை இறுக்கும் இத்தகு நிகழ்ச்சிகளை அமைத்திடலுண்டு. அண்ணன்மார் தேடி வரலாக அமையும் இந்நிகழ்ச்சிகள் 8018 - முத்துப்பட்டன் கதை, 8425-b- குருக்களாஞ்சி கதை போன்றவற்றில் இடம்பெற்றுள்ளன.

இவ்வித நிகழ்ச்சியிணைப்புகள், கதையமைப்பில் அண்ணன்மார் கடந்து வந்த ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறும் கதைப்பாடல் மரபுக்கு இயைந்ததாகவும் உள்ளமை கவனிக்கத் தக்கது.

VII மாலையைச் சுழற்றிவீச, அது கதை நாயகன் கழுத்தில் விழுவதாக அமையும் நிகழ்ச்சி 6305 - கோவலன் கதை,[135] 8423 - ஆமையன் கதை போன்றவற்றில் இடம்பெற்றுள்ளது.

---

134. இ.22.

135. யானை மீதேறி வந்து மாதவி மாலையைச் சுழற்றி வீசிப் போட, அது கோவலன் கழுத்தில் அமைந்ததாக இக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆமையன கதை நாயகியான ஏலங்குழலாள்,

"முக்கால் கழத்தி முதலோன் தனைத் தொழுது
எக்காலந் தானெனக்கு உடையவன் கழுத்தில்விழ
மாலையானே யென்னுடைய மாலைவிழ யென்றெறிந்தாள்"[136]

அது கதை நாயகனான ஆமையன் கழுத்தில் விழுந்த நிகழ்ச்சி விளக்கப்பட்டுள்ளது.

VIII சமுதாயத்தில் அன்றாடம் சாதாரணமாக நிகழும் நிகழ்ச்சியாக உள்ளவற்றைக் கதை நிகழ்ச்சியாக இணைத்திருக்க, இது ஒன்று, மற்றும் பல கதைப்பாடல்களில் அமைந்து ஒப்புமை காட்டுவனவாய் அமைந்திடலும் உண்டு.

8425-b- குருக்களாஞ்சி கதையில் கதை நாயகியாய பூரண வல்லியாச்சியை அவளது ஏழு தமையன்மாரும் தேடி வர: நீரருந்த கிணற்றருகே வருமிடத்தில் அவளைக் கண்டதாகக் கதை நிகழ்ச்சி அமைகிறது.

8018 - முத்துப்பட்டன் கதையில் முத்துப்பட்டன் கள்ளருடன் போரிட்டுக் களைத்து நீரருந்தும்போது மறைந் திருந்த ஒரு கள்ளன் அவனைக் குத்திய நிகழ்ச்சி அமைகிறது.

6305 - கோவலன் கதையில் வழிநடை வருத்தத்தால் தாகமுற்ற கோவலன் நீர்த்துறை நாடிச் செல்கையில் கோசிக மாணியைக் கண்டு கடிதம் பெற்று மாதவியின் உண்மை மனநிலையை உணர்ந்து 'தீதற்றவள்' எனக் கூறும் நிகழ்ச்சி அமைந்துள்ளது. பொதுவாக இவ்வாறு கதைப்பாடல்களில் தாகமுற்று நீரருந்தலாக அமையும் நிகழ்ச்சிகள் கதையில் திருப்புமுனைக்குரிய விளைவுகளைத் தரும் நிகழ்ச்சிகளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றமை புலனாகின்றது.

IX தாகமுறலால் தாம்பூலம் தரித்து, தண்ணீர்த் தாகத்தைத் தணித்துக் கொள்ளும் நிகழ்ச்சியும் பல கதைப்பாடல்களில் இடம்பெற்று ஒப்புமை காட்டுகின்றன.

---

136. இ.19.

பொன்னிறத்தாளைப் பலிகொடுப்பதற்கெனக் கள்ளர் அழைத்துச் செல்ல, தாகத்தால் வருத்தமுற்று அவள் வெற்றிலை வேண்டிக் கள்ளரிடம் கெஞ்சும் நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளது.[137].

8019 - இசக்கி கதையிலும் செட்டியாரிடம் நீலி,

"சுண்ணாம்பு தாரீகாண் இன்னேரமே வெயிலில் சுடுமணல் தன்னில்
காடுஞ்செடியும் புண்ணா உளையுது தண்ணீர் தவிக்குது
பூத்தான வாய்க்கொரு பாக்கிலை தின்ன
சுண்ணாம்பு தாரீகாண் செட்டியாரே"

என அமைகின்றது.

X நாயகன், நாயகி சேர்ந்திருக்கும்போது தாம்பூல மிட்டுக் களித்த நிகழ்ச்சி பல கதைப்பாடல்களில் காட்டப் பட்டுள்ளது.

8423 - ஆமையம்மானைக் கதை, இசக்கி அல்லது நீலி கதை[138]

சிதம்பர நாடார் கதைகளில் இந்நிகழ்ச்சி சுட்டப்பட்டுள்ளது.

"பூச்சொரியுங் கொன்றைமின்னாள் பொற்கொடியாள் தன்னோடே
வாய்ச்சரசஞ் சொல்லியவர் மகிழ்ந்து விளையாடி
அத்தலத்தில் நன்றாய் அவர்களிரு பேரும்
வெத்திலையுந் தின்றவர்கள் வெளிப்புறத்தி லெச்சி துப்பி"[139]

என ஆமையன் கதையிலும்,

---

137. "அந்தமலை தான்கடந்து அப்புறத்துச் செல்கையிலே
அந்நேரமும் பொன்னிறமும் ஆதரவாய் ஏதுசொல்வாள்
நாவுலந்து போகுதண்ணே வெத்திலைதான் தருவீரோ".

138. மலையாள எழுத்து, தமிழ்மொழியிலாய சுவடி.
" இருண்டகள்ளி நிழல்தனிலே இருந்தார்போய் இருபேரும்
மணல்மீதே போயிருந்து விடையமிட்டும் விளையாடி
விடையமிட்டும் விளையாடி வெற்றிலைபார்க்கும் தான்
கொடுத்தான்"
-வரி.161-163

139. இ.20

"இருபேரு மாகவங்கே யிருந்துகொஞ்சி விளையாடி
சந்தோசமாய் விளையாடி தாம்பூலமுந் தான்றரித்து
கூண்டநல்ல தரையைவிட்டுக் கூறுடனே மடத்தில்வந்தார்"
-வரி.1104-1106.

எனச் சிதம்பர நாடார் கதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

XI நாயகனுக்கு நாயகி ஏழு அடுக்கில் சாதங் கறி கொண்டு சென்றதாக அமையும் நிகழ்ச்சி பல கதைப் பாடல்களில் காட்டப்படுகின்றது.

8018 - முத்துப்பட்டன் கதையில், முத்துப்பட்டன் கிடைக்குச் செல்ல, மனைவியாய பொம்மக்கா, திம்மக்கா என்பவர்கள் ஏழடுக்கில் சாதங்கறி கொண்டு செல்ல எழுந்த நிகழ்ச்சி விளக்கப்பட்டுள்ளது.

"ஏழடுக்குச் சாதங்கறி எடுத்தாளே பொம்மக்காளும்
ஆட்டுக்கறி கோழிக்கறி அழகான பன்றிக்கறி
குப்பியிலே சாராயமும் குடுவையிலே தென்னங் கள்ளும்"[140]

என விவரிக்கப்பட்டுள்ளது.

8440 - தடிவீரசுவாமி கதையிலும், கதை நாயகனாய மந்திரமூர்த்தியைக் காணச் செல்லும் சோணைமுத்தும் இவ்வாறே ஏழடுக்கில் சோறு, கறி எடுத்துச் செல்லும் நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது.

XII கதைநாயகர் பட்டு வீழ்ந்ததும், உற்றவர்கள் தேடிவரும்போது மாடு, ஆடு மேய்க்கும் சிறுவர்களிடம் விசாரிப்பதாகவும், கழுகு போன்றன சுற்றல் கண்டு பிணமிருக்குமிடம் தேர்வதாகவும் உள்ள நிகழ்ச்சி, பல கதைப்பாடல்களிலும் அமைந்து நிகழ்ச்சி யொப்புமை காட்டுவனவாய்த் திகழ்கின்றன.

முத்துப்பட்டன் கதையிலும், பொன்னிறத்தாள் கதை[141] கோவலன் கதை போன்றவற்றிலும் இத்தகு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

---

140. இ.ம.*31.*

141. *"ஆயிழையாள் பொன்னிறத்தை அந்த ஊரெல்லாம் தேடுவாராம்*
ஊரெல்லாம் தேடியல்லோ சுனைக்கருகே தேடுவாராம்
தேடி ஒருவிடையும் காணாமல் திகைத்துநிற்கும் வேளையிலே
காட்டாளம்மன் கோயிலிலே ஒருகழுகு நின்று ஆயக்கண்டார்"
-வரி.905-908.

XIII கதை நாயகரின் உயிர் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருத்தலாகவும், அந்த இடத்தை அறிந்தவரே அவரை வீழ்த்த இயலும் என்பதும் கூறப்பட்டு, எதிராளி அதனை அறிந்து வீழ்த்தும் நிகழ்ச்சி இடம்பெறலுண்டு. இது கதை நாயகருக்குச் சிறப்பு நல்கித் தனித்தன்மையை உயர்த்து வதற்காக இணைத்த நிகழ்ச்சியாதல் வேண்டும். அத்துடன் எதிராளி அவ்விடத்தை அறிந்து நாயகரை வீழ்த்துவாரோ என்ற எதிர்பார்ப்பைக் கதை கேட்கும் மக்களிடம் தூண்டுவதற்கும் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மயில்ராவணன் கதை (சுவடி எண் இடப்படவில்லை), 8440 - மந்திரமூர்த்தி அல்லது தடிவீரசுவாமி கதை போன்றவற்றிலுள்ள இத்தகு நிகழ்ச்சிகளைச் சான்றுகளாகக் காட்டலாம். மயில்ராவணன் கதையில் அவன் உயிர் 5 குகை யினுள்ளிலுள்ள வண்டுகளிடம் உள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. இராமாயணக் கதையில் (சுவடி எண் இடப்பட வில்லை) சூர்ப்பணகையின் கணவன் உயிர்நிலையை அவன் தோழன் விக்கிரமசிங்கன் கூறுவதாக அமையும் 'பன்னிரு வருடத்து செந்தாள் வைக்கோலால் சிரசை 3 தரம் சுத்தினால் மரணம் சம்பவிக்கும்' என்ற கூற்றாலும் உயிர்குறிப்பிட்ட முறையால் நீங்கும் முறை அமைக்கப் பட்டுள்ளமை தெரியவருகின்றது.

XIV இராசாவும் மந்திரியும் வேட்டையாடச் செல்வதும், களைப்பால் நீரருந்த வருமிடத்து, நீர்த்துறை அருகிலுள்ள ஒரு கல்லில் சில வாசகங்கள் கண்டு வாசிப்பதாகவும், பின் கதை தொடர்வதாகவும் அமையும். கதை முன்நிகழ்ச்சியாகக் கல்வெட்டு வாசிப்பது தொடங்கும். இத்தகு நிகழ்ச்சியமைப புகளை உச்சினி மாகாளி கதை[142] (உ.த.நி.சு.), 6717 - வீரகுமாரன் கதை போன்றவற்றில் காண முடிகின்றது.

---

142. ''எனக்கு ஒரு கோயில்கட்டி இன்பமுடன் பூசைசெய்தால்
விக்ரமாதித்த மன்னவனும் வீரன்பட்டி மந்திரியும்
இரண்டாயிர வருஷமட்டும் நாடாள வரம் தருவேன் - என்று
ஏழாம்படிக் கல்லதிலே எழுதியுள்ள வாசகத்தை
சந்தோசமாய் ஓடிவந்து தானுரைத்தான் மன்னவர்க்கு''

வீரகுமாரன் கதையில் கல்லில் இராசாவும், மந்திரியும் ''மந்திரி பேச்சைக் கேட்கும் ராசா நசிப்பான்'' என எழுதியிருப்பதை வாசிக்க, மந்திரி தன் உயிருக்குப் பயந்து, 'தற்கொல்லியை முற்கொல்லி' என்பதன்படி, இராசாவை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிக் கல் கொண்டு மூடி, நாடு திரும்பித் தானே இராசாவாக முடி சூட்டிக்கொண்டு ஆள்வதாகக் கதை தொடர்கின்றது.

XV பாதித் தூக்கத்தில் எதிரியைக் கைப்பற்றுவதாக அமையும் நிகழ்ச்சியைக் கட்டபொம்மன் கதை, 8440 - தடிவீரசுவாமி கதை போன்றவற்றில் காணமுடிகின்றது.

மந்திரமூர்த்தி, மனைவி சாதிப்பிள்ளையை இடப் புறமும், காதலி சோணைமுத்துவை வலதுபுறமாகவும் வைத்துத் துயில்கின்றபோது, செந்நெல் கசக்கித் திருடிச் சுமந்துகொண்டு வந்த கொண்டையன் கோட்டை மறவர் மந்திரமூர்த்தி வீட்டில் விளக்கொளி கண்டு பகைவருக்குக் காட்டிக்கொடுக்க, அவர் மந்திரமூர்த்தியைத் தூக்கத்தில் வந்து கைப்பற்றி வெட்டிக் கொல்வதாக அமைந்துள்ளது.

XVII விலங்குகள், பறவைகள் போன்றன தமக்குத் துயர் செய்தாரைத் தந்திரமாகப் பழிதீர்த்தலாக அமையும் நிகழ்ச்சியைப் பஞ்ச தந்திரக் கதை, 6305 - கோவலன் கதை போன்றவற்றில் காண முடிகின்றது. பஞ்ச தந்திரக் கதையில் காகம் தன் முட்டையைக் குடித்த நாகத்தைக் கொல்ல, பாம்புப் புற்றில் இராசகுமாரியின் நகையைப் போட்ட நிகழ்ச்சியோடு, கோவலன் கதையிலுள்ள தட்டானின் மகள் வில்லுருண்டையால் குஞ்சினைக் கொன்றதால் பழிவாங்க, தட்டான் உலரவைத்த சிலம்பை எடுத்து ஒளித்து வைத்த கருடன் செயல் ஒப்புமை உடையதாகிறது.

XVII சமுதாயத்தில் பழக்கவழக்கங்களாக உள்ளவற்றைக் கதைப்பாடல்களில் அமையும் நிகழ்ச்சிகளாக விவரிக்க, ஒப்புமைத் தன்மை உடைய நிகழ்ச்சிகளாக அவை அமைதலும் உண்டு.

1. தக்க ஆயுத்தங்களோடு பயணம் புறப்படல்

ஊர்விட்டு ஊர் தூரப் பயணம் செய்யும்போது, பயணத்துக்கு வேண்டிய தக்க ஏற்பாடுகளுடன் பயணம் புறப்பட்ட முறை, பல கதைப்பாடல்களில்[143]. விவரிக்கப் பட்டுள்ளது.

"சுண்டுவில்லும் உண்டையுடன் சூர்வாள் தானெடுத்து
கைவாங்கி வழுத்தாடு கட்டாரி தானெடுத்து
எறியீட்டி வல்லையமும் இதமுடனே தானெடுத்து
கொடையங்கட்டி வல்லையமும் குறட்டுக்கம்பும் தானெடுத்து
பாய்ச்சநல்ல கயிறெடுத்துப் பதிவாகச் சின்னத்தம்பி
கரிநாயும் செந்நாயும் கருத்துடனே தான்பிடித்து"[144]

பயணம் புறப்பட்ட நிகழ்ச்சி சின்னத்தம்பி கதையிலும்,

"காலில் ஒத்தடிச் செருப்புந் தொட்டுக்கையில் பிடித்தானே குறட்டுக்கம்பை
கட்டமுது பலகாரமும் கன்னக்கோலும் எடுத்துக்கொண்டு
பெண்மயக்கந் தன்னாலே பிறப்பட்டானே வன்னிராயன்"[145]

என வன்னிராயனின் புறப்பாடும் விவரிக்கப்பட்டுள்ளது.

2. அணியும் ஆடைகளில் மந்திர உருக்கள்

பயணம் புறப்படும்பொழுது அணிந்து செல்லும் உடைகளில் மந்திர எழுத்துகள் வரைந்து செல்லல், சமுதாய நம்பிக்கையாய்த் திகழ்ந்திருக்கின்றது. இது பயணம் பற்றிக் கூறும் கதைப்பாடல்களில் ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாய் இடம் பெற்று நிகழ்ச்சி யொப்புமை காட்டுகின்றது.

8018 - முத்துப்பட்டன் கதையில்,

"முன்னேநின்ற தொங்கலிலே மோககன்னி அச்சரமும்
பின்னிருந்த தொங்கலிலே பிரமதேவர் அச்சரமும்
பூச்சிநாயுங் கைப்பிடித்து புறப்பட்டானே பட்டருமே"[146]

---

143. *11613* - சின்னத்தம்பி கதை
8017 - வன்னியபராயன் கதை.
8019 - இசக்கி அல்லது நீலி கதை.

144. இ.*19*.

145. இ.ம:*19*.

146. இ. *18*.

என முத்துப்பட்டன் மந்திர எழுத்துகளிட்ட ஆடை அணிந்து சென்றமையும்,

"முன்புறத்துச் சங்கிலிலே மூர்த்தியுட அட்சரமாம்
பின்புறத்துச் சங்கிலிலே பெருமாளுட அட்சரமாம்
இடதுபுறத்துச் சங்கிலிலே எமனுட அட்சரமாம்
வலதுபுறத்துச் சங்கிலிலே மாயனுட அட்சரமாம்"[147]

எனச் சின்னத்தம்பி கதையில் சின்னத்தம்பி பயணம் புறப்பட்டபோது அணிந்த ஆடையிலிருந்த மந்திர எழுத்துகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

3. பூப்பெய்துதல், மண விபரங்கள் இடம் பெறல்

பெண்டிர் வாழ்க்கையில் இடம் பெறும் பூப்பெய்துதல், மண நிகழ்ச்சிகள் பல கதைப்பாடல்களில் அமையும் நிகழ்ச்சிகளாகின்றன.

3216 - மதுரைவீரன் கதை, *8440* - தடிவீரசுவாமி கதைகளில் பூப்பெய்திய நிகழ்ச்சியும், சடங்கு முறைகளும், *8423* - ஆமையம்மானைக் கதை, (இ.*43-44*), *11613* - சின்னத்தம்பி கதை, *8019* - முத்துப்பட்டன் கதைகளில் மண முறைகளும் இடம்பெற்று நிகழ்ச்சி யொப்புமை காட்டுகின்றன.

4. மறவர் திருட்டு

போர்த் தொழில் செய்தும், பகைவரிடமிருந்து நாட்டைக் காக்கும் காவற்றொழிலைச் செய்தும் வந்த மறவர் பகை நாட்டில் கொள்ளையடித்தலையும் கைக்கொண்டிருந் திருக்கின்றனர். கொள்ளையடித்தலைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட இவர்கள் போரும், பகையும் இல்லாதவிடத்துப் பிறர் பொருளைக் கவரும் கள்ளர் தொழில் செய்து வாழ்க்கை நடத்தி வந்திருக்கின்றனர்.

பல கதைப்பாடல்கள் மறவர்கள் களவுத்தொழில் செய்து வந்ததைச்சுட்டி, நிகழ்ச்சி யொப்புமை காட்டுவனவாக உள்ளன.

8017 - வன்னியராயன் கதையின் கதைக் கருவே, மறவர் திருட்டாக உள்ளது. வன்னியராயன் திருடச் செல்வதும்,

---

147. இ. *21*

பிடிபட்டுக் கொலைத் தண்டனைக்கு ஆளாவதுமே கதைப்பாடலாகப் பாடப்பட்டுள்ளது.

8018 - முத்துப்பட்டன் கதை, 8440 - தடிவீரசுவாமி கதை போன்றவற்றில் மறவரின் களவுச் செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

5. களவுக்குத் தண்டனையாகத் திருடியவனுக்கு மரணத்தை அளித்தல் நடந்திருக்கின்றது. 6305 - கோவலன் கதை,[148] 8017 - வன்னியராயன் கதை போன்றன இதனை உறுதி செய்கின்றன. திருடியோரைக் கொலை செய்த நிகழ்ச்சிகள் அமைந்து நிகழ்ச்சி யொப்புமை காட்டுவ னவாகவும் உள்ளன.

6. கதை நாயகன் மன்னனிடம் அடைக்கலமாகச் சேர்ந்து வேலை பார்த்த நிகழ்ச்சிகள் 8425-b- குருக்களாஞ்சி கதை, 8018 - முத்துப்பட்டன் கதைகளிலும்,

ஒட்டன் (வேகமாக ஓடித் தூது செல்பவன்) மூலம் செய்தி கொடுத்தலும், பெறலும் ஆகிய நிகழ்ச்சிகள் 11613 - சின்னத்தம்பி கதை, 8423 - ஆமையன் கதை,[149] அழகன் பெருமாள் கதை,[150] 316 - தோட்டுக்காரியம்மன் கதை[151]

---

148. கோவலனின் தந்தை மாசாத்தான் சோழனின் மந்திரியாகவும், தனகர்த்தராகவும் இருந்திருந்ததாகவும், தனது அரண்மனைத் திண்ணையில் படுத்து உறங்கிச் சென்ற அரண்மனை அடைப்பக்காரன் சூரன் என்பவன்மீது ஐயுற்றுத் திருட்டுப் பழி சுமத்தி, மன்னன் ஆணையின்படி திருட்டுக் குற்றத்துக்காகக் கொலையும் செய்துவிட, அவனிட்ட சாபப்படியே மாசாத்தான் மகன் கோவலன் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப் பட்டான் என அமைகிறது கதை.

149. இ.ம.34.
''நாட்டை பரசாளும் நல்லரச னுக்குரைக்க
ஒட்டன் தனைபழைத்து ஓடவிட்டா ரம்மானை''.

150. இ.ம.13.
''உத்தியா லறிந்தோர் சொல்லக் கேட்டுமோர்
ஒட்ட னோடிப் புலியூரிலே சொன்னான்.

151. இ.22

(உ.த.நி.சு.) போன்ற பல கதைப்பாடற் சுவடிகளிலும், புதைய லெடுக்க நரபலி கொடுத்த நிகழ்ச்சிகள், பொன்னிறத்தாள் கதை, சின்னத்தம்பி கதை, 8106 - இடைச்சி செல்லி கதைப் பாடல்களிலும், வெட்டு முன் அலங்காரம் செய்த நிகழ்ச்சிகள், 8425-b- குருக்களாஞ்சி கதை, 8017 வன்னியராயன் கதை[152] போன்றவற்றிலும், நாயகருக்கு உற்ற தீங்கை அவர் தம்முடன் அழைத்துச் சென்ற நாய் தனித்து வந்து ஊளையிட்டு நிற்பது மூலம் அறிதலை வன்னியராயன் கதை, சின்னத்தம்பி கதை போன்றவற்றிலும் காணமுடிகின்றது. இவ்வாறு ஒரே நிகழ்ச்சி இருவேறு, பல்வேறு கதைப்பாடல்களில் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

கதைப்பாடற் சுவடிகளில் பாத்திரப் படைப் பொப்புமைக் கூறுகள்

ஒரு கதைப்பாடலில் உள்ளது போன்று மற்றொரு கதைப்பாடலிலும் பாத்திரங்கள் அமைந்து ஒப்புமை காட்டல் உண்டு. நாட்டுப்புறக் கதைப்பாடல் வடிவிலுள்ள இராமாயணக் கதையில் வரும் இராம, இலக்குவர் போன்று, குசலவன் கதையில் குசலவன், அசலவன் படைக்கப் பட்டுள்ளதையும்,[153] கதைக் கருவால் ஒப்புடைய கதைப்பாடல்களின் பாத்திரப் படைப்புகள் தம்முள் ஒத்து அமைவதனையும், கதைப்பாடல்களில் பாத்திரப் படைப்பொப்புமைக்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

---

152. இ.26
"எிக்கமாலை கழுத்திலிட்டு ரெத்தவாடை கொட்டும் கொட்டி
ஊமத்தமாலை போட்டு ஒத்தை முரசுங் கொட்டி
நாலுதெரு சுத்திவந்து நலமுடனே கொண்டுவந்தார்".

153. இராமரால் அசுவமேத யாகம் செய்து, நாடு சுற்றும்படி விடப்பட்ட குதிரையின் சேணத்திலுள்ள வாசகங்களை, குசலவர் தன் தம்பியாய அசலவனிடம் படிக்குமாறு கூற, அவரும் படிக்க, பின் அக்குதிரையைப் பிடிக்குமாறு பணிக்க, அவரும் பிடிக்க முயலல் என்று, இராமர் இட்ட கட்டளையை இலக்குவர் சிரமேற்கொண்டு செய்தல்போல, அண்ணன் குசலவர் கட்டளையை அசலவர் செய்வது, இராம, இலக்குவர் பாத்திரப் படைப்பையே நினைவுபடுத்துகிறது.

கதைப்பாடற் சுவடிகளில் வரியொப்புமைக் கூறுகள்

கதைப்பாடற் சுவடிகள் தம்முள் கதையமைப்பு, கதைக்கரு, கதை நிகழ்ச்சிகள், கதைப் பாத்திரங்களில் ஒப்புடையதாதல் மட்டுமன்றி, பாடல் வரிகளை எடுத்தாளு வதிலும் ஒப்புடையனவாகத் திகழ்கின்றன.

ஒரு கதைப்பாடலில் காணப்படுகின்ற வரிகளைப் பிற கதைப்பாடல்களிலும் அதே அமைப்புடன் காண இயலுகின்றது.

1. கதை மாந்தர் வடபகுதியினின்றும் தென்னாடு நோக்கி வரலாகக் காட்டும் கதைப்பாடல்களில்,

"இங்கிருக்கக் கூடாது ஏகவேணும் தென்னாடு"
"இங்கிருக்கக் கூடாது ஏகவேணும் மலையாளம்"

என்ற வரியமைப்புகளைக் காண முடிகின்றது.

8029 - வாண தீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை,[154] *8425* - நம்பிராயன் கதை,[155] *8018* - முத்துப்பட்டன் கதை[156] போன்றவற்றில் இத்தகு வரிகள் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

2. ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குத் தொலை தூரப் பயணம் மேற்கொள்ளும்போது, கால்நடையாகச் செல்லலால் நாள் பல ஆகுமாதலால், அவ்வவ்விடத்தில் நீராடலும், உணவுண்ணலும் செய்துகொண்டு குறிப்பிட்ட ஊர் சென்று சேர்ந்திருக்கின்றனர்.

பயணத்தில் நீராடலும், உணவுண்ணலும் ஒரு முக்கிய அமைப்பாகவே இடம் பெற்றுள்ளன.

நாடோறும் நீராட வேண்டுமே என்பதற்காகப் பயணத்தின்போது நீராடலுடன், இடையில் புண்ணிய

---

154. "இங்கிருக்கக் கூடாது ஏகவேணுந் தென்னாடு"
"இங்கிருக்கக் கூடாது ஏகவேணும் மலையாளம்"
என்று சுடலையாண்டி வட கயிலையினின்றும் மலையாளம் வரை வரலாகக் காட்டப்பட்டுள்ளது.

155. "இங்கிருக்கக் கூடாது ஏகவேணும் காவதுக்கு"

156. "இங்கிருக்கக் கூடாது ஏகவேணும் மலையாளம்".

தலங்களைக் கடக்க நேரிடும்பொழுது, தீர்த்தாடனம் செய்தலும் முக்கிய அமைப்பாக இணைந்துள்ளது.

பல கதைப்பாடல்களில் இத்தகு தீர்த்த நீராடல் குறிக்கக் குறிப்பிட்ட ஒரு வரி பயன்படுத்தப்பட்டுள்ளமையைப் பார்க்க முடிகின்றது. அது 'தீர்த்தமாடி மாத்துடுத்தித் திருச் சடையைப் பின்போட்டு'' என்பதாகும்.

8029 - வாணதீர்த்தக் கரைப்புலையன் சுடலையாண்டி கதை, 8018 - முத்துப்பட்டன் கதை போன்றவற்றில் சொல் மாறாமல் இவ்வரி எடுத்தாளப்பட்டுள்ளது.

8425 - நம்பிராயன் கதையில்,

''திருப்பாற் கடலிலே தீர்த்தமாடி செஞ்சடையைப் பின்போட்டு''

-னவும், 11613 - சின்னத்தம்பி கதையில்,

''தீர்த்தமாடித் தலை துவர்த்தித் திருநீறுக் காப்புமிட்டு''[157]

எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. பிள்ளை வரம் வேண்டித் தவமியற்றலும், தவ மகிமை கண்ட சிவன், சித்திரபுத்திரரை அழைத்துப் பட்டயம் எடுத்துப் பார்த்துப் பிள்ளைப் பாக்கியம் உண்டா எனக் காணுமாறு கூற, சித்திரபுத்திரர் பார்த்து,

''எழுபிறப்புப் பிறந்தாலும் இவள்தனக்கே பிள்ளையில்லே'' எனக் கூறும் வாசகமும் அமைதலைப் பல கதைப்பாடல்களில் காணும் வரியொப்புமையாகக் காணமுடிகின்றது.

8425 -a- நம்பிராயன் கதை, 8017 - வன்னியராயன் கதை, 8440 - தடிவீரசுவாமி கதை போன்ற கதைப் பாடல்களில் இதே வரி எடுத்தாளப்பட்டுள்ளது.

4. கொல்வதற்காகக் கொண்டு செல்லும்போது, கதை நாயகி தன் அநாதரவான நிலை கூறிப் புலம்புதலில்,

''கூடப் பிறக்கலையோ கூட்டுப்பா லுண்கலையோ''
''என்னைப் போலப் பெண்பிறந்து யிருக்கலையோ லோகத்திலே''

என்ற வரிகள் பல கதைப்பாடல்களில் அமைந்துள்ளன.

---

157. இ.22.

இராமாயணக் கதையில் சீதை, இராமர் தன்னை வெட்டப் பணித்த போதும், சூர்ப்பணகை மூக்கு, தனமறுபட்டு இராவணனிடம் புலம்பும்போதும், குருக் களாஞ்சி கதையில் தூண்டி முதலியை வெட்டக் கொண்டு சென்றபோது பூரணவல்லியாச்சி தன் அண்ணன்மாரிடம் புலம்பியதாகவும், பொன்னிறத்தாள் கதையில் கள்ளர் பொன்னிறத்தாளை நரபலி கொடுக்க முனைந்தபோது, அவள் புலம்புவதாகவும் இவ்வரிகள் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

5. இயற்கைக்கு மாறான வகையில் குழந்தை பிறந்த போது, பெற்றோர் கூற்றாக,

''பொல்லாத பிள்ளை பெத்தால் போடுவாரோ தாய் தகப்பன்''

என்ற வரிகள் அமைதலாகக் கதைப் பாடல்களில் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

8423 - ஆமையன் கதையில் சுந்தரமூர்த்தி - அபிராமி தம்பதியினருக்கு ஆமைப்பிள்ளை பிறந்ததும் அவர்கள் தம் மனத்தைத் தாமே தேற்றிக் கொள்ளும் முகமாகவும்,

இசக்கி அல்லது நீலி கதையில், சோழனுக்கு, வேசியும், அவள் அண்ணனும் நீலி, நீலனாகப் பிறக்க, நாட்டில் நடக்கும் பல கொடூரச் செயல்களுக்குக் காரணமானவர் இவர்கள்தான் எனச் சோதிடர் கூற, சோழ மன்னன் கூற்றாகவும் இவ்வரிகள் அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

6. கதை நாயகன் இறந்துகிடக்க, நாயகியும், மற்றும் அவனைச் சார்ந்தோரும் வந்து ஒப்பாரி வைத்துப் புலம்புதலாக அமையும் அமைப்பில், குறிப்பிட்ட சில வரிகள் பல கதைப்பாடல்களிலும் எழுதப்பட்டுள்ளன.

''உன் அழகை எழுதினவர் ஆயுளை எழுதலையே''
உன் வடிவை எழுதினவன் வாணாளை எழுதலையே''
''உனக்குப் புல்லோ தலையாணி புழுதிமண்ணோ பஞ்சமெத்தை''

என்ற வரிகளை ஒப்பாரி அமைப்பில் காணமுடிகின்றது.

8440 - தடிவீரசுவாமிகதை,[158] 8017 - வன்னியராயன் கதை,[159] 8018 - முத்துப்பட்டன் கதை[160] போன்ற பல கதைப்பாடல்களில் இதே வரிகள் ஆளப்பட்டுள்ளன.

"கோடி மயங்கலையே யென்கணவா கொண்டைப் பூ வாடலையே"
"முத்துப்போலே கண்ணீரை முகத்தோடே சோரவிட்டாள்
அவளழுத கண்ணீரும் ஆறாய்ப் பெருகிடவே"

என்ற வரிகளை 6305 - கோவலன் கதை, கட்டபொம்மன் கதை, தடிவீரசுவாமி கதை போன்றவற்றில் காணமுடிகின்றது.

7. அகாலமாய்க் கொல்லப்பட்டோர் அவ்வூர் மக்களைப் பழிவாங்கிய அமைப்பில்,

"போற பேரை வார பேரை புடதியடி யடக்குதைய்யா
நேரமறியாமல் வாரபேரை நெஞ்சடியா யடிக்குதய்யா
பாலிகளை சூலிகளை பச்சைப்புள்ளைத் தாச்சிகளைக்
கொன்று குலை யிறுக்குதய்யா"

என்ற வரிகள் பல கதைப்பாடல்களில்[161] அமைந்து ஒப்புமை காட்டுகின்றன.

8. கொல்லப்பட்டோர் இறைவனிடம் தமக்கு வேண்டிய வரங்களை வாங்கியதாகக் கதைப்பாடல்களில் அமையும் அமைப்பில்,

"கொல்லவரம் வெல்லவரம் கண்டபூசை கொள்ளவரம்"

என்ற வரி பல கதைப்பாடல்களில்[162] எடுத்தாளப் பட்டுள்ளது.

---

158. இ.ம. 23, இ.24
159. இ.29, இ.ம.29
160. இ.21
161. 8017 - வன்னியராயன் கதை
8018 - முத்துப்பட்டன் கதை
162. உச்சினி மாகாளி அம்மன் கதை (உ.த.நி.க. வில் உள்ள எழுத்துப்படி)
டாக்டர் ஏ.என்.பெருமாள், ப.ஆ. வெள்ளைக்காரன் கதை. உ.த.நி.க. வெளியீடு, 1983.
பொன்னிறத்தாள் கதை.

''கொல்லவரம் வெல்லவரம் கூண்டுணவு கொள்ள வரம்''
''கொல்லவரம் வெல்லவரம் குடிமுடிக்க வரம் வேணும்''

என்றும் அமைதல் உண்டு.

இவ்வாறு அமைகின்ற பல வரியொப்புமைக் கூறுகளைப் பல கதைப்பாடல்களில் காணமுடிகின்றது.

வரியளவிலும் இவ்வாறு கதைப்பாடல்கள் ஒப்புடையனவாக அமைதலுக்கு,

1. குறிப்பிட்ட கதைப்பாடல், கதைப்பாடல் ஆசிரியர் பெற்றிருந்த புகழ்.
2. மக்கள் மத்தியில் குறிப்பிட்ட கதைப்பாடலின் வரிகள் எளிமை, சுவை, ஓசை நயம், கருத்தாழத்தால் பெற்றிருந்த செல்வாக்கு,
3. தன் கதையில் அதே மாதிரியான இடம் அமைதல்,
4. 'முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றல்'' என்பதன்படி, தனக்கு முந்தைய தன் காலக் கதைப்பாடல் வரிகளைத் தன் கதைப்பாடலில் இணைத்தல்

என்ற இதுபோன்ற காரணங்களால் வரியொப்புமைகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு கதைப்பாடல்கள் கரு, நிகழ்ச்சி, பாத்திரப் படைப்பு, பாடல் வரிகள் என்ற இத்தன்மைகளில் ஒப்புமை பெற்று, கதைப்பாடல்களில் ஒப்புமைக் கூறுகளை மிகுவித்து, ஒரோர் கதைப்பாடலிலுமுள்ள தனித்துவத்தைக் குறைத்திருக்கின்றன எனலாம்.

கதைப்பாடற் சுவடிகளில் பிற இலக்கிய ஒப்புமைக் கூறுகள்

கதைப்பாடற் சுவடிகள் தம்முள் அமைப்பு, கரு, நிகழ்ச்சி, பாத்திரப் படைப்பு, பாடல் வரிகள் என்று ஐவகை நிலைகளில் ஒப்புமை காட்டுவதோடு, நாட்டுப்புற இலக்கியங்கள் அல்லாத பிற இலக்கிய வகைகளின் கூறுகளையும் தம்முட் கொண்டு ஒப்புமைப்பட்டு நிற்கின்றன.

- தம்கால, தம் அண்மைக்கால இலக்கியங்கள்
- தமக்கு முந்தைய கால இலக்கியங்கள்

என்ற இருவகை நிலைகளில், நாட்டுப்புறக் கதைப்பாடற் சுவடிகளில் பிற இலக்கியக் கூறுகள் அமைந்துள்ள நிலைகளைப் பிரித்துக் காணலாம்.

தம்கால, தம் அண்மைக்கால இலக்கியக் கூறுகளைப் பெற்று ஒப்புடையதாதல்

பொதுவாக ஓர் இலக்கிய வகையுள் தம்கால, தம் அண்மைக்கால இலக்கியங்களின் நிழல் படிதல் இயல்பு. ஆயின் ஒருசில கருத்துகளில் மட்டுமன்றி, கரு, அமைப்பு முறைகள், நிகழ்ச்சிகள், பாத்திரப் படைப்புகள், உத்திகள் என்று பெரும்பாலான நிலைகளில் தம் கால, தன் அண்மைக்கால இலக்கியங்களின் ஒப்புமைக் கூறுகளை உடையனவாயிருத்தலைக் கதைப்பாடற் சுவடிகளில் காண முடிகின்றது.

16-ஆம் நூற்றாணடுக்குப் பின்னர் *'சிறு பிரபந்தங்கள்'* எனப்படும் *'சிற்றிலக்கியங்கள்'* தனி இலக்கிய வகையாகச் சிறப்புற வளர்ந்திருக்கின்றன. இவற்றின் தாக்கத்தை இதே காலத்தில் எழுத்துருப் பெற்ற கதைப்பாடற் சுவடிகளில் மிகுதியாகப் பார்க்க முடிகின்றது.

குறவஞ்சி இலக்கியத் தாக்கம்

குறவஞ்சி இலக்கியங்கள் குறத்தி நற்குறி கூறலாக அமையும் நிலையை ஊடு பாவாகக் கொண்டிலங்குவன. குறத்தியும், அவள் குறி கூறலு மின்றேல் இவ்விலக்கிய வகையே இல்லை எனும் அளவுக்கு இவ்வமைப்பு உயிர்நாடியாகத் திகழும் ஒன்றாகும். இவ்வாறு குறவஞ்சி இலக்கியத்தின் முதுகெலும்பாகத் திகழும் 'குறத்தி குறி கூறல்' என்ற இவ்வமைப்பைக் கதைப்பாடல்களில் ஒரு முக்கிய கூறாகக் காணமுடிகின்றது.

கதை நாயகன் அல்லது நாயகி பிறக்குமுன், குழந்தை பிறக்குமோ, பிறக்காதோ எனக் கலங்கி இருக்கும் போதோ,[163] குழவிப்பேறு வேண்டிப் பல தலங்களுக்கும் சென்று, பலன் கிட்டாது சோர்வுற்றுத் தன்னூர் திரும்பும்போதோ,[164] கர்ப்பம் உறுதியாகாது கலங்கி நிற்கும்போதோ[165] குறத்தி வந்து குறி கூறலாக அமைதலைக் கதைப்பாடல்களில் காணலாம். இது தலைவனைக் கண்டு காமுற்று அவனை அடையும் பேறு தனக்குக் கிட்டுமோ, கிட்டாதோ, எனத் தலைவி கலங்கி நிற்கும்போது, குறத்தி வந்து அவன் அருள் கிட்டும் எனக் கூறும் குறவஞ்சி அமைப்போடு ஒப்புமை உடையதாய் உள்ளது. கதைப்பாடல்களில் குறத்தி வருதலும், அவள் நடையுடை பாவனைகளும்,[166] அவள் கடந்து வந்த வழிகளும் குறி கூறுமுன் தரை மெழுகிக் கோலமிட்டு, ஐங்கரனை முன் வைத்து, மலர் தூவி, பொரி அவல், பயறு எள்ளும் படைத்து தீபங்காட்டி, தலைவியின் வலது கைப்பிடித்து, முருகன், வள்ளி,

---

163. சிதம்பரநாடார் கதை. வரி.373-475

164. லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.க.), வரி.2002-2117

165. 4087 - சித்திரபுத்திர நயினார் கதை

166. இ.ம.28-29.

''பரிபவளம் பருமுத்து மாலையுடன்
குன்றி வடமணிந்து கூர்விழிக்கு மையெழுதி
....
மூக்குத்தி குத்தி முகத்தில் வெண்ணீறணிந்து
மேகவண்ணப் பட்டு விதமாகத் தானணிந்து''

-4087 - சித்திரபுத்திர நயினார் கதை.

தெய்வயானை முதலிய மலைவாழ் தெய்வங்களையும், பிற பல்வேறு தெய்வங்களையும் துதி பாடி அழைத்து நற்குறி கூறும் விதமும், குறி தப்பாது நிறைவேறச் செய்ய வேண்டியதும் விளக்குகின்ற அமைப்புகள்[167] குறவஞ்சி இலக்கியத்திலுள்ள இதே அமைப்பு முறைகளோடு[168] ஒப்புமை உடையனவாயுள்ளன.

குழவி பிறக்கும் என்று கதைப்பாடல்களிலும், மணவாளன் மேவ வருவான் என்று குறவஞ்சி இலக்கியங் களிலும் குறத்தி நற்குறி கூற, கேட்பவர் மன மகிழ்வுற்று பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்க, அவள் வாழ்த்திச் செல்லும் அமைப்பும், கதைப்பாடல்களில் இடம்பெற்று குறவஞ்சி இலக்கியத்துடன் ஒப்புமை காட்டுகின்றன.

இவ்வாறு கதைப்பாடல்கள் குறவஞ்சி இலக்கியத்துடன் அமைப்பளவில் மட்டுமன்றி, நிகழ்ச்சி பாத்திரப்படைப் பளவிலும் சிங்கன், நூவன் பாத்திரப் படைப்பும், அவர் வேட்டையாடலும் போன்று 'இராமாயணக் கதை' எனும் நாட்டுப்புறக் கதைப்பாடலில் இராவணன், விக்கிரமசிங்கன் பாத்திரப் படைப்பும், அவர்கள் வேட்டையாடும் நிகழ்ச்சிகளும் அமைந்து ஒப்புடையனவாகின்றன.

---

167. ''தரைமெழுகிக் கோலமிட்டு தக்க மலர்போட்டு
தந்திமுகத் தைங்கரனை எந்தனக் கெதிரே வைத்தாள்
விடலை பொரியவல் தேனும்மிக்க பயறெள்ளும்
விதவிதமாய் முன்பதிலே கெருவிதமாய்ப் படைத்தாள்
சமயமது வேளைதன்னில் தாலுதக வேணும்
சாம்பிராணித் தீப தூபஞ் சண்டமுத்தம் போலே
வஞ்சியிடை குறவர்மகள் தேக்கிலயு பரத்தி
வலது கையை நீட்டுமென்று மாதுகுறி வுரைத்தாளே''
-சிதம்பரநாடார் கதை, வரி.378-385.

168. '' தரைமெழுகு கோலமிடு
முறைபெறலே கணபதியை அம்மே! குடம்
தாங்காய்முப் பழம்படைப்பாய்
தேங்காயும் உடைத்து வைப்பாய் அம்மே!
அருகு புனல் விளக்கிடுவாய்
அடைக்காய்வெள் ளிலைகொடுவா அம்மே! வடை
அப்பம் அவல் வர்க்கவகை
சர்க்கரையோ டெட்பொரிவை அம்மே!
-திரிகூட ராசப்ப கவிராயர், குற்றாலக் குறவஞ்சி

பரணி இலக்கியத் தாக்கம்

ஆயிரம் யானையைக் கொன்ற வீரனது வெற்றியைப் பாடும் சிற்றிலக்கியமான பரணியில் போர்க்களக் காட்சிகள் விவரிக்கப்படலே கதைக்கருவாகத் திகழும். இதுபோன்று பல கதைப்பாடற் சுவடிகளில் போர்க்களக் காட்சியை விவரித்தமைத்திருத்தல் பரணி இலக்கியத் தாக்கம் ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

8016 - இடைச்சி செல்வி கதை அல்லது வள்ளியூர்க் கோட்டையை அழித்த கதை[169] என்ற கதைப்பாடற் சுவடியிலும், 316 - தோட்டுககாரி கதை[170] (உ.த.நி.சு.) என்பதிலும் போர் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ள முறை பரணி இலக்கியத்தையே நினைவுபடுத்துகின்றன.

மேலும் முத்தாரம்மன் விற்கவிதையில் பூதங்களின் நகைச்சுவை விளைவிக்கும் செயல்கள்[171] கலிங்கத்துப் பரணியில் அமையும் பேய்களின் நகை மிகு செய்கை களோடும்,[172] 8019 - இசக்கி கதையில் நீலியால் ஏவப்பட்ட

---

169. இ.ம. 55-56.
''வாய்வழியே குருதியோட மறுகிவிழு வார்சிலர்
வெட்டுப்பட்டு வீழ்வாரும் தட்டுப்பட்டு வீழ்வாரும்
....
காட்டில் நரியைப் பூதம் கழுகு விருந்துண்ண''.

170. இ.51-இ.ம.51.
''வெட்டுப்பட்டு விழுவாரும் தட்டுப்பட்டு விழுவாரும்
காலும் சதையுமற்று வாளும் சடைக்க வெட்டி'
''வான்லெச்சம் பேர்கள்பட்டார் வாளுக்கிரையாக''
''ஓடியே உதிரங்கள் ஆறாய் ஓட
உடனே காகமும் கழுகும் குடிக்க
கூடியே காளிகள் கழுகும் சேர
கோட்டையும் முட்டப் பதியும் அழிய''

171. ''கொழுந்து போலவே ஓடிடும் பேய்கள்பின்
கூச் சென்றொரு பூதம் விழுந்திட
விழுந்த பூதம் அதுவெட்கிப் போய்நிற்க
வேதா ளம்பூதம் பார்த்துச் சிரிக்கவோ'' - வரி.734-737

172. ''வழுதியர் வரைமுழை நுழைவடி விதுஎன
மதகரி வயிறுகள் புகநுழை வனசில
எழுதிய சிலையவர் செறிகடல் விழுமவை
இதுஎன வழிகுரு தியின்விழு வனசில''
-கலிங்கத்துப் பரணி, பா.588.

பேய்கள் மதினி, மாமி, தாய் என்ற உறவோடு மனித உருக்கொண்டு நடுக்காட்டில் செட்டிக்குச் சோறு சமைக்கும் முறைகள்[173] கலிங்கத்துப் பரணியில் பேய்கள் கூழ் அட்ட முறைகளோடும்[174] ஒப்புமை உடையனவாகின்றன.

பந்துப்பாட்டும், அம்மானையும்

அம்மானை ஆடிக்கொண்டு கதையைப் பாடுவது என்ற அமைப்பு அம்மானைக்குரிய அமைப்பாகும். "அம்மானேய் அம்மானேய்" என இடையிடை வரி முடிவு அமைத்தலும் உண்டு. சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகிய அம்மானை போன்றும், அம்மானை எனும் இக்கழங்காடலில் கழற்சிக் காய்களை உயரே தூக்கிப் போட்டுப் பிடித்தல் போல, பந்துகளைத் தூக்கிப் போட்டு விளையாடல் பகுதி கதைப்பாடல்களில் அமைந்துள்ளது.[175] ஒரோர் பந்து பிடிக்கும்போதும் அம்மானே எனவும் கூறுவர். இப்பந்தாடல் நிகழ்ச்சி குற்றாலக் குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களில் இடம்பெற்றுள்ள அமைப்புமாகும்.[176]

---

173. இ.14

''மாப்பிள்ளையும் என்மகளும் வாழவந்தா ரென்றுசொல்லிக்
கூப்பிடுமுன் சோறாக்கிக் கோழியடிப் பாளொருத்தி
மாணிக்கஞ் செட்டிதனை வழிப்பெரிய பேய்ப்பார்த்து
மேல்நாடிப் பல்லுதிர விழுந்தா ளொரு மாது''.

174. ''வைப்புக்காணு நமக்கின்று
வாரீர் கூழை எல்லீரும்
உப்புப் பார்க்க ஒருதுள்ளி
உள்ளங் கையிற் கொள்ளீரே'' -
கலிங்கத்துப்பரணி. பா.549

175. இ.31 - இ.ம.31.

''பூவாளிப் பந்துடனே பொன்னாலே அம்மானையும்
பொன்னும் தோட்டுக்காரியம்மன் அம்மானை போட்டுப் பிடித்தாள்''
''மார்பிலே பூசின சந்தனங்களும் மஞ்சணைகளும்
வேர்த்துச் சொரிய
வாசம் புனுகு சவ்வாதும் மணக்க மல்லிகை முல்லை கமகமவென
பூசும் மஞ்சளும் பொட்டும் உருக.... .....
....
அந்தத் தரிகிடன் றாடாதே அரிகிடத் தரிகிடன்றாடாதே பந்தே
தொந்தித் திமிதிமி தோமென வேதான் தோழியர்க் கென்றுநீ
ஆடாதே பந்தே''
316 - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.)

176. ''பொங்கு கனங்குழை மண்டிய கெண்டை
புரண்டு புரண்டாடக் குழல்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு
மதன்சிலை வண்டோட இனி

பெருங்கதையில் மானனீகை பந்தடிப்பும் எண்ணற் குரியது. இத்தகு பந்தடித்தலோடு பொன்னிறத்தாள் கதை, *316* - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.) போன்ற கதைப் பாடல்களிலுள்ள பந்தடி நிகழ்ச்சி ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கதே.

தமக்கு முந்தைய கால இலக்கியக் கூறுகளைப் பெற்று ஒப்புடையதாதல்

கதைப்பாடல்கள் தமக்கு முந்தைய கால இலக்கியங் களின் கூறுகளைப் பெற்று, அவற்றோடு ஒப்புமை உடையனவாகத் திகழ்கின்றன. கதைப் பாடல்களிலுள்ள பல அமைப்புகள் சங்க இலக்கிய, இதிகாச, காவியப் புராணக் கூறுகளை நினைவுபடுத்துவனவாக உள்ளன.

சங்க இலக்கிய ஒப்பு

8423 - ஆமையம்மானைக் கதை, *316* - தோட்டுக்காரி கதை (உ.த.நி.சு.) பொன்னிறத்தாள் கதை, முத்தாரம்மன் விற்கவிதை போன்ற பல கதைப்பாடற் சுவடிகளில் நீராடலும், நீராடலுக்கு வேண்டிய ஆயத்தங்களுடன் புறப்படுகையும்,[177] சங்க இலக்கியப் பரிபாடலின் நீராடலையும்,

---

இங்கிது கண்டுல கென்படும் என்படும்
என்றிடை திண்டாட மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்திரி
பந்து பயின்ற னளே''

- குற்றாலக் குறவஞ்சி

177. ''தோப்புக்கும் தீர்த்தக் கரைக்கும் கூப்பிடு தூரம்
துவட்டைச் சேலைக்கு மேலாகப் பூவைச் சொரிந்தார்
காப்பிட்ட மாதர்கள் வேப்பிலைத் தோரணம் கட்டி
காளாஞ்சிப் பந்தத்தை ஆகாசத் தேரிலே கட்டி
சிங்காரக் கொண்டைக்கு வங்காளத் தில்வந்த சிப்பு
சினச பாதிகள் சின்னச் சிமிழ்கூட்டிச் சேர்த்தார்''

முத்தாரம்மன் விற்கவிதை, வரி.*1213-1218.*

''சுனையாடப் போவதற்குத் தோகைநல்லாள் ஒருக்குவாளாம்
சல்லடமும் கச்சைகளும் தங்கவளை தானணிந்தாள்
நெற்றிக்குப் புறையுமிட்டாள் நேர்கண்ணுக்கு மையிட்டாள்
....
பாடகங்கள் சிலம்புமிட்டுப் பாதசரம் தானணிந்தாள்''

-பொன்னிறத்தாள் கதை, வரி. *636-644.*

அதற்காக ஆடவரும, பெண்டிரும் ஆடை, ஆபரணங்களணிந்து புறப்பட்ட நிகழ்ச்சியையும்[178] (பரிபாடலில் 6, 7, 10, 11, 12, 16, 20, 22 - போன்ற எண் களுள்ள வையை நீராடல் பற்றியன) நினைவுபடுத்துகின்றன.

இதிகாச ஒப்பு

I 8423 - ஆமையம்மானைக் கதை என்ற சுவடியில், ஆமையன் கழுத்தில் மாலை விழுந்த பின், அங்கு கூடியிருந்தோரெல்லாம் ஆமை மணமகனாவதா? என்று மண நிகழ்ச்சியில் குழப்பம் நிகழ்த்திக் கலகம் செய்கின்றனர்.

இ.ம.19

''மாப்பிள்ளை தன்னோடே முன்வந்திருந்த பேர்க ளெல்லாம்
வெக்கித் தெழுந்து வீணர்கையில் கம்பெடுத்து
ஆமைதனை நாமடிப்போ மென்பாரும்''

என இது விவரிக்கப்படுகின்றது.

இந்நிகழ்ச்சி பாரதத்தில் பீஷ்மர் தன் தம்பி விசித்திர வீரியனுக்காகக் காசிராஜன் புத்திரியர் அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற மணமக்களைச் சுயம்வரப் போட்டியில் வென்று, தேரிலேற்றிக் கொண்டு கிளம்ப, கலகம் செய்த பிற அரசர்கள் செயலோடும், அர்ச்சுனன் அம்பெய்து வெற்றிபெற, திரளெபதி அவன் கழுத்தில் மாலையிட, கூடியிருந்த மற்ற அரசர்கள் அவன்மீது போர்தொடுக்கக் கிளம்பும் நிகழ்ச்சியோடும் ஒப்பிட்டு எண்ணத் தக்கதாயுள்ளது.

II 6717 - வீரகுமாரன் கதையில், ராசாவும், மந்திரியும் வேட்டைக்குச் சென்று நீரருந்த, நீர்த்துறை செல்ல அங்கிருந்த ஒரு கல்லில்,

---

178. ''மின்னவி ரொளியிழை வேயு மோரும்
பொன்னடாப் பூம்புனை திருத்து வோரும்''

-பரி. 12:11-12

''புட்டகம் பொருந்துவ புனைகு வோரும்
கட்டிய கயிலணி காழ்கொள் வோரும்''

பரி.12:17-18

''இருபுணர் வளையொடு தொடுதோள் வளையர்
கட்டுவடக் கழலினர் மட்டு மாலையர்''

பரி.12:23-24

"மந்திரி பேச்சைக் கேட்கும் ராசா நசிப்பான்" என எழுதியிருக்கக் கண்டு, இருவரும் வாசிக்க, வாசித்தறிந்த ராசா தன்னைக் கொல்வது உறுதி என உணர்ந்த மந்திரி, 'தற் கொல்லியை முற்கொல்லு' என்ற வாசகத்தின்படி, ராசாவை அருகிருந்த கிணற்றில் தள்ளிடும் நிகழ்ச்சி, பாரதத்தில் சுக்கிரன் மகள் தெய்வயானியை சர்மிஷ்டை கிணற்றில் தள்ளிய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டு எண்ணத் தக்கதாயுள்ளது.

காவிய ஒப்பு

I இராமாயணக் கதைப்பாடலில் இராமன் மாறு வேடத்தில் நகர்வலம் வந்தபோது, வண்ணான் வீட்டில் அவனும், அவன் மனைவியும் பேசிக் கொண்டிருந்ததைக் கதவு மறைவில் மறைந்திருந்து ஒட்டுக்கேட்டு அவ்வீட்டில் குறியிட்டுவிட்டுச் சென்ற செயலும்,

ஆமையன் கதையில், நகர் சோதனைக்கு வந்த மன்னன், ஆமையன் தன் வீட்டில் தன் தாயிடம் 'மன்னர் மகளை எவ்வாறாயினும் மணப்பேன்' எனக் கூறியதைக் கேட்டு விட்டு, அவ்வீட்டில் குறியிட்டுச் சென்ற செயலும்,[179] சிலம்பில் பொற்கையான் மாறன் என்ற பொற்கைப் பாண்டியன் நகர் காவல் வந்தபோது, தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்ட கீரந்தை எனும் வேதியனிடம், "என்னை யார் காப்பார்?" என மனைவி வினவ, அரசன் காப்பான் என வேதியன் கூறியதைக் கேட்ட மன்னர், நாளும் அவ்வீட்டைக் காத்துவர, ஒருநாள் அவ்வீட்டினுள் ஆண் குரல் கேட்கக் கதவைத் தட்டிய செயலோடு[180] ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கதாயுள்ளது.

---

179. இ.22.
"அந்த மொழிகளெல்லா லன்னகரி லாளு மன்னன்
வந்துநகர் சோதனைக்கு மத்தொருத்தர் காணாமல்
தோண யறியக் கதவில் சுண்ணாம்புக் குறியுமிட்டு"

180. "உதவா வாழ்க்கை கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தன னொருநாள்
அரைச வேலி யல்ல தியாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவென"
-சிலப்.23:42-47.

II சிலம்பில் இளங்கோ ஒரு பாத்திரமாகவே அமைந்துள்ளதோடு, இராமாயணக்கதையில் வான்மீகி முனிவரும் ஒரு பாத்திரமாகவே உள்ளமை ஒப்பிடத் தக்கதாயுள்ளது.

III இராமாயணக் கதைப்பாடலில், பிள்ளைக்கு வான்மீகி முனிவரைத் துணையாக வைத்துவிட்டு, நீர்கொணரச் சென்ற சீதையின் செயல் சிலப்பதிகாரத்தில், பிள்ளைக்குக் கீரியைத் துணையாக்கிவிட்டு நீர் கொண்டுவரச் சென்ற பார்ப்பனியின் செயலோடு[181] ஒப்பிட்டு எண்ணத் தக்கதாயுள்ளது.

IV பொன்னிறத்தாள் கதையில் பகவதியைக் குழந்தை வரம் கேட்டுப் பொன்மாரி என்பவள் வேண்டிக் கொள்ள, அதற்கு பகவதி தெய்வம், "நீ முற்பிறப்பில் சூலாடு, சூல்பன்றி போன்றவற்றைக் கொன்ற பாவம் இப்பிறப்பில் தீருமாதலால் சூலாசைப்பட வேண்டாம் எனக் கூறுதல், சிலம்பில் கோவலன் முற்பிறப்பில் சங்கமன் என்பவனை ஒற்றன் எனக் கருதிக் கொன்ற பாவம் இப்பிறப்பில் தீர்ந்ததென மதுரை அதிதேவதை கூறுவதாக அமையும் பகுதியுடன்[182] ஒப்பிடத் தக்கதாயுள்ளது.

V இவ்வாறு பழம் பிறப்புக் கதை கூறல் 8019 - இசக்கி கதையிலும், கானகத்து நடுவே செட்டியை வழிமறித்த நீலி கூறுவதாக[183] அமைந்துள்ளது. இதுவும் சிலம்பு, மேகலையில் அமையும் 'பழம் பிறப்புக் கதை கூறல்' மரபுடன் ஒப்பிடத் தக்கதாயுள்ளது. மணிமேகலையில் "பிடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை" (9-ஆம் காதை) என முற்பிறப்புணர்த்துவதாய்த் தனியே ஒரு காதையே

---

181. சிலப்.15:54-59.

182. "முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபங் கட்டிய தாகலின்"

சிலப்.1:45-49

183. இ.13-14.
"பெண்ணுக் கிரங்குவீரோ முன்னாள்
பிராமணக் கண்ணல்லவோ".

அமைந்துள்ளது கருதத் தக்கது. இத்தகு அமைப்போடு கதைப்பாடல்களிலுள்ள முற்பிறப் புணர்த்தல் நிகழ்ச்சிகள் ஒப்பிடத் தக்கன.

VI இராமாயணக் கதைப்பாடலில் சூர்ப்பணகையின் முதுகில் இராமன் "இவளது தனம், மூக்கு போன்றவற்றை அரிந்து அனுப்பு'' என எழுதி அனுப்புகின்ற நிகழ்ச்சி[184] பெருங்கதையில் உதயணன் மானனீகைக்கு வாசவதத்தையின் நெற்றியில் செய்தி எழுதி அனுப்பிய நிகழ்ச்சி[185] யோடு ஒப்புமை உள்ளதாய் அமைந்திருக்கிறது.

VII இதே கதைப்பாடலில் சீதை நெருப்பில் புகுமுன் தன் கணவனை மும்முறை வலம்வந்து வணங்கிய செய்கை, குண்டலகேசியில் குண்டலகேசி மலையினின்றும் வீழ்வதற்கு முன்னர், கள்வனாகிய தன் கணவனை வலம் வந்த நிகழ்ச்சியோடு ஒப்புமை கொண்டதாக உள்ளமை எண்ணத் தக்கது.

புராண ஒப்பு

I 8019 - இசக்கி கதையில் பழகைநல்லூரில் நீலி, ஆனந்தன் செட்டியைக் கிராமப் பெரியவர்கள் முன்னால் வழக்குக்குக் கொண்டுவந்து, வழக்குரைத்து நீதி கேட்ட நிகழ்ச்சி, பெரியபுராணத்தில் சுந்தரரைச் சிவபிரான் வழக்கிடத் திருவெண்ணெய்நல்லூர்க் கிராமப் பெரியோர் முன் அழைத்துச் சென்று நீதிகேட்ட நிகழ்ச்சி[186] யோடு ஒப்பிட்டுக் காணத் தக்கதாயுள்ளது.

---

184. இ.*72-74.*

185. ''.... கோற்றொடி நுதன்மிசைப்
பூந்தா தோடு சாந்துறக் கூட்டி
ஓடியா விழுச்சீ ருதயண னோலை''

4:13:61-63

186. ''வேதபா ரகரின்மிக்கார் விளங்குபே ரவைமுன்சென்று
நாதநான் மறையோன் சொல்லு நாவலு ராரு ரன்றான்
காதலென் னடியா னென்னக் காட்டிய வோலையிதி
மூதறி வீர்முன் போந்தா விதுமற்றென் முறைப்பா டென்றான்''

-திருத். மாக்கதை. *1:5:* பா.*51.*

II 3928 - தமிழறி மடந்தை கதையில், விறகுத் தலையன் ஆயிரம் பொன் பெறும் பாடல் பாடியதாக அமையும் நிகழ்ச்சி, திருவிளையாடற் புராணத்தில் தருமி இறைவனின் பாடலுக்கு ஆயிரம் பொன் பெற முனைந்த நிகழ்ச்சி[187]யை நினைவுபடுத்துகின்றது.

சில கருத்துகள்

1. கதைப்பாடற் சுவடிகள் தமக்குள்ளேயே அமைப்பு முறை, கரு, கதை நிகழ்ச்சிகள், பாத்திரப் படைப்புகள், பாடல் வரிகள் என்ற நிலைகளில் ஒப்புமை கொண்டனவாகத் திகழ்வதுடன், தம்கால, தமக்கு முந்தைய கால இலக்கியங்களுடன் பல்வேறு தன்மைகளில் ஒப்புமையுடையனவாகவும் திகழ்கின்றன.

2. வேறு எவ்வகை இலக்கியத்திலும் இல்லாத அளவுக்கு நாட்டுப்புறக் கதைப்பாடல் இலக்கியத்துள் ஒப்புமைக் கூறுகள் மலிந்து காணப்படுகின்றன.

3. இவ்வாறு ஒப்புமைக் கூறுகள் மலிந்து காணப்படினும், ஒவ்வொரு கதைப்பாடலும் தான் உலகுக்குச் சொல்ல விரும்பிய செய்தி அல்லது நிகழ்ச்சியின் வேறுபாட்டால் வேற்றுமைப்பட்டுத் தனித் தனிக் கதைப்பாடல்களாக மலர்ந்துள்ளன.

4. அவ்வப்போது மககள் கண்முன்னர் சமுதாயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளே, மக்கள் வழக்கு மலிந்த எளிய நடையில் கதைப்பாடலாக உருப்பெற்றுள்ளன.

5. சங்க இலக்கிய, இதிகாச, புராணங்கள் போன்ற முற்கால இலக்கியக் கூறுகளைப் பெற்றிருக்கும் கதைப்பாடல்கள், காலங்காலமாகப் பழைய மரபை அடியொற்றி இயற்றப்பட்டு வந்தவை என்பதையும், இதன் கூறுகள் பழமையானவை என்பதையும் புலப்படுத்துகின்றன.

---

187. ''உணர்ந்த கேள்வியா ரிவரொ டொல்லை போய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னு மின்றமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க வின்றென
மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான்.

-52:பா.92.

6. கண்முன் கண்ட, காணுகின்ற நிகழ்ச்சிகளை அப்படியே காட்டல் என்ற நிலையில் மட்டுமே கதைப் பாடல்கள் அமைகின்றனவே தவிர, புதிய அமைப்புக்கும், வடிவுக்கும், புதுமைக்கும், புரட்சிக் கருத்துக்கும், திடுக்கிடும் திருப்பங்கள், வலியப் புகுத்தும் உச்சகட்டங்கள், திடீர் முடிவு போன்றவற்றுக்கும் அவற்றில் இடமிருப்பதில்லை; வாய்ப்பிருப்பதில்லை. நடப்பியல் தன்மையும், இயல்பு நிகழ்ச்சிகளும் மிகுந்து நாட்டுப்புற, சாதாரண மக்களின் மனவியல்புக்கேற்ற எண்ணப் பிரதிபலிப்பாகக் கதைப் பாடல்கள் திகழ்கின்றன.

தடிவீரசுவாமி கதை - பதிப்பாராய்ச்சிக் குறிப்புகள்

கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள இச்சுவடி 8440 என்ற எண்ணுடைய சமூகக் கதைப்பாடல் சுவடி ஆகும். இது கொல்லம் ஆண்டு 1054 (கி.பி.1879) சித்திரை மாதம் 17-ஆம் தேதி எழுதப் பட்டதாகச் சுவடி இறுதியில் குறிப்பு உள்ளது. ஆக, இன்றைக்குச் சரியாக 117 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சுவடி இது என்பது தெளிவாகின்றது. இத்தகு காலக் குறிப்பை அடுத்து உள்ள பெயர் சிதைந்துள்ளது. இது ஆசிரியர் அல்லது சுவடி உரிமையாளர் போன்றவர்களின் பெயராயிருக்கலாம். ஊர்ப்பெயர் அழகநேரி எனத் தெரிகிறது. சுவடி இறுதியில் 'தடிவீர சுவாமி கதை முற்றும்' என்று அமைந்துள்ள குறிப்பைக் கொண்டு இச்சுவடிக்கு இதே பெயர் தலைப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

சுவடியின் தொடக்கத்தில் 'அம்மன் கதை' போன்று உள்ள 31 வரிகள் காணப்படுகின்றன. இப்பகுதி பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

பதிப்புக்குக் காரணம்

இச்சமூகக் கதைப்பாடல் எழுதப்பட்ட காலம் 117 ஆண்டுகளுக்கு முன் என்றாலும், கதை நடந்த காலம் 16ஆம் நூற்றாண்டு என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. 16-ஆம் நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சி காலம் காலமாகப் படி எடுக்கப்பட்டு வந்து, குறிப்பிட்ட சுவடிப் பிரதியாக இந்நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

1. இதுவரை இது பதிப்பில் வெளிவராத சுவடி என்பதாலும்,

2. கி.பி.16-ஆம் நூற்றாண்டைய சமூக, சமய, வரலாறு, பொருளாதார, பழக்க வழக்க நம்பிக்கை நிலைகளை இதன் மூலம் அறிந்து கொள்ள இயலும் என்பதாலும்,

3. தடிவீர சுவாமி என்ற சிறுதெய்வத்தின் வரலாறு, வழிபாடு வந்த விதம் பற்றித் தெரிந்துகொள்ள முடியும் என்பதாலும்,

4. கீழ்க்குலம் என்று கருதப்பட்ட சாதியினரிடையேயும், ஏற்றத்தாழ்வுகள் கடைப்பிடிக்கப் பட்டதால் விளைந்த சிக்கல்களைக் கதைக் கருவாகக் கொண்டுள்ள புதுமை யுடையது என்பதாலும்,

5. தமிழ் இலக்கியத்துக்கு மேலும் வளம் சேர்க்கும் வகை என்பதாலும், இச்சுவடி பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பதிப்புமுறை

1. ஒற்றுக்குப் புள்ளியில்லாமை

2. ெ, ே - என்ற ஒற்றைக் கொம்பு வேறுபாடின்றி ே- என்று அமைத்தல்.

3. ா, ர - என்ற எழுத்துகளை ா - என்றே எழுதுதல் என்ற இம்மூன்றையும் சுவடிகளில் உள்ள எழுத்து முறை எனக் குறிப்பிடலாம்.

இதில் ஒற்றுக்குப் புள்ளியில்லாது எழுதும் முறை மட்டும் இச்சுவடியில் பின்பற்றப்பட்டுள்ளது. பிற்காலத்துச் சுவடி என்பதால் ெ-ே, ா-ர வேறுபாட்டுடன் இச்சுவடி எழுதப்பட்டுள்ளதைச் சுவடியின் சிறப்பான எழுத்து முறை எனக் குறிக்கலாம்.

சுவடிகள் காலந்தோறும் படி எடுக்கப்பட்டு வருவன என்பதால், படி எடுப்பாளர்களால் நிகழும் பிழைகள் பலப்பல. இத்தகு பிழைகள் அகற்றப்பட்டு இச்சுவடி பதிப்பிக்கப் பட்டுள்ளது.

1. ஒற்றுக்குப் புள்ளி இடல்.

2. ற-ர, ன-ண, ல-ள-ழ - என்பனவற்றை முறையாக ஆளல்.

3. ணு, ந்து - என்பது போன்ற கூட்டெழுத்துகளை முறையே ணும், த்து என்று பிரித்து அமைத்தல்.

4. சுவி - என்பது போன்ற சுருக்கெழுத்துக்களுக்கு அடைப்புக்குள் (சுவாமி) என விரிவாக்கிக் கொடுத்தல்.

5. ஒலி இனிமைக்காக, குடும்பம்ங்கள், இன்ம்பம் என உள்ள மெல்லெழுத்து மிகுதிகளை நீக்கி குடும்பங்கள், இன்பம் எனத் தந்திருத்தல்.

6. எழுத்துச் சீர்திருத்த முறைப்படி எழுத்துகளை அமைத்தல்

7. சிதைந்த இடங்களில் .... என்ற குறியை ஆண்டிருத்தல்

8. ஊகித்து இடப்பட்ட எழுத்துகளை அடைப்புக்குள் அமைத்தல்

9. "என்று சொல்லி மந்திர முற்றியும்" (16ஆம் இதழ் மறுபுறம். பதிப்பில் 294ஆம் வரி) எனத் தவறாக எழுதப் பட்டுள்ளதை "என்று சொல்லி புதியவனும்" எனத் திருத்தி அமைத்தல்.

என்ற இவை சுவடி எழுத்துகளில் செய்த அகச் சீர்மைகள் ஆகும்.

இச்சுவடிப் பதிப்பில் செய்த புறச்சீர்மைகள்

1. நாட்டுப்புற யாப்பில் அமைந்த பாடல் வரிகளை, இதன்படியே இசையொழுங்குடன் ஒன்றன் கீழ் ஒன்றாக வரிகளாக்கி அமைத்தல்

2. வரி எண்கள் கொடுத்தல்

3. கதை நிகழ்ச்சிகளை ஒட்டிச் சிறு தலைப்புகள் அளித்தல் என்ற

இவற்றைக் குறிப்பிடலாம்.

கதைச்சுருக்கம்

திருச்செந்தூரில் செம்பாரக் குடும்பன் என்பவன் குடும்பமார் தலைவனாகத் திகழ்கிறான். அரண்மனையைச் சேர்ந்த ஏழூர் நிலங்களில் வாரத்துக்குப் பயிர் செய்து, சிறப்பான வாழ்க்கை நடத்தி வருகிறான். குடும்பமார் அனைவருக்கும் துணி வெளுத்துக் கொடுத்து நீலவண்ணன்,

புரத மங்கை தம்பதிகள் வாழ்ந்து வருகின்றனர். கீழ்க்குலத்தாருக்குத் துணி வெளுக்கும் இவர்கள், வண்ணாரில் புரத வண்ணார் எனப்படும் தாழ்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

குழந்தையின்றி வருந்தும் இவர்களுக்கு, சங்கரலிங்கரின் அருளால் ஒரு ஆண்குழந்தை பிறக்கிறது. மந்திரமூர்த்தி என்ற இக்குழந்தை மந்திரப் பயிற்சிகள் அனைத்தையும் பயின்று, பூதங்களையும் ஏவல் கொள்ளும் பன்னிரண்டு வயதினனாக ஆனபொழுது, சாத்திப்பிள்ளை என்ற இளமங்கையை மண முடித்து வைக்கின்றனர். மந்திரமூர்த்தி தன் குலத்தொழிலான துணி வெளுக்கும் தொழிலை, தாமிரவர்ணி ஆற்றங்கரையில் குடிசை போட்டுச் செய்து வருகிறான்.

இவ்வாறு சிலகாலம் ஆனபொழுது, நாடார் குலத்தைச் சேர்ந்த புதியவன் நாடான் என்ற ஒருவன், மந்திரம் கற்கும் ஆவலுடன் மந்திரமூர்த்தியிடம் மந்திரப் பயிற்சி பெறு கிறான். மந்திரப்பயிற்சி பெற்ற ஆணவத்தோடு மந்திர மூர்த்தியின் குலத்தாழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட, கோபா வேசமான மந்திரமூர்த்தி புதியவனைத் துரத்தி விடுகிறான். ஒருவரை ஒருவர் அழித்துவிடுவதாகச் சபதம் பூண்டு பிரிகின்றனர்.

இந்நிலையில் செம்பாரக் குடும்பன் மகள் சோணமுத்து பத்து வயதில் பக்குவமடைந்து, உடுத்தியிருந்த சேலை களைந்து மாற்றுச்சேலை பெற வண்ணார் துறைக்கு வருகிறாள். மதம்பிடித்த யானைபோல் மந்திரமூர்த்தியைக் காணுகிறாள். இவள் மோகினியோ ரம்பையோ என மந்திரமூர்த்தியும் அவள் அழகில் மயங்குகிறான். மாற்றுச் சேலையில் மந்திர உருவங்களை வரைந்து, அவளைத் தன் வசப்படுத்துகிறான் மந்திரமூர்த்தி. நடுமதிய வேளையில் அவன் குடிசைக்கு அவள் வருவதும், இருவரும் மணமாகா மலேயே கணவன் மனைவியாக வாழ்வதும் தொடர்கிறது.

மந்திரமூர்த்தியை மடக்கத் தகுந்த சமயத்தை எதிர்நோக்கியிருந்த புதியவன் நாடான், பனையிலேறித் தொழில் செய்து கொண்டிருந்தபோது, சோணமுத்து மந்திர மூர்த்தியின் குடிசையில் நுழைவதைக் கண்டு விடுகிறான்.

அவளது ஏழு அண்ணன்மார்களிடமும், 'உங்களுக்குத் துணி வெளுக்கும் மந்திரமூர்த்தி உங்கள் தங்கையை வைப்பாக வைத்திருக்கிறான்' என்று கூற, அனைவரும் அவன் குடிசையைச் சுற்றி வளைத்தபோது ஆபத்தை உணர்ந்த மந்திரமூர்த்தி, மை வைத்து சோணமுத்துவை மறையச் செய்து, தானும் பூனையாக உருமாறி ஓடுகிறான். புதியவன் 'பூனையாக ஓடுபவன் மந்திரமூர்த்தியே' எனக் கூற, அண்ணன்மார் பூனையைத் துரத்துகின்றனர். அவன் பாம்புராணி, பல்லி என உருமாறி இறுதியில் எலி வடிவாய் வைக்கோல் போரில் பதுங்க, அண்ணன்மார் அதற்குத் தீயிடுகின்றனர். தீ தன்னை நெருங்காதவாறு காத்துக் கொள்ளும் மந்திரமூர்த்தி, வெள்ளெலி உருவம் கொண்டு மடைக்குள் சென்று ஒளிந்து கொள்கிறான். மிளகாய் வற்றல், வைக்கோலைத் திணித்து மடைக்குள்ளும் தீயைக் கொளுத்த, புகையோடு புகையாக மந்திரமூர்த்தி வெளியேறிவிடுகிறான். 'இறந்தொழிந்தான்' என்று அனைவரும் நிம்மதியாகத் திரும்பிவிடுகின்றனர்.

சின்னாள் கழித்து, கொண்டையங்கோட்டை மறவர், விளைந்திருக்கும் நெற்கதிரைக் கசக்கி, நெல்லைக் கொள்ளை செய்ய நடுஇரவில் வருகின்றனர். நெல்லைத் தலையில் சுமந்துகொண்டு வரும்போது, மந்திரமூர்த்தியின் குடிசையில் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு, 'இறந்து போனவன் குடிசையில் விளக்கு வெளிச்சம் எப்படி வந்தது?' என்று மெதுவாக ஒருவன், வந்து பார்க்க, மந்திரமூர்த்தி வலதுபுறம், சோணைமுத்து, இடதுபுறம் மனைவி சாத்திப்பிள்ளையுடன் துயிலும் காட்சி கண்டு திகைக்கின்றனர்.

சோணமுத்துவின் அண்ணன்மாருக்கும், ஊராருக்கும் இச்செய்தியை அறிவித்துக் கூட்டிவந்து, தூக்கத்திலயே மந்திரமூர்த்தியைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கட்டியிழுத்துச் செல்கின்றனர். ஆட்சியிலிருக்கும் வடமலையப்ப பிள்ளை மந்திரமூர்த்தியை வெட்டி விடுமாறு ஆணை பிறப்பிக்கிறார். வெட்டும்போது மந்திரக் குளிகைகள் உடலின் வெட்டுப்பாகங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதால் வெட்ட இயலவில்லை. பின் மந்திரமூர்த்தி அவை உள்ள இடங்களைச் சொல்லி, 'மந்திரக் குளிகையை எடுத்துவிட்டு வெட்டினால்தான் உடலில் வெட்டு விழும்' எனச் சொல்ல எடுத்து விட்டு வெட்ட மடிகிறான்.

சாத்திப்பிள்ளை, சோணமுத்து படுகளம் வந்து கண்டு புலம்பி, உடன் உயிர் துறக்கின்றனர். மடிந்த எட்டாம் நாள் மந்திரமூர்த்தி பழிவாங்கப் புறப்படுகிறான். புதியவனைப் பனையோடு பனையாகக் கொன்று பழி தீர்க்கிறான். ஏழூருக்கும் பலவித நோய்களைப் பரப்பித் தன் வருகையை மக்களுக்கு உணர்த்துகிறான். ஊர் மக்கள் ஒன்றுகூடி, நிலையமிட்டு, தடிவீர சுவாமிக்குப் பலிகள் கொடுத்து வணங்க, அன்று முதல் எந்தவிதத் துயருமின்றி மக்களைக் காத்து வருகிறார் தடிவீர சுவாமி.

கதை நிகழ்ந்த களம்

செந்திநகர் எனக் கதைப்பாடல் குறிப்பிடும் திருச் செந்தூர்ப் பட்டணம் கதை நிகழ்ந்த களமாக அமைகின்றது. இந்நகரைச் சேர்ந்த ஏழு ஊர்களுக்குட்பட்ட நிலங்களில் பயிர் செய்து வாழ்பவர்களான பள்ளர்களின் தலைவனான செம்பாரக் குடும்பனின் மகள் சோணமுத்து கதைத் தலைவியாகவும், இந்த ஏழூர்களிலுள்ள பள்ளர்களின் துணிகளை வெளுத்துத் தரும் நீலவண்ணான், புரத மங்கையின் மகனான மந்திரமூர்த்தி கதைத் தலைவனாகவும் திகழ் கின்றனர். 'ஏழூரு பச்சேரி' எனக் கதைப்பாடல் சுட்டுவது 'ஏழு ஊர் பள்ளர் சேரி' என்பதாகும். பச்சேரி என்பது பறைச்சேரி என்பதையும் குறிக்கும் எனத் தெரிகிறது.[188] ஏழு ஊர்களாக அமைபவை முருகன் குறிச்சி, மூளிக்குளம், வெள்ளக்கோயில், தெப்பக்குளம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, வண்ணார்ப் பேட்டை என்பன ஆகும்.[189]

கதை நிகழ்ந்த காலம்

வடமலையப்ப பிள்ளையின் ஆட்சிக்காலத்தில் இக்கதை நிகழ்ச்சி நடைபெற்றது என்பதற்கான அகச்சான்று கதைப்பாடலிலேயே உள்ளது (வரிகள்: 333, 347, 389, 390). பிள்ளையன் எனக் கதைப்பாடல் குறிப்பிடும் வடமலை யப்ப பிள்ளை மச்சபுராணத்தைத் தமிழில் தந்து புகழ்பெற்ற

188. டாக்டர் உ.வே.சா. கையெழுத்துப் பிரதி. தமிழ்க் கருவூலம் 'ஜெ' பக்.763.

189. மேற்படி.

வடமலையப்ப பிள்ளையன் என்பவரே எனக் கொள்ளலாம். முக்கூடற்பள்ளு வடமலேந்திரன், வடமலையப்பமுகில் எனக் குறிப்பிடும் வடமலையப்ப பிள்ளையனும் இவரேயாதல் வேண்டும்.[190]

இந்த வடமலையப்ப பிள்ளை நாயக்கவரசரின் பிரதிநிதியாகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டிருக்கிறார். இவரது இறுதி ஆட்சியாண்டு கி.பி.1706 எனத் தமிழகராதி குறிக்கின்றது. வடமலையப்ப பிள்ளையைக் குறிப்பிடும் முக்கூடற்பள்ளுவின் காலம் 1676 முதல் 1680க்குள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[191] இந்த முக்கூடற் பள்ளுவில் இக்கதைப்பாடல் குறிப்பிடும் புதியவன் என்ற பாத்திரம் தெய்வமாக வழிபடப்படுவது சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. இந்தப் புதியவன் இக்கதைப்பாடல் தலைவன் மந்திரமூர்த்தி தெய்வமாகிய பின், அவனது முன்னோடித் தெய்வமாக ஆகியிருக்கிறான். இப்புதியவன் வழிபாட்டுக்காகும் செலவினங்களுக்காக, (ஊட்டுத் தருதலுக்காக) முக்கூடற்பள்ளுவில் வரும் வடிவழகக் குடும்பன் குறிப்பிட்ட காளைகளை விலை குறித்து விற்றுவிட்டதாக, மூத்த பள்ளி குற்றம் சாட்டுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

''வரத்தினை மீறுஞ் - செலவுக்குத்
தரித்திரம் ஏறும் - பேய்க்கொடை
மட்டுக் கட்டில்லான் - கூத்துக்கும்
கொட்டுக்கும் நல்லான்
உரத்திடுங் காளை - சுழியன்
நரைத்தலை மோழை - புதியவன்
ஊட்டுக்குக் குறித்தான் - வில்லடிப்
பாட்டுக்குப் பொறித்தான்''[192]

எனப் பாடல் வரிகள் அமைந்துள்ளன.

---

190. ''கோவிற் பெரிய வடமலேந்திரன்', பக்.58.
''காவை வரு வடமலையப்ப முகில்'', பக்.47.
உரையாசிரியர் வித்துவான் ந. சேதுரகுநாதன், முக்கூடற்பள்ளு.

191. தி.சி. கோமதிநாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள் - பக்.76.

192. உரையாசிரியர் வித்துவான் ந. சேதுரகுநாதன், முக்கூடற் பள்ளு, பாடல் எண் 86.

வடிவழகக் குடும்பன் மிக அதிகமாகச் செலவு செய்வதாகவும், பேய்க் கோயிலுக்குச் செய்யும் ஊட்டுத் திரு நாளிலும், கூத்திலும், கொட்டிலும் மிக ஆர்வமுள்ளவனாய் அவற்றுக்காகச் செலவு செய்வதாகவும், வலிய காளை ஒன்றையும், சுழிக் காளை ஒன்றையும், கொம்பில்லாத காளை மாடு ஒன்றையும் 'புதியவன்' தெய்வத்துக்கு ஊட்டுக் கொடுப்பதற்காக விற்று விட்டதாகவும் பண்ணைக்காரரிடம் கூறிப் புலம்புகிறாள் மூத்தபள்ளி.

இக்கதைப் பாடலில் வரும் புதியவன் தெய்வமாகி அவனை வழிபட்டு வருதல் முக்கூடற்பள்ளு காலத்திலேயே நடந்திருக்கிறது என்பதற்கான அகச்சான்றாக இம்முக்கூடற் பள்ளுப் பாடலின் வரிகளைக் காணும்பொழுது, இக்கதைப் பாடல் நிகழ்ச்சிகள் முக்கூடற்பள்ளுவின் காலத்திற்கு முன்பே நடந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

எனவே முக்கூடற்பள்ளு குறிப்பிடும் வடமலையப்ப பிள்ளையை இக்கதைப் பாடலும் குறிப்பிடுவதாலும், இக்கதைப்பாடலில் வரும் 'புதியவன்' என்ற பாத்திரம், முக்கூடற்பள்ளுவில் தெய்வமாக வழிபடப்பட்ட செய்தி உள்ளதாலும், இக்கதைப் பாடலின் காலம் முக்கூடற்பள்ளு காலத்துக்குச் சற்று முந்தையதாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஆக, 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த இக்கதை நிகழ்ச்சிகள் காலந்தோறும் படி எடுக்கப்பட்டு, குறிப்பிட்ட இக்கதைப்பாடல் சுவடிப் பிரதி கிடைத்துள்ளது எனலாம்.

கதைக்கரு

சாதி மீறிய காதலால் விளையும் சிக்கல், கதையின் கருவாக அமைந்து, இது ஒரு சமூகக் கதைப்பாடல் என்று வகைப்படுத்தவும் காரணமாயுள்ளது. இதில் கதைத்தலைவி, கதைத்தலைவன் என்ற இருவருமே தாழ்குலம் எனக் கருதப்படும் பள்ளர், பள்ளருக்குத் துணி வெளுத்துத் தரும் புரதவண்ணார் என்ற பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். தாழ்குலங்களுக்குள்ளும், செய்யும் தொழிலால் உயர்வு,

தாழ்வு கற்பிக்கப்பட்டுத் தங்களின் அழுக்குத் துணிகளை வெளுத்துத் தரும் புரதவண்ணார் குலத்தவன், தம் தங்கை மீது காதல் கொள்வதா என்று சினங்கொண்டே, கதைத் தலைவியின் அண்ணன்மார்கள் கதைத்தலைவனைக் கொல்லும் முயற்சியில் இறங்கி வெற்றியும் பெற்று விடுகின்றனர். ஆக, உயர்குலம் தாழ்குலம் என்ற வேறுபாடுகள் காரணமாகச் சாதி மீறிய காதல்கள் கருக்கப் பட்ட சமூகக் கதைப்பாடல்கள் பல இருக்க,[193] இந்தத் தடிவீர சுவாமி கதைப்பாடல் தாழ்குலம் எனக் கருதப்பட்ட இருகுலத்துக்குள்ளும் உயர்வு, தாழ்வு மேற்கொள்ளப் பட்டதால் கருக்கப்பட்ட சாதி மீறிய காதலைக் காட்டும், வேறுபட்ட கருப்பொருள் கொண்டதாகத் திகழக் காண்கிறோம்.

> ''சாதியிலே ஈனனவன்'' (வரி.8)
> ''ஈனனுக்குக் கையெடுத்தால்'' (வரி.129)
> ''உங்களுக்கு வெளுத்து வரும்
> உத்ததொரு மந்திரமூர்த்தி''
> ''மந்திர மூற்றியுமே அவளை
> வைப்பாக வைத்திருக்கான்'' (292-293)

என்று ஈனச்சாதியைச் சேர்ந்தவன்; உங்களுக்குத் துணி வெளுக்கும், உங்களிலும் கீழ்ப்பட்டவன் என்று கதைப் பாடல் வரிகளிலேயே ஆசிரியர் கூற்றாகவும், பாத்திரக் கூற்றாகவும் அமையும் வரிகள் கீழக்குலத்தவர் என்று கருதப்பட்டவர்க்குத் துணி வெளுப்பவர், அவரிலும் கீழ்ப்பட்டவர் என்று, செய்யும் தொழிலால் கீழ்மைப் படுத்தப்பட்டுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

கதை நிகழ்ச்சிகள்

இக்கதைப்பாடலில் கதை நிகழ்ச்சிகள் முன்பின் முரண்பாடின்றி, ஒரே கோவையாக அமைக்கப்பட்டுள்ளன. பல நிகழ்ச்சிகள் கதைப்பாடல் மரபுப்படி அமைந்துள்ளன. அவை:

1. பிள்ளைப் பேறின்றி வருந்துதல்

---

193. காத்தவராயன் கதை, மதுரைவீரன் கதை, முத்துப்பட்டன் கதை போன்றவற்றை முக்கிய சான்றுகளாகக் கூறலாம்.

2. பிள்ளைப்பேறு அடையப் பல ஊர் கடந்து சங்கரன் கோயில் செல்லுதல்

3. சங்கரனாரே பிள்ளையாகப் பிறக்குமாறு வரம் பெறல்

4. குறிப்பிட்ட குறைந்த வயது (18 வயது) வரையே அப்பிள்ளை உயிர் வாழும் எனல்.

5. கர்ப்பமுற்றுப் பிள்ளை பெறல்

6. குழந்தை வளர்ப்பு, கல்வி, பிற பயிற்சிகள் அளித்தல்

எனக் கதைப்பாடலின் முன்பகுதியிலும், இறந்தோர் பழிவாங்கித் தெய்வமாதல் எனக் கதைப்பாடலின் பின் பகுதியிலும், கதைப்பாடல் மரபுகள் ஆளப்பட்டுள்ளன. மேலும், ஏழு அண்ணன்மார்களுக்கு ஒரு தங்கையாகப் பிறத்தல், ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறல், தலைவனின் மரணத்தின் பின்னர் வரும் ஒப்பாரி அமைப்பு போன்ற பிற கதைப்பாடல்களிலும் அமையும் நிகழ்ச்சிகள் இதிலும் அமைந்துள்ளன.

பல நிகழ்ச்சிகள் இயல்பு நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. ஆயின் மந்திரமூர்த்தியின் மந்திரச் செய்கைகளான,

1. குறிப்பிட்ட ஒருவரைப் பிறர் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்து வைத்தல்

2. பூனை, பல்லி, பாம்புராணி, எலியாக உருமாறுதல்

3. பூதங்களை ஏவல் கொள்ளுதல்

4. மோகினியை வரவழைத்துத் தன்னைப்போல் உருமாற்றித் தான் விரும்பும் பெண்ணைத் தன் வசப்படுத்துதல்

5. மந்திரக் குளிகைகளை உடலில் மறைத்து வைத்துக் கொண்டு வெட்டு விழாமல் தடுத்தல்

6. புகையோடு புகையாக உருவம் ஒன்றும் இன்றி மறைந்துபோதல்

என்று இவை இக்கதைப் பாடலில் இயல்புக்கு மாறுபட்ட நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன.

எண்வகைச் சித்திகளை அடைந்த சித்தர்கள், இத்தகு செய்கைகளைச் செய்ய வல்லவர்களாக இருந்திருக் கின்றனர்; எண்வகைச் சித்துகளை நிகழ்த்தியும் காட்டியிருக்

கின்றார். இவற்றை வைத்து நோக்கும்பொழுது, இக்கதைப் பாடலின் கதைத்தலைவன் மந்திரமூர்த்தி செய்த மந்திரச் செய்கைகள் நடக்க முடியாதவை எனக் கருத வாய்ப்பில்லை.

மேலும், பாண்டி வண்ணார், பெருவண்ணார், தமிழ் வண்ணார், வடுக வண்ணார், துளுக்க வண்ணார், புதர் வண்ணார் (புரத வண்ணார், பொரத வண்ணார்) என்ற வண்ணார் பிரிவுகளில்[194] புதர் வண்ணார் எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்படும் புரதவண்ணார் மந்திரப் பயிற்சிகளிலும், பேய், பிசாசுகளைக் கட்டுப்படுத்துவதிலும் குறளிகளை ஏவிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வதிலும், ஆவிகளைப் பிடித்து அடைத்துத் தாவிப்பதிலும் வல்லவர் களாகத் திகழ்ந்திருக்கின்றனர். எனவே, புரதவண்ணார் குலத்தைச் சேர்ந்த மந்திரமூர்த்தியும் மந்திரப் பயிற்சி பெறுவதில் பேரார்வம் காட்டி அனைத்து விதமான மந்திர வித்தைகளைக் கற்றுக் கொண்டும், புதியவன் நாடான் என்ற மற்றொரு இனத்தானுக்கு மந்திரப் பயிற்சிகளைக் கற்பிப்பவனாகவும், மந்திரங்களினால் அதீதச் செயல்களைச் செய்பவனாகவும் உள்ள செயல்கள், இக்கதைப் பாடலில் மிகப் பொருத்தமாகவே அமைக்கப்பட்டுள்ளன எனலாம்.

கதை குறித்த சிறப்புக் குறிப்புகள்

1. வண்ணார் குலத்தில் கடைப்பட்ட புரதவண்ணார் குலத்தைச் சேர்ந்தவனைக் கதைத் தலைவனாகவும், கீழ்க்குலம் எனக் கருதப்பட்ட பள்ளர் அல்லது குடும்பர் குலத்தைச் சேர்ந்த பெண்ணைக் கதைத் தலைவியாகவும் கொண்டு திகழும் புதுமை யான கதைப்பாடலாக இது உள்ளது. பல கதைப்பாடல்கள் உயர்குலத்தானுக்கும், கீழ்க்குலப் பெண்ணுக்கும் அல்லது உயர்குலப் பெண்ணுக்கும், கீழ்க்குல ஆணுக்கும் ஏற்படும் தொடர்பால் விளையும் சிக்கலைக் கதைக் கருவாகக் கொண்டிலங்குபவை. கீழ்க்குலம் எனக் கருதப்படும் இருகுலங்களில் பிறந்த ஆண் - பெண் தொடர்பு பற்றிய முதற் கதைப்பாடல் என்ற வகையில் இது ஒரு தனிச்சிறப்புடைய கதைப்பாடல் எனலாம்.

---

194. என். பழனிச்சாமி, கல்வெட்டில் வண்ணார் (கட்டுரை), தமிழ்நாடு வரலாற்றுக் கருத்தரங்கு.

2. 'பள்ளர்' என்ற சொல் 'மள்ளர்' என்பதனின்று வந்ததாகக் கருதுவர்.[195] வயல்களாகிய பள்ளங்களில் இறங்கிப் பயிர்த்தொழில் செய்வதால் 'பள்ளர்' என அழைக்கப் பட்டிருக்கின்றனர்[196] என்பதற்கு இக்கதைப் பாடல் மேலுமொரு தக்க சான்றாகத் திகழ்கின்றது. செம்பாரக் குடும்பன், சூரியக் குடும்பன், சந்திரக்குடும்பன் என்ற பள்ளர் குலத்தைச் சேர்ந்த மூவரும் உழவுத் தொழிலை மேற் கொண்டிருந்ததாகக் கதைப்பாடல் தெரிவிக்கிறது. இதில் செம்பாரக்குடும்பன் என்பவன் குடும்பர்களின் தலைவனாய் அரண்மனையைச் சேர்ந்த ஏழூர் நிலங்களில் வாரத்துக்குப் பயிரிட்டு, அஞ்சுக்கு ரெண்டு பங்கு அரண்மனைக்குச் செலுத்தித் தொடர்ந்து பயிர்த்தொழில் செய்து வந்ததாகத் தெரிகிறது. பள்ளர்கள் குடும்பம் குடும்பமாக உழவுத் தொழிலில் பரம்பரையாகவே ஈடுபட்டுக் கூடி வாழ்ந்ததால் குடும்பர்கள் எனவும் பெயர் கொண்டவர்கள் என்றும் தெரிகின்றது. பல பள்ளர் குடும்பங்களுக்குத் தலைவனாகச் 'செம்பாரக் குடும்பன்' என்பவன் இருந்திருக்கிறான். பள்ளர் இனத்தவர்களுக்கு இக் 'குடும்பன்' என்ற சொல் இனத்தைக் குறிக்கும் சொல்லாக இன்றும் தென்மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வினத்தாரைக் குறிக்க மட்டும் இச்சொல் வழக்கு பயன்படுத்தப்படுகின்றமை மேலும் ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

(3) ''நாலுகரையு மவர் உழுது
நலமுடனே பயிர்கள் செய்தார்
அஞ்சுக்கு ரெண்டு வாரம்
அரமனைக்குத் தானளந்து'' (5-6)

என்றுள்ள வரிகளால்,

---

195. டாக்டர் குருசாமிசித்தன் - தென்னிந்தியக் குலங்களும், குடிகளும், பக்.397. 'இன்று தென்னகத்தில் நிலப்பிரபுக்களை அண்டித் தொழில் புரிந்துவரும் பள்ளர் 'மள்ளர்' என்பதின் உச்சரிப்பு வேறுபாடு ஆகும்.'

196. டாக்டர் சு. சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, பக்.169.

Dr.Winslow Dictionary PP-745, மற்றும் டி.கே.வேலுப்பிள்ளை, தேவநேயப் பாவாணர், கே.ஆர். அனுமந்தன் போன்றோரும் இக்கருத்துடையவராக உள்ளனர்.

ஏழு ஊர்களைச் சேர்ந்த பள்ளர்களுக்குத் தலைவனாக இருந்த செம்பாரக் குடும்பன், வடகரை, தென்கரை, மேல்கரை, கீழ்க்கரை என்ற நாலு கரை நிலங்களையும் உழுது பயிரிட்டு, அரண்மனைக்கு ஐந்தில் இரண்டு பகுதியைத் தவறாது செலுத்தி வந்தாகத் தெரிய வருகிறது. ஆக, உழுது பயிரிடுவோர்களாக மட்டுமே பள்ளர்களும், இப்பள்ளர் தலைவனான செம்பாரக் குடும்பனும் இருந்தனரே தவிர, உழுவித்துண்பவராக இவர்கள் இல்லை என்பது தெளிவுபடுகின்றது. நிலங்களில் பயிரிட்டு முறையான பங்கை அரண்மனைக்குச் செலுத்தி வந்த இவர்கள், நில உடமையாளர்களாக இருக்கவில்லை. 'அரமனைக்கு' என்று குறிக்கப்படலால் இப்பகுதியை ஆண்ட வடமலையப்ப பிள்ளைக்கு நிலங்கள் சொந்தமாயிருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. இதே கதைப்பாடலில்,

"பிள்ளையன் வக்கப் படப்பு" (333)
"பிள்ளையன் தன்னுடைய பிரமடை" (347)

என்று வைக்கோல்போர், பிரமடை போன்றனவும் வடமலையப்ப பிள்ளைக்குச் சொந்தமானவைகளாகக் கூறப் பட்டுள்ளன. வைக்கோற்போருக்குள் எலி வடிவில் மந்திரமூர்த்தி நுழைந்தபொழுது அவனை அழிக்க, வைக்கோற்போருக்குத் தீ வைக்க எண்ணும் ஏழு அண்ணன் மார்களும் ஏழு வைக்கோற் போருக்குண்டான ஏழாயிரம் பொன்னை வடமலையப்ப பிள்ளையிடம் கட்டிவிட்டுத் தீயிட்டதாய்ச் செய்தி உள்ளது. *(333-335)*

4. செம்பாரக் குடும்பனின் ஆண்மக்கள் ஏழு பேர்களுக்கு ஒரே தங்கையாகப் பிறந்த சோணமுத்து, பத்து வயதில் பக்குவமடைகின்றாள். 'ஒரு பெண் பத்து வயதில் பக்குவமடைதல்' என்பது இயல்பான நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது. வெப்ப நாடான தமிழகத்தில் குடும்பர் குலத் தலைவன் மகளாக, செழிப்பான சூழ்நிலையில் வளர்ந்த சோணமுத்து பத்து வயதில் பருவமடைந்தது இயல்பு நிகழ்ச்சியே. இதுபோல் பக்குவமடைந்த பெண்கள் ஒதுக்குப்புறமான இடங்களில் தீட்டுக் கழியும்வரை குறிப்பிட்ட நாட்கள் வரை தனித்து இருப்பதும் இன்றும் சில பழங்குடி மக்களிடையே காணப்படும் பண்பாட்டு எச்சமாக உள்ளதால், இதுவும் ஏற்புடைய நிகழ்ச்சியாகவே இக்கதைப்

பாடலில் அமைந்துள்ளது. ஆனால் தீட்டுக் காலத்தில் மாற்றுச் சீலை தருவதும், பெறுவதும் வண்ணாத்தியாக இருக்க, இக்கதைப்பாடலில் மாற்றுச் சிலை தருவது வண்ணானாக இருக்கும் நிலை குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

"தீட்டுக் காலத்தில் (முதற்பூப்பு, மாதவிலக்கு, பிள்ளைப்பேறு) வழங்கப்படும் வேறு சேலையே மாத்துச் சீலை எனப்பட்டது. பல சமூகத்தினரிடையே இது பழக்கமாக உள்ளது. ஏழு நாட்கள் வரையும் மாத்துச்சீலை தருவர் எனத் தெரிகிறது. மாத்துச்சீலை வெள்ளைச் சேலையாகவே அமைதலுண்டு. முதற்பூப்பில் 31 நாள் வரை மாற்றுச் சேலை கொடுக்கப்பட்டது. வண்ணாத்தியே சீலையைக் கொண்டு வந்து கொடுப்பவளாகவும் எடுத்துச் செல்பவளாகவும் இருந்தாள். இதனால் இளம்பெண்ணின் உடல்நிலை, ஒழுக்கநிலை முதலியவற்றை மாதாமாதம் அறிபவளாகவும் இருந்தாள். ஒன்பது முழச் சீலை மாற்றுச் சீலையாகக் கொடுக்கப்படும். பின் கொய்சகம் வைத்தே சீலையை அணிவர். காலையிலும், மாலையிலும் வேறு வேறு சீலைகள் அணியக் கொடுப்பர். தீட்டுள்ள பெண் தலை முழுகுவதன் மூலம் புனிதப்பட்டவளாகக் கருதப்பட்டாள். தீட்டு நிலையிலே கொடுக்கப்படும் சீலைகளின் தொகை கண்டு கணித்து, மாத்துக் கூலி அளிப்பர். பிற தொழில்களில் கைக்கூலி, மாக்கூலி என அமைவது வண்ணார் தொழிலுக்கு மட்டுமே தீட்டுடன் தொடர்புபடுத்தி மாத்துக்கூலி என அழைக்கப்பட்டமை தெரிகின்றது."[197]

வண்ணாத்தியர் பெண்டிரின் பூப்புடன் தொடர்புடைய மாற்றுச்சீலை தரும் பணியுடன் மாதவிலக்குடன் தொடர்புடைய சிக்கல்கள், கருக்கலைப்பு, பிரசவம் பார்த்தல் போன்ற தொழில் களையும் செய்து வந்திருக்கின்றனர். வண்ணாத்தியரின் மாற்றுச் சேலை தரும் பணி காலப்போக்கில் வண்ணார் செய்யும் பணியாகவும் மாறியிருத்தல் வேண்டும். இக்கதைப் பாடலில் இதுவே கதைச் சிக்கலாவதற்கும் காரணமாகி விடுகின்றது.

---

197. சாதியும் துடக்கும் (மனோன்மணி சண்முகதாஸ்) என்ற நூலிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்.

மேலும், தீட்டுக் காலத்தில் தனித்திருந்த கதைத்தலைவி சோணச்சி நீராடிவிட்டு, தானாகத் தனித்து மாற்றுச் சீலை பெற வருவதும் கதைச் சிக்கலுக்குக் காரணமாகிறது. முதற்பூப்பின் பின்னர் உடுத்தியிருந்த மாத்துக்கு மறுமாத்து வேண்டும் என்று கேட்கும் சோணமுத்துவின் பருவச் செழிப்பும், பாலியல் தொடர்பான மாற்றுச்சேலை கேட்கும் செயலும், மந்திரமூர்த்தியின் பாலுணர்வைத் தூண்டும் மையங்களாக அமைந்துவிட்டன எனலாம். மதுரை வீரசுவாமி கதையிலும் (பெரிய எழுத்து) பொம்மி பூப்படைந்து குடிசையில் தனித்திருந்த பொழுது, காவலுக்கு வந்த மதுரைவீரன் அவளுடன் காதலித்துக் கூடுவதாகக் கதை நிகழ்ச்சி அமைந்துள்ளமை இணைத்து நோக்கத்தக்கது.

5. தான் விரும்பும் பெண்ணை மந்திரத்தால் வசப்படுத்துதல் குருக்களாஞ்சி கதை என்ற கதைப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது.[198] வீரத்தால் பெண்ணை வசப்படுத்துதல் என்ற பழமரபுக்கு அடுத்த நிலையில், மந்திரத்தால் பெண்ணை வசியப்படுத்தும் நிலை தொடர்ந்திருக்கிறது. இது மந்திரப் பயிற்சிகள் மூலம் நினைத்ததை அடைய இயலும் என்ற எண்ணம் வலுப்பெற்ற காலகட்டத்தில் உருவான நிலைகள் ஆகலாம்.[199]

---

198. ''பார்த்தாரே முதலியாரும் பாவினையாய் வந்து தென்று
சுக்குப் பொடியைத் தானெடுத்துத் தூத்துனாரே அவள்மேல்
மாயநல்ல பொடியால்தானும் மயக்குனாரே கன்னியரை
கைவசமாய்ப் போனாளந்தக் கன்னியரும் பூரண வல்லியுந்தான்''

Dr.R. Nirmala Devi (Editor) The Wandering Voice - *பக்.140-142.*

199. ''மிகப் பழங்காலத்தில் இயற்கையின் சக்தியை மனிதன் அறிந்து அடக்க முடியாதவனாயிருந்தான். இதனை அடக்க மனிதன் மந்திரவாதம் என்ற சக்தி அல்லது 'ஷாமனிஸம்' என்ற திறமையை அடைய வேண்டும். இந்த நம்பிக்கை மனிதர்களிடையே நடைபெற்ற போர்களிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்திரசித்து மந்திர சக்தியுடைய அம்புகள் பெற்றதும், இராவணன் மந்திர வாள் பெற்றதும், ஆர்தர் மூன்று தேவதைகளின் மந்திரவாள் பெற்றதும், கருணன் கவசம் பெற்றதும் இந்த நம்பிக்கையின் அடிப்படையாக எழுந்த கற்பனைகளே.''

நா. வானமாமலை, தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு, பக்.130. ஆராய்ச்சி, மலர் 2, இதழ் 2.

பெண் வசியம் போன்ற மந்திரங்களைத் தீய மந்திரம் என்ற பிரிவில் அடக்குகின்றனர். மந்திரங்கள் அடங்கிய ஒரு குறிப்பேட்டிலுள்ள செய்தி:

''செவ்வரணையைப் பிடித்து அதன் வாலும் அயிரோசனையும் பொடி செய்து அவள் மாதவிடாய்ச் சீலையில் திரித்து விளக்கெரித்தால் நினைத்த அப்பெண் வருவாள்''

என்ற நம்பிக்கை காணப்படுகிறது. இது தொத்து மந்திர அடிப்படை கொண்டது.[200] இதே மந்திர அடிப்படையிலேயே மந்திரமூர்த்தி, சோணமுத்துவின் மாதவிலக்குச் சேலையில் மந்திர ஆண் பெண் உருவங்களை வரைந்து அவளை வசியப்படுத்துவதாகக் கதைப் பாடல் வரிகள் காட்டுகின்றன (171-200). மாதவிலக்கான துணிகளை, பிறர் கண்படக் கண்டபடி இடக்கூடாது; இட்டால் அதனை வசியம் செய்யப் பயன்படுத்தி, குறிப்பிட்ட அப்பெண்ணை மயக்கிவிடுவர்' என்ற நம்பிக்கை இன்றும் கிராமப் புறங்களில் வழக்கில் உள்ளது. இந்தக் கதை நிகழ்ச்சிகளின் பின்னணிக்கு இவ்வாறான நம்பிக்கைகளும் காரணமாயிருத்தல் வேண்டும்.

6. ''மாற்றுச் சேலை தருதல்'' வண்ணாத்தியரிடமிருந்து வண்ணாருக்கும் என, எக்கால கட்டத்தில் மாற்றமுற்றதோ அப்பொழுது, கருவழிக்கும் முறைகளை அறிதல் வண்ணாரும் அறிந்ததாக ஆகியிருத்தல் வேண்டும். புரதவண்ணார் குலத்தவனான மந்திரமூர்த்தியிடம்,

''வயிறதிலே ஆனாக்கால்
  வையத்துக்கு இழுதாச்சே'' (223)

என சோணமுத்து வருந்திக் கூறியபோது,

''கருவை உருவழிப்பேன்
  கன்னியரைச் சீரழிப்பேன்
உருவை வலதழிப்பேன்
  உன்னாணை சோணமுத்தே'' (228-229)

---

200. ஆ. சிவ சுப்பிரமணியன், நாட்டார் வழக்காற்றியல் (இதழ்), தொகுதி 1, மந்திரம் (கட்டுரை), பக்கம் 15.

என்று அவன் மறுமொழி பகன்றதன் மூலம் கருவினை உருவின்றி அழிக்கும் முறைகளை நன்கு அறிந்திருந்தான் என்பது தெளிவாகின்றது. கள்ள உறவை வெளிப்படுத்தும் கருவினைத் தன்னால் அழித்துவிட முடியும் என்ற எண்ணமும், இறுமாப்பும், இவனுக்குச் சோணமுத்துவுடனான உறவை வலுப்படுத்திக் கொள்ளும் தக்க வாய்ப்பாக அமைந்துவிட்டன எனலாம்.

7. தான் பெற்ற மந்திரப் பயிற்சிகள் மூலம் பல வித்தைகளைச் செய்வதில் கைதேர்ந்தவனாக மந்திரமூர்த்தி திகழ்ந்திருக்கிறான்.[201]

1. பூதங்களை, கொள்ளிவாய்ப் பிசாசுகளை ஏவல் கொள்ளுதல் (112-113), (366).

2. மோகினிப் பிசாசைத் தன்னைப் போல் உருமாற்றுதல் (180-181)

3. உள்ள உருவத்தைப் பிறர் கண்ணுக்குத் தெரியாதவாறு மையிட்டு மறைத்தல் (316-317)

4. உருமாறுதல் (19-330)

5. மந்திரக் குளிகைகளை உடலில் மறைத்து வைத்தல் மூலம் உயிர் போகாதவாறு தடுத்தல் (407-409)

போன்ற மந்திரச் சொற்களை மந்திரமூர்த்தி நிகழ்த்தியதாக இக்கதைப்பாடலிலேயே விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

மந்திரங்களில் தேர்ச்சி பெற்றவனாகத் திகழ்ந்ததாலேயே இவன் மந்திரமூர்த்தி என்ற பெயரை பெற்றிருக்கக் கூடும். ஆனால் கதைத்தலைவனுக்குப் பெயர்க்காரணம் கூறுதல் என்ற கதைப்பாடல் மரபுப்படி,

"மைந்தனுட அழகு கண்டு
மந்திரமூர்த்தி யென்றும் பேர் கொடுத்தார்" (87)

---

201. "இந்திர சாலம் மந்திர சாலம்
காடேரி மந்திரமும்
காளியுட அச்சரமும்
மோகினியா ளச்சரமும்
யோகசின்ன மாரணமும்
தம்பலஉச் சாடினமும்
தானே படித்தானே வித்தையெல்லாம்
கூடுவிட்டுக் கூடு பாய்வான்
சூரத் தொழிலுங் கத்தறிந்தான்" (92-96)

என்று கூறப்பட்டுள்ளது. மந்திரமூர்த்தி என்பது சிவபெருமானது பெயருமாகும்.[202] சங்கரன் கோயில் சென்று, சங்கரனாரின் அருளாலும், சங்கரலிங்கரே கதைத்தலைவன் மந்திரமூர்த்தியாகவும் வந்து பிறந்தார் (59) என்று கதைப்பாடல் நிகழ்ச்சிகள் கூறுவதாலும், இப்பெயர் சிவனுக்குரிய மந்திரமூர்த்தி என்பதைக் குறிப்பது என்றும் கொள்ள இடமுள்ளது. மந்திரப் பயிற்சியில் கற்றுத் தேர்ந்ததால் மந்திரமூர்த்தி என்ற பெயர் அமைந்து நிலைத்திருக்க வேண்டும் என்று கருதவும் வாய்ப்புள்ளது. இவனது இயற்பெயர் வாசமுத்து என்று இக்கதை வில்லுப்பாடல்களில் பாடப்படும்பொழுது சுட்டப்படுகின்றது[203] என்ற குறிப்பு கிடைத்துள்ளதால் மந்திரமூர்த்தி என்பது மந்திரம் கற்றதால் நிலைத்த பெயர் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

மந்திரத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றவனாக இவன் திகழ்ந்ததனாலேயே, இவனது குலத் தாழ்ச்சியையும் கருத்தில் கொள்ளாது, புதியவன் என்ற நாடார் குலத்தவன் இவனிடம் மந்திரம் கற்றுக் கொள்ளுதற் பொருட்டு வருகிறான். புதியவன் என்ற இவனது பெயரை நோக்கும்பொழுது இவன் ஊருக்குப் புதியவனாக வந்து குடியேறியதால் இப்பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுள்ளது. புதியவன் என்ற பொருளில் 'புத்தன்' எனவும் கதைப்பாடல் இவனைச் சுட்டுகிறது (120). இதனால்தானோ என்னவோ இவன் பனையேறி நாடார் இனத்தாரைச் சேர்ந்தவனாக இருந்தும்,[204] மந்திரப் பயிற்சி பெறுவதிலும்

---

202. ''அதி தேவதையுமாய் மந்திர மூர்த்தியுமாய்
ஓங்கார மாயே நின்று''
-திருக்களிற்றுப்பாடியார் 25, உரை.

203. தி.சி. கோமதி நாயகம். தமிழ் வில்லுப் பாட்டுகள். பக்.76

204. ''அச்சுத்தடி மாராப்பும்
அருவாளும் தனையெடுத்து
....
கும்புடு பனையதிலே
கொத்தவனும் வந்து சேர்ந்தான்
அச்சுத்தடி தான்சாத்தி
ஆனதொரு தளையெடுத்து
புதியவனும் தான் ஏற'' (450-455)

மிகுந்த ஈடுபாடு கொண்டு, குலத்தாழ்ச்சியையும் கருத்தில் கொள்ளாது, ஈனக்குலத்தான் எனக் கருதப்பட்ட, மந்திரமூர்த்தியிடம் மந்திரம் கற்க வருகின்றான். பனையேறி நாடாருக்குரிய பனையேறும் தொழிலில் மட்டும் ஈடுபட்டு வராமல், வண்ணார் குலத்தவர் சிறப்பாகப் பயின்றிருக்கும் மந்திரத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பிய புதியவனின் போக்கு கதையில் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைகிறது எனலாம்.

பல மந்திரப் பயிற்சிகளை மந்திரமூர்த்தியிடம் கற்றுத் தேர்ந்த புதியவன், மந்திரமூர்த்தியிடம் பகைமை கொண்டு பிரிகிறான். இவர்களிடையே பகைமை மூளக் காரணம் மந்திரங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்துவிட்டோம் என்ற புதியவனின் இறுமாப்பும், செருக்குமே காரணம் என்று இக்கதை வில்லுப்பாடல் வடிவில் பாடப்பட்டு வரும்பொழுது இடம் பெறுவதாகத் தெரிகின்றது.[205] பதிப்பிக்கப் பெறும் இந்தக் கதைப் பாடற் பிரதியில் புதியவன் ஏன் பகைமை கொண்டு பிரிந்து சென்றான் என்ற காரணம் எழுதப்பட்டுள்ள பகுதி சிதைந்துள்ளதால் உண்மையைத் தெளிவாக அறிந்துகொள்ள இயல்வில்லை. ஆயினும் சிதைந்துள்ள இப்பகுதியிலுள்ள இருவரிகளாக,

> "ஈனனுக்குக் கையெடுத்தால்
> இன..... ....
> இதுவரையுங் கையெடுத்தேன்
> ...."

என்பனவற்றைக் காணும்பொழுது, "ஈனனாகிய உன்னை இதுவரை கையெடுத்துக் கும்பிட்டு வணங்கிக் கொண்டிருந்தேனே" என்ற பொருள்படும் முதல் வரியில், மந்திரமூர்த்தியின் குலத்தாழ்ச்சியைக் குத்திக் காட்டியதால்,

> "..... மந்திரமூர்த்தி
> கண்கள் ரெண்டும் பொறிபறக்கக்
> கடுங்கோப முண்டாகி" (131-132)

பிரிவு நேர்ந்திருக்கலாம்.

---

205. தமிழ் வில்லுப்பாட்டுகள் - தி.சி. கோமதிநாயகம், பக்.76.

இரண்டாவது வரியில், "இதுவரையும் கையெடுத்தேன்" என்று தொடங்கி அமைவதில், இதுவரையில் கையெடுத்துக் கும்பிட்டு வணங்கியும், முக்கியமான மந்திரங்களை எனக்குச் சொல்லித் தரவில்லை என்ற குற்றச்சாட்டு புதைந் திருக்கலாம். கதையின் பிற்பகுதியில், மந்திரமூர்த்தி புகையோடு புகையாக வெளியேறி மறைந்தபொழுது, சோணமுத்துவின் ஏழு அண்ணன்மார்களும்,

"வாடாநீ புதியவனே யிவ்
வகையென்ன வென்றுரைத்தார்
பார்த்தானே புதியவனும்
பாவினையா யேதுசொல்வான்
இந்தமட்டு செய்தி நான் அறிவேன்
இனிமேல் ஒன்றும் நான் அறியேன்" (357-359)

என்று புதியவன் கூறுதலால் பூனையாக, பாம்புராணியாக, பல்லியாக, எலியாக உருமாறியதை அறிந்த இவன், *(322-342)* புகையோடு புகையாக கண்ணுக்குத் தெரியாது 'உரு மறைதல்' போன்ற மந்திரப் பயிற்சிகளை அறியாதிருந்தான் எனக் கருத இடமுள்ளது. 'ஈனன்' என்றும் பாராமல் இத்தனை நாள் உனக்குக் கையெடுத்தேன். ஆனால் முழுமையான மந்திரப் பயிற்சிகளை நீ எனக்குக் கற்றுத் தரவில்லை என்று கூறிச் சண்டையிட்டுப் புதியவன் பிரிந்திருக்கக் கூடும் எனக் கருத மேற்சுட்டிய வரிகள் துணை புரிகின்றன.

8. புதியவன், மந்திரமூர்த்தியுடனான தன் சொந்தப் பகையைத் தீர்த்துக் கொள்ள, சோணமுத்து, மந்திரமூர்த்தி உறவைத் தக்க கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறான்.

பலதார மணமும், ஏற்கனவே மணம் செய்துள்ள ஆடவர், பிற பெண்டிர் தொடர்பு கொள்ளலும், தவறாகக் கருதப்படாத காலகட்டத்தைச் சேர்ந்த சமுதாயத்தில், மணமான மந்திரமூர்த்திக்குச் சோணமுத்துவுடனான உறவைப் பெரும் தவறான ஒன்றாகப் பெரிதுபடுத்தியும் 'மந்திரமூர்த்தி உங்களிலும் தாழ்குலத்தவன்', உங்கள் அழுக்குத் துணிகளைத் துவைத்துத் தரும் குலத்தவன், என்று

அவனது குல இழிவைச் சுட்டிக் காட்டியும்[206] மந்திரமூர்த்தி செய்த தவறை மாபெரும் தவறு எனக்காட்டி, அவனது உயிரைப் பலிவாங்கும் நிகழ்ச்சிக்கு வித்தூன்றியவனாகப் புதியவன் ஆகின்றான். 'உங்களிலும் கீழான குலத்தவன் மந்திரமூர்த்தி! அவன் உங்கள் தங்கையை வைப்பாக வைத்திருப்பதா?' எனக் கேட்டு இன உணர்வைத் தூண்டி மந்திரமூர்த்தியின் இழிசெயலுக்காக அவனை வெட்டிக் கொல்லும் நிலைக்கு ஆட்படுத்துகிறான். இவ்வாறாக மந்திரமூர்த்தியின் சாவுக்கு முதற்காரணம் புதியவன் என்பதனாலேயே மறைந்த மந்திரமூர்த்தி முதன்முதலில் புதியவனையே பழிவாங்குகிறான் (438-458).

9. கதைத்தலைவன் சாவுக்குக் கள்ளர்கள் மறைமுக மாகவும், நேரடியாகவும் காரணமாக அமைவதைப் பல கதைப்பாடல்கள் காட்டுகின்றன.

'மதுரை வீரனின் இறுதிக்காலத்தில் அவனால் அடக்கப்பட்ட கள்ளர்களின் தலைவர்கள் திருமலை நாயக்கனது நண்பர்களாகிவிட்டனர். அவர்களுடைய தூண்டுதலினாலேயே மதுரைவீரன் கொல்லப்பட்டான்' எனத் தெரியவருகிறது.[207] முத்துப்பட்டன் கதையிலும்[208] உயர்ந்த சாதியில் பிறந்து சக்கிலியனாகிவிட்ட அவனின் பாதுகாப்பிலிருந்த காடுகளுக்குள் நுழைந்து பொதிமாட்டு வண்டிகளைக் கொள்ளையடிக்க முடியாத கள்ளர்கள் அவனைக் கொன்றுவிடத் தீர்மானித்து ஒருநாள் அவன் உடல் நலமின்றி இருக்கும்பொழுது, அவன் பாதுகாப்பிலுள்ள மாடுகளை ஓட்டிச் சென்றுவிட, முத்துப்பட்டன் போரிட்டு, 'அனைவரையும் கொன்றுவிட்டோம்' என்று எண்ணித் தண்ணீர் அருந்தும்பொழுது, உயிரோடிருந்த ஒரு கள்ளன்

---

206. 'உங்களுக்கு வெளுத்து வரும்
உத்தவொரு மந்திர மூற்றி
மந்திர மூற்றியுமே அவளை
வைப்பாக வைத்திருக்கான்' *(292-293)*

207. நா. வானமாமலை, தமிழ்நாட்டுக் கதைப் பாடல்களில் சோகமுடிவு, பக்.135, ஆராய்ச்சி (இதழ்), மலர் 2, இதழ் 2.

208. பதிப்பாசிரியர் நா. வானமாமலை.

மறைந்திருந்து முத்துப்பட்டனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிடுவதாக அறிகின்றோம். இதே செய்தி மெச்சும் பெருமாள் பாண்டியன் கதையிலும்[209] வருகிறது. சின்னத் தம்பி கதையிலும் அவனது மரணத்துக்குக் கள்ளர்கள் முக்கிய காரணமாக அமைந்துள்ள செய்தி உள்ளது. காவற்படைத் தலைவராக உள்ளவர்களே கள்ளர்களாகவும் உள்ளனர். காவற்படைத் தலைமை, சக்கிலியனான சின்னத்தம்பிக்கு அளிக்கப்பட்டதால் அவன் மரணத்துக்கு கால்கோளிடுகின்றனர். இந்தத் தடிவீர சுவாமி கதையிலும் மந்திரமூர்த்தி இறந்தொழிந்தான் என்று அனைவரும் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் நெற்கதிரை அறுத்துக் கொள்ளையடிக்க் வந்த கள்ளர்களான கொண்டையங் கோட்டைப் படைத்தலைவர்கள் மந்திரமூர்த்தியின் குடிசையில் விளக்கெரிவதைக் கண்டு, அங்கு சென்று பார்க்க அவன், மனைவி சாத்திப்பிள்ளை இடதுபுறமும், காதலி சோணமுத்து வலதுபுறமுமாகக் கொண்டு அயர்ந்து தூங்குதலை அறிந்து, சோணமுத்துவின் ஏழு அண்ணன் மாருக்கும், ஊராருக்கும் செய்தியை அறிவித்து, மந்திர மூர்த்தியின் சாவுக்கு மறைமுகக் காரணமாக அமைகின்றனர்.

10. நாயக்க அரசரின் பிரதிநிதியாய் ஆட்சி செலுத்திவந்த வடமலையப்ப பிள்ளை, தன்னாட்சிக்குட்பட்ட பகுதியில் வாழும் புரதவண்ணார் குலத்தவனான மந்திரமூர்த்தி, தன்னிலும் மேலான உயர்குலப் பெண்ணை வைப்பாக வைத்துக் கொண்டும், தன்னிலும் மேம்பட்ட நாடார் இனத்தவனைப் பகைத்துக் கொண்டும், உருமறைத்துக் கொண்டும், உருமாறிக் கொண்டும் திரிகின்ற இவ்வனைத்துச் செயல்களையும் அறிந்து, 'பொல்லாத துஷ்டனிவன் பூமியில் இருக்கொணாது' (391) என்று கூறி, அவனை வெட்டிக் கொல்ல ஆணை பிறப்பிக்கிறார். பல கதைப்பாடல் தலைவர்களின் மரணங்கள் ஆட்சியிலிருக்கும் மேற்குலத்தாரின் அனுமதியுடனே அரங்கேறியிருக்கின்றன. சான்றாக, மதுரைவீரன் கதை, காத்தவராயன் கதை, சின்னத்தம்பி, குருக்களாஞ்சி கதைகள் (The wandering voice)

---

209. தொகுப்பாளர் & பகுப்பாளர் சு. சண்முகசுந்தரம், பக்.49-50

போன்ற பல கதைப்பாடல்களைச் சுட்டிக் காட்டலாம். கீழ்க்குலத்தான் ஒருவன் அனைத்து ஆற்றல்களையும் பெற்று, தனித்திறமை காட்டுபவனாய் வளர்வதைப் பொறுக்காத உயர்வாக்கம், தன்னிலும் சிறிது மேம்பட்ட குலப்பெண்ணுடன் கொண்ட தொடர்பைக் காரணமாகக் காட்டிக் கொலைத்தண்டனைக்கு உட்படுத்தியுள்ளது.

11. கொலைத் தண்டனை அளிக்கப்பட்ட பின்னும், சிற்சில படி நிலைகளைக் கடந்த பின்னரே கதை நாயகன் கொல்லப்படலாகக் காட்டப்படுதலும், பல கதைப்பாடல் களில் இடம் பெற்றுள்ள நிலைகளாகும்.

மந்திரமூர்த்தியைப் பிடித்தவுடன் அவன் தப்பிப் போகாவண்ணம் அவனைக் கயிறு கொண்டு இறுக்கிக் கட்டிவிடுகின்றனர். அந்தக் கயிற்றை மூச்சடக்கிப் பின் மூச்சைப் பெரிய அளவில் விடுவதன் மூலம் கயிறு தெறிக்கப்பட்டு, கயிற்றுக் கட்டிலிருந்து அவன் விடுபட்டு விடுதல் முதல் நிலையாகும். இதேபோன்ற செய்தி பலவேச சேர்வைக்காரன் கதையிலும்[210] இடம் பெற்றுள்ளது. இரண்டாம் நிலையாக, வெட்டப்படும் பொழுது உடலில் வெட்டு விழாதிருத்தலாகும். இதற்கு உடலில் ஆங்காங்கே மந்திரக் குளிகைகள் உள்ளது என்ற விளக்கம் காரணமாகக் கூறப்பட்டுள்ளது. (407-409)

இதேபோன்ற செய்தி கான்சாகிபு சண்டையிலும் அமைந் துள்ளது நோக்கத்தக்கதாயுள்ளது.[211] இவை ஒருவனது உயிர், ஏழுகடல் தாண்டி,

---

210. 'அன்னாிறந் தாரெனவே அலறியவ னபயமிட்டான்
அபையமிட்ட சத்தத்திலே அணைக்கயறு தெறித்திடுமாம்'
(வரி.1207-1208)

- Publisher - Institute of Asian Studies, The Unsung Melodies.

211. 'மலையாளத்து பொம்மக்காள் கொடுத்த
வச்சிரமணி நரிக்கொம்பு சிமிழினி லடைத்து
உச்சிப்பிடரி தனிலிருக்குதடா
உபாயமா யெடுத்தெறிந்து தூக்குங்க ளென்றான்'

– பதிப்பாசிரியர் நா. வானமாமலை, கான்ஜாசகிபு சண்டை, பக்.116.

ஏழு மலைதாண்டி உள்ள ஒரு மலைக் குகையில், கிளியின் வயிற்றில் உள்ளது என்ற மந்திர வாதக் காலக் கதைகளின் எச்சமாயும், வளர்ச்சி மாற்றங்களாகவும் உள்ள நிலை என்று கூறலாம்.

12. கதை நாயகர்கள், கதையில் பல சாகசச் செயல்கள் புரிபவர்களாகக் காட்டப்பட்டிருந்தாலும், இறுதியில், தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் இருந்தும், தம் உயிரை அவர்களே மனமுவந்து ஒப்படைத்து விடுவதாகக் காட்டுவது கதைப்பாடல் தலைவர்களின் மரணங்கள் அவரவர்களின் ஒப்புதல்களுடனேயே நடைபெற்றன என்று சமாதானம் கூறுபவைகளாக உள்ள போக்கு கவனிக்கத் தக்கதாயுள்ளது.

காத்தவராயன் கதையில் காத்தவராயன், தான் கழுவேறிச் சாக வேண்டும் என்பது ஒரு சாபம் என்றும், எனவே சாப விமோசனம் அடையுமாறு தன்னைக் கழுவேற்றிக் கொல்ல வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

மதுரைவீரன் கதையில் மதுரைவீரன் மீனாட்சியின் கருணைக்காகத் தன் தலையைத் தானே அரிந்து கொண்டு இறந்ததாகக் கதை நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.[212]

கான்சாகிபு சண்டையிலும் கான்சாகிபு தன் உச்சிப் பிடரியிலுள்ள மந்திரக் குளிகையை எடுத்துவிட்டுத் தன்னைத் தூக்கிலிட்டால் தன் உயிர் போகும் என்று, தன் உயிர் போகும் விதத்தை தானே கூறுவதாகக் கதைப்போக்கு அமைக்கப்பட்டுள்ளதும் முன்னரே கூறப்பட்டது.

இவை போன்று இந்தத் தடிவீர சுவாமி கதையிலும் அவனைக் கொல்வதற்காக வெட்டும்பொழுது, உடலில் வெட்டு விழாமல் அரிவாள் தெறித்துத் தெறித்துப் போவதைக் கண்டு வெட்டுபவர்கள் திகைத்து நிற்க, மந்திரமூர்த்தி தன் உடலில் இன்ன இன்ன இடங்களில் மந்திரக் குளிகைகள் உள்ளதாகவும், அவற்றை எடுத்துவிட்டு வெட்டினால் தன் இறப்பு நிகழும் என்றும் கூறுவதாகக் கதை நிகழ்ச்சி அமைந்துள்ளது. (399-409)

---

212. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இலக்கிய வரலாறு, பக்.105.

13. சோணமுத்து தோற்றத்தில் அழகானவள் எனக் கதைப்பாடல் கூறுகிறது.

"பாரமுடி கூடாது
பாண்டியனார் குலமதுபோல்" (138)

என்று கதைப்பாடற் புலவர் வாயிலாகவும்,

"இந்திரியோ சுந்தரியோ!
ரம்பையரோ மோகினியோ!" (151)

என்று மந்திரமூர்த்தி கூற்றாகவும் அமைந்துள்ள வரிகள் இதனை வெளிப்படுத்துகின்றன.

மந்திரமூர்த்தி இவள்மீது மோகம் கொள்ள இவள் அழகு ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும். தன்னிடமுள்ள மந்திரத் திறமையால் அவளை அடைய முடியும் என்ற நம்பிக்கை தந்த உறுதியில், தன்னிலும் மேம்பட்ட குலத்தவள் என்பதையும் கருத்திற் கொள்ளாது செயல்படுகிறான்.

வயது மூப்பு காரணமாக 'அண்ணே, அண்ணே' என அழைக்கும் சோணமுத்துவை[213] மனதுக்குள் உள்ள ஆசையை வெளிக்காட்டாமல் 'அம்மா' என்றே முதலில் மந்திரமூர்த்தி அழைப்பதாகக்[214] கதைப்பாடல் காட்டுகிறது. மோகினியை தன் உருப்போல் மாற்றிக் கஞ்சிப் பானையுங் கைக்கொடுத்து, சக்கப்பழமும் (பலாப்பழம்) தோளில் போட்டு, 'உவர்மண் அள்ள இப்பக்கமாய் வந்தேன். அவசர மாத்தினால் அர்த்தராத்திரியில் கொண்டு வந்தேன்' என்று கூறி, மந்திர உருவங்கள் வரைந்த சேலையைக் கொடுத்து உடுத்தச் சொல்லி மயக்கித் தன்னிடம் அழைத்துவந்து கணவன் - மனைவிபோல் கூடுவது வரை முழுக்க முழுக்க மந்திரத்தால், பெண் வசியம் செய்யும் முறையால், சோண முத்துவை மந்திரமூர்த்தி அடைவதாகக் காட்டப்பட்டுள்ளது. மந்திரப் பயிற்சியே இவனிடம் உள்ள முழுத்திறமையாகக் கதைப் பாடல் காட்டுவது சிந்திக்கத்தக்கதாக உள்ளது. கண்டவுடன் காதல் கொண்ட இருவரின் செயலுக்குக் கெட்டியான மந்திர உறை அணிவிக்கப்பட்டுள்ளதாகக் கருதத் தோன்றுகிறது.

---

213. "மாத்துக் களைய வேணும் அண்ணே" (156)
"அண்ணே அண்ணே மந்திரமூர்த்தி" (161)

214. "சோணமுத்தே போகும் அம்மா" (163)

14. இக்கதைப் பாடலில் இடம்பெற்றுள்ள பாத்திரப் பெயர்களாக, நீலவண்ணான், மாடவண்ணாத்தி, சோணமுத்து, சாத்திப்பிள்ளை என்ற பெயர்கள் நாட்டுப்புறத் தெய்வப் பெயர்களாக உள்ளன.

நீலவண்ணான்:- இசக்கி எனப்படும் *நீலி* என்ற நாட்டுப்புறத் தெய்வப் பெயரின் ஆண்பாற் பெயராக நீலன் என்பது இடம்பெறுகிறது. நீலியின் அண்ணனாக நீலன் இருந்தான் என இசக்கி கதை கூறுகிறது. தென் மாவட்டங்களில் இன்றும் இசக்கி எனும் நீலி வழிபாடு சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. இத்தெய்வப் பெயரில் மந்திரமூர்த்தியின் தந்தை பெயரான நீலன் அமைந்துள்ளது. நாட்டுப்புறச் சிறுதெய்வப் பெயர்களை இம்மண்ணின் மைந்தர்கள் எனக் கருதப்படும் இன மக்கள் வழி வழியாகச் சூட்டி வந்தனர் என்பதற்குத் தக்க சான்றாக இக்கதைப்பாடல் அமைந்துள்ளது எனலாம்.

மாடவண்ணாத்தி:- நீலவண்ணானின் மனைவி பெயர் மாடவண்ணாத்தி எனக் கதைப்பாடல் குறிக்கிறது. மாடன் என்ற நாட்டுப்புறத் தெய்வத்தின் பெண்பாற் பெயராக மாடத்தி என்பது அமைந்திருக்கிறது. இது குலப்பெயருடன் இணைந்து மாடவண்ணாத்தி என அமைந்துள்ளது. இக்கதைப் பாடலில் 9 இடங்களில் இவள் பெயர் சாதிப்பெயருடன் இணைக்கப்பட்டுப் 'புரத மங்கை' என்றே கதையைப் பாடிய புலவரால் அமைக்கப்பட்டிருக்கின்றமை தெரிகின்றது.

சோணமுத்து:- இது பாண்டி, தென்பாண்டி நாடுகளில் மிகுதியாக வழங்கப்பட்ட பெயராக உள்ளது. முத்து என்பதுடன் சோணை என்ற அடைமொழியும் இணைந்துள்ள பெயராக உள்ளது. சோணை என்பது அடிபெருத்தது என்பதைக் குறிக்கும் நாட்டுப்புற வழக்குச் சொல்லாகும். பொன் என்பதையும் சோணம் என்ற சொல் குறிக்கிறது. சோணைச்சாமி என்ற நாட்டுப்புறத் தெய்வப்பெயரும் 'சோணமுத்து' என்ற பெயருடன் இணைத்து நோக்கத்தக்கது.

சாத்திப்பிள்ளை:- இது சாத்தன் என்ற நாட்டுப்புறத் தெய்வத்தின் பெண்பாற் பெயராக அமைந்ததாகும். சாத்திப்பிள்ளை (100, 101) என்பது இடைகுறுகி சாதிப்பிள்ளை என்றும் (415) அழைக்கப்பட்டிருக்கிறது.

15. வாசமுத்து என்ற இயற்பெயர் கொண்ட கதைத்தலைவன் மந்திரம் கற்றதால் மந்திரமூர்த்தி (இவன் கதைப்பாடலில் அனைத்து இடங்களிலும் 'மந்திர மூற்றி' எனப் பேச்சு வழக்கிலேயே அழைக்கப்படுகிறான்) என அழைக்கப்பட்டு, தெய்வமாகிய போது, 'தடிவீர சுவாமி' என்று அழைக்கப்பட்டிருக்கிறான். தங்கள் ஊரைக் காக்கும் காவல் தெய்வம் என்று கொண்டு, கையில் தடி உடையவனாகப் பீடமமைத்ததால் இப்பெயர் இட்டனர் எனலாம். மந்திரப் பயிற்சியே இவனிடமுள்ள திறமை என்பது கதைப்பாடல் முழுக்கப் படிக்கும் பொழுது வெளிப்படும்பொழுது, 'தடிவீரன்' என்று இவன் வீரமுடையவன் என்ற பொருள்படவும் அவன் தெய்வமாகிய பின் வைத்த பெயர் சிந்திக்கத் தக்கதாயுள்ளது.

புதியவன் மந்திரமூர்த்தியால் பழிவாங்கப்பட்டுக் கொல்லப்பட்டாலும் மந்திரமூர்த்தியின் முன்னோடித் தெய்வமாக மக்களால் வணங்கப்பட்டு வந்தமையும், முக்கூடற்பள்ளு காலத்திலேயே இவன் வணக்கம் இருந்தது என்பதற்கான முக்கூடற்பள்ளுப் பாடல் வரிகளும் முன்னரே சுட்டப்பெற்றது.

16. நாட்டுப்புற யாப்பில் எளிமையான சொற்களால் தென்பாண்டி வழக்கு நடையில்,

> ''குளமுடைந்த தாமரை போல்'' (237)
> ''ஆடிடுக்கும் கள்வரைப்போல்'' (378)

என்றுள்ள எளிய உவமைகளோடு கதை நிகழ்ச்சிகளைக் கோர்வையாக மனத்துட் தெளிவாகப் பதியும் வண்ணம் பாடியுள்ள புலவர் திறன் போற்றுதற்குரியது.

வன்னியராயன் கதை - பதிப்பாராய்ச்சிக் குறிப்புகள்

'வன்னியராயன் கதை' என்று சுவடியின் முதல் இதழிலேயே குறிக்கப்பெறும் இச்சுவடி, கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 8017 என்ற எண்ணுள்ள சுவடியாக உள்ளது. 'புலமாடக்கோன் வாசித்து வருகிற வன்னிராயன் கதை' என்று தலை இதழில் குறிப்பு உள்ளதால், புலமாடக்கோன் என்பவருக்குச்சொந்தமான சுவடி இது என்பது தெரிகிறது. இவரே இச்சுவடியை எழுதியிருக்கலாம்; அல்லது பிறரைக்கொண்டு எழுதுவித்து, தான் சொந்தமாக வைத்துக்கொண்டு படித்தும் வந்திருக்கலாம்.

சுவடி அமைப்பு

27 x2.9 செ.மீட்டர் நீள அகலம் கொண்ட இச்சுவடி, 33 இதழ்களைக் கொண்டதாக உள்ளது. பக்கத்துக்கு 5 முதல் 9 வரிகள் உள்ளன.

சுவடிப்பதிப்பு

இச்சுவடி 1977ல் தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு ஆய்வேடாக திரு.லாரன்ஸ் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 1. வன்னிராசன் கதை அறிமுகம், 2. கதைப்பதிப்பு, 3. மொழிநிலை, சொல்லடைவு என்ற மூன்று முக்கியக் கூறுகளை உள்ளடக்கியதாக உள்ள இவ்வாய்வேடு நூலாகவும் வெளியிடப்பெற்றது. தற்பொழுது இந்நூற் பிரதி கிடைப்பதில்லை.

பதிப்பு நோக்கம்

1. தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு மாணவரால், தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு ஆய்வேட்டுக்காகப் பதிப்பிக்கப் பட்ட இச்சுவடி, இன்னும் பன்முக ஆய்வு நோக்கில் பதிப்பிக்கப்படல் வேண்டும் என்ற காரணத்தாலும்,

2. களவு செய்தலைத் தம் குலத்தொழிலாகக் கொண்ட இனத்தாருக்கும், களவு செய்வது குற்றம் எனக் கருதப்பட்டு, அவர்களுக்குத் தண்டனை அளிப்பதற்கென்றே 'காவல் துறை' என்ற தனி அமைப்பை நிறுவி உள்ள ஆட்சித் துறையிலுள்ளவர்களுக்கும் ஏற்பட்ட நேரடி மோதலை மையமாகக் கொண்ட புதுமையான கதைக் கருவைக் கொண்டுள்ள கதை என்பதாலும்,

3. களவுத் தொழில் செய்வதைக் குலத்தொழிலாகக் கொண்ட இனத்துள் பிறந்த ஒருவன், களவு செய்ய வேண்டிய தேவையில்லை என்று இருக்கும்போது, மாமன் மகளை மணப்பதற்குக் குலத்தொழிலாகிய களவு செய்தலை மேற்கொண்டே ஆகவேண்டும் என்ற, தாய்மாமனின் கட்டாயத்துக்கு உட்பட்டுக் களவு செய்து, அதனால் மரண தண்டனைக்கு ஆட்படும் அவல நிலையைக் கதைப்பாடல் சித்திரிக்கிறது. களவுத் தொழிலைக் குலத்தொழிலாக உடையவர்கள், அத்தொழில் தவறானது என்று இளந்தலைமுறையினர் விலக்க முனையும் பொழுதும், முன் தலைமுறையினர் வலுக்கட்டாயமாக அத்தொழிலில் 'வறட்டுக் குல கௌரவம்' என்ற காரணம் காட்டி ஈடுபட வைப்பதால் விளைந்த தலைமுறை மாற்றச்சிக்கலை அடிப்படையாகக் கொண்டுள்ள கதைப்பாடல் என்பதாலும்,

4. பதிப்பில் வெளியாகியுள்ள 'வன்னியடி மறவன் கதை'[215] என்ற கதைப்பாடலில், கதை நாயகனின் படு கொலைக்கு முன்பகை காரணமாகச் சொல்லப்பட்டிருத்தல் இக்கதைப்பாடலில் சுட்டப்படாததால், இந்தச் செய்திகள் மறைக்கப்பட்டதற்கானச் சிறப்புக் காரணங்களை வெளிப் படுத்த வேண்டும் என்ற ஆய்வு நோக்கத்தாலும் இக்கதைப் பாடல், பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பதிப்பில் மேற்கொண்ட சீர்மைகள்

1. சுவடியில் தொடர்ந்து வரிவரியாக எழுதப்பட்டிருந் தவை பாடல் அமைப்புப்படி பிரித்து எழுதப்பட்டு, வரி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

---

215. பதிப்பாசிரியர். டாக்டர் தி. நடராசன்.

2. பாடற் பொருளுக்கு ஏற்பச் சிறு தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தேவையான இடங்களில் வியப்பு, வினா, காற் புள்ளி, விடுபட்ட எழுத்துகளைக் குறிக்கும் (.....) என்ற குறிகள் இடப்பட்டுள்ளன. ஊகித்த எழுத்துகள் அடைப்புக்குள் அமைக்கப்பட்டுள்ளன.

4. முக்கியமான சொற்களுக்கு விளக்கக் குறிப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது. விளக்கக் குறிப்புகள் என்ற பகுதி, பாடலை அடுத்து அமைக்கப்பட்டுள்ளது.

5. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியும், துணை யெழுத்து (ா) ர என்ற எழுத்து வேறுபாட்டுடனும் எழுத்துச் சீர்திருத்த முறைப்படி எழுத்துகளை அமைத்தும், பதிப்பில் சீர்மை செய்யப்பட்டுள்ளது.

6. ர-ற, ல-ள-ழ, ண-ந-ன என்ற எழுத்துகள் வேறுபாடின்றி ஆளப்பட்டிருந்தவை முறையாக இருக்குமாறு மாற்றப்பட்டுள்ளன.

சில சான்றுகள்

சுவடியிலிருந்த வடிவம்	திருந்திய வடிவம்
அருமுகமே (6)[216]	அறுமுகமே
பிளைகள் (8)	பிழைகள்
நாவலற்கள் (11)	நாவலர்கள்
அனியாயம் (48)	அநியாயம்
பாசானம் (58)	பாசாணம்
தாள்வுமில்லை(21)	தாழ்வுமில்லை

இவற்றுடன் 'சுவி' என்பது போன்ற சுருக்கெழுத்து வடிவிலுள்ளவை 'சுவாமி' என்று விரிவான எழுத்துகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

கதைச்சுருக்கம்

தென்பாண்டி நாட்டில், வடநாட்டுச் சீமையில், ஊத்துமலைப் பகுதியை வன்னியர் குலத்தைச் சேர்ந்த

216. எண்கள் வரி எண்களைக் குறிக்கும்.

ராமசுவாமித் தேவர் என்பவர் காவல் தலைமை பூண்டு ஆண்டுவந்தார். உற்ற வயதில் 'தேவர் குளம்' என்ற ஊரைச்சேர்ந்த வன்னிச்சிப் பெண் கொடி ஒருத்தியை மணம் செய்து கொள்கிறார். வெகுநாட்கள் ஆகியும் குழவிப்பேறு கிட்டாததால் பல்வேறு தானதருமங்கள் செய்கின்றனர். அப்போதும் குழந்தை இல்லாததால் வன்னிச்சி பிள்ளைவரம் வேண்டி, சங்கரநயினார் கோயில் வந்து நாற்பதுநாள் தவசிருக்கிறாள். அரனார் சொற்படி, தானே வன்னிச்சிக்குக் குழந்தையாய்ப் பிறக்க ஒப்புக்கொண்டு, கிழ அந்தணர் போல் தோன்றிச் சங்கரனார் அவருக்குப் பிள்ளை வரம் தருகிறார். வரம் பெற்று ஊத்துமலை நாடு வரும் வன்னிச்சி, கர்ப்பமுற்று ஆண்மகவை ஈன்றெடுக்கிறாள். வன்னியராயன் என்று பெயர் சூட்டி உற்ற வயதில் கல்வி, வீரப் பயிற்சிகள் அளிக்கின்றனர். பதினேழு வயது நிரம்பியதும் திருமணம் செய்ய வேண்டித் தன் தமையன் மகளைப் பெண் கேட்க வன்னிச்சி கிளம்புகிறாள். 'சாதித்தொழிலாகிய காவல் காத்தல், களவு செய்தல் போன்றன அறியாத வன்னிராயனுக்குப் பெண் கொடுப்பதில்லை' என்று தமையன் கூறி விட, வருத்தத்துடன் வன்னிச்சி வீடு திரும்புகிறாள். செய்தியைத் தெரிந்து கொண்ட வன்னியராயன் 'களவு செய்து மாமன் மகளை மணப்பேன்' என்று கூறிப் புறப்படுகிறான். தீய சகுனங்களைப் பொருட் படுத்தாமல் திருநெல்லை வந்து சேர்கிறான். சின்னாக் கன்னாள் என்ற ஒரு தாசி வீட்டில் தங்கிக் கொண்டு, அவ்வூரில் களவு செய்யும் தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்த பொழுது, நெல்வேலி நாதர், காந்திமதி வடிவாளுக்கு ஆனித்திருவிழா நடைபெறுகிறது. அனைத்து ஆடை, அணிகலன்களையும் பூட்டி வீதியுலாவாகக் கொண்டுவந்து, பின் திரும்பக் கோயிலில் வந்து, ஆடை, அணிகலன்களைக் கழற்றிக் கருவூல அறையில் வைத்துத் திருக்காப்பு இடுகின்றனர்.

வன்னியராயன் நடு இரவில், கருவூல அறையில் கன்னமிட்டு ஆடை, அணிகலன்களைத் திருடிவந்து சின்னக் கன்னாள் வீட்டில் மறைத்து வைக்கிறான். அடுத்த நாள் காலை, கருவூல அறையில் கன்னம் வைத்து, திருட்டு, நடந்ததை அறிந்த கோவிலார்கள், காவல் துறையினரிடம்,

தெரிவிக்கின்றனர். தெருத்தெருவாய்ச் சுற்றிப்பார்த்து, சின்னக்கண்ணாள் வீட்டில் பதுக்கிவைத்திருந்த ஆடை, அணிகலன்களைக் காவல் துறையினர் கண்டறிந்து, அப்போது ஆட்சியிலிருந்த வடமலையப்ப பிள்ளையிடம், கோயில் நகைகளைக் கொள்ளையடித்த வன்னிராயனைத் தக்கபடி தண்டிக்கக்கோர, அவர் வெட்டிவிடுமாறு ஆணை பிறப்பிக்கிறார். ஆணை நிறைவேற்றப்படுகிறது.

அவன் இரத்தத்தில் புரண்டெழுந்து ஓடிய அவனது நாய், வன்னிச்சியைப் படுகளத்துக்கு அழைத்துவருகிறது. வன்னிச்சி ஒப்பாரி வைத்துப் புலம்பித் தன் இன்னுயிரையும் நாவில் சீலை சுத்தி மாய்த்துக்கொள்கிறாள். வன்னியராயன், தான் பட்ட எட்டாம் நாள் பாரிவேட்டையாட வந்து, தன்னைக் கொன்ற இடமான கருசக் குளத்தில் அடாத செயல்கள் செய்கிறான். ஊரார் குறிகேட்க, வன்னியராயன் கொண்ட சினமே நடைபெறும் தீய செயல்களுக்குக் காரணம் என்று அறிந்து, அவனுக்கு நிலையமிட்டுப் பீடம் அமைத்துப் பூசை நடத்த, ஊரவர்களைக் காத்து வருகிறான் வன்னியராயன்.

கதைப்பாடல்பற்றிய சிறப்புக் குறிப்புகள்

1. 'வன்னியராயன் எஙகள் தெய்வச் சிகாமணி' (4). என்று புலவர் கூற்றாக வருவதனாலும்,

2. வன்னியராயன் என்று கதைப்பாடலில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்,

3. 'நிலையம் போட்டு குடை கொடுத்தார்
நீதியுள்ள வன்னிய ராயனுக்கு' (507)

என்று கதை இறுதி வரியிலும் அமைவதாலும், வன்னியன், வன்னியன் தலைவன் (வன்னியராயன்) என்று அமையும் கதைப்பாடல் தலைவன் பெயர் இயற் பெயராக இல்லாமல், இனப்பெயராக உள்ளதால், இவ்வினம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளுதல் கதைப்பாடலை முழுமை யாகப் புரிந்துகொள்ள உதவும் என்ற நோக்கில், இக்கதைப் பாடல் குறிப்பிடும் வன்னியர் யார் என்பது பற்றிய கருத்துகள் ஆராயப்படுகின்றன.

இக்கதைப்பாடலில், வன்னியராயனின் தந்தை 'ராமசுவாமி தேவர்'[217] என்று அழைக்கப்படுகிறார்.

'தேவர்' என்பது மறவர்களுக்கு உரிய பட்டப்பெயராகும்.

வன்னியர்கள் மிகுதியாக வாழ்ந்த ஊர் தேவர்குளம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது.[218]

வன்னிராயனின் தந்தை ஊத்துமலை நாட்டில் காவல் தலைமை பூண்டு ஆட்சிக்கு உறுதுணையாக இருந்திருக்க வேண்டும்.

> ''ஊத்துமலை நாடதிலே
> உகந்துமங்கே ஆண்டிருந்தார்
> ராமசாமித் தேவருமே
> நலமுடனே ஆண்டிருந்தார்'' (16-17)

என்று அமைந்துள்ள கதைப்பாடல் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

மேலும், 'வன்னியடி மறவன் கதை' என்ற கதைப்பாடலிலும், வன்னியடி மறவனின் தந்தை காடுகாவல் பணி மேற்கொண்டிருந்ததாகச் செய்தி உள்ளது.[219] காடுகாவல் பணியை மறவர் இனத்தவர்கள் மேற்கொண்டிருந்தமைக்குப் பல கதைப்பாடல்களில் சான்றுகள் உள்ளன.[220]

நாடுகாவல், காடுகாவல் பணி செய்த இவர்களே தங்கள் காவலுக்குட்படாத பகுதிகளில் களவு செய்யும் கள்ளர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

---

217. ''ராமசுவாமித் தேவருமே
நலமுடனே ஆண்டிருந்தார்'' (17)
''ராமசுவாமித் தேவருக்கு
நலமுடன் கல்யாணம் முடிக்க வென்று''(23)

218. ''தேவர் குளம் தன்னதிலே
சிறந்த வன்னியர்கள் ஆண்டிருந்தார்'' (24)

219. ''காடுகாவல் ஆண்டிருந்த கட்டழகன்
மாடப்ப தேவனை ....'' (427 - 428)

220. பலவேச சேர்வைக்காரன் கதை, சின்னத்தம்பி கதைப்பாடல்களை முக்கியச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

உக்கிரங்கோட்டை வன்னியர்கள் மாடு களவு செய்ததை முத்துப்பட்டன் கதை தெரிவிக்கிறது.

கொண்டையங்கோட்டை மறவர் படைத்தலைவர்கள் நெல் களவு செய்ததை தடிவீரசுவாமி கதைப்பாடல் கூறுகிறது.

கள்ளர்கள் செய்த அட்டூழியத்தை மதுரைவீரன் கதைப்பாடலும் விவரிக்கின்றது. இவர்கள் கொட்டத்தை அடக்குவதற்கென்றே மதுரைவீரனைத் திருமலை நாயக்க மன்னர் தக்க வழியில் பயன்படுத்திக் கொண்டமையை அக்கதைப்பாடல் விளக்குகிறது.

எனவே காவல் தலைமை பூண்டிருந்த மறவர் இனத்தவர்களே களவுத் தொழில் மேற்கொள்ளும் கள்ளர்களாகவும் இருந்தமை தெளிவாகிறது.

இந்த மறவர்களுக்கு வன்னியர் என்பது பட்டப் பெயராக அமைந்த ஒன்று என்று தெரியவருகின்றது.

வன்னியர் என்பது அம்பலகாரன், வலையன், சில மறவர்களுக்குரிய பட்டப்பெயர் என்று அபிதான சிந்தாமணி தெரிவிக்கின்றது.

வன்னியன், வன்னிக்குட்டி என மறவர் இனத்தவர் அழைக்கப்படுவதாகப் பிறநூல்களிலும்[221] குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆக, இவ்வனைத்துக் குறிப்புகளையும் வைத்துக் காணும்பொழுது, இக்கதைப்பாடல் குறிப்பிடும் வன்னியர் என்பது நாடுகாவல், காடுகாவல் தலைமைபூண்ட தம் காவலுக்குட்படாத பிறபகுதிகளைக் களவு செய்து கொள்ளையடித்தலையும் தொழிலாகக் கொண்ட, மறவர் இனத்தவரின் பட்டப்பெயராக இது ஆளப்பட்டுள்ளது என்பது தெரியவருகின்றது.

2. கதைத்தலைவனின் பெயருக்குக் காரணம் கூறுவது கதைப்பாடல் மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இக்கதைப்பாடலிலும் பல கதைப்பாடல்களில் போன்று, பொருத்தமில்லாத பெயர்க்காரணம் கூறப்பட்டுள்ளது.

---

221. "Some Maravans are known as Vanniyar or Vannikutti" E. Thurston, Castes and Tribes of South India, p.321.

மைந்தனுட அழகு கண்டு வன்னியனென்று பெயர் வைத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. வன்னியர் குலத்திலு தித்ததாலும், வன்னி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவபெரு மானின் அருளால் தோன்றியவன் என்பதாலும் இப்பெயர் அமைந்திருக்கக்கூடும். வன்னி மரத்தின் கீழ் உள்ள சிவனின் பெயர் என்ற பொருளில், 'வன்னியடி மறவன்' என்றும் வேறு ஒரு கதைப்பாடலில் (வன்னியடி மறவன் கதை - பதிப்பாசிரியர் தி. நடராசன்) இவன் பெயர் சுட்டப்படல் நோக்கத்தக்கது.[222]

வன்னியராயன் என்று பல இடங்களில் கதைப்பாடலில் இவன் சுட்டப்படல், காவல் தொழில் புரிந்த வன்னியர் களின் தலைவனாய், காவல் தலைமைப்பதவி வகித்தவனாய் இருந்ததைச் சுட்டி வந்திருத்தல் வேண்டும்.

ஆயின், இந்தக் குறிப்பிட்ட கதைப்பாடலில் இவனோ, இவன் தந்தை ராமசுவாமித் தேவரோ, காவல் தலைமை ஏற்றிருந்த செய்தி தெளிவுறச் சுட்டப்பெறவில்லை. வன்னியடி மறவன் கதையில் தந்தை பெயரும் மாடசாமித் தேவர் எனப் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அக்கதைப்பாடலில் மாடசாமித்தேவர் காடுகாவல் தலைமைப் பதவி வகித்து வந்ததாகவும், பொறாமை காரணமாக மறவர்களாலேயே அவர் வெட்டப்பட்டு மாண்டதாகவும், அவர் மகனாகிய வன்னியடி மறவன் அடுத்ததாகக் காவல் தலைமைபூண்டு வந்ததாகவும், களவு செய்யச் சென்ற தாகவும் செட்டியொருவருடன் ஏற்பட்ட சண்டையால் அரண்மனையார் வன்னியடி மறவனையும் வெட்டிக் கொன்றுவிட்டதாகவும் மிகச் சுருக்கமாக, ஆயின் தெளிவாக இக்குறிப்புகள் சொல்லப்பட்டுள்ளன. தந்தை பாத்திரப் பெயர் மாறுபட்டிருப்பினும், கதை நிகழ்ச்சிகள் கதை நடந்த களம், கதைத்தலைவனின் செயல்கள், அவனின் சோக முடிவு என்று இவற்றை வைத்துப்பார்க்கும்பொழுது, வன்னியராயன் கதையும், வன்னியடி மறவன் கதையும் ஒரே கதைதான் என்பது உறுதிப்படுகின்றது. வன்னியடி

222. ''வன்னியப்பர் தந்த பிள்ளை வன்னியடி மறவ னென்றார்'' *(415)*

மறவன் கதையில் உள்ள முக்கிய நிகழ்ச்சிகள் வன்னியராயன் கதையில் கூறாது விடப்பட்டு, வன்னிய ராயனின் மரணத்துக்கான உண்மைக் காரணம் மறைக்கப்பட்டு விட்டதாகக் கொள்ள இடமுள்ளது. வன்னியராயன் மாமன்மகளை மணப்பதற்காகக் கோயில் நகைகளைத் திருடியதாய், ஆட்சியிலிருந்த வடமலையப்ப பிள்ளையால் வெட்டுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டு இறந்தான் என்று கதைப்பாடல் கூறும் காரணம் முழுமையானது அல்ல என்பது தெரிகிறது. சின்னத்தம்பி கதையில் சின்னத்தம்பி தன் குலத்தொழிலான சக்கிலியர் செய்யும் தொழிலைச் செய்யாமல், நாடுகாவல் தொழிலுக்கு வந்ததால் பொறாமை கொண்டு, நாடுகாவல் தொழிலைப் பரம்பரையாகச் செய்துவரும் மறவர் இனத்தாரும், ஆட்சிபுரியும் மேற்குலத்தாரும் அவனைத் திட்டமிட்டுக் கொல்கின்றனர். (Ed. Dr. R. Nirmala Devi. The wandering voice, 1987)இந்த உண்மைக்காரணம் சிலசுவடிகளில்[233] மறைக்கப்பட்டு அப்பாவியான, அரண்மனை வாசலும் அறியாத அவனைப்[224] புதையலெடுக்க நரபலிக்காகக் கொன்றனர் என்று அமைந்துள்ளமை போன்று, இந்த வன்னியராயன் கதையிலும் உண்மையான காரணம் கூறப்படவில்லை என்று கருத இடம் உள்ளது.

காவல் தலைமைபூண்டு, ஊத்துமலை நாடதிலே உகந்து ஆண்டிருந்த ராமசுவாமித் தேவர், இறந்தது எவ்வாறு என்பது இவ்வன்னியராயன் கதைப்பாடலில் குறிப்பிடப்பட வில்லை. வன்னியராயன் வெட்டுப்பட்டவுடன் படுகளத்துக்கு அவன் தாய் மட்டுமே வருவதாகக் காட்டப்பட்டுள்ளதால், வன்னியராயனின் தந்தை வன்னியராயனின் இறப்புக்கு முன்னரே இறந்திருக்க வேண்டும். வன்னியடி மறவன் கதையில்,

---

223. சுவடி எண்.11613 - கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசை நூலகச் சுவடி.

224. ''அரமனையு மறிபேனே ஆத்தான மறிபேனே
வீடுவிட்டு நானுமிப்போ வெளிபேறி யறிபேனே''

சு.எண்.11613, கே.ப.க.. இ.ம.13.

"காடுகாவல் ஆண்டிருந்த கட்டழகன்
மாடப்ப தேவனை வெட்டிவிட்டார் மறவர்கூடி
ஊத்துமலை மறவர் எல்லாம்..." (427-429)

என வன்னியடி மறவனின் தந்தை, காவல் தொழில் செய்த மறவர் இனத்தாராலேயே வெட்டப்பட்டு இறந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இங்கே மாடப்ப தேவன் என்று பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வன்னியராயன் கதை, வன்னியராயனின் தந்தை பெயர் ராமசுவாமித் தேவர் என்கிறது. இவ்வாறு கதைப்பாத்திரப் பெயர்கள் மாற்ற முற்றுக் காணப்படுதலைச் சின்னத்தம்பி கதை போன்ற சுவடிப் பிரதிகளிலும் காணமுடிகிறது.[225] வன்னியராயனின் தந்தை மறவர்களால் முன்பே வெட்டப்பட்டு இறந்திருக்க வேண்டும். தந்தையின் மரணத்தின் பின்னர் வன்னியராயன் காடுகாவல் தொழிலில் ஈடுபட்டு வந்ததாக வன்னியடி மறவன் கதை தெரிவிக்கிறது.

"போறானே களவு செய்ய அரையில் கச்சை வேட்டி கட்டி
அழகு பார வளையமுடன் சிக்கெனவே ரெட்டபங்கு
சிறந்தமறத் தலைவனுக்கு காடுகாவல் ஆண்டுவர" (433-435)

என அமைந்துள்ளது. ஆயின் வன்னியராயன் கதை காவல் தொழில் செய்யாத வன்னியராயனுக்குப் பெண் கொடுப்பதில்லை என்று தாய்மாமன் மறுத்ததாகச் சொல்கிறது.

'எத்தனை திரவியம் இருந்தாலும் இனத்தொழிலு வேணுமடி' (233) என்று வன்னியராயனின் தாய்மாமன், தன் தங்கையாகிய வன்னியராயனின் தாயிடம் கூறுவது, இனத்தொழிலாய காவல் காக்கும் உரிமையை இழந்திருக்கின்ற வன்னியராயனுக்குப் பெண்தர இயலாது எனக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. தந்தைக்குப்பின் இழந்த

---

225. சின்னத்தம்பி கதை (கே.ப.சு.11613)	சின்னத்தம்பி கதை (ஆ.ஆ.நி.சுவடி)
1. சோணையா பிள்ளை	சோமப் பிள்ளை
2. கறுப்பன் குடும்பன்	மாடன் சாம்பான்
3. தன்மராய பிள்ளை	தருமராசா

காவல் உரிமையை மீட்டும் பெறாத கோழையாகிய வன்னியராயனுக்குப் பெண் கொடுக்க முடியாது என்பது மாமன் கருத்தாயிருத்தல் போன்று கதைப்பாடல் காட்டுகிறது.

''ஒன்மகன் வன்னிய ராயனுக்கு
உற்ற தொழில் தெரியாது
சாதித் தொழில் தெரியாதே
தாடாளன் ஒன்மகன்தான்
கம்பெடுத்துக் காவல் காற்கக்
களவு செய்யத் தெரியாது'' (224-226)

என்று மாமன் சொல்லவும், அதனால் தன்மான உணர்வு உந்தவே களவு செய்யப் புறப்படுவதாகவும் வன்னி யராயன் கதை தெரிவிக்கிறது.

இதில் காவல் காத்தல், களவு செய்தல் என்ற இரு செயல் களை மறவரின் இனத்தொழிலாக மாமன் குறிப்பிட்டிருக்கும் பொழுது, வன்னியராயன் களவு செய்து, 'தான் குலத்தொழிலில் வல்லவனே' என வலியுறுத்திக் காட்ட விழைந்ததேன்? என்பதும் சிந்தனைக்குரியதாக உள்ளது.

காவல் தொழில் புரிவதில் ஏற்பட்ட சிக்கலினால் மறவர்கள் வன்னியராயனின் தந்தையை வெட்டிக் கொன்று விடுவதால், வன்னியராயனுக்குக் காடு காவல் உரிமை கொடுக்கப்பட்டிருந்தாலும், அதில் உள்ளூரப் புகைச்சலும், சிக்கலும் இருந்திருக்கிறதெனத் தெரிகிறது. அதனாலேயே மாமன் கூறியதும், காவல் தொழிலில் ஈடுபட இயலாத நிலை உள்ள அவன், களவுத் தொழில் செய்யப் புகுகிறான் எனக் கருத இடமுள்ளது. வன்னியடி மறவன் கதையில் 'பொான் பாண்டிய தேவன்' என்பவனுடன் சேர்ந்து களவு செய்ய வன்னியராயன் கிளம்பியதாகவும், இடையில் அரண்மனைச் செட்டி ஒருவனுடன் ஏற்பட்ட வாய்ச்சண்டை முற்றி, செட்டியைச் செவிட்டிலடித்து விட, அரண்மனையார் கூடி வன்னியராயனை வெட்டிக் கொன்று விட்டதாகக்

குறிப்பிடப்பட்டுள்ளது.[226] பதினான்கே வரிகளில் இத்தகு செய்திகளை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விடுதலால், விளக்கம் தெளிவாக இல்லை. அரண்மனைச் செட்டியைக் கன்னத்தில் அடித்ததால் அரண்மனையார் வெட்டிக் கொல்ல ஆணையிட்டனர் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை. வெட்டிக் கொல்லப்பட்டதற்கு முன்பகை காரணமாயிருத்தல் கூடும்.

வன்னியராயன் கதையில் கோயில் நகைகளைத் திருடியதால் காவல் துறையினரிடம் பிடிபட்டு, ஆட்சி செலுத்தி வந்த வடமலையப்ப பிள்ளையின் ஆணையின் படி வெட்டிக் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. 'களவுக்குக் கொலைத் தண்டனை' என்பது சிலப்பதிகார காலத்திலேயே வழக்கிலிருப்பதால் களவுக்கு மரண தண்டனை என்ற இக்காரணம் பொருத்தமாகத் தோன்றுகிறது. அரண்மனைப் பொருள், கோயிலுக்குச் சொந்தமான பொருள் போன்றன உயரியவாதலாலும், களவை மேற்கொண்டவன் களவைக் குலத்தொழிலாகக் கொண்டவன் என்பதனாலும், களவுப்பொருள் திரும்பக் கிடைத்த போதும் மரண தண்டனை அளிக்கப் பட்டிருக்கிறது. மாமன் மகளை மணப்பதற்காகக் குலத்தொழில்

---

226. ''வெள்ளி நல்ல கிழமையிலே அமாவாசி திவதஷிலே
போறானே களவு செய்ய அரயில் கச்சை வேட்டிகட்டி
அழகுபார வளயமுடன் சிக்கனவே ரெட்ட பங்கு
சிறந்த மறத் தலைவனுக்கு காடு காவல் ஆண்டுவர
கண்டானே செட்டிதனை பஞ்சிக்கு புண்ணாக்கு மாறவந்த
பாழும் அரமனை செட்டியவன் பஞ்சிக்கு புண்ணாக்கு கொடுப்பாயோ
பார்புகழும் செட்டியாரே யென்று கேள்க்கு வேளையிலே
எட்டி செவிட்டி லடித்திடுவான்
அடிபொறுக்க மாட்டாமல் அபயமிட்டு ஓடுவானாம்
அரமணையா ரிடமதிலே யிடக்காட்டில் ஒரு மறவன்
என்னையுமே அடித்துவிட்டான் என்றுசொன்ன வேளையிலே
அரமணையார் ஏதுசொல்வார் இளக்கு முகமாயிருத்தி
வெட்டிவிடு மறவனையும்
வெட்டி விட்டார் அரமணையார் ஆடறுத்த களம் போலே''
(431 - 444).

என்று குறிக்கப்பட்ட களவுத் தொழிலை முதன்முதலாகச் செய்ய வந்து பிடிபட்டுக் கொலைத் தண்டனைக்கு ஆளான வன்னியராயனின் முடிவு மிகுந்த சோகமயமானது என்பதில் ஐயமில்லை. களவு செய்தலைக் குலத்தொழில் என்று கூறிக்கொள்வோருக்கும், களவு செய்தலை மரண தண்டனைக்குட்படுத்தும் மாபெரும் குற்றம் எனக்கருதும் ஆட்சியாளருக்கும் இடையில் வன்னியராயன் சிக்கிப் பலியாவதை மிகச் சிறப்பாக இக்கதைப்பாடல் சுட்டிக் காட்டுகிறது.

வன்னியடி மறவன் கதையையும், இந்த வன்னியராயன் கதைப்பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, வன்னியராயன் கொல்லப்பட்டதற்குக் காவல் தொழில் செய்துவந்த மறவர்களின் பகைமையுணர்ச்சி ஒரு முக்கிய காரணமாயிருத்தல் கூடும் எனக் கருதத் தோன்றுகிறது. இரு கதைப்பாடல்களிலும் இது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை என்றாலும், வன்னியடி மறவன் கதையில் காடுகாவல் செய்துவந்த இவன் தந்தையை மறவர்கள் வெட்டிவிட்டனர் என்ற செய்தி உள்ளதால், மகன் காலத்திலும் இவர்களின் உட்பகை தொடர்ந்திருக்கக்கூடும் எனக் கருத இடமுள்ளது. வன்னியராயன் கதையில் வன்னியராயனால் திருடப்பட்ட பொருட்கள் திரும்பக் கிடைத்த பின்னும் ஆட்சியிலிருந்த வடமலையப்ப பிள்ளையால் வெட்டுமாறு ஆணை பிறப்பிக்கப்பட, மறவர்களின் சூழ்ச்சியும் ஒரு பின்னணியாக இருந்திருக்கக் கூடும். காவல் தொழில் புரிந்துவந்த மறவர்களிடையே தங்கள் காவல் உரிமை தொடர்பாக முன் தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறை வரைக்கும்கூட இத்தகு உட்பகைகள் உச்சத்தில் இருந்து, கதைத்தலைவர்களின் கொலைத்தண்டனைக்குப் பின்னனியாக இருந்திருக்கின்றதை பலவேச சேர்வைக்காரன் கதை[227] போன்ற கதைப்பாடல்களும் தெரியப்படுத்துகின்றன.

பலவேச சேர்வைக்காரன் கதையில் பெரிய பலவேசம், சின்னப் பலவேசம் என்ற இருவரும், தம் தந்தையிடம்

227. The Unsung Melodies-ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு.

அரசூரில் தமக்குக் காவல் உரிமையுண்டு என்று கேட்டறிந்து, அங்கே காவல் தலைமைப் பொறுப்பு வகித்து வரும் பூலாவுடையத் தேவனும், மற்றும் அங்குள்ள காவல் தலைவர்களும் கொடியவர்கள் என்று தந்தையும், மாமனும் தடுத்தும் கேளாது, தங்களுக்குரிய காவல் உரிமையைப் பெற அரசூர் செல்வதாகவும், அங்கேயே வீடு கட்டித் தங்கி பூலாவுடையானின் காவலுக்குட்பட்ட பகுதிகளில் கொள்ளை யடிப்பதாகவும், பூலாவுடையானும், ஒன்பது குறிச்சி நாட்டாரும் பலவேசக்காரரை ஒடுக்கத் திட்டம் தீட்டி வெள்ளைக்காரன் சின்னத்துரையிடம் படை உதவி பெற்று, பலவேசக்காரரிடமிருந்து தந்திரமாக ஆயுதங்களைப் பெற்றுக் கைமாற்றிவிட்டு, மூன்று நாட்கள் உணவு ஏதும் தராது கட்டிப்போட்டு, வெட்டிக் கொன்றதாகவும் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று, வன்னியராயன் மரணத்துக்கும் காவல் தொழில் புரிவதில் தந்தை காலத்தில் வந்த பமைமை, மகன் காலத்திலும் தொடர்ந்து வன்னியராயனின் மரணத்துக்குப் பின்னணியாக இடம்பெற்றிருத்தல் கூடும்.

கதைப்பாடல் குறித்த பிறகுறிப்புகள்

கதைப்பாடலின் காலம்

இந்த வன்னியராயன் கதைப்பாடல் நிகழ்ச்சிகள் தடிவீர சுவாமி கதைப்பாடல் நிகழ்ச்சிகள் போன்று 16ஆம் நூற்றாண்டில் நடந்தவை எனக்கொள்ள இடமுள்ளது. தடிவீர சுவாமி கதையின் கதைத்தலைவன் மந்திரமூர்த்திக்கு மரண தண்டனை அளித்த வடமலையப்ப பிள்ளையே வன்னி யராயனையும் கொல்ல ஆணையிட்டதாகத் தெரிகின்றது. இந்த வடமலையப்ப பிள்ளை 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முக்கூடற்பள்ளு, கிளை வளப்ப மாலை முதலிய வற்றில் குறிப்பிடப்படுபவர் ஆவார். இவரது காலம் 16ஆம் நூற்றாண்டு என்பதால் வன்னியராயன் கதை நிகழ்ச்சிகளும் 16ஆம் நூற்றாண்டளவில் நடைபெற்றுக் காலந்தோறும் செவி வழியாக, வாய்மொழியாக, சுவடி வடிவில் இடம் பெற்று வந்து, குறிப்பிட்ட இச்சுவடியாக அமைந்திருக்க வேண்டும். இச்சுவடியில் தாசில்தார், போலீசு, சப்பினுசு

(சப்-இன்ஸ்பெக்டர்) ஏட்டு என்ற ஆங்கிலச் சொற்கள் அவ்வவ்வாறே இடம்பெறுதலால் ஆங்கிலேயர் ஆட்சியும், இவர்களது ஆட்சியால் வேரூன்றிய ஆங்கிலச் சொற்களும் மக்கள் மத்தியில் பரவலாகக் கால்கொண்டுவிட்ட காலகட்டத்தில், இக்குறிப்பிட்ட சுவடி எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

"நிலையம் போட்டு குடை கொடுத்தார்
நீதியுள்ள வன்னிய ராயனுக்கு"

என்று மட்டுமே இறுதி வரிகள் அமைந்து முற்றுப்பெறாது நிற்றலால், முற்றியது, முற்றும், குருவே துணை, பின்னும் இறுதியில் இன்ன காலகட்டத்தில் இச் சுவடி எழுதப்பெற்றது என்பன போன்ற குறிப்புகள் இவ்வரிகளின் பின் அமைந்திருத்தல் வேண்டும். இவை எவையும் இல்லாது முற்றுப்பெறாமல் இச்சுவடி உள்ளதால், எப்பொழுது படி எடுக்கப்பட்ட சுவடி என்பதை அறிய வாய்ப்பில்லாது போய்விட்டது.

கதை நிகழ்ச்சிகள்

கதை நிகழ்ச்சிகள் கோர்வையாக, படிப்பவர் மனதில் எளிதில் பதியும் வண்ணம், எளிய இனிய நடையில் விவரிக்கப்பட்டுள்ளன.

கதையின் முன்பகுதி நிகழ்ச்சிகள் கதைப்பாடல் மரபுகளாலும், மக்கள் மத்தியில் உலவிவந்த நம்பிக்கைகளாலும் பின்னப்பட்டுள்ளன.

1. வன்னியராயன், கணபதி, சரஸ்வதி வணக்கம் (1-10)

2. நாட்டு வளம், நகர்ச்சிறப்பு போன்றவை கதைப்பாடல் மரபு வழி (11-16) அமைந்துள்ளன.

3. நன்னேரம் பார்த்து மணம் முடித்தல் (28)

4. நீதிக்கு மாறாக நடந்தால் குழந்தை பிறக்காது என்ற நம்பிக்கை (48-55).

5. பிள்ளையில்லாக் குடும்பத்தில் நற்காரியங்கள் நடப்பதில்லை. நல்லவர் அவர்கள் வீடு வருவதில்லை என்ற எண்ணம் (46-47)

6. தருமம் செய்தால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை *(60-61)*

7. குறிப்பிட்ட கோயில் சென்று தவசு செய்தால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை *(65)*

8. பல ஊர் கடந்து குறிப்பிட்ட கோவில் வரல் என்ற கதைப்பாடல் மரபமைத்தல் *(70-77)*

9. கோவில் வரம் வேண்டிப் பூசை செய்யும் முறைகள் *(78-89)*

10. அரனார் ஆணைப்படி சங்கரலிங்கரே குழந்தை யாகப் பிறத்தல் என்ற கதைப்பாடல் மரபு *(90-110)*

11. தெய்வம் அந்தணர் வேடத்தில் வந்து வரம் தரல் என்ற கதைப்பாடல் மரபுப்படியான நிகழ்ச்சிகள் *(115-125)*

12. கருவுறல் - பின் ஓரோர் மாதமும் உடல் அடைந்த மாறுதல் என்ற நிகழ்ச்சிகள் கதைப்பாடல் மரபாக அமைதல் *(136-148)*

13. பிரசவ வேதனையால் பிதற்றுபவை, மருத்துகம் (மருத்துவக்கிழவி) தேற்றுகை, பின் பிரசவ நிகழ்ச்சிகள் போன்ற கதைப்பாடல் மரபுகள் இக்கதைப்பாடலில் விரிவாக இடம்பெற்றுள்ளன. *(151-175)*

14. நன்னேரத்தில் குழந்தை பிறந்தது என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது *(167-169)*

15. குழந்தை பிறந்ததும், செய்ததும், வளர்ப்பும் என்ற கதைப்பாடல் மரபுகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. *(170-204)*

கதையின் திருப்புமுனை

பல கதைப்பாடல்களிலும் அமைந்து கதைப்பாடல் மரபுகளாக ஆகி விட்ட நிகழ்ச்சிகளாலும், நம்பிக்கைகளாலும் நடந்து வந்த கதையில் வன்னிச்சி, வன்னிய ராயனுக்குப் பெண் பேசச் சென்ற நிகழ்ச்சி கதையின் திருப்புமுனையாக அமைந்து கதைப்போக்கை மாற்றிச் செல்வதைக் காணலாம்.

வன்னியராயனுக்குப் பெண் கொடுக்க முடியாது என்பதற்கு வன்னியராயனின் தாய்மாமன் கூறும் காரணம், கதையின் முக்கிய கருவாகவும், கதையின் பிற்பகுதியை வளர்த்துச் செல்லும் தக்க கருவியாகவும் இக்கதையில் அமைந்துள்ளதைப் பார்க்கலாம். தாய்மாமன் பெண் தர மறுத்த உண்மைக் காரணத்தை, 'மகன் மனம் நோகலாகாதே' என்பதற்காக வன்னிச்சி மறைத்து, வன்னியராயனிடம் கூறும் பிற காரணங்கள் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கைகள் அடிப்படையில் அமைந்துள்ளன. நஞ்சுக்கொடி கழுத்தில் சுத்தியிருக்கப் பிறந்த பெண்ணும், கரண்டைக்கால் பருத்த பெண்ணும் குடும்ப வாழ்க்கைக்கு ஒத்து வரமாட்டாள் என்ற கருத்து மக்களிடையே நிலவியமையைப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன (247-250)

பின்னர் உண்மைக் காரணத்தை அறிந்துகொண்ட வன்னியராயன், 'தம் குலத்தொழிலாகிய களவுத்தொழில் செய்வதில் தான் வல்லவனே' என்பதை மாமனுக்கு நிலைநிறுத்திக் காட்ட, கோயில் நகைகளைக் களவாடிப் பிடிபட்டு வெட்டுப்பட்டு மடிந்ததாகக் கதைப்பாடல் வளர்ந்து முடிவு பெறுகிறது.

கதையின் பிற கூறுகள்

1. காவல் தொழில் புரியும் இனத்தில் பிறந்தவானதலின், வன்னியராயன் வீரப்பயிற்சிகளை மேற்கொண்டமை சிறப்பாக இக்கதைப்பாடலில் பேசப்பட்டுள்ளது. மல் வேட்டை, சிலம்பத்தொழில், மடிபிடி, அடிபிடி, ஆனையேற்றம், குதிரையேற்றம், வேட்டைநாய் கைப் பிடித்து வேட்டைத் தலைவருடன் காடு சுத்தி கரடி, வேங்கைப்புலி குத்தி வேட்டையாடுதல் முதலிய இவற்றைத் தன் பன்னிரண்டு - பதினேழு வயதில் மேற்கொண்டு, வீரமிகு வாலிபனாக வளர்ந்ததாகக் கதைப்பாடல் சிறப்பிக்கின்றது (188 - 196). கதைத் தொடக்கத்தில் பாடலாசிரியர் புலமாடக்கோன் அவர்கள், தம் புலவர் கூற்றாக அமைத்துள்ள வன்னியராயன் வாழ்த்திலும் அவனை, சக்கரம், வட்டப்பரிசை, வல்லயம் போன்ற

ஆயுதங்கள் கைப்பிடித்துள்ள ஒரு வீரனாகவே காட்டுகிறார். காடுகாவல் தொழில்புரிந்த ஒரு வீரனுக்கு வீர மகனாகப் பிறந்த வன்னியராயன், தாய்மாமனின் சொல்லுக்காகக் கோயில் நகையைத் திருடி அகப்பட்டு, வெட்டுப்பட்டு மாண்டான் என்றமைந்துள்ள கதை நிகழ்ச்சிகள் இவனை மிகுந்த சோகப்பாத்திரமாகப் படைத்துக் காட்டுகின்றன.

2. வெளியூர் செல்லும் கதைத்தலைவன் தாசி வீட்டில் தங்குவதாகப் பல கதைப்பாடல்கள் காட்டுகின்றன. சான்றாகச் சின்னத்தம்பி கதை,[228] உச்சினி மாகாளி கதை[229] போன்ற கதைப்பாடல்களைக் காட்டலாம். இந்த வன்னியராயன் கதையிலும் வன்னியராயன் திருநெல் வேலியில் வந்து பெரிய கண்ணாள், சின்னக்கண்ணாள் என்ற அக்கா, தங்கைகளான தாசியர்களில் சின்னக் கண்ணாள் வீட்டில் தங்கி, அவளுடன் கூடி இருந்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. (321-337). வெளியூருக்குச் செல்லும் ஆடவர்கள் தாசி வீட்டில் தங்குவதும், மணமாகும் முன்னே தாசியுடன் தொடர்பு கொள்வதும் தவறாகக் கருதப்படாத காலகட்டத்தில் எழுந்த கதைப்பாடலாதலின், மாமன் மகளை மணப்பதற்காக இனத்தொழில் என்று கருதப்பட்ட களவுத் தொழிலைச் செய்ய வந்த வன்னியராயன் தாசி வீட்டில் தங்கினான் என்பதும், அவளுடன் தொடர்பு கொண்டான்[230] என்பதும் இவனது பாத்திரப்படைப்புக்கு இழுக்குச் சேர்ப்பவையாக இல்லை எனலாம்.

3. தந்தையின் காலத்துக்குப்பின் காடுகாவல் உரிமையை இழந்திருந்த வன்னியராயன் [231] மாமன் மகளை

---

228. சுவடி எண்.11613 - கே.ப.சு.

229. பதிப்பாசிரியர் முனைவர் இரா. நிர்மலாதேவி, The Wandering Voice *பக்.74*

230. ''சின்னக் கண்ணாள் வீடதிலே
சிறப்பாக யிருக்கும் போது
சாப்பிட்டு யிளைப்பாறி
தாம்பூலம் தான்தரித்து
சப்ர முஞ்சல் கட்டிலிலே
சயனஞ் செய்தா ரிருபேரும்'' (335-337)

231. 'வன்னியடி மறவன் கதை' மூலம் ஊகித்த கருத்து.

மணப்பதற்காகத் திருட்டுத் தொழிலை மேற் கொண்டான் என்ற சொந்தக் காரணம் கூறப்பட்டுக் கதை நாயகனின் பண்பு கீழிறக்கப்பட்டுள்ளது. கோயில் நகையைத் திருடினான் எனக் கூறப்பட்டு வன்னியராயனைத் தெய்வக் குற்றம் செய்தவனாக, திருடனாகக் காட்டும் நிகழ்ச்சி களுக்குக் கதையில் அழுத்தம் தரப்பட்டுள்ளது.

4. அரசியின் கால் சிலம்பைத் திருடிய கள்வன் எனக் கருதப்பட்ட கோவலனுக்கு மரண தண்டனை அளிக்கப் பெற்றதைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. களவு செய்ததால் கொல்வதற்காகக் கொண்டுசெல்லப்பட்ட கள்வனைக் குண்டலகேசி காட்டுகிறது. இதற்குப் பின்னர் களவுத் தொழில் செய்தவர்களைக் கொலைத் தண்டனைக்கு உட்படுத்தியமைக்குப் பிற இலக்கியச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. சோழர்காலக் கல்வெட்டுகள் சில, கோயில் நகைகளைத் திருடிய சில அருச்சகர்களுக்குக் கிடைத்த தண்டனைகள் பற்றிப் பேசுகின்றன. ''முதலாம் குலோத்துங்கச் சோழனின் இருபத்தொன்பதாம் ஆட்சி யாண்டில் (கி.பி.1099) நடைபெற்ற நிகழ்ச்சியைத் திருப் பனந்தாள் கோவில் கல்வெட்டு விளக்குகிறது. அக்கோவில் அருச்சகர்கள் இறைவனின் அணிகலன்களையும், பூசைப் பொருள்களையும் மும்முறை திருடியதாகக் கண்டுபிடிக்கப் பெற்றது. அதிராசேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சி யாண்டில் (கி.பி.1070) அக்கோவில் கருவூல அலுவலர் இராசராச மூவேந்த வேளார் என்பவரால் தணிக்கை செய்யப்பெற்றபோதும், மூன்றாம் குலோத்துங்க சோழரின் எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி.1186) அக்கோவில் கருவூலத்தில் சேனாதிபதி பல்லவராயன் என்பவர் தணிக்கை செய்தபோதும், அவ்வரசரின் 21-ஆம் ஆட்சியாண்டில் சேனாபதி நந்தியராசன் என்பவர் தணிக்கை செய்த போதும் அக்கையாடல் கண்டுபிடிக்கப் பெற்றது. அக்குற்றங் களுக்காகக் கோயில் அருச்சகர்கள் தண்டிக்கப்பெற்றனர். பின்னர் அவர்கள் அரசரிடம் தங்கள் செயலுக்கு வருந்தி மன்னிப்பு வேண்டி மேல்முறையீடு செய்தனர். அவ்வருச் சகர்கள் கையாடல் செய்த உடமையின் மதிப்பான 540 காசுகளை அவர்கள் மீண்டும் கோவில் கருவூலத்தில் செலுத்த வேண்டுமென்று அரசர் ஆணை வழங்கினார். அவ்வாறு தண்டிக்கப்பெற்ற அருச்சகர்களில் ஒருவரான

பாண்டன் குமாரசுவாமி என்பவர், தன்னால் பணத்தைத் திரும்பிச் செலுத்த இயலாத நிலையை விளக்கினார். தான் செலுத்த வேண்டிய தண்டத்தொகைக்கு ஈடாகத் தனக்குள்ள கோவில் பூசை உரிமையை அளித்தார். தடகேசுவர சுவாமி கோவிலில் தான் பூசை செய்த உரிமையில் மாதத்திற்கு நாலரைப் பங்கைத் தான் இழப்பதாகவும், அதன் வாயிலாக வரும் வருவாயைக் கொண்டு ஈடு செய்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்''[232].

இவ்வாறாகத் தெரியவருகின்ற கல்வெட்டுச் செய்திகள் மூலம் சோழர் காலத்தில் கோயில் நகைகளைத் திருடிய வர்களுக்கு நகைகள் கிடைக்காத போதும் கொலைத் தண்டனை வழங்கப்படவில்லை என்பது தெரிகின்றது. நகைக்கீடான தொகை மட்டுமே தண்டமாக வசூலிக்கப் பெற்றது. அருச்சகர்கள் அந்தணர்கள் ஆதலின், அந்தணரைக் கொல்லுதல் பாவமாகக் கருதப்பட்டமையின், அவர்களுக்குக் கொலைத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருக்கக்கூடும். கோவலன் அந்தணன் இல்லை என்பதால் 'களவுக்கு மரண தண்டனை' அவனுக்கு அளிக்கப் பட்டிருக்கலாம். இதே நீதியே வன்னியராயனின் காலகட்டத் திலும் வழங்கப்பட்டிருக்கிறது. நாயக்க அரசரின் பிரதி நிதியாக நெல்லைச்சீமையை ஆண்டு வந்த வடமலையப்ப பிள்ளை, கோவில் நகையைத் திருடிய வன்னியராயனுக்கு மரணதண்டனை அளித்ததற்குப் பிற காரணங்களும் இருத்தல் வேண்டும் என்பது முன்னரே குறிக்கப்பெற்றது.

5. மரணதண்டனை வழங்கப்பட்டவுடன் அச் செய்தியை ஊரார் அறியுமுகமாக தண்டனைக் குட்பட்ட வனைத் தெருக்களில் சுற்றிவரச் செய்து, கொட்டும், முரசும் முழங்க ஊர்வலமாகக் கூட்டிவந்து, ஊர் கடந்து சென்று ஒதுக்குப்புறமான இடத்தில் தண்டனையை நிறை வேற்றியிருக்கின்றனர் (396 -402)

6. சாவுச் செய்தியை உறவினர்க்கு அறிவிக்கும் ஒரு தொடர்புக் கருவியாக நாய் பல கதைப்பாடல்களில் இடம்பெற்றுள்ளது. காவல் தொழில் புரிபவர்களது வீட்டில் நாய் முக்கிய அங்கம் வகித்திருக்கிறது. வன்னியராயனின் நாய்

232. டாக்டர் அ. கிருட்டிணன், கல்வெட்டில் வாழ்வியல், பக்.154-155.

அவனது மரணத்தின்பின், அவன் பட்ட களத்தில், இரத்தத்தில் புரண்டு எழுந்து சொந்த ஊருக்கு ஓடி, உடலில் தோய்ந்துள்ள இரத்தம் மூலமாகவும், ஊளையிடுதல் மூலமாகவும் கதைத்தலைவனின் மரணச் செய்தியை வன்னிச்சி அறியுமாறு செய்கிறது. இது இயற்கைக்கு மாறான நிகழ்ச்சியாகத் தெரியவில்லை. இயல்பாக நடக்கக்கூடிய நிகழ்ச்சியாகவே இக்கதைப்பாடலில் இடம்பெற்றுள்ளது. பூச்சி நாயே இத்தகு திறம் படைத்ததாகக் கதைப்பாடல்களில் காட்டப்படுகிறது. இறந்து கிடப்பவனின் கையிலுள்ள மோதிரத்தைக் கழற்றிக் கவ்விக்கொண்டு 'அடையாள மோதிரம் கொண்டு சென்ற அனுமார் போல்' இப்பூச்சிநாய் செயல்பட்டதைச் சின்னத்தம்பி கதை தெரிவிக்கிறது.[233]

வன்னியராயனின் தாய்,

''பூச்சிநாய் முன்னடக்க
புல்லைநாய் பின்துடர
வேங்கைநாய் முன்னடக்க
வெள்ளைநாய் பின்துடர
காரிநாய் முன்னடக்க
கறமரை நாய் பின்துடர'' (423-425)

புறப்பட்டுக் படுகளம் நோக்கி விரைந்ததைக் கதைப் பாடல் காட்டுகிறது. இத்தகைய பல்வேறு வகைப்பட்ட நாய்களையும் தம் குலத்தொழிலுக்காக (காவல்) இவ்வினத்தார் வளர்த்துவந்தமை தெரிகிறது.

7. தீயது நடக்கப்போவதையும் *(293,298, 306-311)*, தீயது நடந்து விட்டதையும் *(427- 431)* உணர்த்த தீய சகுனங்கள் தோன்றின என்று பல கதைப்பாடல்களிலும் மரபாக அமைந்திருக்கும் சகுனம் பற்றிக் கூறல் இக்கதைப்பாடலிலும் இடம்பெற்றுள்ளது.

---

233. The Wandering Voice, Op.cit. பக்.42.

''எஜமானைக் காணோமென்று ஏங்கிப்பரி பூச்சிநாயும்
சங்கிலியைத் தானறுத்துத் தடதடவென்று தானோட
வழிதனை மோந்து பார்த்து வருகுதையா பூச்சிநாயும்
சுண்டுவிரல் மோதிரத்தைச் சுருக்காகத் தான்கழத்தி
ரெத்தத்தின் மேல்விழுந்து திரேகமெல்லாம் புரட்டிக்கொண்டு
ஒட்டமும் நடையுமாக ஓடி வருகுதய்யா''

(605-610)

8. வன்னிச்சி ஒப்பாரி வைத்துப் புலம்புதல் இக்கதைப்பாடலில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது (439 - 473). பெற்றது, பேர் வைத்தது, வளர்த்தது, வாலிப அழகு, இறந்துகிடக்கும் அலங்கோலம், இன்னின்னவாறு நீ இறந்திருப்பாயோ என்ற எண்ணங்கள், இவனுக்கு இது ஏன் நேர்ந்தது என்ற ஆற்றாமைகள், மகன் இறப்பினால் தாயாகிய தான் அடையும் அவத்தைகள், மரண மளித்தவர்க்கு இடும் சாப மொழிகள் என்ற இந்த அடிப் படைகளில் ஒப்பாரி வைத்து அழுத நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இறுதியில் ‘மகனில்லாத இவ்வுலகில் தான் மட்டும் இருக்கலாகுமோ’ என்று நாவிழுத்து வன்னிச்சி மரணமுற்றதாகக் கதைப்பாடல் காட்டுகிறது.

9. இறந்த வன்னிராயன் பாரிவேட்டை எனும் பழிதீர்க்கும் வேட்டையாடித் தன்னை அடையாளம் காட்ட, ஊரார் குறி கேட்டு உண்மையறிந்து தங்கள் ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக வன்னியராயனை வணங்கி வந்தனர் என்று கதைப்பாடல் முடிவுறுகிறது. காவல் காக்கும் இனத்தில் பிறந்த வன்னியராயனை, ஊரைக் காக்கும் காவல் தெய்வமாக மக்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டதைக் கதைப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

8440 - தடிவீரசுவாமி கதை

குடும்பர் குலம்

செந்திநகர்[1] பட்டணத்தில்
செம்பாரக் குடும்பனென்றும்[2]
சந்திரக் குடும்பன் சூரியக் குடும்பன்
தானே யிந்த மூவர்களும்
ஏழூரு பச்சேரிக்கும்[3]
இசமான் செம்பாரக் குடும்பனென்று
வடகரையுந் தென்கரையும்
மேல்கரையும் கீழ்க்கரையும்
நாலுகரையு மவர் உழுது
நலமுடனே பயிர்கள் செய்தார்.
அஞ்சுக்கு ரெண்டு வாரம்[3]
அரமனைக்குத் தானளந்து
ஏழுஊரு பச்சேரிக்கும்
(ந)ன்குல மேபுரந்து

வண்ணார் குலம்

சாதியிலே ஈனனவன்[4]
தனித்ததொரு நீலவண்ணான்
நீலவண்ணான் மாட வண்ணாத்தி
நீதியுடன் இருபேரும்
ஏழுஊரும் அழுக்கெடுத்து
வெளுத்துவரும் நாளையிலே

குழவிப் பேறின்மை

முப்பத்திரண்டு பிராயப்பட்டும்[5]
மூப்பாய் வெளுத்துவரும் நாளையிலே
மைந்தனுமோ யில்லாமல்
மனதுநொந்து புண்ணாகி
தண்ணீர் பந்தல் சிமதாங்கி[6] உண்டுபண்ணி
தான தருமங்கள் செய்ய லுற்றார்!

அரதேசி பரதேசி
அந்தணர்க்கே வெகு தானமிட்டார்!
கோதான[7] பூர்வதானம்[8]
குருடர்க்கே தானமிட்டார்!
என்னயென்ன தான தர்மம் செய்தாலும்
இவன் தனக்கே குழந்தையில்லே!
மைந்தனில்லை யென்றல்லவோ
மனது நொந்து புண்ணாகி
மங்கையவள் புரத மங்கை[9]
எண்ணாத யெண்ணம் எண்ணி
எண்ணாத எண்ணம் எண்ணி
ஏங்கியே விசாரம்[10] விட்டாள்
பிள்ளையில்லா வாசலிலே
பெரியோர்கள் பொசிப்பார்களோ![11]

குழவி வரம் பெறப் புறப்பாடு

என்கணவா! யென்கணவா!
என்வார்த்(தை சொல்லக் கேளு)!
சங்கர நயினார் கோவிலுக்கு
தவசு மாதாந்தம்[12] போகவேணும்
தவசு மாதாந்தம் போகவேணும்
தானே நினைந்தாளே பெண்கொடியும்
வழிக்கரிசி கெட்டமுது[13]
மாப்பலகாரம் பொருவிளங்காய்[14]
கெட்டமுது தானே கட்டி
கிருபையுடன் பயண முற்றாள்

கடந்து சென்ற இடங்கள்

ஏறாங்குடிப் பட்டணந் தான்கடந்து,
இன்பமுள்ள பண்டாரக் குளங்கடந்து,
தாழவூத்துப் பறம்பு தான்கடந்து,
தெங்கல் நஞ்சாங் குளமுமிட்டு,
மாவடி ரஷ்தாவின் பாதைகூடி,
மானூரு பெருவழி யாகை,
வன்னிக் கரந்தை தேவகுளம்,
வந்தாளே புரத மங்கை.

பனை வடலி நாடுவிட்டு
பாதைவழி வந்தல்லவோ
காளிங்க ராயருட வோடையிலே
கன்னியவள் வந்தல்லவோ
கெட்டமுது தானவிழ்த்து
கிருபையுட னேபொசித்து
காளிங்க ராயருட ஓடைவிட்டு
கண்ணம்மாள் சாலை விட்டு
கோவில் குடவரை வாசலிலே
கோதையவள் வந்தல்லவோ

கோயிலில் செய்த பூசை முறைகள்

ஆவிடை பொய்கையில் தீத்தமாடி
ஆனதொரு புரதமங்கை
கோவில் குடவர வாசலிலே
கோதையவள் வந்து சேர்ந்து
கோவில் முன்பாக நின்றுகொண்டு
வாழை நல்ல யிலைவிரித்து
தேங்காய் பழம் உடைத்துவைத்து
நெரு நாழி[15]தா னளந்து வைத்து
நீதியுடன் தீபமது தானே வைத்து
மாவிளக்குப் பாத்தாளே புரதமங்கை
நாற்பதுநாள் ஒருமண்ட(லம)ாய்
நலமுடனே வசனம்[16] இருக்கலுற்றாள்.

சங்கரலிங்கர் - அரனார் உரையாடல்

பார்த்தாரே சங்கர லிங்கருமே
பாவினையா[17] யேதுசெய்தார்
தவசுநிலை பொறுக்காமல்
தானே நடந்தார் ஆதிக் கயிலையிலே
ஆதி கயிலாசஞ் சென்றல்லவோ
அரனாரைக்[18] கண்டுமே தான்பணிந்தார்
அவனி பூலோகம் தன்னிலே
ஆரோ ஒரு புரதமங்கை
என்னுடைய வாசலிலே
இருக்குகிறாள் மண்டலமாய் வசனமது
நாற்பதுனாள் ஒரு மண்டலமாய்
நலமுடனே வசனம் இருக்குகிறாள்.

புரதமங்கை தந்தனக்கு
புத்திரனே கொடுக்க வேணுமய்யா!
பார்த்தாரே அரனாரும்
பாவினையா யேது சொல்வார்
சித்திர புத்திர நயினாரைத் தானழைத்தார்
சிவனாரை வந்து (தானடை)ந்தார்.
புரத மங்கையுட பட்டையத்தை
போய்ப் பார்க்க வேணுமென்றார்
கருவேல பொக்குசத்தைத்[19] தான்துறந்து
போயெடுத்தா ரந்த பட்டயத்தை
புரதமங்கை தந்தனக்கு
புத்திரனே இல்லை அய்யா!
எழுபிறப்புப் பிறந்தாலும்
இவள்தனக்கே குழந்தையில்லை!
மைந்தனில்லை யென்றல்லவோ
மாயாண்டி அரனாரும் சொன்ன போது
பார்த்தாரே சங்கர லிங்கருமே
பாவினையா யேது சொன்னார்
எந்தவித மானாலும்
ஈயவேணும் மைந்தன் தன்னை
வாருங் காணும் சங்கரலிங்கரே – நீர்
வார்த்தை யொன்றும் சொல்லக் கேளாய்!
புரத மங்கையுட வயறதிலே
போயிப் பிறப்பீர் சங்கர லிங்கருமே
மங்கையவள் வயத்தில் போய்ப்
பிறந்தேனே நானானால்
வயசுநல்ல யெத்தனையில்
மோசினை[20] காலமய்யா?
பதினெட்டு வயததிலே
பாலனுக்கு மோசினை காலமென்றார்.
வரம்வாங்கி சங்கரலிங்கருமே
வந்தாரே ஆதிகயிலைவிட்டு

சங்கரலிங்கர் தந்த வரம்

கோவில் குடவர வாசலிலே
கோதையவள் தவசருகே வ(ந்துநி)ன்று
வாருமடி மெல்லவே பெண்கொடியே
வாங்குமடி மெல்லவே வரமதைத்தான்

பாலன் வரம் மெல்லவே தந்தமடி
    பதினொ' டு வயதிலே ஒரு தத்துமுண்டும்[21]
வரம் வாங்கி அந்தப்பெண்கொடியும்
    வந்தாளே அந்தக் கோவில்விட்டு
கோவில் குடவர வாசல்விட்டு
    கோதையவள் பிறப்படவே

வரம்பெற்றுக் கடந்து வந்த இடங்கள்

கண்ணம்மாள் சாலைவிட்டு
    காளிங்க ராயருட வோடை விட்டு
காளிங்க ராயருட வோடை விட்டு
    கன்னியவள் தான் கடந்தாள்
பனைவடலி நாடுவிட்டு
    பாதைவழி வந்தல்லவோ
வன்னிக்கரந்தைப் பாதைவிட்டு
    வந்தாளே புரதமங்கை
மானூருத் தெருவழியாய்
    மாவடி ரஷ்தாவின் பாதைகூடி
பவளக் கோட்டை பறம்பு விட்டு
    பாதைவழி வந்தல்லவோ
தெங்கல் நஞ்சாங் குளமு(ம்) விட்டு
    தாழவூத்துப் பறம்புமிட்டு
தாழவூத்துப் பறம்பும் விட்டு
    தானே வந்தாளே பெண்கொடியாள்
பண்டாரக் குளமுமிட்டு
    பாதைவழி வந்தல்லவோ
ஏறாங்குடிப் பட்டணம் தன்னிலே
    இன்பமுடன் வந்துசேர்ந்தாள்
தன்னுடைய அரமனையில்
    தானே வந்தாளே பெண்கொடியும்

குழவிப் பேறு

அன்று முதல் குளி மறந்து[22]
    அருங்குளியும் பிள்ளையுமாய்
அஞ்சாந்த மாத்தையிலே[23]
    அரவயறு சூலானாள்
ஏழாந்த மாஷ்த்தையிலே[24]
    எழுந்திருக்கக் கூடுதில்லை

பத்தாந்த மாஷ்த்தையிலே
பாலகனைப் பெற்றெடுத்தாள்
பார்க்கமுடி கூடுதில்லை[25]
பாண்டியனார் குலமதுபோல்[26]
தெண்ணீரு[27] முகந்தெரித்து
தலையடங்காச்[28] சேலைவூட்டி[29]
கொப்பிளைத் தானறுத்து
குலவை[30] யிட்டார் தாதிமார்கள்[31]
மைந்தனுட அழகுகண்டு
மந்திரமூர்த்தி யென்றும் பேர்கொடுத்தார்

குழந்தை வளர்ப்பும், கல்வி, மந்திரப் பயிற்சிகளும்

ஓராண்டு ஈராண்டு
ஒருமூன்று வயதாகி
நாலு வயததிலே
நடந்தோடி விளையாடி
அஞ்சு வயததிலே
அண்ணாவி[32] படிக்க வைத்தார்
ஏழு வயததிலே
எழுந்து நடைபயின்றான்
எட்டு வயததிலே
இந்திர சாலம்[33] மந்திர சாலம்[34]
காடேரி[35] மந்திரமும்
காளியுட அச்சரமும்[36]
மோகினியா ளச்சரமும்
யோக சின்ன மாரணமும்[37]
தம்பலஉச் சாடினமும்[38]
தானே படித்தானே வித்தையெல்லாம்
கூடுவிட்டுக் கூடு பாய்வான்
சூரத் தொழிலுங்[39] கத்தறிந்தான்
பத்து வயததிலே
படித்தானே வித்தையெல்லாம்

திருமணம்

பன்னிரெண்டு வயததிலே
பார்க்க முடி கூடாது
மந்திர மூர்த்திக்குத்தான்
மாலையிட வேணுமென்று

தாழையடிப் பூதப்பாண்டி
சாத்திப்பிள்ளைப் பெண்கொடியை
சாத்திப்பிள்ளைப் பெண்கொடியை
தன்மகன் மந்திர மூர்த்திக்குத்தான்
மாலையிட வேணுமென்று
மந்திர மூர்த்திக்குத்தான்
நாள்பார்த்து முகிர்த்தம் வைத்து
நலமுடனே ஈனவண்ணான்
வானத் தளவாகப் பந்தலிட்டு
வாழைக் கெள[40] தான்நாட்டி
மணவறைக் கோலம் அலங்கரித்து
மாப்பிள்ளை பொண்ணையும் கூட்டிவந்து
மணவறையில் தானிருத்தி
மங்கிலியம் திருப்பூட்டி
மங்கிலியம் திருப்பூட்டி
மாளிகைக்குள் தான்புகுந்தார்
இப்படியே சில காலம்
இருந்துவரும் நாளையிலே

குலத்தொழில் செய்தல்

மந்திர மூர்த்தியுமோ
மன்னனவன் (ஏது) செய்தான்
தாம்பிரநதிக் கரையதிலே
தாழையடிக் குடில்போட்டு
வெங்கலத்தால் வெள்ளாவி[41]
விதவிதமாய்(த்தாண்ப) தித்து
ஒருபூதம் அழுக்கெடுக்க
ஒருபூதம் வெளுத்தடிக்க
வெளுத்தடிக்க இருபூதம்
வீட்டுக்கு வீடு குடுக்க ஒருபூதம்
இப்படியே யிருக்கயிலை
இன்பமுள்ள நாடதிலே

புதியவன் நாடான் மந்திரம் கற்றல்

மந்திர மூர்த்தியிடம்
மன்னனவன் தான்பழகி
சாதியிலே சாணானவன்[42]
தனித்ததொரு புதியவனும்

மந்திர மூர்த்தியிடம்
மன்னானவன் தான்பழகி
அண்ணனுந் தம்பியும்போல்
அடுத்து மங்கே பழகி
அவன் படிக்கும் வித்தைகளை
இவனுமேதான் படிக்கவென்று
மந்திர மூர்த்தியிடம்
புத்தன்னிவன் தேங்காய் லைத்து
தேங்காயது தானே தட்டி
செல்வனிவன் படித்திடவே
காடேரி மந்திரமும்
காளியுட அச்சரமும்
யோக சின்ன மாரணமும்
தம்பலஉச் சாடனமும்
கூடுவிட்டுக் கூடுபாயும்
சூரைத் தொழிலுங் கத்தறிந்தான்
இப்படியே சிலநாளாய்
இருந்து வரும் நாளையிலே

மந்திரமூர்த்தி - புதியவன் மோதல்

ஒருநாளைத் தினமதிலே
உத்ததொரு புதியவனும்
மந்திர மூர்த்தியிடம்
(மன்னவனும்) தானேவந்து
வாருங்காணு மந்திரமூர்த்தி
வார்த்தை யொன்றும் சொல்லக்கேளு!
ஈனனுக்கு கையெடுத்தால்
இன...... .....
இதுவரையுங் கையெடுத்தேன்
....
என்று சொன்னான் புதியவனும்
ஏதுசொல்வான் மந்திரமூர்த்தி
கண்கள் ரெண்டும் பொறி பறக்கக்
கடுங்காப முண்டாகி
இருபேரும் சமர்தமிட்டு[43]
ஏகலுற்றான் புதியவனும்
இப்படியே இருக்கையிலை
இன்பமுள்ள நாடதிலே

செம்பாரக் கொடும்பனுக்கு
தீரமக்கள் ஏழுபேரும்

குடும்பர் குலச் சோணமுத்து வருகை

ஏழுபேர்க்கும் இளைய தங்கை
இன்பமுள்ள சோணமுத்து
பத்து நல்ல வயததிலே
பக்குவத்தி[44] தானானாள்
பாரமுடி கூடாது
பாண்டியனார் குலமதுபோல்
மூனுநா ளொரு வாரமாக
முட்டுத் துறையி லேத்தாயிருந்து
தீத்த மாட வேணுமென்று
திரட்டு மஞ்சள் அரைத்துருட்டி
செம்பு நல்ல குடமெடுத்து
தீத்தமாட வேணுமென்று
செந்திநகர் தான் கடந்து
சென்னல்கரைப் பாதை கூடி
கும்புடு பனை கடந்து
கூட்டப்பனைப் பாதை கூடி
தாம்புர நதிக்[46] கரையதிலே
தானே வந்தாள் பெண்கொடியும்
தீத்தமாடி மாத்துடுத்தி
சேயிழையாள் பெண்கொடியும்
மாத்துக்[47] களைய வேணுமென்று
மங்கை நல்ல சோணமுத்து
வண்ணாரும் துறை[48] தேடி
வாரானே சோணமுத்து
தாம்புர நதி கடந்து
தாழையடி வார போது

மந்திர மூர்த்தியின் காதல்

மதம்புழிந்த[49] யானை போல
மந்திர மூர்த்தியைத் தானேகண்டு
அன்னேரம் மந்திரமூர்த்தி
ஆதரவாய்ப் பார்த்த போதே

இந்திரியோ[50] சுந்தரியோ!
ரம்பையரோ! மோகினியோ!
வாராளோ சேராளோ
மய்யல்[51] தன்னைத் தீராளோ!
சேராளோ ஒருநாழியல்[52]
சிந்தை மய்யல் தீராளோ!
எண்ணாத யெண்ண மெல்லாம்
எண்ணியே யிருக்கையிலே

சோணமுத்துவின் தீச்சகுனம்

அண்ணே அண்ணே மந்திரமூர்த்தி!
ஆதரவாய்ச் சொல்லக் கேளாய்!
மாத்துக் களைய வேணும் அண்ணே
மறுமாத்துத் தரவேணும்
என்று சொன்னாள் சோணமுத்து
ஏது செய்தான் மந்திரமூர்த்தி
எழுத்து முத்துக் கச்சவடம்[53]
எடுத்துக் கொடுத்தானே மந்திரமூர்த்தி
துயில்தனைத் தான் கையில் வாங்கி
துருசாகக்[54] கொய்து டுத்தாள்
மாத்துக் களைகிற வேளையிலே
வலது புறத்திலே தும்மல் விழ
அண்ணே அண்ணே மந்திரமூர்த்தி
அதிசயமே தும்மலிது
துயில் களையும் வேளையிலே
தும்மல் தடை பார்ப்பதுண்டோ
தோசமில்லை குத்தமில்லை
சோண முத்தே போகும் அம்மா!

சோணமுத்து வீடு திரும்பல்

தாழையடிக் குடிசை விட்டு
தாம்புரநதிக் கரையில் வந்து
செப்புநல்ல குடமெடுத்து
சிலங்கோரி[55] யிடுப்பில் வைத்து
தாம்பிரநதிக் கரை கடந்து
தானே வாராளே பெண்கொடியும்
கூட்டப்பனை ஓடக்கரை
கும்புடு பனை கடந்து

சென்னல் கரைப் பாதை கூடி
சேந்திநகர்[56] வந்தல்லவோ
தன்னுடைய அரைமனையில்[57]
தானே வந்தாள் பெண்கொடியும்

மந்திர மூர்த்தியின் செயல்

அன்னேரம் மந்திரமூர்த்தி
ஆதரவா யேது செய்தான்
சோண முத்து துயில்[58]தனைத்
துருசாக அழுக்கெடுத்து
சவுக்காரம்[59] தான் தொளித்து
தாடாளன்[60] ஏது செய்தான்
சாமமது[61] சாமத்திலே
சதிசாம வேளையிலே
இலை குலுங்கா நேரத்திலே
ஏமசாம வேளையிலே
சோணமுத்து புடவை யைத்தான்
துருசாகத் தானெடுத்து
இவனைப்போல ஆண்உருவும்
அவளைப் போல பெண்உருவும்
ஆண்உருவும் பெண் உருவும்
அடுக்கடுக்காய்த் தான்வரிந்தான்[62]
அடிமுந்தியு[63] மேல்முந்தியும்[64]
அணிஅணியாய்த் தான்வரிந்து
சதிசாம வேளையிலே
தானே யிந்த மந்திரமூர்த்தி
மோகினியை யன்னேரம்
முகனையுடன்[65] வரவழைத்து
இவனைப் போல உருமா(ற்)றி
இன்பமுடன் ஏது சொல்வான்
கஞ்சிப்[66] பானையுங் கைகொடுத்து
சக்கப்பழம்[67] தோள்போட்டு
சோணமுத்து[49] அரமனைக்குத்
துருசாக யேகி[68] விட்டான்

மோகினி வருகை

இலை குலுங்கா நேரத்திலே
ஏம சாம வேளையிலே

வருகுதய்யா மோகினிதான்
வைகைநதி தான்கடந்து
கூட்டப்பனைப் பாதை கூடி
கும்புடு பனை கடந்து
சென்னல் கரை பாதை கூடி
செந்திநகர் வந்தல்லவோ
சோணமுத்து அரமனையில்
சுருக்காக வந்து சேர்ந்து
கதவுதட்டி யெழுப்புதய்யோ!
கைப்புடித்தே தூக்குதய்யோ!
நாலு சத்தம் ஆறுசத்தம்
நலமுடனே போட்டல்லவோ

சோணமுத்து - மோகினி உரையாடல்

பதறியே தான்முழித்து
படுகதவைத் தான்துறந்து
இத்தனைநாள் சொல்வானை!
இவ்வேளை வருவானே(ன்)!
என்று கேட்கும் வேளையிலே
ஏது சொல்லுமாம் மோகினியும்
ஓமநல்லூர் திடிவூரி
லுவறள்ளப்[69] போயிருந்தேன்
அவசர மாத்தினால்
அர்த்த ராத்திரி வந்தேனம்மா!

சோணமுத்துவின் மதிமயக்கம்

சோணமுத்து துயில்தனைத்தான்
தூக்கிக் குடுத்துதே மோகினியும்
துயில்தனைத்தான் கையில் வாங்கி
துருசாகக் கொய்துடுத்தாள்
துயில்தனைத்தா னுடுத்த பின்பு
சோணமுத்துப் பெண்கொடிக்கு
விதிமறந்து[70] வருகுதய்யோ!
வேற நினைவுகள் தோணுதய்யோ!
மதிமயக்கம் வருகுதய்யோ!
மந்திர மூர்த்தியைத் தோணுதய்யோ!

சோணமுத்துவின் சமையல் வகை

அன்னேரம் சோணமுத்து
ஆதரவா யேது செய்தாள்

சம்பா அரிசி[71] கொண்டு
சமைத்துக் கொதித் திறக்கி
ஆட்டுக்கறி கோழிக்கறி
அதிகிறச்சி கூவநீரும்[72]
தேட்டுக் கரு வாட்டு[73] துண்டம்
திப்பிலி[74] சிறப்புடனே
ஏழடுக்குச் சட்டியிலே[75]
எடுத்தாளே சாதங்கறி.

சோணமுத்து மந்திரமூர்த்தியின் குடிசை வரல்

மோகினியை முன்னேவிட்டு
மொய்குழலாள் பின்துடர்ந்தாள்
சேந்திநகர் தான்கடந்து
சென்னல்கரைப் பாதை கூடி
கும்புடு பனை கடந்து
கூட்டப்பனைப் பாதை கூடி
தாம்புரநதிக் கரை கடந்து
தாழையடி வந்தல்லவோ
ஏழடுக்குச் சட்டி தன்னை
இறக்கிவைத்தாள் குடுசையிலே
குடுசையிலே தான் புகுந்தாள்
கோதை நல்லாள் சோணமுத்து

மந்திரமூர்த்திக்கு உணவு பரிமாறல்

சம்பிர மஞ்சக் கட்டிலிலை[76]
சயனம் செய்யும் வேளையிலே
சோண முத்தைக் கண்ட போதே
துருசாகத் தானெழும்பி
அன்னேரம் சோணமுத்து
ஆதரவா யேது செய்தாள்
வாழையிலை தான்விரித்து
வைத்தாளே சாதங்கறி
கட்டிச் சோறு புட்டு வைத்து[77]
கலங்காத தயிர் வார்த்து
உண்ணுமென்று உபசரித்தாள்
உத்த பிள்ளை சோணமுத்து
உண்டு மிஞ்சின சாதங்களை
உடன் கையிலே தான்பொசித்து
சம்பர மஞ்சள் கட்டிலிலே[78]
தானிருக்கும் வேளையிலே

சோணமுத்துவின் ஆதங்கம்

இந்தநல்ல வேளையிலே
எனை யழைத்த காரணமென்?
கன்னி யழியலையே
கலியாணம் செய்யலையே!
மாலையிட்டுப் பார்க்கலையே
மன்னர் முகம் காணலையே!
வயறதிலே ஆனாக்கால்
வையத்துக்கு யிழுதாச்சே![79]
ஏழண்ணன்மார் கண்டாக்கால்
எலும்பெலும்பாய்ச் சதைத்திடுவார்!
எண்ணாத யெண்ணமெல்லாம்
எண்ணியே யிருக்கையிலே

மந்திரமூர்த்தியின் காதல் ஆணை

மந்திர மூர்த்தியுமே
மங்கையரைத் தான் பார்த்து
வாரும் பெண்ணே சோணமுத்தே
வார்த்தை யொன்று சொல்லக் கேளு!
கருவை உருவழிப்பேன்
கன்னியரைச் சீ(ர)ழிப்பேன்!
உருவை வலதழிப்பேன்
உன்னாணை சோணமுத்தே!
உள்ளி முடிந்தாலும்
உயிரிழந்து போனாலும்
ஒன்னைநான் மறப்பதில்லை
உன்மேலே யாணை யுண்டு
என்று சொல்லி மந்திரமூர்த்தி
இன்பமுள்ள சோணமுத்தே

மந்திரமூர்த்தி - சோணமுத்து இணைதல்

சிரித்து விளையாடி
தின்றார்கள் இலை[80] பாக்கும்
மகுந்து[81] விளையாடி
மங்கை நல்லாள் சோணமுத்தை
பஞ்சணைமேல் இருபேரும்
பள்ளிகொண்டா ரன்னேரம்

குளமுடைந்த தாமரைபோல்
கொண்ட மய்யல் தீர்ந்து

சோணமுத்து வீடு திரும்புதல்

வெள்ளி உதிக்கு முன்னே
விடிய ஒரு சாமத்திலே
சோணமுத்துப் பெண்கொடியும்
தோகையவள் எழுந்திருந்து
மந்திர மூர்த்தியைத்தான்
மன்னவனைத் தான்பார்த்து
மத்தியான மதியத்திலே
மன்னவனே நான்வாரேன்
என்று சொல்லி சோணமுத்து
எழுந்தருளி வெளியில் வந்து
தாழையடி குடுசை விட்டு
தாம்புரநதிக் கரைகடந்து
கூட்டப்பனை ஓடக்கரை
கும்புடு பனைவழியாய்
சென்னல்கரை வயல்வரம்பு
சேயிழையாள் தான்கடந்து
சேந்திநகர் பட்டணத்தில் - வந்து
சேர்ந்தாளே சோணமுத்து
தன்னுடைய மாளிகையில்
தானே வந்தாளே சோணமுத்து

மறுநாள் மந்திரமூர்த்தியின் இருப்பிடம் வரல்

கண்கோலும்[62] தானுதித்து
கதிரோனும் வந்துதித்தான்
மத்தியான மதியத்திலே
மங்கையவள் சோணமுத்து
குடமதிலே சாதங்கறி
கோதையவள் தானெடுத்து
சிலங்கோர வேணுமென்று
சேயிழையாள் பிறப்பிடவே
சேந்திநகர் தான்கடந்து
தாழையடி வாரபோது

புதியவன் காணுதல்

கும்பிடு பனையதிலே
கூத்துவன்[83]போல் பாத்திருந்தான்
குடுசைக் குள்ளே நுழையயிலே
கொத்தவனுந்[84] தான்பார்த்து
நல்லது ஆகட்டுமென்று சொல்லி
நலமுடனே வரும[85] வைத்து
வாச்சுதடா வாச்சுதடா
ஒபாயமுள்ள தந்திரமும்
மந்திர மூத்தியைத்தான்
மன்னவனைத் துலைய வைக்க
என்று சொல்லி புதியவனும்
இருக்குகிற வேளையிலே
இப்படியே சிலகாலம்
இருந்துவரும் நாளையிலே

குடும்பன் மக்கள் ஏர் உழுதல்

ஒருநாள் தினமதிலே
உலகமெல்லாம் தான்இருளாய்
வருணன் வந்து பொழிந்திடவே
மன்னனுட பட்டணத்தில்
செம்பாரக் குடும்ப மக்கள்
தீரமக்கள் ஏழுபேரும்
ஏழுபேர் மாடும் பத்தி
ஏருழவே வேணுமென்று
ஏழுபேரும் ஒருமுகமாய்
இன்பமுடன் பிறப்பிடவே
கன்னியடி மூலையிலே[86]
கட்டழகர் வந்துநின்று
நிற மரக்கால்[87] அளந்து வைத்து
நீதமுடன் ஏழு பேரும்
தேங்காய் பழம் ஒடைத்து வைத்து
தீவ தீவந்[88] தான்குடுத்தார்
ஏழேருந் தானும் பூட்டி
ஏர் உழுதார் பள்ளர்களும்
வடசால்[89] இடசா லடித்து
மன்னவர்கள் ஏழுபேரும்

குடும்பன் மக்கள் கள் குடிக்க வருதல்

மத்தியான மதியத்திலே
மன்னவர்கள் தகையோடி[90]
கள்குடிக்க வேணுமென்றான்
கட்டழகர் பள்ளர்களும்
அஞ்சுமரக் கால்கள் ஏறும்[91]
ஆக்கமுள்ள பனையதிலே
கும்பிடு பனையதுக்கே
குடும்பங்கள்[92] போகவென்றே
ஏழேரும் பூட்டுருவி
ஏழுபேரும் பிறப்பிடவே
கும்புடு பனையதிலே
குடும்பமக்கள் வந்து சேர்ந்தார்

குடும்பன் மக்கள் - புதியவன் மோதல்

அண்ணே அண்ணே புதியவனே
ஆணழகா பட்டை[93] போடு!
பட்டை போடு யென்று சொல்லி
பள்ளர்களும் கேட்ட போது
பார்த்தானே புதியவனும்
பாவினையா யேது செய்தான்
ஏழுபேர்க்கும் பட்டை போட்டு
இளைய தம்பிக்கு கொருக்கறுத்தான்[94]
கள்ளெடுத்து விடும்போது
கருப்பெடுத்துக்[95] குடியுமென்றான்
பார்த்தார்கள் குடும்பன் மக்கள்
பாவினையா யேது செய்தார்
விட்ட கள்ளைக் குடியாமல்
விட்டெறிந்தார் நிலத்தோடே
வீசை[96] துடிக்குதப்போ
வெகுகோப மாகுதப்போ
எண்ணாமல் சத்தும்[97] கெணியாமல்[98]
இந்த வார்த்தை சொல்ல வந்தாய்
கட்டுகட்டு குத்துகுத்து
கட்டழகர் சொல்லிடவே

புதியவன் உரை

அன்னேரம் புதியவனும்
அங்கமது தான்பதறி
வேத்து[99] மங்கே விருவிருத்து[100]
மெய்சோர்ந்து கைசோர்ந்து
அஞ்சியங்கே தான்பதறி
ஆதரவாய்ச் சொல்லுவானாம்
வாருங் காணும் குடும்பங்க(ா)ள்[101]
வார்த்தை 'யொன்று சொல்லக் கேளாய்!
உங்கள் ஏழு பேர்க்கும் இளைய தங்கை
இன்பமுள்ள சோணமுத்தை
சோணமுத்துப் பெண்கொடியை
தோகை நல்லா ளி(ளை)யவளை
உங்களுக்கு வெளுத்து வரும்
உத்ததொரு மந்திரமூர்த்தி
மந்திர மூர்த்தியுமே அவளை
வைப்பாக[102] வைத்திருக்கான்
என்று சொல்லிப் புதியவனும்
எடுத்துரைக்கும் வேளையிலே

குடும்பன் மக்கள் கோபமும், புதியவன் திட்டமும்

பார்த்தார்கள் குடும்பன் மக்கள்
பாவினையா யேதுசொல்வார்
இந்தச் சினமே[103] ஒப்பியாட்டால்[104]
இரவாளில் இட்டிடுவேன்[105]
நாளைத் தினமதிலே
நலமுடனே ஒப்பிவைக்கேன்
ஓடக் கரையதிலே[106]....
உகந்து[107] மங்கே பதிகிடங்கோ[108]
அவன் குடிசைக்குள்ளே நுழையயிலே
கொன்றையி[109] லுருமாலைத்[110] தான்கழத்தி
வெள்ளையது வீசுகிறேன்
விரைந்தோடிப் புடியுமென்றான்
என்று சொல்லிப் புதியவனும்
ஏகலுற்றான் அன்னேரம்
ஏழுபேரும் மாடுபத்தி
ஏகலுற்றார் வீடதுக்கே
வீடுவந்து தான்சேர்ந்து
வீத்திருந்தார் குடும்பன் மக்கள்

குடும்பன் மக்கள் புதியவன் பதுங்கியிருத்தல்

அன்று கழித்தல்லவோ
அலர்கதிரோன்[111] வந்துதித்தான்
ஏழுபேரும் ஒருமுகமாய்
எழுந்திருந்து வந்தல்லவோ
ஓடைக்கரைத் தன்னதிலே
உகந்து மங்கே பதிகிடந்தார்
கும்புடு பனையதிலே
கூத்துவன்போல் பார்த்திருந்தான்

சோணமுத்து வருகையும் புதியவன் செயலும்

மத்தியான மதியத்திலே
மங்கையவள் சோணமுத்து
குலதிலே சாதங்கறி
கோதையவள் தானெடுத்து
வழிவிட்டு வழிகடந்து
வாராளே சோணமுத்து
குடுசைக்குள்ளே நுழையும்போது
கூத்துவன்தான் புதியவனும்
கொன்றைதனி லுருமாலை
உகந்து மங்கே வீசிடவே

குடும்பன்கள் குடிசையை வளைத்தலும், மந்திரமூர்த்தியின் மந்திரச் செயல்களும்

வெள்ளையது தான்வீச
விரைந்தோடி குடும்பன்கள்
குடுசையைத் தான்வளைந்தார்
குடும்பன் மக்கள் ஏழுபேரும்
பார்த்தானே மந்திர மூற்றி
பாவினையா யேது செய்தான்
மாரண மையைத்[112] தானெடுத்து
வைத்தானே சோணமுத்து நெற்றியிலே
மாரண மையை வைத்திடவே
மறைந்தானே சோணமுத்து
(பார்த்தா)னே மந்திர மூற்றியுமே
பாவினையா யேது செய்தான்
.... பூனைபோல உருமாறி
மந்திர மூற்றியுமே தான பாயநதான

பார்த்தாரே அந்தக் குடும்பன் மக்கள்
பாவினையா யேது சொல்வார்
வாடாநீ சாணான் புதியவனே
மங்கையரைக் காணமென்ன
மன்னவர்கள் கேட்ட போதே
மன்னன் அந்தப் புதியவனும்
மாரண மையைத் தான்போட்டு
மன்னனுமே யேது சொல்வான்
பூனையது அல்ல விடும்
புலைப் பேயனே மந்திர மூற்றியவன்
பூனை(யை)த்தா யிப்போ பின்துடர்ந்தால்
புதுமையது தெரிய லாமே
பூனையைத்தான் பின்துடர்ந்தார்
புதுமையுடனே யேழுபேரும்
பூனை வேசமது தான்மாறி
போட்டானே பாம்புராணி[113] வேசமது
பாம்புராணியைப் பின்துடர்ந்தார்
பயகள் ஏழுபேர்களும்
பல்லியைத்தான் பின்துடர்ந்தார்
பள்ளர் ஏழு பேர்களுமே
பல்லி வேசமது தான்மாறி
போட்டானே யெலி ரூபமாய்
எலி ரூபமது தான் ஆகி
எடுத்தானே ஓட்டமது
துள்ளிவிழுந் தோடிடவே
துட்டனுமே மந்திர மூற்றி
பிள்ளையன் வக்கப் படப்பதிலே
விரைந்தோடித் தான்பதுங்கி
பார்த்தார்கள் ஏழு பேரும்
பாவினையோ யேது செய்தார்
ஏழுவக்கல்[114] படப்பதுக்கு
ஏழு ஆயிரம் பொன் தானு(ங்)கட்டி
வக்கல் படப்பதிலே
வைத்தார்கள் தீயதைத்தான்
தீயைக் கொளுத்திடவே
தீர்க்கமுள்ள மந்திர மூற்றி
உருசுணை வக்கலிலே[115]
உடலையெல்லாந் தான்அடக்கி

வெந்துதண லாகுதய்யோ
விரைந்தோடிக் குடும்ப மக்கள்
கிண்டியங்கே கிளைத்திடவே
கீர்த்தியுள்ள குடும்ப மக்கள்
வெள்ளவக்கல் தெரியுதென்ன
வீதமுள்ள புதியவனே
புதியவனைத் தானழைத்து
முகனையுடன் பார்க்கையிலே
அன்னேரம் மந்திர மூர்த்தி
ஆதரவாய் ஏது செய்தான்
வெள்ளெலி ரூபங்கொண்டு
விரைந்தோடிப் போகுதய்யோ!
வெள்ளெலி தான்துடர்ந்து
விரட்டினார்கள் அன்னேரம்
துள்ளியங்கே தான்குதித்து
திடுக்கென்று ஓடியல்லோ
பிள்ளையன் தன்னுடைய
பிரமடையில்[116] தான்புகுந்தான்
பார்த்தார்கள் குடும்ப மக்கள்
பாவினையா யேது செய்தார்
பிரமடையில் நுழைந்தவனை
பிடிக்க ஒண்ணா தென்று சொல்லி
முப்பது துலாம்[117] மிளகு வத்தல்[118]
முப்பது கெட்டு வறவக்கல்[119]
முகனையுடனே கொண்டு வந்து
மூர்க்க முள்ள குடும்ப மக்கள்
பின்மடையும் முன்மடையும்
பிரபலமாய்த் தானடைத்து
முன்னும் பின்னும் தீயை வைத்து
முகனையுடன் கொளுத்த லுற்றார்
தீயைக் கொளுத்திடவே
தீர்க்க முள்ள மந்திர மூர்த்தி
நடு மடையிலே தான்வெடித்து
நடந்தானே புகைபோலே
புகையோடே புகையாக
போகிவிட்டான் மந்திர மூர்த்தி
வாடாநீ புதியவனேயிவ்
வகையென்ன வென்றுரைத்தார்

பார்த்தானே புதியவனும்
பாவினையா யேது சொல்வான்
இந்தமட்டு செய்தி நான் அறிவேன்
இனிமேல் ஒன்றும் நான் அறியேன்
செத்திறந்து போனான் என்று
தீக்கடன்[120] நீர்க்கடன்[121] தான்கழித்து
அவரவர்கள் வீடுவந்து
அமர்ந்திருந்தார் அன்னாளில்

மந்திரமூர்த்தியின் மகிழ்வு நிலை

அந்த நல்ல வேளையிலே
ஆனதொரு மந்திர மூற்றி
குடுசையிலே வந்து சேர்ந்து
குணமுடனே யேது செய்தான்
சப்பிரமஞ்சக் கட்டிலிலே
தையலர்கள் இருபேரும்
வலப்புறம் சோணமுத்து
இடதுபுறம் சாதியுமா
கொள்ளியப் பிசாசுகளை[122]
குடுசையைச் சுத்திக் காவல்வைத்து
அசையாத மணிவிளக்கு
அருகிருந்து தானெரிய
இப்படியே யிருக்கையிலே
இடருவந்து நேருதப்போ

கொண்டைங்கோட்டை மறவர் செயல்

கொண்டையங் கோட்டைப் ப...த்தலைவர்[123]
கொத்தவர்கள் ஏழு பேர்கள்
சாமமது சாமத்திலே
சதிசாம வேளையிலே
ஏழு பேரும் ஒரு முகமாய்
எழுந்திருந்தா ரன்னேரம்
விளைந்து கிடக்கும் சென்னலிலே[124]
வீர மன்னர் தான்கசக்கி
ஏழுநல்ல பேர்களுக்கும்
எழு.... சாலி தான்பிடித்து
ஏழுபேரும் சிமடெடுத்து
இன்பமுடன் வரும்போது

குடுசையிலே வெளிச்சமது
குணமுடனே தான்பார்த்து
செத்திறந்து போனானே
தீவெளிச்சம் ஏதெனவே
அதிலொருவர் சிமடிறக்கி
அன்பாக வைத்தல்லவோ
ஆடிடுக்கும் கள்வரைப்போல்
அன்பாகத் தானுங் கண்டு
குடுசையருகே வந்தல்லவோ
குணமுடனே பார்க்கையிலே
சப்பிர மஞ்சக் கட்டிலிலே
தான்படுத்து தூங்கிறதும்
வலதுபுறம் சோணமுத்தும்
இடதுபுறம் சாதியுமாய்
பார்த்து வந்து சிமடெடுத்து
பார மன்னர் வீடுவந்து
சிமடுதன்னை வைத்தல்லவோ
சீக்கிரமாய் ஓடிவந்து
ஏழு ஊருப் பச்சேரியும்
இன்பமுடன் தானெழுப்பி

மந்திரமூர்த்தியைப் பிடித்தல்

எல்லோரும் ஒருமுகமாய்
இன்பமுடன் வந்தல்லவோ
குடிலைச் சுத்தித் தான்வளைந்தார்
குடும்ப மக்கள் எல்லோரும்
கைப்பிடியாய்ப் பிடித்தல்லவோ
கயறு கொண்டு கெட்டலுற்றார்
கட்டின கட்டிருக்க
கயறு துண்டு துண்டாய்ப் போகுதய்யோ!

வெட்டுமாறு உத்தரவும், வெட்ட இயலாமையும்

பிள்ளையனிடங்[125] கொண்டுவந்து
பிரபலமாய்த் தானே விட
பார்த்தானே பிள்ளையனும்
பாவினையா யேது சொல்வான்
பொல்லாத துஷ்டனிவன்
பூமியிலே யிருக்கொண்ணாது

வெட்டும்படி உத்தரவு
வீரமன்னர் தானுரைத்தார்
புலியூருத் தேவனென்றும்
புனஞ்சிமால் தேவனென்றும்
அருணாசலத் தேவனென்றும்
ஆதரவாய் ஏழுபேரும்
மந்திர மூற்றி(யை)த் தான்பிடித்து
மன்னவர்கள் கொண்டு வந்தார்
கைப்பிடியாய்ப் பிடித்தல்லவோ
கட்டழகர் வந்து சேர்ந்தார்
ஆவரங் காட்டய்யர் சன்னதி(யி)லே
ஆதரவாய்க் கூட்டி வந்து
வடக்கே முகமாகத் தான்நிறுத்தி
மன்னன் புலியூருத் தேவனவன்
வீச்சருவாள் தனை யெடுத்து
வீசினானே தலைய தைத்தான்
வெட்டின வெட்டிருக்க
வீச்சறுத் தரங்கிடவே[126]
பின்னம்ஒரு கத்திகொண்டு
பிடதியிலே[127] போட்டானே
வெட்டுகிற கத்தியது
வீச்சருவாள் தரங்கிடவே
என்னயென்ன காரணமோ
எல்லோருந் தான்நினைந்து
பார்த்து மங்கே பரதவித்து[128]
பார மன்னர் நிற்கையிலே

வெட்டுப்படாத இரகசியமும், வெட்டுதலும்

பார்த்தானே மந்திர மூற்றி
பாவினையாய் ஏது சொல்வான்
வாருங் காணும் தேவமாரே
வார்த்தை யொன்றுஞ் சொல்லக் கேளும்!
வலது புசமதிலே[129] ஒரு குளுசம்[130]
வலது துடையதிலே ஒரு குளுசம்
புடதியிலே ஒரு குளுசம்
புளந்து மங்கே தானெடுத்தான்
அடியோடே முடிசாய்வேன்
ஆனதொரு தேவ மாரே!

மூணு குளுசமதைத் தானெடுத்து
முகனை (யுடனே) தேவனவன்
வீச்சருவாள் தனையெடுத்து
வீசிவிட்டான் தலையதைத்தான்
தலையதுதான் கீழ்விழு முன்
தாங்கினான் இரு கையாலே
மூன்று தேரம்[131] சுத்தியல்லோ
முடிசாய்ந்து கீழ்விழுந்தான்
முடிசாய்ந்து கீழ்விழுந்தான்
மூர்க்கமுள்ள மந்திர மூற்றி!

சாதிப்பிள்ளையின் ஒப்பாரி

அன்னேரம் சாதிப்பிள்ளை
ஆயிழையாள் ஓடிவந்து
என்கணவா யென்கணவா - உன்னை
எங்கே போனால் காணிலேனே?
வாதுக்குச் சக்களத்தி
வந்துதான் முழைந்தாளோ!
கீரைக்குப் புல்லுருவி
கிண்டி முளைத்தாளோ!
முத்துப் போலே கண்ணீரை
முகத்தோடே சோர விட்டாள்!
பகளம் போலக் கண்ணீரை
பக்க மெல்லாஞ் சோர விட்டாள்!
அவள் அழுத கண்ணீரும்
ஆறாய்ப் பெருகு தய்யோ!

சோணமுத்து ஒப்பாரியும், பெண்களிருவர் சாவும்

சோணமுத்துப் பெண்கொடியாள்
தோகை நல்லாள் ஓடிவந்து
என்கணவா யென்கணவா - உன்னை
எங்கே போனால் காணிவேனே?
கோடி[132] மயங்கலையே யென்கணவா
கொண்டைப்பூ வாடலையே!
பந்தல் பிரிக்கலையே யென்கணவா
வந்த சனங்கள் போகலையே
வலிய குலம் பிறந்தே - யிப்போ
எளிய குல மானேன்

மஞ்சள் புடவை தன்னை
மடித்துடுத்த நாள்ப் போகி
கஞ்சிப் புடவை தன்னை
கழுத்திலிட நாளாச்சே!
வரப்போ தலைவாணி[133] யென் கணவா
வாய்மடையோ[134] பஞ்சு மெத்தை!
புல்லோ தலைவாணி
புழுதி மண்ணோ பஞ்சு மெத்தை!
அழகை யெழுதினவன்
ஆயுளை யெழுதலையே!
வடிவை யெழுதினவன்
வாணா(ளை)[135] யெழுதலையே!
முத்துப் போலக் கண்ணீரை
முகத்தோடே சோரவிட்டாள்!
பகளம் போலக் கண்ணீரை
பக்க மெல்லாஞ் சோர விட்டாள்!
அவளழுத கண்ணீரும்
ஆறாய்ப் பெருகிடவே
மங்கை நல்லா ளிருபேரும்
மன்ன னவன் படுகளத்தில்
நாவிலே சீலைசுத்தி[136]
நல்லுயிரை மாய்த்து விட்டார்.

மந்திரமூர்த்தி புதியவனைப் பழிவாங்கல்

பட்டதோர் எட்டா நாளையிலே
பாரி வேட்டை[137] யாடவென்றே
சாமமது சாமத்திலே
சதிசாம வேளையிலே
இலை குலுங்கா வேளையிலே
ஏமசாம நேரத்திலே
மந்திர மூற்றி தடிவீரன்
மன்ன னவன் எழுந்தருளி
கச்சயைது[138] வரிந்து கட்டி
கருங்கச்சை சுங்கலிட்டு[139]
ஏழுமணி வல்லையத்தை[140]
எடுத்தானே ஒருகையில்
புதியவன் வீடுவந்தான்
போர்வேந்தன் மந்திர மூற்றி

கதவுதட்டி யெழுப்புதய்யோ
கைப்பிடித்துத் தூக்குதய்யோ!
அண்ணே அண்ணே புதியவனே
ஆணழகா யெழுந்திரிடா!
கிழக்கே வெளுக்குதடே
கீர்த்தியுள்ள புதியவனே!
பாச்சீவ[141] வரவில்லையோ
பார மன்னா புதியவனே!
பதறியே தான்முழித்து
படுகதவைத் தான்துறந்து
அச்சுத்தடி[142] மாராப்பும்[143]
அருவாளும்[144] தளையெடுத்து[145]
வீடுவிட்டே வெளியில் வந்தான்
வீதமுள்ள புதியவனும்
மந்திர மூற்றி முன்நடக்க
மன்னவன் பின்நடந்தான்
கும்புடு பனையதிலே
கொத்தவனும் வந்து சேர்ந்தான்
அச்சுத்தடி தான்சாத்தி
ஆனதொரு தளையெடுத்து
புதியவனும் தான்ஏற
போர்வேந்தன் மந்திர மூற்றி
பனையோடே பனையாக
பாரமுள்ள புதியவனை
கொன்று பழியெடுத்தான்
கொத்தவனும் மந்திரமூற்றி
புதியவனைப் பழியேத்து
பிறப்பட்டார் மந்திர மூர்த்தி!

ஏழூரில் செய்த செயல்கள்

ஏழுஊரு பச்சேரிக்கும்
இன்பமுடன் போய்ப்புகுந்து
வாந்தி போலும் பேதிபோலும்
வயத்தோட்டம் மாந்தப் பேதி
மண்டையிடி காச்சல் போலும்
மாந்தப் பேதி குளுரு போலும்
எட்டோடே யெட்டு னாளாய்
எடுத்த கடன் கீழ்வையாமல்

மந்திர மூர்த்தி தெய்வமாதல்

ஊரவர்கள் எல்லோரும்
 உறமுறையார்[146] தான்கூடி
மந்திர மூற்றி தடிவீரர்க்கு
 (மகத்தாக) நேந்திடவே
நேந்துமங்கே நிலைய மிட்டு
 நீதியுடன் குடை கொடுத்தார் 465
பொங்கிப் பொறித் துப்பேத்தி[147]
 பொலிகள்[148] முதல் தான்குடுத்தார்
ஆடுகிடாய் கோழி பன்றி
 அணியாய் மிருகங்கள் பெலி[149] கொடுத்தார்
மலையிலுள்ள மிருகங்களை
 வதபெலிகள் தான்குடுத்தார்
தடிவீர னென்று நிலையமிட்டு
 தாடாளர் போட்டுத் தான்குடுத்தார்
அன்று முதல் பட்டணத்தில்
 அமர்ந்தது தான் கக்கலது[150]
வெயிலுங் காத்தும் வேறொழிய
 விக்கின மில்லாமல் காத்தருள்வாயே! 471

முற்றும்

தடிவீரசுவி (சுவாமி) கதை முற்றும்.
1054-ஆம் ஆண்டு (கி.பி.1879) சித்திரை. (மாதம்)
ய எ உ (17ந் தேதி) அழகக நேரி......

தடிவீரசுவாமி கதை - சொல்விளக்கக் குறிப்புகள்

1.	செந்திநகர்	-	செந்திலாண்டவன் நகராகிய திருச்செந்தூர். (சிவந்த மண் கொண்ட நகரமாதலின் செந்தூர் ஆயிற்று).
2.	குடும்பன்	-	பள்ளர் இனத்தவரைக் குடும்பன் என்பது தென்மாவட்ட வழக்கு.
3.	அஞ்சுக்கு ரெண்டு வாரம்	-	ஐந்தில் இரண்டு பங்கு மகசூல்.
4.	ஈனவன்	-	வண்ணார் குல வகைகளில் கீழான ஈனவண்ணான் குலத்தவன். (புரதவண்ணார் என அழைக்கப்படும் இவர்கள் பள்ளர், பறையர் முதலானோர்க்குத் துணி வெளுப்பவர். பொதர வண்ணார், புதர்வண்ணனான் என்னும் பேச்சு வழக்கில் அமையும்).
5.	பிராயம்	-	வயது.
6.	சிமதாங்கி	-	சுமையை இறக்கித் தலைப்பாரம் ஆற்றுதற்கு உதவியாக, உயர்த்தி நிறுத்தப்பட்ட கற்கட்டு.
7.	கோதானம்	-	தசதானங்களுள் ஒன்றாக, பசுவைத் தானமாக அளித்தல்.
8.	பூர்வதானம்	-	பூதானம் எனப்படும் பூமி தானம்.
9.	புரதமங்கை	-	புரத வண்ணார் குலத்தைச் சேர்ந்த மங்கை.
10.	விசாரம்	-	ஆலோசனை.
11.	பொசிப் பார்களோ	-	புசிப்பார்களோ, உண்ணுவார்களோ.
12.	மாதாந்தம்	-	மாதந்தோறும் கோயிலுக்குச் சென்று வழிபடுதல்.

13.	கெட்டமுது	- கட்டமுது-கட்டுச் சோறு. பயணப்படுவோர், நாட்பட்டாலும் கெடாவண்ணம் துணியில், நார்ப்பெட்டியில் கட்டிச் செல்லும் சோறு.
14.	பொருவிளங்காய்	- பொரிவிளங்காய்- சிறு பயற்று மாவோடு சர்க்கரை சேர்த்துச் செய்த பணிகாரம்.
15.	நெருநாழி	- நிறைநாழி. (மங்கலக் குறியாக நாழி நிறைய நெல் வைத்தல்).
16.	வசனம்	- கோயிலில் கடவுளை வேண்டிக்கொண்டு வாசஞ் செய்யும் விரதம்.
17.	பாவினையா	- பாவனையாக.
18.	அரனார்	- சிவபெருமான்.
19.	கருவேல பொக்குசம்	- கருவூல பொக்கிசம்.
20.	மோசினை	- மோட்சனை (வீடுபேறு).
21.	தத்து	- கண்டம், சாதகத்தின்படி நேரும் உயிராபத்து.
22.	குளிமறந்து	- குளியாமலிருந்து- பிள்ளைப்பேறு உண்டாகியிருப்பதால் மாதவிடாய் காரணமாகக் குளிக்கும் மாதக் குளியலைச் செய்யாது விடுதல்.
23.	மாத்தையிலே	- மாதத்திலே.
24.	மாஷ்த்தையிலே	- மாதத்திலே.
25.	பார்க்க முடி கூடுதில்லை	- தலையுயர்த்திப் பார்க்க இயலாத கொள்ளை அழகு.
26.	பாண்டியனார் குலமதுபோல்	- பாண்டிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர் போல.
27.	தெண்ணீரு	- தெளிந்த நீர்.
28.	தகையடங்கா	- தகுதிக்குள் அடங்காத.
29.	சேனை	- சேனைப்பால். (குழந்தை பிறந்ததும் புகட்டும் இனிப்புக் கலந்த திரவ வடிவமான உணவு).

30.	குலவை	- குரவை, மங்கல நிகழ்ச்சியின் பொழுது மகளிர் நாவாற் குழறியிடும் மகிழ்ச்சியொலி.
31.	தாதிமார்கள்	- மகப்பேறு மருத்துவம் பார்க்கும் தாதியர்கள், செவிலித்தாய்.
32.	அண்ணாவி	- ஆசான் ஆகிய ஆசிரியர், உபாத்தியாயர்.
33.	இந்திரசாலம்	- அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றாகிய மாயவித்தை.
34.	மந்திரசாலம்	- மந்திர வித்தை.
35.	காடேரி	- காட்டேரி எனும் பெண் தேவதை.
36.	அச்சரம்	- அட்சரம், எழுத்து.
37.	மாரணம்	- அட்ட கருமத்துள் ஒருவனை மந்திரத்தால் இறக்கச் செய்யும் வித்தை.
38.	தம்பல உச்சாடனம்	- தம்பல உச்சாடனம்- அட்டகருமத்துள் ஒருவன் இயக்கத்தை மந்திரத்தால் தடுத்துக் கட்டுகை.
39.	சூரத்தொழில்	- வீரத் தொழில்களாகிய வில், வாள், ஆனையேற்றம், குதிரையேற்றம் ஆகிய பயிற்சிகள்.
40.	கௌ	- கிளை.
41.	வெள்ளாவி	- ஆடையை வெளுக்க உதவும் நீராவி.
42.	சாணான்	- சான்றான் எனும் நாடார் குலத்தவன்- பனையிலிருந்து சாறாகிய கள் இறக்குதலாலும், சாண் நாரினைக் கொண்டு பனையேறுவதாலும் சாணான் எனப்பட்டனர் என்பர். சாணான் என்ற சொல் சான்றோன் என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்பாரும் உளர். மட்டையர், கள்ளர், நாட்டார், கொடிக்கால், மேல்நாட்டார் என்ற ஐந்து வகையினராக இவர்கள் உள்ளனர்.
43.	சமர்தமிட்டு	- சபதமிட்டு.
44.	பக்குவத்தி	- பக்குவமடைந்த பெண்.
45.	முட்டுத்துறை	- மாதவிடாய் ஆன பெண்கள் தீட்டுக் கழியும் வரை இருக்கும் தனியிடம்.

46. தாம்புரநதி - தாமிரவர்ணி ஆறு, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் ஓடும் ஆறு.

47. மாத்து - மாற்று (Exchange) என்பதன் திரிபு - வெளுத்த ஆடைகளை இரவலாகக் கொடுத்தல்- உடமையாளரின் துணியைத் தூய்மை செய்து கொடுத்துவிட்டு மாத்துத் துணியைத் திரும்பப் பெற்றுக் கொள்வர்.

48. வண்ணாரும் துறை - வண்ணார் துணி வெளுக்கும் இடம்.

49. மதம் புழிந்த - மதம் பிழிந்த, வெறிபிடித்த.

50. இந்திரியோ - இந்திராணியோ.

51. மய்யல் - மையல், காம மயக்கம்.

52. நாழியல் - நாழிகை, இன்று இரண்டரை நாழிகை ஒரு மணி நேரம் எனக் கணக்கிடுகின்றனர்.

53. எழுத்து முத்துக் கச்சவடம் - எழுத்து முத்துக் கச்சட்டம் - எழுத்துகள், ஓவியங்கள், கோடுகள் எழுதப்பட்ட முத்துக்கள் கோர்த்த ஆடை. இங்கு மிகச் சிறந்த ஆடை என்பதைக் குறிக்கும்.

54. துருசாக - துரிதமாக, விரைவாக.

55. சிலங்கோரி - சலங்கோரி, தண்ணீர் எடுத்து.

56. சேந்திநகர் - சிவந்த அதாவது செந்தி நகராகிய திருச்செந்தூர்.

57. அரைமனை - அரண்மனை.

58. துயில் - துகில், ஆடை.

59. சவுக்காரம் - அழுக்கு நீக்கும் சோப்பு முதலிய கூட்டுப்பொருள்.

60. தாடாளன் - மேன்மையுள்ளவன், பெருமுயற்சி யுள்ளவன்.

61. சாமம் - நடு இரவு.

62. வரிந்தான் - வரைந்தான்.

63. அடிமுந்தி - சேலையின் அடிப்பகுதி, முதலில் இடுப்பில் சொருகப்படுவது.

64. மேல்முந்தி - மாராப்பாக, மேலே போடப்படும் சேலைப்பகுதி.

65. முகனை - முன்னால்.

66. கஞ்சி - சோறும் நீருமாக இருப்பது, நீர் கலந்த உணவு.

67. சக்கப்பழம் - சக்கை (கோது) உள்ள பழம். (பலாப் பழத்தை இவ்வாறு கூறுவது தென்மாவட்ட வழக்கு).

68. ஏகி - ஏவி.

69. உவர் - உப்புமண், துணி வெளுக்கப் பயன்படுவது.

70. விதிமறந்து - நினைவு மறந்து, தன்னிலை மறந்து.

71. சம்பா அரிசி - உயர்தர நெல்லரிசி.

72. கூவநீர் - கிணற்றுநீர், குடிப்பதற்கு ஏற்ற, கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நல்ல நீர்,

73. தேட்டுக் கருவாடு - விருப்பமுடன் உண்ணவைக்கும் கருவாட்டு வகை.

74. திப்பிலி - கள்.

75. ஏழடுக்குச் சட்டி - ஏழு அடுக்குகள் (tier) கொண்ட பாத்திரம்.

76. சம்பிரமஞ்சக் கட்டில் - சப்பிரமஞ்சக் கட்டில், மேற்கட்டமைந்த சிங்காரக் கட்டில்.

77. புட்டுவைத்து - பிட்டு வைத்து.

78. சம்பர மஞ்சள் கட்டில் - சப்பிரமஞ்சக் கட்டில்.

79. இழுதாச்சே - இழுக்காச்சே, தாழ்வாச்சே.

80. இலை - வெற்றிலை.

81. மகுந்து - மகிழ்ந்து.

82. கண் கோல் - தண்கோள்? விடியுமுன் எழும் விடிவெள்ளியைக் குறிப்பது?.

83. கூத்துவன் - கூற்றுவன், எமன்.

84. கொத்தவன் - கொற்றவன்.

85. வரும - வருமம், வன்மம், சபதம்.

86. கன்னியடி மூலை - தென்மேற்கு மூலை.

87. நிறமரக்கால் - நிறை மரக்கால்.

88. தீவதீவம் - தீபதீபம் - தீபதூபமாகலாம். தூபம் - தூவுதல் மூலம் மணம் பரப்பும் சாம்பிராணி போன்றவை.

89. சால் - உழவுசால், உழுபவன் வயலில் ஒருமுறை சென்று திரும்புதல் ஒரு சால் ஆகும்.

90. தகையோடி - - தாகம் கொண்டு.

91. அஞ்சுமரக்கால் கள் ஏறும் - மரக்கால் மரத்தால் செய்த பாதம். (பனை ஏறப் பயன்படும் அச்சுத்தடியைக் குறிக்கும்?)

92. குடும்பங்கள் - குடும்பர், பள்ளர் எனப்படும் தேவேந்திரகுல வேளாள குலத்தைச் சேர்ந்தவர்களை இப்பெயரில் அழைப்பது தென்மாவட்ட வழக்கு.

93. பட்டை - பன்னை ஓலை. (இதனைக் குழிவாக அமைத்துக்கொண்டு அதைக் கள் ஊற்றிக் குடிக்கப் பயன்படுத்தினர்).

94. கொறுக்கு - கறுக்கு, பனைமட்டையின் இருபுறமும் கூர் கூராக உள்ள அமைப்பு கறுக்கு எனப்படும்.

95. கருப்பு - கள்ளின் அடியில் தேங்கும் மண்டி அல்லது கசடு, கருப்பு எனப்படும்.

96. வீசை - மீசை.

97. சத்தும் - சற்றும், சிறிதும்.

98. கெணியாமல் - கணிக்காமல், கணக்கிடாமல், எண்ணாமல்.

99. வேத்து - வேர்த்து, வியர்த்து

100. விருவிருத்து கடுப்பு, வியர்வைக் கசகசப்பினால் உண்டாகும் கடுகடுப்பைக் குறிப்பதாகலாம்.

101.	குடும்பங்காள்	- குடும்ப மக்களே.
102.	வைப்பாக	- வைப்பாட்டியாக.
103.	சினமே	- க்ஷணமே, உடனே.
104.	ஒப்பியாட்டால்	- ஒப்புவிக்காவிட்டால்.
105.	இரவாளில்	- இடைவாள்? இரையாக்கும் வாள்?
106.	ஓடக்கரை	- ஓடைக்கரை (ஓடை - சிற்றாறு).
107.	உகந்து	- உவந்து (விருப்புடன்).
108.	பதிகிடங்கோ	- ஓரிடத்திலேயே பதிந்து, பதுங்கிக் கிடத்தல்.
109.	கொன்றை	- கொண்டை.
110.	உருமால்	- தலைப்பாகை.
111.	அலர்கதிரோன்	- மலர்ந்து ஒளிவீசும் சூரியன்.
112.	மாரண மை	- சூன்ய மை. மறையச் செய்யும் மை.
113.	பாம்புராணி	- பல்லி, ஓணான் வகையைச் சேர்ந்த பிராணி. பாம்பு கடித்தால்தான் விஷம். இது நக்கினாலே விஷம் என்று கருதி பாம்புராணி என்றழைப்பர். சாம்பிராணி எனப் பேச்சு வழக்கில் அழைத்தலுமுண்டு.
114.	வக்கல்	- வைக்கோல்.
115.	உரு சுருணை வக்கல்	- பந்துபோல் கெட்டியாகச் சுருட்டி வைக்கப்பட்ட வைக்கோல்.
116.	பிரமடை	- நடுமடை.
117.	துலாம்	- ஐந்து வீசை கொண்ட நிறை - ஒரு வீசை என்பது சுமார் ஒன்றரை கிலோ நிறை கொண்டதாகும்.
118.	மிளகு வத்தல்	- மிளகாய் வற்றல். இதனை மிளகு வத்தல் எனல் தென்மாவட்ட வழக்கு.
119.	வற வக்கல்	- நன்கு காய்ந்த வைக்கோல்.
120.	தீக்கடன்	- ஈமக்கிரியை.
121	நீர்க்கடன்	- பிதிரர் பொருட்டுச் செய்யும் உதகக் கிரியை.

122. கொள்ளியப் பிசாசு - கொள்ளிவாய்ப் பிசாசு - வாயில் நெருப்புடையதாகக் கருதப்படும் பேய் வகை என்ற நம்பிக்கை உண்டு.

123. கொண்டையங் கோட்டைத் தலைவர் - இடைச் சாதியில் அடங்கும் மறவர் பிரிவில் ஒரு வகையினர். மறவர் பிரிவு 7 என்றும் 11 என்றும் இரு கருத்துகள் உண்டு. கொண்டையங்கோட்டை மறவருள்ளும் வெற்றிலை, மிளகு, கமுகு, ஈச்சம், தென்னை, பனை போன்ற கிளைகள் உண்டு.

124. சென்னல் - செந்நெல், செஞ்சாலி நெல்.

125. பிள்ளையன் - வடமலையப்ப பிள்ளையன். நாயக்க அரசரின் பிரதிநிதியாய்த் திருநெல்வேலிச் சீமையை ஆண்டவரும், (கி.பி.1706) மச்சபுராணம் இயற்றியவருமான பிரபு.

126. தறங்கிடவே - தெறித்திடவே.

127. பிடதி - பிடரி, பின்கழுத்து.

128. பரதவித்து - பரிதவித்து, செய்வதறியாது.

129. புசம் - புஜம், தோள்.

130. குளுசம் - குளிகை, மந்திர சக்தியுள்ள மாத்திரை.

131. தேரம் - தடவை, முறை.

132. கோடி - புதுத்துணி.

133. தலைவாணி - தலைகாணி, தலையணை.

134. வாய்மடை - செய்வரப்பில் நீர் பாயும் வழி.

135. வாணாள் - வாழ்நாள்.

136. நாவிலே சீலை சுத்தி - நாக்கில் துணியைச் சுற்றி.

137. பாரிவேட்டை - கோயில் திருவிழா வகை. சாமி அதாவது சாமியாடி கொட்டு முழக்கோடு வந்து, பின் தனியே காவெடுக்கப் போதல். அப்பொழுது யாரும் எதிர்ப்படலாகாது எனக் கூறுவர்.

கோயில் கொடையின்போது நடக்கும் முக்கிய நிகழ்ச்சியுள் ஒன்று.

138. கச்சை - அரைக்கச்சு, இடுப்பில் கட்டும் துணி.

139. சுங்கலிட்டு - சுங்கு - ஆடையில் தொங்கவிட்டுக் கட்டும் மூலை, ஆடையின் கொய்சகம்.

140. ஏழுமணி வல்லயம் - ஏழுமணிகளுடன் கூடிய ஈட்டி வகை.

141. பாச்சீவ - பாளை சீவ.

142. அச்சுத்தடி - பனை ஏறுபவர் பயன்படுத்துவது, சுமார் 3 அடி உயரத்தில் கவட்டைக் கம்பு போல இருக்கும். இதனைப் பனை மரத்தில் சார்த்தி அதன்மேல் கால் வைத்துப் பனையில் ஏறுவர்.

143. மாராப்பு - பனை ஏறும் தொழிலாளர் பயன்படுத்துவது, பனை ஏறும் பொழுது மார்பில் மரம் உராயாவண்ணம், உள்ளே பஞ்சு போன்ற அமைப்புடன் கூடிய, தோலால் ஆன பட்டை. இதனை மார்பில் சேர்த்துக் கட்டிக் கொள்வர்.

144. அருவாள் - பாளை சீவுகின்ற அரிவாள்.

145. தளை - கால் வழுக்கிவிடா வண்ணம், பிடிமானத் துக்காக இருகாலையும் இணைத்துப் போட்டுக் கொள்ளும் பனைநார்க் கயிறு.

146. உறமுறையார் - உறவு முறையார்.

147. உப்பேத்தி - பலி கொடுக்கப்படும் ஆட்டுக்கறியை உப்பிட்டு, உப்புக் கண்டமாக்கிக் கெடாமல் வைத்திருப்பது.

148. பொலிகள் - பலிகள், ஆட்டுக்கிடாயை தொண்டை முதல் நெஞ்சு, நடுவயிறு நெடுகக் கீறிப் படையலிடுதல்.

149. பெலி - பலி.

150. கக்கல் - வாந்தி.

8017. வன்னியராயன் கதை

ஹரி ஓம்
நனறாக
குருவே துணை ,

காப்பு

வன்னியராயன் புகழ்

சட்டை தொட்டுக்[1] கச்சைகட்டி[2]
சக்கரமும்[3] அட்டியலும்[4]
வட்டப் பரிசையுடன்[5]
வல்லயமும்[6] நீபிடித்தாய்!
அட்ட துஷ்டப் பேயை[7]
அடக்கியே யாளும்
சித்தர் புகழும் வன்னிய ராயன்[8] - எங்கள்
தெய்வச் சிகாமணியே!

M.P. புலமாடக்கோன் வாசித்து வருகிற வன்னியராயன் கதை

பல தெய்வ வணக்கம்

கணபதியும் என்குருவும்
கினாவிலேயும்[9] நான்மறவேன்!
குணபதியே அறுமுகமே
குஞ்சரமே உனைப்பாட
பாடுவேனே நானும் உன்னை
பலகாலம் உனைத் தொழுவேன்!
கூறுவேனே நானும் உன்னை
குற்றம் பிழைக ளொன்றும் வாராமல்
கண் கொடுத்த நாயகியே[10]
கினாவிலேயும் நான் மறவேன்!
வன்னிய ராயன் கதைபாட
வல்ல சரஸ்பதியே முன்னடவாய்!

நாட்டு வளம்

நாட்டிலேயும் நல்ல நாடு
நாவலர்கள் புகழும் நாடு

சென்னல்[11] கற்நல்[12] விளையும் நாடு
சிறுகதலி[13] பழுக்கும் நாடு
இலுமிச்சு[14] பழுக்கும் நாடு
இருவாச்சி[15] பூக்கும் நாடு
மானிருந்து விளையாடும்
மயிலிருந்து சிறகை விரித்தாடும்
தேனிருந்து கனி சொரியும்
சிறந்த வடநாடு சீமையிலே[16]

ராமசுவாமித் தேவரின் நல்லாட்சி

ஊத்து மலை நாடதிலே[17]
உகந்து மங்கே ஆண்டிருந்தார்[18]
ராம சுவாமித் தேவருமே
நலமுடனே ஆண்டிருந்தார்
மாட கூடமொரு மாளிகையாம்!
மணியறைச் சாவடி[19] மேடைகளாம்!
முத்துநகரத்தின[20] மேடைகளாம்!
முன்னும் பின்னும் சாவடியாம்!
மாடுகளும் பிஞ்சைகளும்[21]
நல்லதொரு அடுமைகளும்[22]
பாலாலே குறைவுமில்லை
பாக்கியத்தால் தாழ்வு மில்லை
சோட்டுப் பாயிலே[23] பணம் உணத்திட[24]
தொல்புவியில் ஆண்டிருந்தார்.

திருமண நிகழ்ச்சி

ராம சுவாமித் தேவருக்கு
நலமுடன் கல்யாணம் முடிக்கவென்று
தேவர்குளம்[25] தன்னதிலே
சிறந்த வன்னியர்கள்[26] ஆண்டிருந்தார்
வன்னிச்சிப் பெண்கொடியை[27]
மன்னருக்குமே பெண்பேசி,
பங்குனி மாசத்திலே
பதினெட்டாம் பெருக்கத்திலே,[28]
நாளான நாளதிலே
நல்ல வெள்ளிக் கிழமையிலே,

வெள்ளி நல்ல கிழமையிலே
விடிந்து ரெண்டரை நாழிகையில்[29]
உத்தர நட்சத்திரத்தில்[30]
உகந்த கன்னியா லக்கினத்தில்,[31]
நாளிட்டு முகிர்த்தம்[32] வைத்து
நலமுடன் ராமசுவாமித் தேவருக்கு,
பங்குனி மாசத்திலே
பதினெட்டாந் தெய்தியிலே,[33]
மணவறையில் கூட்டி வந்து
மாப்பிள்ளை பெண்ணையும் அலங்கரித்து,
தேவர்கள்[34] கூடிய சபை தனிலே
திருமங்கிலியம்[35] பூட்டலுற்றார்
வன்னிச்சிப் பெண்கொடியை
மன்னருமே மாலை யிட்டார்
மாலையிட்டு மணம் புரிந்து
மன்னன் ராமசுவாமித் தேவருமோ
மறுவீடு[36] வந்தல்லவோ
மன்னவனும் மனையாட்டியும்[37]
ஊத்துமலை நாட்டிலே
உகந்து மங்கே ஆண்டிருந்தார்.

குழந்தையில்லா வருத்தம்

ஆண்டிருக்கும் நாளையிலே
ஆயிழையாள் வன்னிச்சியும்
வெகு நாளாய் மலடிருந்து
வேந்தனுமோ யில்லாமல்
மலடிருந்து மனமுருகி
மைந்தனுமோ யில்லாமல்
பிள்ளை யில்லாக் கவலையது
பெருங்கவலை யுண்டாகி
மைந்தனில்லாக் கவலையது
மனக்கவலை மெத்தவுண்டாம்
என்கணவா மன்னவரே
என்வார்த்தை சொல்லக் கேளும்!
என்னை மலடி மலடி யென்று
வையகத்தார் ஏசுகிறார்!
என்னை யிகுசி[38] மலடியென்று
ஏசுகிறார் வையகத்தார்

பிள்ளை யில்லா வாசலிலே
பெரியோர்கள் பொசிப்பார்களோ[39]?
மைந்தனில்லா வாசலிலே
மறையோர்கள் பொசிப்பார்களோ?
நாமள் ஆண்டிகளை[40] அடித்தோமோ?
அநியாயஞ் செய்தோமோ?
கொத்தைக்[41] குறைத்தோமோ?
குறை மரக்கா லளந்தோமோ?[42]
பட்டறை[43] நெல்லுகளில்
பலர் சாவி[44] கலந்தோமோ?
அங்காடி[45] பதார்த்தங்களை[46]
அதிரவிலை[47] வித்தோமோ?
பிச்சைகேட்டு வந்தவரை
பின்னை வரச் சொன்னோமோ?
பாப்பாரை யடித்தோமோ[48]
பால்பசுவைக் கொன்றோமோ[49]?
முன்செய்த தீவினையோ[50]
முடிந்துதய்யா யிப்பிறப்பில்
எவர் செய்த தீவினையோ
என்தலையில் விதிப்பயனோ!
ஆர்செய்த தீவினையோ
ஆண்டவனார் கற்பினையோ[51]

தானதருமங்கள் செய்தல்

வன்னிச்சி சொன்ன போது
மன்னவரும் ஏது சொல்வார்
வாடி பெண்ணே பெண்கொடியே!
வாற்றை[52] யொன்று சொல்லக் கேளாய்!
தான தர்மஞ் செய்து பார்(ப்)போம்
தையலரே பெண்கொடியே!
அன்னதானஞ்[53] சொர்ண தானம்[54]
ஆடை தானம்[55] வஸ்திரதானம்[56]
கோதானம்[57] பூர்வதானம்[58]
கொடுத்தாரே புரோகிதர்க்கு[59]

கோவில் தலப் புறப்பாடு

எத்தனை தானஞ் செய்தாலும்
இவள் தனக்கொரு குழந்தையில்லை!

பார்த்தானே வன்னிச்சியும்
பாவினையா யேது செய்தாள்
என்கணவா மன்னவரே
என்வார்த்தை சொல்லக் கேளும்!
சங்கர நயினார் கோவி(லு)க்கு[60]
தவசு[61] செய்யப்போறேனய்யா
தினை மாவும்[62] எடுத்துக் கொணடு
சிலவுக்கு[63] வேண்டிய பொன்னெடுத்து[64]
கட்டமுது[65] தவணைப்புளி[66]
மாப்பலகாரம்[67] பொரிவிளங்காய்[68]
சருவா பரணமெல்லாம்[69]
தானெடுத்துப் பூண்டு கொண்டு
கணவனையும் அனுப்பிப் கொண்டு
கன்னி நல்லாள் புறப்பிட்டானே!
ஊத்துமலை நாடு மிட்டு
ஒத்தடிப் பாதை கூடி,
தேவர்குளம் தான்கடந்து,
வன்னிக் கரந்தைப் பாதை கூடி,
பனை வடலிச் சத்திரமும்
பாதைவழி தான்கடந்து,
குருக்கபட்டி தான் கடந்து
கோதை நல்லாள் பெண்கொடியும்
காலான் கரையான் ஓடையிலே
கன்னி நல்லாள் தீர்த்தமாடி,
தாகசாந்தி[70] பலற் முடித்து
தைய்ய நல்லாள் ஏது செய்தாள்!
காலான் கரையான் ஓடைவிட்டு
கண்ணம்மாள் சாலைப் பெருவழியாய்[71]
சங்கர நயினார் கோவிலிலே
தானே வந்து சேரலுற்றாள்.

தவம் செய்த முறைமை

ஆவுடைப் பொய்கையிலே தீர்த்தமாடி
நாகசுனையிலே ஸ்நானஞ் செய்தாள்
சங்கர நயினாரைச் சேர்வை பண்ணி[72]
கோமதி யம்மனை[73] அடிதொழுது
கோயில் குடவர வாசலிலே
கொடிமரக் கம்பத் தடியதிலே

சாந்தாலே தரை மெழுகி
சந்தனத்தாலே கோலமிட்டு,
தலைவாழை யிலை போட்டு,[74]
தானே வைத்தாள் நிறை மரக்கால்,[75]
நிறை மரக்கா லளந்து வைத்து.
விநாயகரைப் பிடித்து வைத்து,[76]
தேங்காய் பழம் உடைத்து வைத்து,
தீப தூபந் தான்கொடுத்து,
தினை மாவைத் தானெடுத்து,
தேனுடன் நறுநெய் கலந்து,
தாமரையின் நூல் வாங்கி[77]
தான் விளக்குப் போடலுற்றாள்.
மாவிளக்குப் பார்த்தல்லவோ[78]
வசனமிருந்து[79] தவசிருந்தாள்
நாற்பது நாள் ஒருமண்டலம்[80]
ராப்பகலென்று மறியாமல்
சங்கர நயினாரை வேண்டிக்கொண்டு
தவம் புரிந்தாளே பெண்கொடியாள்.

சங்கரலிங்கரின் செயல்

செய்யுந் தவம் பொறுக்காமல்
சிவ சங்கர லிங்கருமோ
அரனுடைய[81] கயிலாசத்தில்[82]
ஆதிசங்கரர் போய்ச் சேர்ந்தார்
வாரு மய்யா மீஸ்பரரே
வார்த்தை யொன்று சொல்லக் கேளும்
என் வாசலிலே தவசிருக்கும்
ஏந்திழையாள் பெண்கொடிக்கு
புத்திரனைக் கொடுக்க வேணும்
புகழ் பெரிய அரனாரே!

அரனாரும் சித்திரபுத்திரரும்

சங்கர நயினார் சொன்னபோது
சாக்ஷாதி யீஸ்பரரும்
சித்திர புத்திரரை
சிவனாரும் வரவழைத்து
வன்னிச்சிப் பெண்கொடிக்கு
மைந்தன் உண்டுமா யில்லையென்று

பட்டையத்தைத் தானெடுத்து
பார்வையிட வேணுமய்யா!
அரனார்தான் சொன்ன போது
ஆணழகன் நயினாரும்
கருவேல அறை[83] திறந்து
கண்டு யெடுத்தாரே திருயேட்டை.
பட்டையத்தை தானெடுத்து
பார்வை யிடும் வேளையிலே
எழுபிறப்புப்[84] பிறந்தாலும்
இவள்தனக்குக் குழந்தையில்லை!
எத்தினை தவசு செய்தாலும்
இருந்து அரசாளப் பிள்ளையில்லை!

சங்கரர் வரம் பெறல்

சித்திர புத்திரர் சொன்ன போது
செவியில் கேட்டாரே சங்கரரும்
என்னதான் சொன்னாலும்
ஈய வேணும் மைந்தன்வரம்
சங்கர நயினார் சொன்ன போது
சாக்ஷாதி யீஸ்பரரும்
பெண் கொடியாள் வயறதிலே
போய்ப் பிறப்பீர் மைந்தனாக
மைந்தனாக நான் பிறந்தால்
வயசு யெத்தினையில் மோசினை காலம்[85]
பதினெட்டு வயசதிலே
பாலனுக்கு மோசினை காலம்
அந்தப்படி வர்ம்வாங்கி
ஆதிசங்கரர் புறப்பிட்டாரே.

சங்கரலிங்கர் வரம் தரல்

தொண்ணூறும் பத்துஞ் சென்ற
துவண்டுருண்ட கிழவனைப் போல்
நாற்பதும் பத்துஞ் சென்ற
நரைத்த கிழவனைப் போல்
பார்ப்பார்போல் உடையுடுத்தி
பஞ்சாங்கம்[86] இடுக்கிக் கொண்டு
கோவில் குடவர வாசலிலே
கொடிமரக் கம்பத் தடியதிலே

கம்பத்தடி வாசலிலே
கன்னி யிடத்திலே வந்து நின்று
ஏது பெண்ணே பெண்கொடியே
என்னை வேண்டித் தவசு செய்தாய்!
என்னயென்ன வரமதுதான்
ஏந்திழையே வேணும் பெண்ணே!
சங்கர நயினார் கேட்டபோது
தய்ய நல்லாள் ஏதுசொல்வாள்
என் கவலை தீர்க்க வந்த
ஈஸ்பரனே சொல்லக் கேளும்!
பிள்ளை யில்லாக் கவலையது
பெருங்கவலை யுண்டாகி
மைந்தனில்லாக் கவலையது
மனக்கவலை யுண்டாகி
மைந்தன் வரம் வேணுமென்று
வருந்தி உம்மிடம் தவசிருந்தேன்
பெண்கொடியாள் சொன்னபோது
புகழ்பெரிய சங்கரரும்
வாங்கும் பெண்ணே வரமதுதான்
வயசு பதினெட்டில்[57] தத்து[58]உண்டும்
புத்து மண்ணும்[59] விபூதியும்
பெண்கொடிக்குக் கொடுக்கலுற்றார்.

வன்னிச்சி ஊர் திரும்புதல்

இருகையால் வாங்கி யல்லோ
இருகண்ணிலும் ஒத்தலுற்றாள்
முக்காலுஞ் சுத்தி வந்து
முடி வணங்கித் தெண்டனிட்டாள்
போய் வாரே னென்று சொல்லி
பிறப்பிட்டாளே வன்னிச்சியும்
குருக்கபட்டி தான்கடந்து
பனை வடலிச் சத்திரமும்
வன்னிக் கரந்தைப் பாதை கூடி
தேவர் குளந் தான்கடந்து
ஊத்து மலை தன்னதிலே
உகந்து மங்கே வந்து சேர்ந்தாள்

கணவனை வணங்கிக் கூறியவை

கணவனையுந் தானே கண்டு
　　கன்னி நல்லாள் தெண்டனிட்டாள்
பிள்ளை யில்லாக் கவலையது
　　பெருங் கவலையது தீர்ந்து தய்யா!
மைந்தனில்லாக் கவலையது
　　மனக் கவலை தீர்ந்துதய்யா!
கணவனுங் கன்னியரும்
　　கனிவாக யிருக்கும் போது

மாதத்தோறும் உடல் அடைந்த மாறுபாடு

அன்று முதல் குளி மறந்து
　　அருங் குளியும் பிள்ளையுமாய்[90]
ஓரான மாஸ்தையிலே[91]
　　உடையவரைச் சேர்வை செய்து[92]
இரண்டான மாஷ்த்தையிலே
　　இறையோனைக் கரங்குவித்தாள்[93]
மூன்றான மாஷத்திலே
　　முகவெளுப்புக் கண்டிடுமாம்![94]
சாப்பாடு தானிழந்து
　　தானே கண்ட பண்டம் தின்றாள்![95]
மாங்காய் விளங்காய்
　　மாயமான புளியங்காய்
நாலான மாஷத்திலே
　　நாவும் பல்லும் உணர்ந்திடுமாம்![96]
அஞ்சான மாஷ்த்தையிலே
　　அரைவயிறு சூலானாள்
ஆறான மாஷ்த்தையிலே
　　அங்கமெல்லாந் தங்கநிறம்
ஏழான மாஷ்த்தையிலே
　　எழு சிவந்தங் கழித்தார்![97]
எட்டான மாஷ்த்யையிலே
　　எழுந்திரிக்கக் கிடையானாள்!
ஒன்பதான மாஷ்த்தையிலே
　　ஓடி வயற் கனத்திடுமாம்!
பத்தான மாஷ்த்தையிலே
　　பங்கிளியாள்[98] வருத்தமுற்றாள்!

மருத்துவச்சி வருகை

வருத்தமுறக் கண்டறிந்து
மருத்துவத்தைக்[99] கூட்டிவந்தார்
தொண்ணூறும் பத்துஞ் சென்ற[100]
துவண் டுருண்ட கிழவி வந்தாள்.

பிரசவ வேதனையில் பிதற்றியவை

மருத்துவமும் வந்தவுடன்
மங்கை நல்லாள் ஏது சொல்வாள்
தரித்த புகழ் மருத்துவமே
சாகாமல் பிழையேனோ?
அநியாயப் பாடு தன்னை
அறியாமல் தவசிருந்தேன்
விருதாவாய்[101] பாடறிந்து[102]
விலகவோ ருண்டானால்
கரு மருந்தை[103] நான்குடித்து
கல்லுப்போ லிருந்திடுவேன்
சாவதற்கு மருந்தெனக்குத்
தந்திடுங்கள் தாதிமாரே!
வெத்திலைச்சாற் நெல்லெண்ணையும்
விரசி[104] யங்கே தந்திடுங்கள்!
பாசாணந்[105] தான்வாங்கிப்
பாலில் போட்டு தந்திடுங்கள்!
அதலிக் கிழங்கெடுத்து[106]
அரைத்துக் கொடுத்திடுங்கள்!
வருத்தமது பொறுக்குதில்லை
மருத்துவமே யென்ன செய்வேன்?

குழவிப் பேறு

மயங்காதே மயங்காதே
மைந்தனைப் பெற்றெடுப்பாய்!
மருத்துவமு மனந்தேற்றி
மங்கை நல்லா ளிருக்கும் போது
இடுப்பு வலி குறுக்குவலி
வேதினைகள் உண்டாகி
மூலையைத் தானொழித்து
முக்காலி போடலுற்றாள்
தூங்கு மூஞ்சல் கவரும்[107] போட்டு
சொர்ண முடித் தாதியர்கள்

தெக்கும் வடக்குமாக
        தேன்மொழியை உலாத்தலுற்றார்[108]
வெள்ளிக் கிழமையிலே
        விடிந்து ரெண்டரை நாழிகையில்
மிருக சீரட நட்செத்திரத்தில்[109]
        மின்னின்ற சிங்க லக்கனத்தில்[110]
குலவிட்ட சத்தத்துடன்[111]
        குழந்தை வந்து பிறந்து தய்யா!

பிறந்தவுடன் செய்ததும், பேரிட்டதும்

தணணீர் முகந் தெறித்து[112]
        தகையடங்கச் சேனை யோட்டி[113]
கொப்பிழுக் கொடியறுத்து
        குலவை யிட்டார் தாதிமார்கள்[114]
தாராட்டி ஓராட்டி[115]
        தாய் முலைப்பால் அமுதூட்டி[116]
ஓராட்டி உறக்காட்டி
        உற்றதொரு குழந்தை யைத்தான்
பேரிடவே வேணுமென்ன
        பெரியோர்கள் கூட்டங் கூடி
மைந்தனுட அழகு கண்டு
        வன்னிய னென்று பேருமிட்டார்[117]

குழந்தை வளர்ப்பு

ஆண்டு நிறவேறி[118]
        அடுத்தாண்டு தான்திகைந்து
ஓராண்டு மீராண்டு
        ஒரு மூன்று வயதாகி
நாலு நல்ல வயததிலே
        நடந்தோடி விளையாடி
அஞ்சு வயததிலே
        அண்ணாவி[119] படிக்க வைத்தார்
காலில் மிஞ்சி பொன்னாலே
        கல்கறடு[120] பொன்னாலே
மேல் முருகு[121] பொன்னாலே
        விடுகடுக்கன்[122] மோதிரமாம்!
வெள்ளியாலே அரணாணாம்![123]
        வேடிக்கைச் சங்கிலியாம்![124]

தாயித்துப்[125] பாசிப்பந்து[126]
தங்க நல்ல காப்பு மிட்டு

கல்வி, வீரப் பயிற்சிகள்

பள்ளிக்குப் படிக்க வைத்தார்
பாலகனே வன்னியனை
அரிவிரி கொன்றை வேந்தன்[127]
அன்னையும் பிதா முதலாய்[128]
எண்சுவடி[129] தான்படித்தான்
எழுத்து நடை[130] கற்றறிந்தான்
பத்து வயததிலே
படித்தானே தமிழ்க் கணக்கு[131]
பன்னிரண்டு வயததிலே
படித்தானே வித்தைகளை
மல்வேட்டை சிலம்பத் தொழில்
மடிபிடிகள் அடிபிடிகள்
ஆனையேற்றங் குதிரையேற்றம்
அளவறிந்த தொழில் படித்தான்
பதி(னாலு) வயததிலே
படித்தானே வேட்டையாட
வேட்டை ந (ா)யுங் கைப்பிடித்து
வேகமுடன் வேட்டையாட
வேட்டைத் தலைவரோடே
வேட்டையாடப் போகிறதும்
காடுசுத்தி வேட்டையாடி
கரடிபுலி தானே குத்தி
வேட்டைக ளாடுறதும்
வேங்கைப்புலி குத்திறதும்

வன்னியராசனின் பேரழகு

பதினேழு பிராயத்திலே - அவனை
பார்க்க முடி கூடாது
முன்னழகும் பின்னழகும்
முகத்தினுட திருவழகும்
மார்பழகு கண்டாக்கால்
மயங்கிடுவார் கோடிப்பெண்கள்
அள்ளித் தெளித்ததுபோல்
அஞ்சாறு தேமல்களாம்[132]

வாரித் தெளித்ததுபோல்
மார்நிறைந்த தேமல்களாம்
கன்னார்[133] உலையதிலே
கருக்கெட்டி வார்த்ததுபோல்
தங்கத்தைக் காச்சியல்லோ
தரையிலே விட்டாப்போல்
பொன்னை யுருக்கி யல்லோ
பூமியிலே விட்டாப் போல்
இப்படியாய் வன்னியனும்
இருக்கு மந்த நாளையிலே

திருமண ஏற்பாடு

பார்த்தாளே வன்னிச்சியும்
பாவிளையா யேது சொல்வாள்
என்கணவா மன்னவரே
என்வார்த்தை சொல்லக் கேளும்
வால நல்ல பிராய மல்லோ[134]
வயசு பதினே ழாச்சு தய்யா
மாலை யிட்டுக் கலியாணம்
மங்கிலியம்[135] பூட்ட வேணும்
திருப்பூட்டிப்[136] பார்க்க வேணும்
செல்வன் வன்னிய ராயனுக்கு
என்னுடைய தமையன் மகள்
ஏந்திழையைப் பெண்பேசி
பெண்கேள்க வேணுமென்று
பிறப்பிட்டாளே வன்னிச்சியும்
மன்னரையும் மைந்தனையும்
மங்கை நல்லாள் அனுப்பிக் கொண்டு
ஊத்துமலை நாடுமிட்டு
உத்தமியாள் வன்னிச்சியும்
பள்ள மேடு குமடு விட்டு
பாதை வழி தான் கடந்து
தேவர் குளந் தன்னதிலே
சேயிழையாள் போய்ச் சேர்ந்தாள்
தமையனையுந் தானே கண்டு
சாஷ்டாங்கந் தெண்ட னிட்டாள்
வாருமிரு மென்று சொல்லி
வாற்றையுப சாரஞ் செய்தார்

என்தமையா யென் பிறவி
        என்வாற்றை சொல்லக் கேளும்
என்மகன் வன்னிய ராயனுக்கு
        ஒன்மகளைக் கொடுக்க வேணும்
மாலை யிட்டு மணம் புரிந்து
        மணக் கோலஞ் செய்ய வேணும்
திருப்பூட்டிப் பார்க்க வேணும்
        செல்வன் வன்னிய ராயனுக்கு
என்று சொல்லும் வேளையிலே
        ஏது சொல்வான் தமய னவன்

மண ஏற்பாடு முறிவு

வாடியம்ம (ா) தங்கையரே
        வார்த்தை யொன்று சொல்லக் கேளும்
ஒன்மகன் வன்னிய ராயனுக்கு
        உற்ற தொழில் தெரியாது
சாதித் தொழில்[137] தெரியாதே
        தாடாளன் ஒன்மகன்தான்
கம்பெடுத்துக் காவல் காற்கக்
        களவு செய்யத் தெரியாது[138]
களவு செய்யாத மன்னனுக்கு
        கன்னியரைக் கொடுப்பதில்லை.
தமய னவன் சொன்ன போது
        தங்கை யவள் ஏது சொல்வாள்
என் பிறவி யென் பிறப்பே
        என்ன வார்த்தை சொல்ல வந்தாய்
ஏழு கிடாரந்[139] திரவியந்தான்
        இருக்குது உம்மிட கிருபையினால்
கன்னக் கோலும்[140] எடுக்கணுமா
        களவு செய்யவும் போகணுமா
மங்கை யவள் சொன்ன போது
        தமைய னவன் ஏது சொல்வான்
எத்தனை திரவிய மிருந்தாலும்
        இனத் தொழிலு வேணுமடி
கம்பெடுத்துக் காவல் காற்று
        களவு செய்து வர வேணும்
களவு செய்யாத மன்னனுக்கு
        கன்னியரைக் கொடுக்க மாட்டேன்

பெண் கொடுப்ப தில்லை யென்று
பிரப லமாய்ச் சொல்லி விட்டான்.

வன்னிச்சி வீடு திரும்புதலும், வன்னியராயன் விசாரிப்பும்

அன்னேரம் வன்னிச்சியும்
அழுதுகொண்டு பிறப்பட் டாளே
தேவர்குளந் தான் கடந்து
செய்யிழையாள் வந்து சேர்ந்தாள்
ஊத்து மலை நாடதிலே
உகந்து வீடு வந்து சேர்ந்தாள்
வாடிய திரு முகமும்
மயங்கியே யிருக்கும் போது
வன்னிய ராயனுமோ
வந்தானே தாயிடத்தில்
என்தாயே மாதாவே
என்வார்த்தை சொல்லக் கேளு
பெண் கேள்கப் போனதொரு
பிரபலய்த்தச் சொல்லு பார்ப்போம்

வன்னிச்சியின் மறைப்புப் பேச்சு

வன்னிய ராயன் கேட்ட போது
வன்னிச்சி யேது சொல்வாள்
என் மகனே கண்மணியே
என் வாற்றை சொல்லக் கேளு
அந்த நல்ல பெண்ணது தான்
அடுத்த யிடத்துக்கு மாகாது
மாலை சுத்திப் பிறந்த பிள்ளை[141]
மாமனுக்கும் ஆகாது
கொடி சாத்திப் பிறந்த பிள்ளை[142]
கோத்தி ரத்துக்கும் ஆகாது
ஆரம் பூண்ட கழுத்தி[143]
அரமனைக்கும் ஆகாது
கரண்டைக்கால் பருத்த வள்தான்
கணவனுக்கும் ஆகாது[144]
அந்தப் பெண்ணும் வந்து தானால்
அரண் மனையும் பாழாகும்
உன்னுடைய அழகுக் கேத்த
உற்ற பெண்ணை முடித்து வைப்பேன்.

வன்னியராயன் சினமும், வன்னிச்சி உண்மை உரைத்தலும்

வன்னிச்சி சொன்ன போது
வன்னிய ராயன் ஏது சொல்வான்
உன் தமையன் சொன்ன வாற்றை
உத்த மொழி சொல்ல டியோ
ஆங்கார கோபத்துடன்
அதட்டிக் கேட்டானே வன்னிய ராயன்
என் மகனே கண்மணியே
என் தமையன் சண்டாளன்[145]
சண்டாளன் சொன்ன வாற்றை
தாடாளா[146] சொல்லக் கேளாய்
சாதித் தொழில் தெரியா தாம்
தாடாளா ஒன்தனக்கு
கம்பெடுத்துக் காவல் காற்க
களவு செய்யத் தெரியாதாம்
களவு செய்யாத மன்னனுக்கு
கன்னியரைக் கொடுப்பதில்லை.
பெண்கொடுப்ப தில்லை யென்று
பிரபலமாய்ச் சொல்லிவிட்டான்

வன்னியராயனின் கோபப்பேச்சு

வன்னிச்சி சொன்ன போது
வன்னிய ராயன் ஏது சொல்வான்
ஆங்காரக் கோபங் கொண்டு
அழகுபிள்ளை வன்னிய ராயன்
வலது வீசை[147] படபடென்ன
மலர்விழிகள் பொறி பறக்க
கொண்ட பெண்ணை விட்டாலும்
குறித்த பெண்ணை விடுவ தில்லை[148].
மற்ற பெண்களை விட்டாலும்
மாமன் மகளை விடுவ தில்லை[149]
இந்தப் பெண்ணே யொழிய
இனியொருபெண் முடிப்ப தில்லை
களவு செய்து வந்தல்லவோ
கன்னியரை முடிக்க வேணும்

என்தாயே மாதாவே
என் வாற்றை சொல்லக் கேளு
களவு செய்யப் போறே னடி
கன்னக் கோலை யெடுத்து வாடி
கட்டமுது கட்டடியோ
கைக்கம்பை யெடுத்து வாடி[150]

வன்னிச்சி செய்த சமாதானம்

என்மகனே பாலகனே
ஏற்ற பிள்ளை வன்னிய ராயா
ஏழு கிடாரந் திரவி யந்தான்
இருப்புத் தண்டியல்[151] தூங்கு தடா
களவு செய்யப் போக வேண்டாம் - அந்தக்
கன்னியரை முடிக்க வேண்டாம்
கண்ம ணிபோல் பெண் பாற்று
கல்யாணஞ் செய்திடுவேன்

வன்னியராயன் தீர்மானமும், புறப்பாடும்

மாதாவுஞ் சொன்ன போது
மைந்தன் வன்னிய ராயனவன்
மறவருட தொழி லதுதான்
மன்னவன்நான் பாற்று வாரேன்
கம்பெடுத்துக் காவல் காற்று
களவு செய்து வாரே னம்மா
களவு செய்து வந்தல் லவோ
கன்னியரை கலியாணஞ் செய்ய வேணும்
கன்னக் கோலும் எடுத்து வாடி
கட்டமுது கொண்டு வாடி
வன்னிய ராயன் சொன்ன போது
மாதாவும் ஏது செய்தாள்
வாடிய திருமுகமும்
மயங்கியே கண்ணீ ரோட
கண்ணீரைப் பெருக விட்டாள்
கட்டமுது கட்ட லுற்றாள்
கட்டமுது தவணைப் புளி
மாப்ப லகாரம் பொரிவிளங்காய்
கட்டமுது பலகாரமும்
கன்னக் கோலுங் கைகொடுத்தாள்

அன்னேரம் வன்னிய ராயன்
ஆங்கார கோபங் கொண்டு
வல்லா வட்டும்[152] ஏத்தாப்பும்[153]
வட்டுவமும்[154] பிடிச் சுருளும்[155]
காலில் ஒத்தடிச் செருப்புந் தொட்டு
கையில் பிடித்தானே காட்டுக் கம்பு
கட்டமுது பலகாரமும்
கன்னக் கோலும் எடுத்துக் கொண்டு
பெண்ம யக்கந் தன்னாலே
பிறப்பிட் டானே வன்னிய ராயன்
சாமமது சாமத்திலே
சதிசாம நேரத்திலே
பொழு தடைந்து ஒருச்சாமம்
புறப்பிட் டாளே வன்னிய ராயன்

தீய சகுனங்கள்

பிறப்பிடும்போ (தெ)திர்ப்படுமாம்
பூனை வந்து குறுக்கிடு மாம்
ஒத்தாந்தை புலம்பிடுமாம்
ஊளைநரி புலம்பிடு மாம்
பட்ட கொப்பில் மேல்கெவுளி
பல பலென்று நிமித்தஞ் சொல்ல
காகங்கள் கட்டு தய்யா
கருவாலி கூவு தய்யா
கண்ட கண்ட சகுன மெல்லாம்
கனத்த தடையா யிருக்க
சகுனத் தடை பாராமல்
தாடாளன் புறப்பிட் டானே.

கடந்த வழியும், நடந்ததும்

ஊத்துமலை நாடு மிட்டு
உக்கரங் கோட்டைப் பாதைகூடி
சித்திராநதி தான் கடந்து
செல்வன் வன்னிய ராய னவன்
களக்குடிப் பாதை கூடி
கக்களையன் குறிச்சி விட்டு
பள்ளமேடு குமடு மிட்டு
ஒத்தடிப் பாதை கூடி

சேராவூத்து தான் கடந்து
மேக முடையார் குளமுமிட்டு
கண்டியப் பேரியு மிட்டு
பழையபேட்டை வந்து சேர்ந்தார்
பாளைகொண்டு பல்விளக்கி
ஓலை கொண்டு நாவழித்து
கட்ட முதைத் தானவிழ்த்து
கட்டழகன் பார்க்கும் போது
கொத்தோடே தலை முடிதான்
கொடி முடியா யிருக்கு தய்யா
அவனு மதைத் தின்னாமல்
அள்ளி வைத்தான் நாயதுக்கு
பலகாரப் பொட்ட ணத்தை
பாக்கு மந்த வேளையிலே
புழுக்கூடா யிருக்கு தய்யா
பொரிவிளங்காய்ப் பலகாரம்
அவனு மதைத் தின்னாமல்
அள்ளிப் போட்டான் நாயதுக்கு

களவு செய்ய இடம் தேடல்

பழைய பேட்டை வூர்முழுதும்
பார்த்தானே வன்னியனும்
மங்கம்மாள் பேட்டை வந்து
மன்னவனுஞ் சுத்திப் பார்த்தான்
ஒரு விடமும் களவுதான்
உற்றவனுக்கு பல்லி யாமல்[156]
திருநெல்லை யம்பலம் போகவேணும்
புறப்பிட் டானே வன்னி யனும்

நெல்லை நகரில் வந்து தங்குதல்

மங்கம்மாள் பேட்டை விட்டு
முள்ளிக் குளத்தாங் கரை கடந்து
கம்பா நதியு மிட்டு
காக்ஷி மண்டபந் தான்கடந்து
சம்மந்தப் பிள்ளையார் கோவில் விட்டு
சந்தி வினாயகர் சன்னதியில்
திருநெல்லை யம்பலத்தில் வந்து
சேர்ந்தானே வன்னி யனும்

நாலு தெருவீதி சுத்திப் பார்த்து
நல்ல மாடத் தெருவதிலே
பெரிய மாடத் தெருவதிலே
போய்ப் பார்த்தான் வன்னியனும்
சின்னக் கண்ணாள் பெரிய கண்ணாள்
சேய்யி ழைமார் அக்காள் தங்கை
சின்னக் கண்ணாள் வீடதிலே
செல்வனுமோ வந்து சேர்ந்தான்
பார்த்தாளே சின்னக் கண்ணாள்
பாவினையாய் ஏது சொல்வாள்
எந்த வூரு எந்த தேசம்
என்ன சாதி யென்ன குலம்
சின்னக் கண்ணாள் கேட்ட போது
செல்வனுமோ யேது சொல்வான்
ஊத்து மலை நாடதுதான்
உற்றதொரு வன்னியர் குலம்
ஏழு கிடாரந் திரவியந்தான்
எங்கள் வீட்டில் இருக்குதடி
மாமன் மகளை யுந்தான்
மங்கிலியம் பூட்டுதற்கு
களவு செய்து வந்தாக்கால்
கன்னியரைக் கொடுப்பே னென்றான்
களவு செய்து கொண்டு போயி
கல்யாணஞ் செய்ய வேணும்
இருப்பிடந்தான் கொடுக்க வேணும்
ஏந்திழையே சின்னக் கண்ணாள்
வன்னியன் கேட்ட போது
மங்கையவள் சின்னக் கண்ணாள்
ஆகட்டும் நல்ல தென்று
ஆணழகனை யிருத்திக் கொண்டாள்
சின்னக் கண்ணாள் வீடதிலே
சிறப்பாக யிருக்கும் போது
சாப்பிட்டு யிளைப்பாறி
தாம்பூலம் தான் தரித்து
சப்ர முஞ்சல் கட்டிலிலே
சயனஞ் செய்தா ரிருபேரும்
இப்படியே யிருக்கை யிலே
இன்ப முள்ள நாடதிலே

நெல்லையம்பலத் திருவிழா

நெல்வேலி நாத ருக்கும்
காந்தி மதி வடிவாளுக்கும்
ஆனித் திருவிழா உற்செயந்தான்[157]
ஆண்டவனுக்கு நடக்கு தய்யா
ஏழாந் திருவிழா தான்
எழுந் திரத்து நடப்பதற்கு
காம தேனு வாகனந்தான்
கர்(த்)தன் நெல்வேலி நாதருக்கு
கமலப் பசு வாகனந்தான்
காந்திமதி வடிவா ளுக்கு
போத்திமார்[158] ஒன்று கூடி
பொக்கிஷந் தான் துறந்து
நெல்வேலி நாத ருக்கும்
காந்திமதி வடிவா ளுக்கும்
ஆடை யாபரணம் உள்ளதெல்லாம்
அத்த னையுந் தானெடுத்து
பட்ட மார்க ளிடமதிலே[159]
பாங்குடனே ஒப்பு வித்து
அம்மாளுக்குஞ் சுவாமிக் குந்தான்
ஆபரணம் அலங்க ரித்து
நாலு தெருவீதி சுத்திவந்து
நலமுடன் கோயிலில் வந்திறங்கி
ஆடையாபரணந் தான் கழத்தி
அய்ய மாரும் பட்டமாரும்
போத்தியிடம் தான் கொடுத்து
பொக்கிஷத்தில் வைத்து விட்டார்
கருவேலப் பொக்கி ஷத்தில்
காவல் களும் வைத்திருக்க
கோபுர வாசலது
குணமுடனே அடைத்திருக்க
திருக்காப்பு விட்டார்கள்[160]
திரு கோபுர வாசலது
இப்படியே யிருக்கும் போது
இன்பமுள்ள வன்னிய ராயன்

கோயிற் கருவூலத்தைக் கொள்ளையிடல்

சின்ன கண்ணாள் இடமதிலே
செல்வ னுமோ யேது சொல்வான்

காந்தி மதி வடிவாளுட
கருவேலத்தைக் கொள்ளை செய்து
கொள்ளை செய்து வாரேனென்று
கொற்றவனும் பிறப்பிட் டானே
சாமரிசி[161] வேளை யிலே
தாடாளன் வன்னிய ராயன்
திரு மதில் சுவரேறி
செல்வனுமோ உள்ளே சென்றான்
காந்தி மதி வடிவாளுட
கருவேல பொக்கி ஷத்தில்
கன்னக் கோலைத் தானெடுத்து
கன்ன(ம்) வைத்து உள்புகுந்து
ஆடை யாபரணம் அத்தனையும்
அன்புடனே யெடுத்துக் கட்டி
பொட்டணமாய்க் கட்டிக் கொண்டு
போர்வேந்தன் ஏது செய்தான்
திரு மதில் சுவரேறி
செல்வனுமே வந்து விட்டான்
சின்னக் கண்ணாள் வீடதிலே
செல்வனுமே வந்து சேர்ந்தான்
ஆடை யாபரணம் உள்ளதெல்லாம்
அத்தனையுந் தான் கொடுத்தான்

திருட்டு நடந்ததை அறிதல்

மய்க்கா நாள்[162] உதையத்திலே
மன்ன வர்கள் கோவி லார்கள்
நம்பி மார்கள் பட்ட மார்கள்
போத்தி மார்கள் மானேசர்
கருவே லத்தைப் பார்க்கும் (போது)
கன்னமது வைத்தி ருக்கு
ஆடை யாபரணப் பொக்கி ஷங்கள்
அத்த னையுங் காணு தில்லை
தர்ம கர்(த்)தா மானேசர்
தாடாளர் எல்லோரும்
என்ன யென்ன காரணமோ
என்று சொல்லி யோசித்தார்கள்
போலீசா ரிடமதிலே
போயித் தெரிவித்துக் கூட்டி வந்தார்

திருடனைக் கண்டு பிடித்தல்

தாசில்தார் சப்பினுசு
ஏட்டுக் கனுஸ் டேபிள் முதல்
எல்லோரும் வந்து பாற்று
என்ன யென்ன செய்ய லுற்றார்
தெருத் தெருவாய்ச் சுத்திப் பாற்று
சேவுகரும் ஏட்டு களும்
பெரிய மாடத் தெருவதிலே
பேரு பெற்ற சின்னக் கண்ணாள்
சின்னக் கண்ணாள் வீடதிலே
செல்வன் வன்னிய ராயனையும்
வன்னிய ராயனையும்
மன்ன வர்கள் வந்து கண்டார்.
எந்த வூரு யெந்த தேசம்
என்று கேட்டார் போலீசார்
அப்போது வன்னி யனும்
ஆணழகன் ஏது சொல்வான்
ஊத்து மலை நாட துதான்
உற்ற தொரு வன்னியர் குலம்
ஏழாந் திருவிழா பார்ப்பதற்கு
இங்கே வந்தே னென்று சொன்னான்
தாசில்தார் சப்பினுசு
யேட்டுக் கனுஸ் டேபிள் முதல்
சின்னக் கண்ணாள் வீடதிலே
செல்வ னங்கே யிருந்த தினால்
தாசி வீட்டை சோதினை போட்டு
தானே யங்கே பார்க்கும் போது
காந்தி மதி வடிவா ளுட
கருவேலப் பொக்கிஷங்கள்
ஆடை யாபரண முள்ள தெல்லாம்
அத்தனையும் இருக்கக் கண்டார்
கைப்பி டியாய்த் தான்பி டித்து
கட்ட ழகன் வன்னி யனை
கால் விலங்கு கைவிலங்கு
கனகமுடன் தான் போட்டு
திருநெல்லை யம்ப லத்தில்
வடமலையப்ப பிள்ளை அதிகாரம்

வடமலையப்ப பிள்ளையிடம்[162]
மன்னவனைக் கூட்டி வந்தார்.

வெட்டும்படி உத்தரவு

பார்த்தானே பிள்ளை யனும்
பாவினையா யேது செய்தார்
வெட்டும்படி உத்தரவு
வேந்தனுமோ கொடுக்க லுற்றார்

வெட்டக் கொணர்தல்

எரிக்கலை மாலை[163] கழுத்தி லிட்டு
ரத்த வாடைக் கொட்டுங் கொட்டி[164]
ஊமத்த மாலை போட்டு[165]
ஒத்த முரசங் கொட்டி[166]
நாலு தெருவீதி சுத்தி வந்து
நலமுடனே கொண்டு வந்தார்
கொண்ட நயினார் கோவில் விட்டுப்
பறப்புளியு மிட்டு
லாலுகா புரங் கடந்து
பழைய பேட்டைப் பாதை கூடி
கருசக்குளத்தாங் கரையதிலே
கட்டழகனைக் கொண்டு வந்து

வன்னியராயனின் மரணம்

வடக்கே முகமாக விட்டுக் கொண்டு
மன்ன னையும் வெட்ட லுற்றார்
வெட்டுபுலித் தேவ ருமோ
வீச்சருவாள் கையிலெடுத்து
ஒருவெட்டு ரெண்டு வெட்டு
மூன்றாந் தரம் வெட்டும் போது
முடியை யிரு கையி லேந்தி
மூன்று தரஞ் சுத்தி வந்து
மூன்று தரம் வலமே வந்து
முடி சாய்ந்தது கீழ்வி ழுந்தான்
பட்டு விழுந்தானே
பாரமுடி சாய்ந்தானே
வெட்டு விழுந்தானே
வீரமுடி சாய்ந்தானே

நாயின் செயல்

வெட்டுப்பட்டு விழுந்திடத்தில்
வீரமுடி சாய்ந்திடத்தில்
அவனுடைய பூச்சி நாய்தான்
அவன்ரிண மதிலே[167] தான் பிரண்டு
உருண்டு பிரண்டெழுந்து
ஊளை யிட்டு ஓடு தய்யா
கருசக் குளந் தான்கடந்து
கனக முடன் வருகு தய்யா
கண்டியப் பேரி கடந்து
சேரா வூத்துப் பாதை கூடி
கக்க ளயன் குறிச்சி விட்டு
களக்குடிப் பாதை கூடி
உக்கரமங் கோட்டை விட்டு
ஊத்துமலை வந்து தய்யா
வன்னிச்சி காலைச் சுத்தி வந்து
ஊளை யிடுகு தய்யா!

வன்னிச்சி படுகளம் நோக்கி வரல்

பார்த்தாளே வன்னிச்சியும்
பாவினையா யேது சொல்வாள்
நாயதுதான் வந்திருக்கு
நல்மகனைக் காணோ மென்று
சவதி[168] யேது சோரை[169] யேது
தலை மகனைக் காணோ மென்று
முட்டி யழுக லுற்றாள்
முகத்திலே தான் அறைந்தாள்
வாயதிலும் வயறதிலும்
மயங்கியடித் தழுது கொண்டு
அங்கிருந்து பிறப்பிட் டாளே
ஆயிழையாள் வன்னிச்சியும்
பூச்சி நாய் முன்னடக்க
புல்லை நாய்[170] பின்துடர
வேங்கை நாய்[171] முன்னடக்க
வெள்ளை நாய் பின்துடர
காரிநாய்[172] முன்னடக்க
கறமறை நாய்[173] பின்துடர
பிறப்பிட்டாளே யன்னேரம்
பெண் கொடியாள் வன்னிச்சியும்

தீய சகுனங்கள்

பிறப்பிடும்போ திர்ப்படுமாம்
பூனை வந்து குறுக்கிடு மாம்
பட்ட கொப்பில் மேல்கெவுளி
பலபலென்று நிமித்தஞ் சொல்ல
ஒத்தாந்தை வீறிடுமாம்
ஊளை நரி புலம்பிடு மாம்
ஒத்தை வாணியன்[174] எண்ணை வர
அகத்திக் கீரை யெதிர் வர[175]
அந்த அந்தச் சகுன மெல்லாம்
ஆயிழையாள் தள்ளி விட்டு

படுகளம் காணுதல்

ஊத்து மலை நாடு மிட்டு
உக்கிர பாண்டியன் கோட்டை விட்டு
சித்திரா நதி தான் கடந்து
சேய்யி ழையாள் வன்னிச்சியும்
கக்க ளயன் குறிச்சி விட்டு
களக்குடி பாதை கூடி
சேரா வூத்துப் பாதை கூடி
மேக முடையார் கோவில் விட்டு
கண்டியப் பேரி தான் கடந்து
கருசக்குளம் வந்து சேர்ந்தாள்
மகன் பட்ட படுகளத்தில்
மங்கையவள் வந்து கண்டாள்
அடித்து விழுந்தாளே
அழகு மைந்தன் கால்மாட்டில்.

வன்னிச்சியின் ஒப்பாரி

என்மகனே யென்மகனே - உன்னை
எங்கே போனால் காண்பே னடா!
இதுக்கோ உனை வளர்த்தேன்
இத்த னைக்கோ பேரும் பெற்றேன் - உன்னை
பெற்ற அருமை யென்னா
பேரிட்ட நேற்றி யென்னா[176] - உன்னை
வளர்த்த அருமை யென்னா
வைத்திருந்த நேர்த்தி யென்னா

மாப்ப டைத்த[177] கோவி லெல்லாம்
மண்ணைப் படைத்தேனோ
பூப்படைத்த கோவி லெல்லாம்
புழுதி மண்ணைப் படைத்தேனோ - உன்
அழகை யெழுதி னவர்
ஆயுளை யெழுதலையே - உன்
வடிவை யெழுதி னவர் - உன்
வாணாளை யெழுத லையே
ஈயிருக்கச் சம்மதியேன் - உன்னை
ஏம னுக்கோ சம்ம தித்தேன்
காத்தடிக்கச் சம்மதியேன் - உன்னை
காலனுக்கோ சம்ம தித்தேன் - உன்
கண்ணிலே யீயரிக்க
கடைக் கண்ணைக் கொசுப் பிடுங்க - உனக்கு
வரப்போ தலைகாணி - உனக்கு
வாய்மடையோ பஞ்சு மெத்தை - உனக்கு
புல்லோ தலைகாணி - உனக்கு
புழுதி மண்ணோ பஞ்சு மெத்தை
கல்லோ தலைகாணி - உனக்கு
காட்டெருவோ பஞ்சு மெத்தை
எருவோ தலைகாணி - உனக்கு
எருக்கிலையோ பஞ்சு மெத்தை
ஆனையின்மேல் மாவுத்தன் - உன்னை
அம்பு கொண்டு சுட்டானோ
குதிரை யின்மேல் பட்டாணி - உன்னை
குண்டு போட்டு சுட்டானோ
பாவி பறப் பாம்பு[178] - உன்னை
பதிகிடந்து[179] தீண்டிச்சோ
கோடி பறப்பாம்பு - உன்னை
குடியிருந்து தீண்டினதோ
குழந்தை தலையதிலே
கோடை யிடி விழலாமோ
பிள்ளை தலைய திலே
பெரிய மரஞ் சாய லாமோ
பசலை[180] தலை யதிலே
பாரி மரம்[181] சாய லாமோ
எங்கேயோ வானமது
இடிக்கு தெண்ணி ருந்தேன்

தப்பாமல் எந்தனுட
தலையில் விழுந்ததுவோ - என்
கும்பி[182] கொதிக்குதடா
குடல்கிடந்து மாளுதடா - என்
ஈரல் துடிக்குதடா
எரிந்து தணலாகுதடா
மாங்காய் பிரளுதடா[183]
மண்ணீரல் துடிக்குதடா
பெற்ற வயறதுதான்
பற்றி யெரியு தடா
பற்றி யெரியு தடா
பாலடுப்பு தீப்போலே
சுத்திப் பிடிக்கு தடா
சுட்ட டுப்பு தீப்போலே
முட்டியே தானழுது
முகத்திலே தானறைந்தாள்

சாபமொழிகளும், உயிர் துறத்தலும்

பாவி திரு விளமே
பகவானே கண்ணில் லையோ - என்
கும்பியில் பத்தின *தீ* - அவனுடைய
கோட்டையிலே பத்தி டாதோ - என்
அடிவயிற்றில் பத்தின *தீ* - அவனுடைய
அரண்மனையில் பத்தி டாதோ
என் மள்க்க[184] விட்டு
இருக்க லாமோ வையகத்தில்
நாவிலே *சீலை* சுத்தி[185] - அவள்
நல்லுயிரை மாய்த்துக் கொண்டாள்
ஒக்கவே மடிந்தார்கள்
ஒரு களத்தில் பட்டு விட்டார்

வன்னியராயனின் அட்டாதுட்டிச் செயல்கள்

பட்டதோர் எட்டாம் நாளையிலே
பாரி வேட்டை யாட வென்று
வன்னிய ராயனுமோ
மன்ன னுமே யேது செய்தான்
ஆதாளி[186] போட லுற்றான்
அட்டா துட்டி[187] பண்ண லுற்றான்

கருசக் குளம் ஊரை யெல்லாம்
கட்டழகன் வன்னிய ராயன்
மாட்டெலும்பு செங்கா மட்டை[188]
வாரி கல்லாலே யெறியு தடா
முந்தி நல்ல கருக்கலிலே
முதச் சாம வேளையிலே
தீயை வந்து கொளுத்து தய்யா
திருதூளி[189] பண்ணு தய்யா
போர பேரை வார பேரை
புடதி யடி யடிக்கு தய்யா
நேர மறியாமல் வார பேரை
நெஞ்சடியா யடிக்கு தய்யா
பாலிகளை[190] சூலிகளை[191]—
பச்சைப் பிள்ளைத் தாச்சிகளை[192]
கொன்று குலை யறுக்கு தய்யா
குடி கெடுத்த் வன்னிய ராயன்

ஊரவர் குறிகேட்டு உண்மை அறிதல்

குறி கேள்க வேணு மென்று
கொற்ற மன்னர் ஊர வர்கள்
கோடங்கியைத் தானழைத்து
குறி கேள்கும் வேளையிலே
ஊத்து மலை நாடதிலே
உற்ற தொரு வன்னியர் குலம்
வன்னிய ராயனவன்
நெல்லை யம்பலந் தன்னதிலே
காந்தி மதி வடிவா ளுட
கருவேலப் பிரை யதிலே[193]
கருவேலப் பிரை யதிலே
கன்னங் களவுகள் செய்ததினால் - அவனை
கைப்பிடியாகத் தான் பிடித்து
கட்டழகன் வன்னியனை
வடமலை யப்பபிள்ளை யிடமதிலே
கொண்டு வந்து விட்டார்கள்
பார்த்தாரே வடமலை யப்பபிள்ளை
பாவினையா யேது செய்தார் - இந்தக்

கருவேலத்தைக் களவு செய்த தினால்
கருசக் குளத்தாங் கரையதிலே
கருசக் குளத்தாங் கரை யதிலே
வடக்கு நல்ல மருகா லிலே
வடக்கே முகமாக விட்டுக் கொண்டு
வன்னியனை வெட்ட வென்று
வடமலை யப்பபிள்ளை சொல்படியே
வன்னியனை வெட்ட லுற்றார்
வெட்டுப் பட்ட தேவ னைதான்
வேந்தன் வன்னிய ராயனவன் 500
அட்ட துட்டி பண்ணு தய்யா
அழகு வன்னிய ராய னவன்

நிலையமிட்டு விழா எடுத்தல்

வெட்டுப் பட்ட தேவ னைக்கு
வேந்தன் வன்னிய ராயனுக்கு
நிலையம் போட்டு பூட மிட்டு
நீதியுடன் குடை[194] கொடுத்தால்
அல்லறை சில்லறை விலகு மய்யா[195]
அட்டா துட்டி நீங்கு மய்யா
அப்படிய நல்ல தென்று
ஆணழகர் ஊரவர்கள்
வன்னிய ராயனுக்கு
வகைப்படியே நிலைய மிட்டார்
நிலையம் போட்டு குடை கொடுத்தார்
நீதியுள்ள வன்னிய ராயனுக்கு. 507

வன்னியராயன் கதை
சொல் விளக்கக் குறிப்புகள்

1. சட்டை தொட்டு - சட்டை அணிந்து. (சட்டை அணிவது நாகரிகமாகக் கருதப்பட்ட காலகட்டத்தில் எழுந்த கதைப்பாடலாதலின், கதை நாயகனும் சட்டை அணிந்ததைக் கூறி, அவன் உயர் நாகரிகமுடையவன் எனக் காட்டப்படுகிறான்).

2. கச்சை கட்டி - ஆடையை இறுகக் கட்டி. (இடுப்பில் உள்ள ஆடையை இறுகக்கட்ட உதவும் நாடா போன்ற அமைப்பு கச்சை எனப்படும்).

3. சக்கரம் - சக்கராயுதம் போன்ற வட்டவடிவமான ஒரு ஆயுதம்.

4. அட்டியல் - கழுத்தை ஒட்டி அணியும் அணிகல வகை.

5. வட்டப்பரிசை - வட்ட வடிவமுள்ள கேடகம்.

6. வல்லயம் - ஈட்டி வகையுள் ஒன்று.

7. அட்டதுஷ்டப்பேய் - அட்டாதுட்டிப்பேய். (அடாவடித்தனமான தீய செயல்களைச் செய்யும் பேய்).

8. சித்தர் புகழும் வன்னியராயன் - எண்வகைச் சித்துக்களை அடைந்த பூரண அருளுடைய சித்தர், பதினெண் கணத்துள் ஒரு சாரார். இத்தகையோரும் புகழும் வன்னியராயன் என்பதன் மூலம் அவன் கீர்த்தி சிறப்பிக்கப் பெறுகின்றது.

9. சினா - கனா, கனவு.

10. கண்கொடுத்த நாயகி - அறிவுக்கண் தந்த, கல்விக்குத் தலையாய சரசுவதி.

11.	சென்னல்	-	செந்நெல். (செஞ்சாலி நெல் என்று கூறப்படும் நெல்வகை).
12.	கற்நல்	-	கன்னல், கரும்பு.
13	சிறுகதலி	-	சிறு வாழை வகை.
14.	இலுமிச்சு	-	எலுமிச்சை.
15.	இருவாச்சி	-	இருவாட்சி என்ற மணமுள்ள மலர் வகை.
16.	வடநாடு சீமை	-	வடக்குப் பக்கமுள்ள நாடு. (தென்குமரிக்கு வடக்காக உள்ளதால் வடநாடு சீமை எனக் கூறப்பட்டுள்ளது).
17.	ஊத்துமலை நாடு	-	ஊற்றுமலை நாடு.
18.	உகந்துமங்கே ஆண்டிருந்தார்	-	விருப்புடன் ஆட்சி செய்து வந்தார். நாடு காவல் பொறுப்பை ஏற்றிருந்தமை இவ்வாறு கூறப்பெற்றுள்ளது.
19.	மணியறைச் சாவடி	-	மணி கட்டிய அமைப்புகளுடைய (கதவுகள்) அறைகளுடன் கூடிய, வழிப்போக்கர் தங்கும் பொதுவிடங்கள்.
20.	முத்து நகரத்தின	-	முத்து, நவரத்தினம்.
21.	பிஞ்சை	-	புஞ்சை புன்செய். (தண்ணீர்ப் பாய்ச்சலில்லாத, மழையை மட்டுமே நம்பிப் பயிர் செய்யப்படும் நிலங்கள்).
22.	௨ ழுமை	-	அடிமை - நிலத்திலும், வீட்டிலும் வேலை செய்வதற்குச் சிலரைப் பரம்பரையாகவே அடிமையாக வைத்திருந்தனர்.
23.	சோட்டுப் பாய்	-	சோடிப்பாய், (இரட்டைப்பாய். பெரிய பாய் என்று பொருள் கொள்ளல் இவ்விடத்தில் பொருந்தும்).
24.	பணம் உணத்திட	-	பணம் உலர்த்திட.
25.	தேவர் குளம்	-	தேவர்கள் மிகுந்திருந்த ஊர் இப்பெயர் பெற்றது.
26.	வன்னியர்கள்	-	சாதிப் பெயர். பள்ளிகளுக்கேயல்லாமல் கள்ளர், மறவர், அம்பலகாரர், வலையரின்

பட்டப் பெயர்களாக வன்னியன், வன்னிக்குட்டி, தேன் வன்னியன், வன்னிமுண்டார், வன்னியமுண்டார், வன்னியனார், வன்னியங்கொண்டார் என்பவை அமையும். பிற்காலச் சோழர் காலத்தில் சோழ மன்னர்கட்குப் படைகளை அனுப்பி உதவியமைக்காக வன்னியப்பற்று என்னும் நிலங்களைப் பெற்றதையடுத்து இவர்கள் இப்பட்டப்பெயர்களைப் பெறுவாராயினர். கவுண்டர்களிலும் வன்னியக் கவுண்டர் உண்டு. இங்கு மறவர்களுக்கான பட்டப் பெயராக அமைந்து இவ்வினத்தாரைக் குறிக்கிறது.

27 வன்னிச்சிப் பெண்கொடி - வன்னியர் பெண்கள் 'வன்னிச்சி' என அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரே குலத்தில் பெண் கொண்டனர் எனத் தெரிகின்றது.

28. பதினெட்டாம் பெருக்கு - ஆடி பதினெட்டாந் தேதியைக் குறிக்கிறது.

29. நாழிகை - இன்று இரண்டரை நாழிகை ஒரு மணி நேரம் எனக் கணக்கீடு செய்கின்றனர்.

30. உத்திர நட்சத்திரம் - உத்தரட்டாதி நட்சத்திரம். 26-ஆவது நட்சத்திரமாக அமைந்ததாகும்.

31. கன்னியா லக்கினம் - கன்னி ராசி.

32. முகிர்த்தம் - முகூர்த்தம், நன்னேரம்.

33. தெய்தி - தேதி, நாள்.

34. தேவர்கள் - இங்கு தேவர் இனத்தவர்களைக் குறிக்கிறது.

35. திருமங்கிலியம் - திருமாங்கல்யம், மங்கல நாண்.

36. மறுவீடு - மணம் முடிந்ததும், மணமக்கள் பெண்வீடு செல்லலை மறுவீடு என்பர்.

37. மனையாட்டி - மனையை, வீட்டை ஆளுபவள்.

38. இருசி - இருதுவாகுந் தன்மையில்லாப் பெண். (இரிசி என்றும் பேச்சு வழக்கில் கூறுவர்).

இருதுவான பெண்களுக்கே குழந்தைப்பேறு கிட்டும் என்பதால், இவள் இருதுவானவள் தானா என்பதிலேயே ஐயம் ஏற்படும் எனக் கருதி, 'இருசி என்பரே' என அஞ்சுகிறாள்.

39. பொசிப்பார்களோ - புசிப்பார்களோ? உணவு உண்ணுவார்களோ?

40. ஆண்டி - ஆண்டவனால் மட்டுமே ஆளப்படுபவர்கள்- ஆண்டவன் ஒருவனையே உண்மைப் பொருளாகக் கருதி, உலகத்துப் பொய்ப் பொருள் அனைத்தையும் துறந்தவர்கள்.

41. கொத்து - தானியமாகக் கொடுக்கும் கூலி.

42. குறை மரக்கா லளந்தோமோ - மரக்கால் நிறைய அளப்பது போல் தோன்றும்படிச் செய்து, ஆனால் குறைய அளப்பது, மாக்கால் செய்வதிலும் முறைகேடுகள் செய்து குறைமரக்காலாக மாற்றி அளவைக்குப் பயன்படுத்துவது. மரக்கால் என்பது 4 படியளவு கொண்ட முகத்தற்கருவி.

43. பட்டறை - தானியம் குவித்து வைக்கும் இடம்.

44. சாவி - மணி பிடியாமல் பதராய்ப் போன நெல்.

45. அங்காடி - கடை.

46. பதார்த்தங்கள் - பொருட்கள் - சமையலுக்குப் பயன்படும் பொருட்களாதலின் பதார்த்தங்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

47. அதிர விலை - அதிக விலை - மனம் அதிரும்படியான விலை.

48. பாப்பாரை அடித்தோமோ - பார்ப்பாராகிய அந்தணரை அடித்தோமோ - அந்தணரை அடித்து வதைத்தல் பாவத்துள் கொடிய பாவமாகக் கருதப்பட்டது. கல்வெட்டு, செப்பேடுகளும் இவ் வெண்ணத்தை வெளிப்படுத்துகின்றன.

49. பால் பசுவைக் கொன்றோமோ - பால் தரும் பசுவைக் கொன்றோமோ-

பசுவைக் கொல்லல் கொடும் பாவமாகக் கருதப்பட்டது.

50. முன் செய்த தீவினையோ - முன் பிறவியில் செய்த தீச்செயல் - முன் பிறவியில் செய்த வினையின் பயனை இப்பிறவியில் அனுபவிப்பர் என்ற நம்பிக்கை இருந்தது.

51. ஆண்டவனார் கற்பனையோ - ஆண்டவன் கற்பித்ததோ - இன்னார் இன்னது அனுபவிக்க வேண்டும் என்று நிர்ணயித்து ஆண்டவன் எழுதிய தலை எழுத்தோ?

52. வாற்றை - வார்த்தை.

53. அன்னதானம் - இலவசமாக உணவளித்தல் - தானத்துள் சிறந்தது அன்னதானம் எனப்படுவதான், முதல் அறச்செய்கையாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. பெறுவோரைப் 'போதும்' என்று மனநிறைவுடன் கூற வைப்பதாலும், உயிர் காக்கும் உடனடித் தேவை என்பதாலும், அன்னதானம் தானத்துள் முதலிடம் வகிக்கின்றது.

54. சொர்ணதானம் - பொன்னைத் தானமாக அளித்தல் - 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதன் படி, பொன்னைத் தானமாக அளித்தல் இரண்டாம் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

55. ஆடைத்தானம் - வஸ்திரத்தானம் எனக் கூறப்படும் உடை வகைகளைத் தானமளித்தல் மூன்றாமிடத்தில் வைத்துக் கூறப்பட்டுள்ளது.

56. வஸ்திரத்தானம் - ஆடைத்தானத்தையே குறிக்கும். ஆடைத் தானம் வஸ்திரத்தானம்என இருமுறை கூறப்பட்டுள்ளதால் மேலே போட்டுக் கொள்ளும் ஆடை, உடுத்திக் கொள்ளும் இடுப்புப் பகுதி ஆடை என்ற இரு பொருளில் இவை குறிக்கப்பபட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

57 கோதானம் - பசுவைத் தானமாக அளித்தல். இது, தச தானங்களுள் ஒன்றாக இடம்பெறுவது, பசு செல்வமாதலாலும், பசு தரும் பால் பல்வேறு

			சத்துக்களும் உடையதாய், அமிர்தத்துக்கு ஒப்பானதாகையாலும் கோதானம் சிறப்புடையதாக ஆகியுள்ளது.
58.	பூர்வதானம்	-	பூதானம் - பூமியைத் தானமாக அளித்தல். விளைபொருட்களின் களமாக உள்ள நிலம் மனிதர்களின், வாழ்வுக்களத்தைச் செழிப் பாக்கும் என்ற எண்ணத்தில் தானமாகத் தரப்பட்டன.
59.	புரோகிதர்	-	அந்தணருள் சடங்கு செய்விக்கும் குரு முதலானோர்.
60.	சங்கர நயினார் கோவில்	-	நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் சங்கர நயினார்கோவில் தாலுகாவில் உள்ள ஊர். சங்கரன் கோவில் எனவும் அழைக்கப் பெறும்.
61.	தவசு	-	தவம் - மன ஒருமையுடன் கடவுளை வழிபடுதல்.
62.	தினை மாவு	-	புன்செய் தானிய வகையான தினையை இடித்து மாவாக்கி, தேன் கலந்து பிசைந்து தயாரிப்பது தினை மாவாகும்.
63.	சிலவு	-	செலவு - வழிச்செலவாகிய பயணம்.
64.	பொன்	-	பொன் நாணயங்கள், பணம்.
65.	கட்டமுது	-	கட்டுச் சோறு - புளிக்காய்ச்சலுடன் சோறு கலந்து துணியிலோ, நார்ப்பெட்டியிலோ கட்டி வழிப்பயணத்தின்போது உண்ணு வதற்குக் கொண்டு போகப்படுவது. நாள் படினும் கெடாமலிருப்பது.
66.	தவணைப்புளி	-	கெட்டுப் போகா வண்ணம் புளி சேர்த்துத் தயாரிப்பது.
67.	மாப்பலகாரம்	-	மாவினால் செய்த பலகாரங்கள் - இனிப்புள்ள, இனிப்பில்லாத தின்பண்டங்களாய் இவை அமைவதுண்டு.
68.	பொரிவிளங்காய்	-	சிறுபயற்று மாவோடு (பாசிப்பயற்றுமா) சர்க்கரை சேர்த்துச் செய்த பணிகாரம்.

69.	சருவாபரணம்	-	சர்வ ஆபரணம். அனைத்து வகையான அணிகலன்கள்.
70.	தாகசாந்தி	-	நீர்வேட்கையைத் தணிக்கை.
71.	கன்னம்மாள் சாலைப் பெருவழி	-	மங்கம்மாள் சாலைப் பெருவழி போன்று இது அமைந்திருந்தது.
72.	சேர்வை பண்ணி	-	சேவை செய்து, வணங்கி.
73.	கோமதியம்மன்	-	சங்கரநயினார் கோவில் தல அம்மனின் பெயர்.
74.	தலைவாழைஇலை	-	குலை ஈனாத வாழையின் நுனியிலுள்ள பெரிய இலை.
75.	நிறைமரக்கால்	-	மரக்கால் நிறைய நெல்வைத்தல்.
76.	விநாயகரைப் பிடித்து வைத்து	-	மஞ்சள், மாவு அல்லது சாணியில் பிள்ளையார் போன்று செய்து வைத்து.
77.	தாமரையின் நூல் வாங்கி	-	தாமரைத் தண்டை உரித்து அதில் நூல் எடுத்து.
78.	மாவிளக்குப் பார்த்தல்லவோ	-	மாவில் விளக்கு செய்து அதை ஏற்றி வைத்து, அதனைப் பார்த்துக்கொண்டு.
79.	வசனம்	-	கோயிலிற் கடவுளைப் பிரார்த்தித்து வாசஞ்செய்யும் விரதம்.
80.	ஒரு மண்டலம்	-	40, 41 அல்லது 45 நாள் கொண்ட கால அளவு.
81.	அரன்	-	சிவபெருமான்.
82.	கயிலாசம்	-	இமய மலையிலுள்ள பனி மூடிய கைலாய மலை. இதில் சிவன் வீற்றிருக்கிறார் என்பது புராண நம்பிக்கை.
83.	கருவேல அறை	-	கருவூல அறை. (பொக்கிஷ அறை).
84.	எழுபிறப்பு	-	ஏழு பிறப்பு. (மானுடர்க்கு ஏழு பிறப்பு உண்டு எனபது சமய நம்பிக்கை).

85. மோசினை காலம் - மோட்சனை காலம் - விமோசன காலம் உயிர்விடுதலை பெறும் காலம்.

86. பஞ்சாங்கம் - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், பூரணம் என்ற ஐந்துறுப்புகளுடைய காலக் குறிப்பு நூல்.

87. வயசு பதினெட்டு - வயது பதினெட்டு. (மிக இளம் வயதிலேயே கதைநாயகருக்கு மரணம் ஏற்படும் என்ற பல கதைப்பாடல்களில் காணப்படும் நிலையே இதிலும் உள்ளது).

88. புத்துமண் - புற்று மண் - சங்கரன் கோவிலிலுள்ள புற்றுமண் பலவிதமான வியாதிகளையும் போக்கும் என்ற தல நம்பிக்கை உண்டு.

89. தத்து - கண்டம், உயிராபத்து.

90. அருங்குளியும் பிள்ளையுமாய் - மாதவிடாய் காரணமாகச் செய்யும் குளியல் இல்லாமல் பிள்ளையுண்டாகி.

91. மாஸ்தையிலே - மாதத்திலே.

92. உடையவரைச் சேர்வை செய்து - உடையவரை என்பதை இறைவனை என்ற பொருளில் எடுத்துக் கொள்ளலாம் என்றாலும், அடுத்த வரியில் இறையோன் குறிக்கப் பெற்றிருத்தலால் இது கருவுற லுக்குக் காரணமான, தனக்கு உரியவரான கணவரைக் குறிக்கும் எனக் கொள்ள இடமுள்ளது.

93. இறையோனைக் கரங்குவித்தான் - கருநிலைத்தற்குக் காரணம் இறைவன் என்பதால், இருகரம் கூப்பி இறைவனை வணங்கியதாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

94. முகவெளுப்புக் கண்டிடுமாம் - மூன்று மாதக் கருத்தாங்கியுள்ளபோது, முகம் வெளுத்துக் காணும் என்ற நடப்பியல் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

95. தானே கண்ட
பண்டம் தின்றாள் - மூன்று மாத மசக்கையில் உணவை வெறுத்து, தின்பண்டங்கள் போன்றவற்றில் விருப்பு தோன்றும் நிலை விளக்கப்பட்டுள்ளது.

96. உணர்ந்திடுமாம் - உலர்ந்திடுமாம்.

97. சிவந்தங் கழித்தார் - சீமந்தங் கழித்தார். சீமந்தம் - முதற் கர்ப்பத்தில் ஆறு, ஏழு அல்லது எட்டாம் மாதத்தில் கருக்கொண்ட பெண்ணுக்குச் செய்யப்படும் சடங்கு.

98. பங்கிளியாள் - பைங்கிளியாள் - பச்சை நிறக் கிளி போன்றவள்.

99. மருத்துவம் - மருத்துவச்சி. (பிள்ளைப்பேறு பார்ப்பவள்).

100. தொண்ணூறும்
பத்துஞ் சென்ற - நூறு வயது சென்ற.

101. விருதாவாய் - வீணாக.

102. பாடறிந்து - துன்பமறிந்து.

103. கருமருந்தை - கரியமருந்தை, வெடிமருந்தை.

104. விரசி - விரவி, கலந்து.

105. பாசாணம் - விஷத்தன்மையுள்ள மருந்து வகைகள்.

106. அதலிக்கிழங்கு - அரளிக்கிழங்கு (அரளிக்கொட்டை?)

107. கவரும் - கயறும்.

108. உலாத்தல் - இங்கும் அங்குமாக நடக்க வைத்தல்.

109. மிருக சீறட
நட்செத்திரம் - மிருக சீருட நட்செத்திரம். (ஐந்தாவது நட்சத்திரமாக உள்ளது).

110. சிங்க லக்கனம் - சிம்மராசி.

111. குலவிட்ட சத்தம் - நாவால் குழறியிடும் குலவை யொலி.

112. தண்ணீர் முகந்
தெறித்து - பிறந்த குழந்தைக்கு முகத்தில் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் சுட்டப்பட்டுள்ளது.

113. சேனையோட்டி - சேனை புகட்டி - சேனை - குழந்தை பிறந்ததும் புகட்டும் இனிப்புக் கலந்த திரவ வடிவமுள்ள உணவு. இது சேனைப்பால் என்றும் கூறப்பெறும்.

114. தாதிமார்கள் - மருத்துவம் பார்க்கும் பெண்டிர்.

115. ஓராட்டி - தாலாட்டி. (தாலாட்டு என்றும் கூறப்பெறும்).

116. தாய் முலைப்பால் அமுதூட்டி - பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் தருவதை முக்கிய நிகழ்ச்சியாகக் கதைப்பாடல் சித்ரித்துள்ளது கவனிக்கத் தக்கது.

117. மைந்தனுட அழகுகண்டு வன்னிய னென்று பேரு மிட்டார் - கதைப்பாடல்களில் கதைநாயகன், கதை நாயகிக்குப் பெயர் வைக்கும் பொழுது, இன்ன காரணத்தால் இன்ன பெயர் சூட்டப்பெற்றது என்று கூறுதல் மரபாகக் காணப்படும். சில கதைப்பாடல்களில் இப்பெயர்க் காரணம் பொருத்தமின்றிக் காணப்படுதலுண்டு. இக்கதைப்பாடலிலும் பெயர்க் காரணம் பொருத்தமின்றி அமைந்துள்ளது. வன்னியக் குலத்திலு தித்தால் வன்னியராசன் எனப் பெயர் அமைந்திருக்க, அழகு கண்டு இப்பெயர் இட்டதாக உள்ளமை பெயருக்கு ஒரு காரணம் கூறவேண்டும் என்ற மரபடிப் படையில் அமைந்ததாகத் தெரிகிறது.

118. ஆண்டு நிறைவேறி - ஓர் ஆண்டு நிறைவேறி முடிந்து, குழந்தைக்கு ஓராண்டு முடிவுறுதல் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

119. அண்ணாவி - ஆசிரியர்.

120. கல்கறடு - தாழ் தரமான முத்துக்களுடன் கூடிய கல் பதித்த ஆபரணம்.

121. மேல் முருகு - காதின் மேற்புறம் அணியும் காதணி வகை.

122. விடுகடுக்கன் - ஆண்கள் காதில் அணியும் காதணி வகை.

123. வெள்ளி அரணான் - வெள்ளியாலான அரைஞாண், இடுப்பில் அணியும் வெள்ளியாலாகிய கொடி போன்ற ஆபரணம்.

124. வேடிக்கைச் சங்கிலி - குழந்தைகளுக்கு அணியும் விநோத வடிவங்கள் கோர்த்த சங்கிலி.

125. தாயித்து - குழந்தைகளை எவ்விதத் தீங்கும் அணுகா வண்ணம் காக்கும் மந்திரத் தகடு அடங்கிய அணி.

126.பாசிப்பந்து - தோளில் அணியும் அணிகலன்.

127. கொன்றை வேந்தன் - ஔவையார் இயற்றிய 'கொன்றை வேய்ந்த'' என்று தொடங்கும் ஒரு நீதி நூல். குழந்தை இலக்கியம்.

128. அன்னையம் பிதா முதலா - அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்' எனத் தொடங்கும் ஔவையாரின் ஆத்திச்சூடி.

129. எண்சுவடி - எண்களால் இயன்ற கணிதச் சுவடி.

130. எழுத்துநடை கற்றறிந்தான் - படிப்பதோடு எழுதும் பயிற்சியையும் மேற்கொண்டு தேர்தல்.

131. தமிழ்க் கணக்கு - தமிழ் எண்களால் இயன்ற கணக்கு முறைகள்.

132. தேமல் - வாலிப வயதில் தோன்றும் ஒரு வகை உடற்புள்ளி. சுணங்கு போன்றது.

133. கன்னார் - உலோக வேலைகள் செய்பவர்.

134. வால நல்ல பிராயம் - இளம் பருவம், இளம் வயது.

135. மங்கிலியம் - மாங்கல்யம், மங்கல நாண்.

136. திருப்பூட்டி - மங்கல நாண் பூட்டி (தாலி அணிவித்து).

137. சாதித்தொழில் - அந்தந்தச் சாதிக்குரிய தொழில். (குறிப்பிட்ட சாதியில் பிறந்தோர் அச்சாதிக்குரிய தொழிலையே செய்யவேண்டும் என்ற எண்ணமிருந்தது).

138. கம்பெடுத்துக் காவல் காற்கக் களவு செய்யத் தெரியாது	-	கம்பெடுத்துச் சென்று காவல் காப்பவரே தன் காவலுக்குட்படாத பகுதிகளில் களவு செய்பவராகவும் இருந்துள்ளனர். இது ஒரு வரலாற்று வேடிக்கை என டாக்டர்.சு. சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிடுவார். (மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை - முன்னுரை).
139. கிடாரம்	-	கடாரம், கொப்பரை, பெரிய பாலை போன்றது.
140. கன்னக்கோல்	-	சுவரில் துளையிடும் கோல்.
141. மாலை சுத்திப் பிறந்த பிள்ளை	-	நஞ்சுக்கொடி தன்னைச் சுத்தியவாறு இருக்குமாறு பிறந்த குழந்தை.
142. கொடி சாத்திப் பிறந்த பிள்ளை	-	நஞ்சுக்கொடி பூண்டவாறு பிறந்த பிள்ளை.
143. ஆரம்பூண்ட கழுத்தி	-	நஞ்சுக்கொடி கழுத்தில் மாலை போல் சுற்றியிருக்கப் பிறந்தவள்.
144. கரண்டைக்கால் பருத்தவள்தான் கணவனுக்கும் ஆகாது	-	கெண்டைக்கால் பருத்துக் காணப்படு பவளால் கணவனுக்கு உயிராபத்து நிகழும் என்ற நம்பிக்கை இருந்திருக்கிறது.
145. சண்டாளன்	-	பாவம் செய்தவன், கொடும் பாதகன்.
146. தாடாளா	-	மேன்மையுள்ளவனே, பெருமுயற்சி உள்ளவனே.
147. வீசை	-	மீசை.
148. கொண்ட பெண்ணை விட்டாலும் குறித்த பெண்ணை விடுவதில்லை	-	தனக்கே உரியவளாகக் கொண்ட மனைவியை விட்டாலும், தனக்கு மனைவியாகும் முறைப்பெண்ணை விடுவதில்லை என்ற இந்தக் கருத்து குறிப்பிட்ட சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது.

149. மற்ற பெண்களை விட்டாலும் மாமன் மகளை விடுவ தில்லை - பிற பெண்களை விட்டாலும் மனைவி யாக்கிக் கொள்ளும் உரிமையுடைய, அம்மாவின் உடன்பிறந்த தாய்மாமாவின் மகளை விடுவதில்லை - என்ற இக்கருத்து கதைப்பாடல் நிகழ்ந்த காலகட்டத்தில் வழக்கிலிருந்தது.

150. கைக்கம்பை யெடுத்து வாடி - வழிப்பயணம் மேற்கொள்வோர் பாது காப்புக்காகக் கையில் கம்புடன் பயணம் மேற்கொள்வர் என்பது சுட்டப்பட்டுள்ளது.

151. இருப்புத் தண்டியல் - இரும்புத் தண்டிகை, தண்டிகை - பல்லாக்கு போன்று மூடாக்கு இட்டு வைத்திருக்கும் அமைப்பு.

152. வல்லா வட்டு - வல்லவாட்டு, பூணூல் போல இடத்தோளின் மேலிருந்து, கழுத்தைச் சுற்றித் தொங்கவிடும் ஆடை.

153. ஏத்தாப்பு - மார்பில் புரள, தோளில் இடும் மேல் துணி.

154. வட்டுவம் - வெற்றிலை முதலியன வைக்கும் பை. மருந்துப் பையையும் இச்சொல் குறிக்கும். இங்கு, பயணத்தின்போது இவ்விரண்டு வகையான பைகளையும் கொண்டு சென்றான் எனக் கொள்ளலாம்.

155. பிடிச்சுருள் - செம்மறி ஆட்டுக்கிடாயின் சுருண்ட, கூர்மையுள்ள கொம்பை ஒத்த ஆயுதமாயிருத்தல் கூடும்.

156. பல்லியாமல் - பலியாமல், வாய்க்காமல், நேராமல்.

157. உற்செயம் - உற்சவம், திருவிழா.

158. போத்திமார் - போற்றிமார், கோயிற் பூசை செய்யும் மலையாள நாட்டுப் பிராமணர்.

159. பட்டமார் - பட்டன்மார், கோயிலருச்சகன்.

160. திருக்காப்பு விட்டார்கள் - கோயிற் கதவை மூடினார்கள்.

161. சாமரிசி - சாம ரிசி, நடுநிசி, நடு இரவு.

162. வடமலையப்ப பிள்ளை - நாயக்கவரசரின் பிரதிநிதியாய்த் திருநெல்வேலிச் சீமையை யாண்டவரும், மச்சபுராணம் இயற்றியவருமான ஒருவர். முக்கூடற்பள்ளு கிளைவளப்ப மாலை போன்ற நூல்களில் இவரைப்பற்றியக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

163. எரிக்கலை மாலை - எருக்கம்பூவால் தொடுக்கப்பட்ட மாலை. எருக்கஞ்செடி முளைத்தல் பாழடைதலுக்கு அறிகுறி. எருக்கம்பூ மாலை வாழ்வு பாழடைதற்கு அடையாளம். எருக்கம்பூ மாலை அழித்தற் கடவுளாகிய சிவனுக்கு உரியது என்ற கருத்தும் இங்கு ஒப்புநோக்கற்குரியது.

164. ரத்த வாடைக் கொட்டு - சாவின்போது அடிக்கப்படும் மேளம்.

165. ஊமத்த மாலை போட்டு - ஊமத்தம் பூவால் கட்டிய மாலை அணிவித்து, வாழ்வு முடிவடையப் போவதன் அறிகுறியாக இம்மாலை அணிவிக்கப் பெறுகிறது. அழித்தற் கடவுளான சிவனுக்கு இம்மாலை அணிவிக்கப்பெறுதலும் இணைத்து நோக்கத் தக்கது.

166. ஒத்த முரசுங் கொட்டி - ஒற்றை முரசு அடித்து. அவலத்துக்கு அடையாளமாக இவ்வாறு ஒற்றை முரசு அடிக்கப்படுதல் வழக்கமாக இருந்தது.

167. ரிணம் - நிணம். இங்கு இரத்தத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

168. சவதி - சகதி, சேறு.

169. சோரை - இரத்தம் - மலையாளத்தில் இரத்தம் சோரை என வழங்கப்பெறும். தென் மாவட்டச் சுவடிகளில் மலையாள வழக்குகள் இடம்பெறுதல் கண்கூடு.

170. புல்லை நாய் - மங்கல் நிறமுடைய நாய்.

171. வேங்கைநாய் - உடல் நீட்சியுடன் வேங்கைப் புலிபோல் வேகமாகப் பாயக்கூடிய நாய்.

172. காரி நாய் - கருநிறமுடைய நாய்.

173. கறமரைநாய் - கறுப்பும், செம்மையும் கலந்த நாய்.

174. ஒத்தை வாணியன் - ஒற்றை வணிகன் - எண்ணை கொண்டு செல்லும் ஒற்றை வாணிகன் எதிர்வரல் தீச்சகுனமாகக் கருதப்பட்டது. இறந்தவர்களுக்கு இறுதி யாத்திரையின்போது எண்ணை வைத்துக் குளிப்பாட்டுவர். எண்ணை தலையில் வைத்தல் மரணச் சடங்காகக் கருதப்படுவதால் ஊர்ப் பயணத்தின் போதும் தலையில் எண்ணை கொண்டு செல்லுதல் தீய சகுனமாக, அதாவது மரணத்தைத் தருவது என எண்ணப்பட்டது. இதிலிருந்து எண்ணை கொண்டுவரும் வணிகன் எதிரில் வந்தாலும் தீச்சகுனமாகக் கருதப்பட்ட நிலை வளர்ந்துள்ளது.

175. அகத்திக் கீரை யெதிர் வர - இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகளில் அகத்திக் கீரை அவித்து வைத்தலும் ஒரு சடங்காக மேற்கொள்ளப்படுவதால் அகத்திக் கீரை எதிர்வரல் தீச்சகுனமாகக் கருதப்பட்டது.

176. நேற்றி யென்னா - நேர்த்தியென்ன.

177. மாப்படைத்த - மாவிளக்குப்படைத்த - அரிசி மாவும், வெல்லமும் கலந்து அதை விளக்குப் போல் அமைத்துத் திரியிட்டு, எண்ணை ஊற்றி தெய்வத்தின் முன் எரிய விடுவர். இவ்வாறு மாவிளக்குப் படைத்தல் மாப்படைத்தல் என இங்குக் கூறப்பட்டுள்ளது. மாவைத் தெய்வத்துக்குப் படையலிட்டு, கோவிலுக்கு வந்துள்ள பலருக்கும் பங்கிட்டளிப்பதும் உண்டு.

178. பாவி பறப்பாம்பு - பாவியான பறைப்பாம்பு (பறைப்பாம்பு = கரும்பாம்பு (கருநாகம்).

179. பதி கிடந்து - பதிந்து கிடந்து - ஓர் இடத்திலேயே தங்கிக் கிடந்து.

180. பசலை - பச்சைக் குழந்தை, ஒன்றுமறியா இளங்குழந்தை.

181. பாரி மரம் - பருத்த மரம், அடிபெருத்த பெரிய மரம்.

182. கும்பி - வயிறு (உணவுண்டதும் கூம்பித் தெரிவதால் கும்பி).

183. மாங்காய் பிரளுதடா - மாங்காய் வடிவுடைய இருதயம் புரளுதடா.

184. மள்க்க - மக்க, மக்கள். இங்கு மகனைக் குறிக்கிறது.

185. நாவிலே சீலை சுத்தி - நாக்கில் துணி சுற்றி - உயிரை மாய்த்துக் கொண்டு தற்கொலை செய்துகொள்ள விரும்புபவர்கள், நாக்கிலே துணியைச் சுற்றி நாக்கை வேருடன் பிடுங்கிக் கொண்டு இறப்பர். நாக்கு வழுக்காமலிருக்க அதில் துணி சுற்றுவர். பல கதைப்பாடல்களிலும் இத்தகு மரணங்கள் பேசப்பட்டுள்ளன. இன்றும் கிராமப்புறங்களில், ''நாக்கைப் புடுங்குகிறாற் போல் நாலு கேள்வி கேட்கணும்'', ''நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் சாகணும் போல உள்ளது'' என்றுள்ள வழக்குகள் வழக்கிலுள்ளன.

186. ஆதாளி - பேரொலி. (அச்சம் தரும்படி, அரட்டுதலுடன் கூடிய பெரும் சத்தம்).

187. அட்டாதுட்டி - அடாவடி.

188. செங்காமட்டை - செங்காய் மட்டை, தென்னை வகையில் செவ்விளநீர் தரும் தென்னை வகை உயர்வானதாகக் கருதப்படும். இத்தகு செவ்விளநீர் மட்டைகளை வீசியதாகக் குறிப்பிடப்படுகின்றது. வேறுசில சுவடிகளில் தேங்கா மட்டை என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

189. திருதாளி - திருகு தாளி, திருகு தாளம், தில்லுமுல்லு என்ற பொருள் உடையது.

190. பாலிகள் - பாலகர்கள்.

191. சூலிகள் - சூல் கொண்ட பெண்கள்.

192. பச்சைப் பிள்ளைத் தாச்சிகள் - குழவியீன்று சின்னாட்களே ஆன, இளங் குழந்தைகளை உடைய பெண்டிர்.

193. கருவேலப் பிரை - கருவூல அறை.

194. குடை - கொடை, திருவிழா.

195. அல்லரை சில்லரை - சில்லறை, மிச்சம், மீதி உள்ள தீங்குகள் என்ற பொருளில் வந்துள்ளது.

பின்னிணைப்பு

அம்மன் கதை

செங்கோல் முத்திரையை கையில் வாங்கி
திறமுடனே பிறப்பிடவே
சேனை படைகளை சேகரித்து
திறமுடனே பிறப்பட்டார்கள்
பல்லாக்கு தண்டியலை எடுத்து விட்டு
பாரவிளை சேவுகரும்
நாகூரு நாகபட்டனம் (தனைக்) கடந்து
நலமுடனே வருகு தய்யே
சீதாளி சிதம்பரப் பாதைகூடி
சிறிரெங்கம் திருச்சினா பள்ளிவிட்டு

திண்டு கல்லு பெருவழியாய்
தென்மதுரை வந்து சேர்ந்தார்
வட மதுரை தென்மதுரை
வண்டூற் தெப்பக் குளமதிலே
வந்து கூடாரம் அடிக்கலுத்தார்
.... கிறை
... ந(ா)ட்டலுற்றார்.
கொட்டாரந் தானடித்து
கொலுவிருந்தாள் பிள்ளையலும்

தீத்த மாடி மாத்துடுத்தி
திருநீத்துக் காப்புமிட்டு
மதுரை அழகிய சொக்கரையும்
மாதுமை மீனாச்சியை சேர்வைசெய்து
இவரி சித்திர கூடமது(க்கு)
(ஏக) வேணும் தென்னாடு
தென்னாடு போகவென்று
திறமுடன் உத்தரவு செய்தார்.
வடமதுரை தென்மதுரை
வண்டியூர் தெப்பக் குளங்கடந்து

சேலூர் சிவகிரிப் பாதைகூடி
சிவ(கிரி) சங்கர நயினார் கோவில் விட்டு

சிந்தாமணி புளியங் குடியுமிட்டு
        சின்னணைந்த தேவர் சத்திரமதனைக் கடந்து
நன்னகரம் பொன்னகரம்
        நானில அடிவொட்டிப் பாறை விட்டு
குத்தால தலமதிலே
        கொற்றவர் (களும்) வந்து சேர்ந்தார்.
தேனருவி பாலருவி
        செண்பகடாவி.. 20

தீத்தமாடி மாத்துடுத்தி
        திருநீத்துக் காப்புமிட்டு
குத்தாலத் தலங் கடந்து
        குழல்வாய் நாதர் பாலம்விட்டு
ஆனையடிப் பாதை விட்டு
        ஆதரவாய் வாரபோது
சேனை படைகளுக் கமுதூட்டி
        சேவகனுமோ வாரபோது
அம்பா சமுத்திரம் தான்கடந்து
        அழகருட கோவில் விட்டு
வாவிக்குளப் பாதைகூடி
        வருகுதய்யா சேனைகளும்
பனைப்பேட்டை தான் கடந்து
        பாதைவழி வந்தல்லவோ
... நதிப்பாலம் விட்டு
        கனக சேனை பெரும்படையும்
திருநெல்லை யம்பலத்தில்
        சீக்கிரமாய் (வந்து) சேர்ந்தார்.
காந்திமதி வடிவாளுட
        கலியாண மண்டபத்தில்
ரட்டுனக் கம்பிளி தான்விரித்து
        நலமுடனே நமஸ்காரஞ் செய்யலுற்றார் 31

துணை நூற் பட்டியல்

1. வேலுப்பிள்ளை. கலாநிதி.ஆ. — சாசனமும் தமிழும், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை, ஏப்.1971.

2. இராமன் . மு.கோ. — சுவடிகள் தரும் சுவை, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குக் கட்டுரை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.

3. இராசேந்திரன் ம. — சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் (கட்டுரை), தமிழ்ச்சுவடிகள் கருத்தரங்கு, உலகத்தமிழ்க்கல்வி இயக்ககம், 1985.

4. சண்முக சுந்தரம் டாக்டர்.சு. — நாட்டுப்புற இலக்கியம், தமிழ் இலக்கியக் கொள்கை, (ப.ஆ) டாக்டர். ச.வே. சுப்பிரமணியன்., அ.அ.மணவாளன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்., மார்ச் 1978.

5. பெருமாள் ஏ.என். — வெள்ளைக்காரன் கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஜூன் 1983.

6. தங்கதுரை சு. — சிதம்பர நாடார் கதை, மேலக்கிருஷ்ணன் புதூர், குமரி மாவட்டம், மே.1982.

7. ஆறுமுகப் பெருமாள் நாடார். — (ப.ஆ.) முத்தாரம்மன் விற்கவிதை, 1978.

8. உ.வே.சா. டாக்டர், — தமிழ்கருவூலம், ஜெ. (கையெழுத்துப் பிரதி). உ.வே.சா. நூலகம், திருவான்மியூர், சென்னை.

9. கோமதிநாயகம் தி.சி. — தமிழ் வில்லுப்பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979

10. சேதுரகுநாதன் ந. — (உரையாசிரியர்) முக்கூடற்பள்ளு, கழக வெளியீடு, 1973.

11. பழனிச்சாமி. என். கல்வெட்டில் வண்ணார், (கட்டுரை), தமிழ்நாடு வரலாற்றுக் கருத்தரங்கு (ப.ஆ) டாக்டர் இரா. நாகசாமி, வரலாற்றுப் பேரவை வெளியீடு, 5, மே. 1979.

12. எட்கர் தர்ஸ்டன் தென்னிந்தியக் குலங்களும், குடிகளும் (தொகுதி 3) தமிழாக்கம். இரத்னம் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, டிச.1987.

13. சண்முக சுந்தரம் டாக்டர்.சு. திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, வெளியீட்டாளர் காவ்யா, டிச.1986.

14. மனோன்மணி சண்முகதாஸ். சாதியும் துடக்கும், டிச.1991.

15. Nirmala Devi Dr.R. (Editor), The Wandering voice, Institute of Asian Studies, Feb.1987)

16. வானமாமலை. நா. தமிழ்நாட்டுக்கதைப்பாடல்களில் சோக முடிவு, (கட்டுரை), ஆராய்ச்சி, மலர் 2, இதழ் 2, மார்ச் 1971.

17. சிவசுப்பிரமணியன்.ஆ. மந்திரம் (கட்டுரை) நாட்டார் வழக்காற்றியல் (இதழ்) தொகுதி - 1, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்கழகம், நெல்லை, டிச.1987.

18. வானமாமலை. நா. (பதிப்பாசிரியர்), முத்துப்பட்டன் கதை, மதுரைவீரன் கதை, மதுரைப் பல்கலைக்கழகம்.

19. சண்முக சுந்தரம் சு. தொகுப்பாளர் & பகுப்பாளர், மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, கொங்கு வெளியீடு, (ப.ஆ) கொடுமுடி சண்முகப் பிரகதம்.

20. Institute of Asian Studies Publisher, The unsung Melodies, 1989.

21. வானமாமலை நா. (பதிப்பாசிரியர்), கான்சாகிபு சண்டை, மதுரைப் பல்கலைக் கழகம், மார்ச் 1972.

22. சண்முக சுந்தரம்.சு. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை -1.

23. நடராசன் டாக்டர்.தி. (பதிப்பாசிரியர்), வன்னியடி மறவன் கதை, மதுரைப் பல்கலைக் கழகம், 1977.

24. Thurston. E. — Castes and Tribes of South India. Vol.VII, Cosmo Publications, Delhi, 1975.

25. கிருட்டிணன். டாக்டர் அ. — கல்வெட்டில் வாழ்வியல், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

26. கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னைக் கீழ்த்திசைச்சுவடி நூலகம் — முதலான இடங்களிலுள்ள சுவடிகள்

27. சிங்காரவேலு முதலியார். ஆ — அபிதான சிந்தாமணி, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ் புதுடில்லி, 1981.

28. புகழேந்திப்புலவர் — காத்தவராயன் கதை, பெரிய எழுத்துக் கதை, ஆர். ஜி. பதி. கம்பெனி, சென்னை -1, 1974.

29. புகழேந்திப் புலவர் மதுரைவீரன் — கதை (பெரிய எழுத்து), இரத்தினநாயகர் & ஸன்ஸ், சென்னை - 1, 1972.

30. குருசாமிசித்தன் டாக்டர். — தமிழ் இலக்கியத்தில் பள்ளர் (மள்ளர்) வெளியீடு. தேவேந்திர மன்றம், டிச.1993.

31. கந்தையா பிள்ளை ந.சி. — தென்னிந்தியக் குலங்களும், குடிகளும், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1958.

32 வானமாமலை. நா. — தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள், மக்கள் வெளியீடு, டிச.1980.

33. புலமை வேங்கடாசலம் வன்னியர் — கள்ளர் வரலாறு, திருமதி. ஞானசரசுவதி நினைவு வெளியீடு, பிப். 1994.

பயன்பட்ட சுவடிகளின் அகரவரிசைப்பட்டி

(சுவடி எண்கள், நூலகப் பெயர்களுடன்)

அசுவமேத யாகக்கதை - 8179 - கே.ப.சு.

அழகன் பெருமாள் கதை - 6715 - ''

ஆமையன் கதை - 8423 - ''

ஆழ்வார் திருநகரி யானைக்கும்மி - 8232 - ''

இடைச்சி செல்வி கதை அல்லது வள்ளியூர்க் கோட்டையை அழித்த கதை - 8016 - கே.ப.சு.

இசக்கியம்மன் அல்லது நீலி கதை - 8016 - கே.ப.சு.

இசக்கியம்மன் கதை அல்லது நீலிகதை - 8019 - ''

இராமாயணம் வில்லுப்பாட்டு - 8434 - ''

இராமாயணம் வாசகம் - 6320 - ''

இராமாவதாரக் கதை - 10289 - ''

உச்சினி மாகாளி அம்மன் கதை (கையெழுத்துப்படி) - உ.த.நி.சு.

உச்சினி மாகாளி கதை - 46 - ஆ.ஆ.நி.

உச்சினி மாகாளியம்மன் கதை - 48 - ஆ.ஆ.நி.

குசலவ மகாராசர் கதை - 8014 - கே.ப.சு.

குசலவன் சரிதம் - 8419 - ''

குத்தாலலிங்கர் கொடிப்பாட்டு - 8432 - ''

குருக்களாஞ்சி கதை - 8425 - ''

குளத்தூரய்யன் நொண்டி நாடகம் - 11611 - ''

கோவலன் கதை - 6305 - ''

கோவலன் கதை - 6718 - ''

சாஸ்தாவின் கதை - 8022 - ''

சித்திர புத்திர நயினார் கதை - 5451 - ''

சித்திர புத்திரனார் கதை - 4087 - ''

சித்தராரூட நொண்டிச்சிந்து - 11309 - ''

சிவன் செம்படவனாகி பார்வதியை மணந்த கதை - 314 - உ.த.நி.சு.

சின்னத்தம்பி கதை - 11613 - கே.ப.சு.

சீவக அம்மானை - 8248 - ''

சீவகசிந்தாமணி அம்மானை - 8825 - 10366 - ''

சுந்தரி கல்யாணம் - 8413 - ''

செட்டிச்சி அமராவதி கதை - 5451 - கே.ப.சு.

செட்டிச்சி கதை - 4087 - ''

சொரி முத்தையன் பாட்டு - 8015 - ''

ஞானவாசிஸ்டம் கதை - 5953 - ''

தடிவீரசுவாமி கதை - 8440 - ''

திருவள்ளுவர் சரித்திரம் - 6383 - 1128[illegible] - கே.ப.சு.

தோட்டுக்காரி கதை - 316 - உ.த.நி.சு.

நம்பிராயன் கதை - 8425 - கே.ப.சு.

நளன் கதை - 10434, 10305, 10294, 912[illegible], 7956 - கே.ப.சு.

நாலு மந்திரி கதை - 6157, 10356, 11608 - ''

நாலு மந்திரி கும்மிப்பாட்டு - 3223 - ''

பஞ்சதந்திரக் கதை - 4103, 8818, 7961, 8809, 8069 ''

பாண்டவர் வனவாசக் கதை - 8085 - ''

பாண்டவர் வனவாசம் - 9067

பார்வதியம்மன் கதை - 58-ஆ.ஆ.நி.

பாரத அம்மானை - உ.த.நி.சு.

புதுஷூர்ச் சக்கரவர்த்தி அம்மானை - 7951 - கே.ப.சு.

மதுரை வீரன் அம்மானை - 8420 - ''

மருந்து செய்யும் முறை - 3929 - ''

மருந்து தயாரிக்கும் முறை - 2612 - ''

மருந்து யோகங்கள் - 6692 - கே.ப.சு.

மார்க்கண்டன் கதை - 5655, 8433 - ''

மார்க்கண்டன் நாடகம் - 10301, 9108, 8254, 7319,
8253, 10383, 1042 - ''

மாரியம்மன் கலிவெண்பா - 6165 - செ.கீ.சு.

முத்துப்பட்டன் கதை - 8018 - கே.ப.சு.

சிறப்புச் சொல்லகராதி

(எண் - பக்களண்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

வெள்ளிவிழா ஆண்டு வெளியீடுகள்

1.	Mysticism of love in Saiva Thirumurais	50.00
2.	ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்	85.00
3.	தமிழர் காசு இயல்	45.00
4.	திருமுறை இலக்கியம்	50.00
5.	அழகியல் சிந்தனைகள்	30.00
6.	இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 1	65.00
7.	இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 2	60.00
8.	சென்னை - 1639க்கு முன் பின்	35.00
9.	பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள்	75.00
10.	Collected Papers of Thaninayagam Adigal	100.00
11.	Silver Jubilee Special Lectures	60.00
12.	முத்தாரம்மன் கதை	85.00
13.	சந்திரபதன் கதை	40.00
14.	கன்னிவாடி நரசிம்ம நாயக்கன் வளமடல்	20.00
15.	கருணையம்மன் அந்தாதி	22.00
16.	ஒப்பிலக்கியம் - கொள்கைகளும் செயல்முறைகளும்	15.00
17.	இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்	30.00
18.	Work Book - Written Tamil	50.00
19.	திருக்கோயில்களில் தொழில் - சமுதாய உறவுகள்	25.00
20.	விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்	30.00
21.	தமிழ்க் காட்சி நெறியியல்	46.00
22.	கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	85.00
23.	அமிர்த மதன கூத்து நாடகம்	90.00
24.	மூலிகைக் கற்பங்கள்	80.00
25.	தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-1	50.00
26.	தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-2	65.00
27.	சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	80.00
28.	சித்த மருத்துவ மணிகள்	75.00
29.	காத்தவராய நாடகம்	30.00